திருநெல்வேலி மாவட்ட நீர்பாசன

மாநாடு

சிறப்பு மலர்

1974

JL
D2.21197
N74
85256

# திருநெல்வே
# மாவட்ட
# நீர்ப்பாசன
# மாநாடு





மணிமுத்தாறு அணை

"விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்
பசும்புல் தலைகாண் பரிது." — குறள்

1974

I 12,

# நீர்ப்பாசன மாநாடு

நெல்லை மாவட்டம்.

# சிறப்பு மலர்

1974

85256

JL
D2. 21197
N74



தமிழக முதல்வர்

டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்



மாண்புமிகு அமைச்சர்

*ப. உ. சண்முகம் அவர்கள்*

(பொதுப்பணித்துறை)



மாண்புமிகு அமைச்சர்,

*சி. பா. ஆதித்தனார் அவர்கள்,*

(தமிழக அரசு வேளாண்மைத்துறை.)

RAJ BHAVAN
MADRAS-600022.
*9th July 1974.*

# Message

I am glad to know that a Seminar on Irrigation will be held in Tirunelveli District on 1st August 1974.

Tamil Nadu has very little potential for large scale irrigation but has the ability and imagination to tap underground water. One can prevent the flow of water above the ground but nobody can prevent the flow of underground water. It is time that we start thinking in terms of check dams so that the level of underground water comes up and supply of underground water increases.

I am very happy that the State Government has provided Rs. 30.83 crores for development of irrigation and Rs. 4.51 crores for special minor irrigation programmes apart from a provision of Rs. 11-44 crores for maintenance and repairs of irrigation sources. This is very imaginative and I have no doubt will be highly remunerative programme. The underground water can be tapped at different levels.

I am sure that the Seminar like yours will deal with the subject in a comprehensive way and devise ways and means of taking maximum advantage of all available resources. Once enough water is available, Tamil Nadu has the ability to take maximum advantage of it. I wish the Seminar every success.

K. K. SHAH,
*Governor of Tamil Nadu.*

RAJ BHAVAN
MADRAS-600022,
9th July 1974.

# Message

I am glad to know that a Seminar on Irrigation will be held in Tirunelveli District on 1st August 1974.

Tamil Nadu has very little potential for large scale irrigation but has the ability and imagination to tap underground water. One can prevent the flow of water above the ground but nobody can prevent the flow of underground water. It is time that we start thinking in terms of check dams so that the level of underground water comes up and supply of underground water increases.

I am very happy that the State Government has provided Rs. 30.83 crores for development of irrigation and Rs. 4.51 crores for special minor irrigation programmes apart from a provision of Rs. 11·44 crores for maintenance and repairs of irrigation sources. This is very imaginative and I have no doubt will be highly remunerative programme. The underground water can be tapped at different levels.

I am sure that the Seminar like yours will deal with the subject in a comprehensive way and devise ways and means of taking maximum advantage of all available resources. Once enough water is available, Tamil Nadu has the ability to take maximum advantage of it. I wish the Seminar every success.

K. K. SHAH,
*Governor of Tamil Nadu.*

---

ப. உ. சண்முகம்
பொதுப்பணித்துறை அமைச்சர்

முனிவர் ஜார்ஜ் கோட்டை,
சென்னை-600009.

நாள்: 22—7—1974.

திருநெல்வேலி மாவட்ட நீர்ப்பாசன மாநாடு வரும் ஆகஸ்ட் திங்கள் 1-ம் நாள் திருநெல்வேலியில் நடக்க இருப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சி.

நடக்க இருக்கும் மாநாடு, அம்மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்களின் கோரிக்கைகளை பரிசீலித்து நல்லதொரு முடிவை எடுக்கும் என நினைக்கிறேன்.

ப. உ. சண்முகம்

S. J. SADIQ PASHA
MINISTER FOR REVENUE

FORT ST. GEORGE
MADRAS-600009
17—7—1974

# Message

I am happy to learn that an Irrigation Seminar will be held, and Souvenir will be released, portraying the progress of Tirunelveli.

I have no doubt that the Seminar will focus attention on various problems touching Irrigation, and that its deliberations will bring out fruitful results.

*S. J. SADIQ PASHA,*
Minister for Revenue.

Si. Pa. ADITANAR, M. A.,
BAR-AT-LAW
MINISTER FOR AGRICULTURE.

FORT ST. GEORGE
MADRAS-9.
13-7-74

# Message

I am happy to learn that a Seminar on Irrigation is to be held in Tirunelveli District on 1—8—1974.

2. In Tirunelveli, as in the whole of Tamil Nadu, we have exploited all major sources of Irrigation and we are now tapping Minor sources. Attention must therefore be directed towards using the available water over the largest possible areas. It is common knowledge that there is plenty of water in some locality or other, while a nearby locality is thirsting for it.

3. Therefore, water must be carried over long distances in the cheapest possible manner. Loss of water through seepage and evaporation should be kept to the minimum. Our Engineers, engaged in this task, deserve all encouragement.

4. I wish the Seminar all success.

*Si. Pa. Aditanar.*
*Minister for Agriculture.*

S. Pa. ADITANAR, M. A.,
BAR-AT-LAW
MINISTER FOR AGRICULTURE.

Fort St. George,
Madras-9,
13-7-74

## Message

I am happy to learn that a Seminar on Irrigation is to be held in Tirunelveli District on 1—8—1974.

2. In Tirunelveli, as in the whole of Tamil Nadu, we have exploited all major sources of Irrigation and we are now tapping Minor sources. Attention must therefore be directed towards using the available water over the largest possible areas. It is common knowledge that there is plenty of water in some locality or other, while a nearby locality is thirsting for it.

3. Therefore, water must be carried over long distances in the cheapest possible manner. Loss of water through seepage and evaporation should be kept to the minimum. Our Engineers, engaged in this task, deserve all encouragement.

4. I wish the Seminar all success.

S. Pa. Aditanar
Minister for Agriculture.



# பொருளடக்கம்.

—:—

## திருநெல்வேலி மாவட்டத்தின் நீர்ப்பாசன வசதி.

(ப. சிவலிங்கம், பி. இ., எம். எஸ். (பாசனம்), (கலிப்) எப். ஐ. இ.)

பகுதி 1: கட்டுரைகள்

1. திருநெல்வேலி மாவட்டத்தின் நீர்ப் பாசனம்
(திரு. டி. எச். எல். நரசிம்மையா, பி. எஸ். ஸி, பி. இ.)

2. தாமிரபரணி பாசனம்
(திரு. ஆர். கிருஷ்ணசாமி, பி. இ.)

3, மணிமுத்தார் நீர்த்தேக்கம்
(திரு. ஆர். கிருஷ்ணசாமி, பி இ.)

4. இராதாபுரம் கால்வாய்த் திட்டம்
(திரு. எல். சிவராமகிருஷ்ணன், பி எஸ். ஸி, (பொறி)

5. திருநெல்வேலி மாவட்டத்தின் நீர்வளம்
(திரு. கி. சுந்தரம். பி. இ.)

6. பழந்தொழி சாகுபடி (Advance Kar)
(திரு. ஆர். கிருஷ்ணசாமி, பி. இ.)

பகுதி 2: நெல்லை மாவட்டத்தில் செயலில் உள்ள பாசனத் திட்டங்கள்

1. திருநெல்வேலி திட்டங்கள் வட்டத்தில் செயலாக்கப்பட்டு வரும் திட்டங்கள்
(திரு. கே, துரைசாமி, பி. ஏ; பி. இ.)

2. கடனா நீர்த் தேக்கத் திட்டம்
(திரு. பி. வி. கிருஷ்ணமூர்த்தி, பி. இ.)

3. ராம நதி நீர்த்தேக்கத் திட்டம்
திரு. பி. வி. கிருஷ்ணமூர்த்தி. பி. இ.)

4. கருப்பா நதி நீர்த்தேக்கத் திட்டம்
(திரு. இ. என். நாச்சிமுத்து: பி. இ.)

5. மருதூர் கால்வாய் உள் தளமிடும் திட்டம்
(திரு, எஸ் ராமநாதன்)

பகுதி 3: நெல்லை மாவட்டத்தில் ஆய்வில் உள்ள பெரிய நடுத்தரத் திட்டங்கள்.
(அரசின் பரிசீலனையிலும் மற்றும் பல்வேறு நிலையிலுள்ளவை)
(திரு. கி. சுந்தரம், பி. இ )

பகுதி 4: நெல்லை மாவட்டத்தின் சிறப்பு சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள்

1. நெல்லை மாவட்டத்தில் சிறப்பு சிறிய நீர்ப் பாசனத் திட்டங்கள் பற்றிய அறிக்கை
(திரு. டி. ஏ. கிருஷ்ணமூர்த்தி, பி. இ.)

2. ஆத்தங்கரை அணைக்கட்டு திட்டம்
(திரு. மீ. வெங்கடசுப்பிரமணியன்)

3. ஆலத்துறையாறு திட்டம்
(திரு. எம் எஸ். செல்லமுத்து)

4. நெல்லை மாவட்டத்தில் குளங்களில் தூர் வாரும் புனரமைப்புப் பணிகள்
(திரு. மீ. வெங்கடசுப்பிரமணியன்)

5. குட்டையமைத்தல் (Pond Schemes)
(திரு, எம் எஸ். செல்லமுத்து)

6. நிறைவேற்றப்பட்டுள்ள சிறப்பு சிறியநீர்ப் பாசனத் திட்டங்கள்.

7, செயலில் உள்ள சிறப்பு சிறிய நீர்ப் பாசனத் திட்டங்கள்.

8, ஆய்வில் பல்வேறு நிலைகளிலுள்ள சிறப்பு சிறிய நீர்ப்பாசனத்திட்டங்கள்.

9. ஆய்வில் உள்ள குட்டைகள் அமைக்கும திட்டங்கள்.

10. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள குளங்களின் விபரம்.

பகுதி 5: திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆற்றுப் படுகைகள் மற்றும் சிறு படுகைகள் நீரியற் கணக்கு பற்றிய விவரங்கள்.
(திரு. கி. சுந்தரம் பி இ.)

பகுதி 6:

1. நெல்லையில் நீர்வளம்
(திரு. தெ. வெ, மு. முகமது உசேன்)

2. அணைகள் நிறைந்த நெல்லை
(திரு. மு. அசனலி, பி. ஏ )

3 1967 க்குப் பின் நீர்ப்பாசன திட்டங்கள் பற்றிய அறிக்கை
(திரு. டி.எச்.எல். நரசிம்மையா, பி.எஸ் ஸி பி இ)

4. பாசன நீர் பராமரிப்பு—பயிரிடும் முறை
(திரு. பி. சந்திரசேகரன், பி. எஸ்ஸி, (விவசாயம்)

5. இறவை நீர்ப்பாசனத் திட்டம்
(திரு. கெ. ஆர். சம்பந்தம். பி. ஏ.)

6 நில நீர்வளம்
(திரு. தி. இராசகோபாலன், எம். எஸ்ஸி.)

7. சிறப்பு சிறுநீர்ப்பாசனம்
(திரு சிவகுருநாதன்)

8. திருநெல்வேலி மாவட்டத்தில் செய்யப் பட்ட நில நீர். ஆய்வுக்கான அறிக்கை.
(எ. சொக்கலிங்கம், பி. இ.)

# அறிமுகம்.

—:—

" ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால் ".  (குறள் - 14)

மக்களின் அன்றாட வாழ்விற்கும் நாட்டின் முன்னேற்றத்திற்கும் அடிப்படைத் தேவையான உணவு உற்பத்திக்கு நீர்ப்பாசனம் இன்றியமையாததாகும். வானம் பொழிவதை எப்போதும் நம்பிக்கொண்டிருப்பதற்கில்லை. மழை பொய்த்து விடுவதில் நாட்டின் எந்தப் பகுதியும் விதிவிலக்கல்ல. மழைக்காலங்களில் அதிக வெள்ளம் வரும்போது ஆறுகள் வழியாகவும் ஓடைகள் வழியாகவும் அதிகமான தண்ணீர் கடலில் சென்று வீணாகிறது. இப்படி தண்ணீர் வீணாவதை தவிர்க்க வேண்டியது மிக அவசியமாகிறது. நீர்த்தேக்கங்கள் ,அணைக்கட்டுகள், குளங்கள், கிணறுகள், மூலமாக தண்ணீரை சேமித்து தேவைக்கேற்ப பாசனத்திற்கு பயன் படுத்தி அதனால் உணவு உற்பத்தியை பெருக்கிடச் செய்வதே அரசின் நோக்கமாகும். இதெற்கென அரசினால் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. கடந்த சில வருடங்களில் உணவு உற்பத்தி பெருமளவு பெருகியுள்ளது தமிழக அரசின் பெரும் சாதனையாகும் என்பது நாம் யாவரும் அறிந்த உண்மையாகும்.

திருநெல்வேலி மாவட்ட நீர்ப்பாசன மாநாட்டின் முக்கிய நோக்கம் இயற்கையில் கிடைக்கும் நீரினை தடுத்து பல்வேறு திட்டங்களால் நீர்ப்பாசனத்துக்குப் பயன்படுத்த அரசால் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் இதில் ஏற்படும் பல்வேறு சங்கடங்கள் இவற்றை எடுத்துரைத்து மக்களிடம் கலந்துரையாடி செயல்பட முடிவு எடுப்பதேயாகும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் மணிமுத்தாறு அணை, பாபநாசம்அணை, கடனாநீர்த்தேக்கம், இராமநதிநீர்த்தேக்கம்முதலிய பெரும்பாசனத்திட்டங்கள் மற்றும் கால்வாய்கள் அணைக்கட்டுகள், குளங்கள், கிணறுகள் மூலமாக 5, 71, 165 ஏக்கர் நிலங்கள் பாசனம் வசதி பெறுகின்றன. இது தவிரவும் 5, 84, 251 ஏக்கர் மானாவாரி பாசனப்பகுதி நிலங்கள் உள்ளன.

மேற்குறிப்பிட்ட பெரும் பாசனத் திட்டங்கள் தவிர கருப்பாநதி நீர்த்தேக்கம் குண்டாறு நீர்த்தேக்கம் முதலிய திட்டங்கள் புதிய அணைக்கட்டு வேலைகள், புதுக்கால்வாய் வெட்டும் வேலைகள் புது நீர்ப்பாசன திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

குளங்கள் அமைக்கும் வேலைகள், மற்றும் பல சிறு நீர்ப்பாசன திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதைத் தவிர கீழ்க்கண்ட பெரிய, நடுத்தர திட்டங்கள் ஆய்வில் உள்ளன. (1) பச்சையாறு நீர்த்தேக்கத் திட்டம், (2) கொடுமுடியாறு நீர்த்தேக்கத் திட்டம் (3) அடவிநயினார் கோவில் நீர்த்தேக்கத் திட்டம் (இவை மூன்றும் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம்பெற விருக்கிறது) (4) ஜம்புநதி நீர்த்தேக்கத்திட்டம்(5) வாழமலையாறு நீர்த்தேக்கத் திட்டம் (6) அமுதகண்ணியாறு நீர்த்தேக்கத்திட்டம் (7) பழையாறு-வாலமலையாறு நீர்த்தேக்கத் திட்டம் (8) வரட்டாறு நீர்த்தேக்கத் திட்டம் (9) கோம்பை ஆறு நீர்த்தேக்கத் திட்டம் (10) கோட்டமலையாறு நீர்த்தேக்கத் திட்டம் (11) கடனா இடதுபுற உயர் மட்டக் கால்வாய் திட்டம் (12) கடனா வலதுபுற உயர்மட்டக் கால்வாய் திட்டம் (13) புத்தன் தருவை வடிகால் திட்டம் (14) உப்போடை நீர்த்தேக்கத் திட்டம் (15) நம்பியாறு நீர்த்தேக்கத் திட்டம்.

மேலும் பல அணைக்கட்டுகள், புதிய கால்வாய் வெட்டுதல், கால்வாய்கள் புனரமைத்தல், கால்வாய்கள் உள்தளமிடுதல், புதிய குளங்கள் வெட்டுதல், குளங்களுக்கு தூர் எடுத்தல், புதிய குட்டைகள் அமைத்தல் போன்ற வேலைகளும் ஆய்வில் உள்ளன.

இத் திட்டங்களினால் நீர்ப் பாசனத்தை நல்ல முறையில் பயன்படுத்துவது சம்பந்தமாக கருத்து பரிமாறி கோரிக்கைகளை பரிசீலித்து செயற்படுத்த வேண்டியவைகளுக்கு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று உறுதி கூறிக்கொள்வதுடன், விவசாயிகள், பொதுமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டப் பேரவை, மேலவை உறுப்பினர்கள். ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், நகர்மன்றத் தலைவர்கள், ஊராட்சிமன்றத் தலைவர்கள், அலுவலர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து நம் சிந்தனையில் எழும் சீரிய நன்முத்துக்களை எடுத்துரைத்து இம் மாநாட்டினை சிறப்பித்துத் தர விழைகின்றேன்.

"வளர்க பாசனத் திட்டங்கள்"

**வி. டி. துரைராஜ்,** இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருநெல்வேலி மாவட்டம்.

# திருநெல்வேலி மாவட்டத்தில் நீர்ப்பாசன வசதி.

**ப. சிவலிங்கம்**, பி. இ.,
தலைமைப் பொறியாளர் (பாசனம்)
பொதுப்பணித்துறை.

தமிழகத்தில் சில வளமுள்ள பகுதிகள் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தாம்பிரபரணி நதியினால் பயன் பெறுகின்றன. இம்மாநிலத்தில் ஓரளவு நம்பத்தகுந்த தென்மேற்கு பருவ மழையினால் பயன் பெறும் நதிகளில் தாம்பிரபரணியும் ஒன்று ஆகும். இந்நதியில் எட்டு அணைக்கட்டுகளும் அவைகளோடுஒருங்கிணைந்த கால்வாய்களும் உள்ளன. கோடை காலத்தில் கிடைக்கும் ஊற்றுத்தண்ணீரை தாம்பிரபரணி நதியின் கடைவரம்புப் பகுதிகளில் பாசனத்திற்கு பயன் படுத்துவது பழக்கமாகும். இது "பழந்தொழி" சாகுபடி என அழைக்கப்படுகின்றது. இது ஒன்றே இம் மாவட்டத்திலுள்ள மக்கள் எந்த அளவுக்கு கிடைக்கும் ஆற்றுத் தண்ணீரை அதிக அளவு பாசனத்திற்கு பயன்படுத்துகிறார்கள் என்பதைக் காட்டுகிறது. பாபநாசம் நீர் மின் தேக்கத் திட்டம் அமைத்த பின்னர் கோடை காலத்தில் மின் நிலையத்திலிருந்து வரும் கழிவு தண்ணீரை பாசனத்திற்கு மேற்குறிப்பிட்டவையுள் "பழந்தொழி" சாகுபடிக்கு (தற்போது இதை "முன் கார்" என்று கூறுகிறார்கள்) பயன்படுத்தப் படுகின்றது. அதே நேரத்தில் இம்மாவட்டத்தில் சில பகுதிகளுக்கு மழையின்மையால் பாதிக்கப்படும் நிலைமை உள்ளது.

நம் நாடு சுதந்திரம் அடைந்த பின்னர், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் மணிமுத்தாறு நீர்த்தேக்கத் திட்டம் இம்மாவட்டத்தில் எடுத்துக் கொள்ளப் பட்டது. இத்திட்டத்தின் மூலம் பருவ மழையை நம்பியிருக்கும் 300 மானாவாரிக் குளங்கள் பாசனத்திற்காக பயன் பெறுகின்றன. மணிமுத்தாறு தாம்பிரபரணி உபநதியாகயிருப்பதால் இத்திட்டம் மூலம் தாம்பிரபரணி நதிப்பள்ளத்தாக்கிலுள்ள பாசன நிலங்களுக்கு தண்ணீர் அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது. 1966—67 ஆண்டுத் திட்டத்தின் கீழ் இராமநதி, கடனாநதி, நீர்த்தேக்கத் திட்டங்கள் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டு தற்போது தண்ணீர் பாசனத்திற்காக தேக்கி வைக்கப் பட்டுள்ளது, தாம்பிரபரணியின் உபநதிகளாகிய மேற்குறிப்பிட்ட இரு நதிகளாலும் ஏற்கனவே பயன்பெறும் நிலங்கள் நிரந்தரமாக பாசன வசதி பெறுகின்றன. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் கருப்பாநதி நீர் தேக்கத் திட்டமும் எடுக்கப்பட்டு தற்போது நல்ல அளவில் போதுமான முன்னேற்றமாக வேலைகள் நடந்து வருகின்றன. குண்டாறு நீர்த் தேக்கத் திட்டம் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் அமைக்கப் பட்டு வருகிறது.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், கீழ்க் குறிப்பிட்ட திட்டங்களும் அரசின் பரிசீலனையில் உள்ளன,

1) கொடுமுடியார் நீர்த் தேக்கத் திட்டம்.
2) பச்சையாறு நீர்த் தேக்கத் திட்டம்.
3) அடவிநயினார் கோவில் நீர்த் தேக்கத் திட்டம்
4) வாலமலையார் நீர்த் தேக்கத் திட்டம்.
5) ஜம்புநதி நீர்த் தேக்கத் திட்டம்.

இது தவிர, வேறு பல திட்டங்களும் ஆய்வில் உள்ளன. அவைகளை பரிசீலனை செய்து விரைவில் நிறைவேற்றப்படும்.

இம்மாதிரித் திட்டங்களை நிறைவேற்றுவதால், நாம் நமது மாநிலத்திலுள்ள ஆறுகளில் ஓடும் தண்ணீரை முழு அளவில் பயன்படுத்தும் முடிவிற்கு வந்துள்ளோம். ஆகையால் இத்துறையில் நம் தமிழ் நாடு அரசு உண்மையில் பெருமை அடைகிறது. ஏற்கனவே உள்ள நீர்ப்பாசன வசதிகளை சிக்கனமான செலவில் தண்ணீரை முறையாக பாசனத்திற்கு வீணாகாமல் கொண்டு செல்லும் வகையில் மேம்படுத்தவும் மற்றும் சீர்படுத்தவும் திட்டங்கள் அவசியமாகின்றது. இம்மாதிரி மேம்படுத்துதல் வேலைகளினால் கிடைக்கும்

உபரி தண்ணீரை பாசன வசதியை அபிவிருத்தி செய்யவும் புதிய தொழிற்சாலைகளுக்குப் பயன்படுத்தவும் முடியும். தாம்பிரபரணி படுகையிலுள்ள எல்லாக் கால்வாய்களையும் சீரமைப்பு வேலைகள் எடுக்கப்பட்டு அவைகளில் அநேக கால்வாய்கள் புனரமைப்பு செய்யப்பட்டன. தூத்துக்குடி தொழிற் கேந்திரங்களுக்கு தண்ணீர் அளிப்பதற்காக மருதூர், ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டுகளின் கீழுள்ள கால்வாய்கள் சிமெண்ட் கற்காரைப் பலகைகள் போடும் வேலை நடைபெற்று வருகின்றன. இம்மாவட்டத்திலுள்ள மற்ற கால்வாய்களையும் புனரமைப்பு செய்யவும், சிமெண்ட் கற்காரை பூசுவதற்கும் வேண்டிய திட்டங்கள் தற்போது ஆய்வில் இருக்கின்றன.

மாநிலத்திலுள்ள சிறு நீர்ப்பாசன வசதிகள் பெருமளவுக்கு உணவு உற்பத்திக்கு உதவுகின்றன. அதனால், அரசு பலபெரிய, நடுத்தரத் திட்டங்களை செயல் படுத்துவதுடன், இம்மாதிரியான சிறு பாசனத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது. ஏனெனில், இம்மாதிரி சிறு பாசனத்திட்டங்கள் விரைவில் பயனை அளிக்கின்றன. மாநிலத்திலுள்ள 37000 குளங்களில். இம்மாவட்டத்தில் மட்டும் சுமார் 2700 குளங்கள் உள்ளன இம்மாதிரி சிறு பாசன வேலைகள் நேரடியாக கவனித்து பராமரிப்பு செய்ய வேண்டியுள்ளது. இவைகளில் முக்கியத்துவம் கருதி, அரசு, பஞ்சாயத்தைச் சார்ந்த குளங்கள், பழைய ஜமீன் குளங்களை சீரமைப்பு வேலைகளுக்கு மூலதனம் ஒதுக்கியுள்ளது. மாநிலத்திலுள்ள, இம்மாதிரி குளங்களுக்கு சிறப்பு பழுது பார்த்தல் வேலைகளுக்கு அரசு 1974—75 ஆண்டிற்கு ரூ. 350 லட்சம் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கியுள்ளது.

இது தவிர, 100 ஏக்கரும் அதற்கு மேலுள்ள ஆயக்கட்டுள்ள குளங்களை பராமரிக்க, பொதுப்பணித் துறை நிர்வாகத்தின் கீழ் கொண்டு வர அரசு தீர்மானித்துள்ளது. தற்சமயம், 200 ஏக்கரும் அதற்கு மேலுள்ள ஆயக்கட்டுள்ள குளங்கள் பொதுப்பணித் துறையின் கீழ் பராமரிப்பிலுள்ளன,

மேலும் நம் மாநிலத்திலுள்ள நீர் வள வசதிகளைப் பெருக்குவதற்காக, அண்டை மாநிலங்களிலிருந்து நீரை கொண்டு வருவதற்கு அவர்களது நல்ல ஒத்துழைப்புடன், வேண்டிய திட்டங்கள் பல நமது அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பல்வேறு மாவட்டங்களில் ஓடும் நதியின் உள்ள உபரி தண்ணீரை அந்த மாவட்டத்தின் தேவைக்கு பாதகம் ஏற்படா வண்ணம், மாவட்டங்களுக்குள் பகிர்ந்து கொள்ளுவதற்கு திட்டங்களும் பரிசீலனை செய்யப்பட்டுள்ளது. இம்மாதிரி முறைக்கு உதாரணமாக மூன்றாவது ஐந்தாவது திட்டத்தின் கீழ் பெரிய திட்டமாகிய சிற்றாறு பட்டணங்கால் திட்டமும் ஒன்றாகும். இத் திட்டம் 1970-71 ஆண்டு முதல், திருநெல்வேலி கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு பயன் அளித்து வருகிறது.

மக்களுக்கு பயன்படுகின்ற இம்மாதிரி பல நல்ல பாசனத் திட்டங்களை நிறைவேற்ற ஒவ்வொரு பொதுப் பணித்துறை அலுவலரும் முழு முயற்சியுடன் ஒத்துழைக்க வேண்டியது அவர்களது கடமையாகும். இம்மாதிரி மாவட்டங்கள் தோறும், நீர்ப்பாசனக் கருத்தரங்கு நடத்துவதின் மூலம் பொது மக்களது நீர்ப்பாசன வசதி பற்றிய குறைகளை அறியவும் மற்றும் அவர்களின் நியாயமான குறைகளை நிவர்த்திக்கவும் வழி வகை செய்யப்படுகிறது.

இந்த நீர்ப்பாசனக் கருத்தரங்கு நடத்துவதில் முக்கிய நோக்கம் நிச்சயமாக நிறைவேறும் என்று நான் நம்புகின்றேன்.




| அரசுக்கு அனுப்பிய திட்டங்கள் | | | | |
|---|---|---|---|---|
| வரிசை நிர் | திட்டங்கள் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | பயன் பெறும் மொத்த நிலங்கள் ஏக்கரில் | கொள்ள அளவு மீ.கன அடி |
| 1 | குண்டாறு நீர்த்தேக்கத் திட்டம் - செங்கோட்டை வட்டம். | 37·00 | 2244 | 25·00 |
| 2 | அடவிநயினார்கோவில் நீர்த்தேக்கதிட்டம் — சங்கரன்கோவில் வட்டம் | 149 00 | 11877 | 170·00 |
| 3 | கொடுமுடியாறு நீர்த் தேக்கத்திட்டம் — நான்குநேரி வட்டம் | 78 00 | 6184 | 67·50 |
| 4 | வாழைமலையாறு நீர்த் தேக்கத்திட்டம் — சங்கரன்கோவில் வட்டம் | 45·00 | 2395 | 65 00 |
| 5 | சப்புநதி நீர்த்தேக்கத் திட்டம் — அம்பாசமுத்திரம் வட்டம் | 89 50 | 2966 | 122·00 |

| செயலாக்கப்பட்ட திட்டங்கள் | | | |
|---|---|---|---|
| வரிசை நிர். | திட்டத்தின் பெயர் | பயன் பெறும் மொத்த நிலங்கள் ஏக்கரில் | கொள்ளளவு மீ.கன அடி |
| 1 | கடனா நீர்த்தேக்கம் | 7622 | 350.00 |
| 2 | இராமநதி நீர்த்தேக்கம் | 3882 | 152.00 |
| 3 | மணிமுத்தாறு அணை | 19660 | 5500.00 |
| | செயலில் உள்ள திட்டங்கள் | | |
| 1 | கருப்பா நதி நீர்த்தேக்கத் திட்டம் | 9576 | 185.00 |
| 2 | குண்டாறு நீர்த்தேக்கத் திட்டம் | 2244 | 25.00 |

| ஆய்வில் உள்ள திட்டங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|
| வரிசை நிர். | திட்டத்தின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | பயன் பெறும் மொத்த நிலங்கள் ஏக்கரில் | கொள்ளளவு மீ.கன அடி | தற்போதைய நிலை |
| 1 | அழுதக் கண்ணியாறு நீர்த்தேக்கத் திட்டம் தென்காசி வட்டம். | 112.00 | 2458 | 22.00 | |
| 2 | வரட்டாறு நீர்த்தேக்கத் திட்டம் – தென்காசி வட்டம் | 59.00 | 666 | 39.00 | |
| 3 | பழையாறு - வாழைமலையாறு நீர்த்தேக்கத் திட்டம் – சங்கரன்கோவில் வட்டம். | 205.00 | 10998 | 245.00 | |
| 4 | கடனு உயர்மட்ட கால்வாய் திட்டம் – அம்பாசமுத்திரம் வட்டம் | 680.00 | 15000 [DRY] 1172 [WGT] | 28 Miles (நீளம்) | |
| 5 | கோட்டமலையாறு நீர்த்தேக்கத் திட்டம் சங்கரன்கோவில் வட்டம் | 34.00 | 1984 | 40.00 | |
| 6 | கோம்பையாறு நீர்த்தேக்கத் திட்டம் சங்கரன்கோவில் வட்டம், | 89 00 | 1892 | 50.00 | |
| 7 | கடனு வலதுபக்க உயர்மட்ட கால்வாய் திட்டம் அம்பாசமுத்திரம் வட்டம் | 16.70 | 483 | 7 மைல் (நீளம்) | |
| 8 | கருப்பாநதி கால்வாய் சீரமைப்பு திட்டம் தென்காசி வட்டம். | | | | |
| 9 | நம்பியாறு நீர்த்தேக்கத் திட்டங்கள் நான்குநேரி வட்டம். | | | | |
| 10 | உப்போடை நீர்த்தேக்கத் திட்டங்கள் கோவில்பட்டி வட்டம். | 48.30 | 2744 | 170.00 | |
| 11 | பச்சையாறு நீர்த்தேக்கத் திட்டம் நான்குநேரி வட்டம் | 225.00 | 11035 | 133.00 | |
| 12 | புத்தன் தருவை – வடிகால் திட்டம் நான்குநேரி வட்டம். | 53.00 | 1119 | 16.70 கி.மீ. (நீளம்) | |
| 13 | முண்டல் நீர்த்தேக்கத் திட்டம் தென்காசி வட்டம். | 16.20 | 674 | 5,00 | |

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஜலமின்சக்தி திட்டங்கள்

1. மேல் அணை — அடுக்கு பாறை — அம்பாசமுத்திரம்வட்டம்
2. கீழ் அணை — பாபநாசம் பிராஜெக்ட் — அம்பாசமுத்திரம் வட்டம்
3. சேர்வலாறு அணை — முண்டன்துறை — அம்பாசமுத்திரம் வட்டம் (கட்டுமானத்தில் உள்ளது)

அளவு: 1 அங்குலம் = 8 மைல்கள்

பொதுப்பணித்துறை, தமிழ்நாடு அரசு
திட்ட ஆய்வுக்கோட்டம், திருநெல்வேலி-2.

**திருநெல்வேலி மாவட்ட திட்டங்களின் படம்**

| | |
|---|---|
| வரைந்தது. | |
| ஏ. ம. லாரன்ஸ் சரிபார்த்தது. | செயற் பொறியாளர். |

D. R. No. INV-DN-TNV. 88/74.

# பகுதி - 1

# திருநெல்வேலி மாவட்டத்தில் நீர்ப்பாசனம்

**திரு. டி. எச். எல். நரசிம்மையா,** பி. எஸ்சி., பி. இ.
மேற்பார்வை பொறியாளர், பொ. ப. து.,
திருநெல்வேலி - கன்னியாகுமரி வட்டம்,
பாளையங்கோட்டை.

தமிழ் நாட்டிலுள்ள மொத்த பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 130 லட்சம் ஹெக்டேர் ஆகும். அதில் 76.41 லட்சம் ஹெக்டர் பரப்பில்தான் பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன. பயிர்கள் விளைவிக்கக்கூடாத காடுகள் நிலங்கள் விவசாயத்திற்கு தவிர மற்ற உபயோகத்திற்குட்படுத்தப்பட்ட நிலங்கள், மேய்ச்சல் நிலம் முதலியன 47 லட்சம் ஹெக்டேர் எனக் கணகிடப்பட்டுள்ளன.

பயிரிடும் பகுதியான 76.41 லட்சம் ஹெக்டேர் நிலத்தில் நீர்த்தேக்கங்கள் மற்றும் கால்வாய்கள் மூலம் 9.30 லட்சம் ஹெக்டேர் பாசனம் பெறுகிறது. கண்மாய்கள் மூலம் 9.24 லட்சம் ஹெக்டேர் பயன் பெறுகிறது. கிணறுகள், குழாய் கிணறுகள் மூலம் 8.20 லட்சம் ஹெக்டேர் பரப்பு பாசனவசதி பெற்றிருக்கிறது. மொத்தம் பாசன வசதிபெறும் 27.10 லட்சம் ஹெக்டேரில் ஒரு கணக்காக 35 சதவிகிதம் நிலங்கள் அரசினால் அமைக்கப்பட்ட கால்வாய்களினாலும் 34 சதவிகிதம் கண்மாய்கள் மூலமும் ,28 சதவிகிதம் கிணறுகள் மூலமும் பயன் பெறுகின்றன.

**திருநெல்வேலி மாவட்டம்:** திருநெல்வேலி மாவட்டம் இயற்கையாகவே நீர்வளமும், நிலவளமும்கொண்ட ஓர் மாவட்டமாக திகழ்கின்றது. மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகும் சிறிய, பெரிய ஆறுகள் இம்மாவட்டமெங்கும் பாய்ந்து மாவட்டத்தை செழிப்பாக்குகின்றன. திருநெல்வேலி மாவட்டத்தின் மொத்த பரப்பளவு 11,28,400 ஹெக்டேர். இவற்றில் காடுகள், பயிரிட இயலாத நிலம், வேளாண்மை செய்யமுடியாத நிலம், மேய்ச்சல் காடுகள், புல்வெளிகள் தோப்புக்கள் ஆகிய நிலங்கள் 416800 ஹெக்டேர். மீதியில் பயிரிடப்படும் நிலங்களின்பரப்பு 4,67,800 ஹெக்டேர் ஆகும் இதில் பாசனம்பெறும் நிலங்களின் பரப்பு 2,31,241 ஹெக்டேர் ஆகும். மானாவாரி பாசனப்பகுதி 23,65,39 ஹெக்டேர் ஆகும். நீர்பாசனம் பெறும் நிலங்கள் 2,31,241 ஹெக்டரில் அரசு கால்வாய் மூலம் 21,956 ஹெக்டரும், கண்மாய்கள் மூலம் 74,684 ஹெக்டரும் கிணறுகள் மூலம் 63,955 ஹெக்டரும் இதர முறைகள் மூலம் 2,863 ஹெக்டரும் பயன் பெறுகின்றன.

**ஆறுகள் :-** இம்மாவட்டத்தில் பாயும் ஆறுகளில் தாமிரபரணியாறும் அதன் உபநதிகளும் மிக முக்கியமாக திகழ்கின்றன. தாமிரபரணியாற்றைத் தவிர நம்பியாறு, அனுமாநதி, வைப்பாறு முதலிய ஆறுகள் பாய்கின்றன. தாமிரபரணி ஆற்றின் உபநதிகளான சித்தாறு, மணிமுத்தாறு கடனாநதி, ராமநதி, ஆகியவைகளும் நீர்வளத்தை கணிசமான அளவுக்கு பெருக்கியுள்ளன.

**நீர்வளம் :-** மேற்கண்ட பல பெரிய ஆறுகளினாலும் மற்றும் பல சிறிய ஆறுகளினாலும் நெல்லைமாவட்டத்தில் நீர்வளம் 7,53,000 லட்சம் கனஅடி எனக் கணக்கிடப் பட்டுள்ளது. தற்போது வேலை நடந்து கொண்டிருக்கும் கருப்பாநதி நீர்த்தேக்கத் திட்டம் மற்றும் குண்டாறு நீர்த்தேக்கத் திட்டம் உட்பட வேலை முடிக்கப்பட்டுள்ள மணிமுத்தாறு, ராமநதி, கடனா நீர்த்தேக்கத் திட்டங்களிலும் மற்றுமுள்ள அணைக்கட்டுகள் மூலமாகவும் கிட்டதட்ட 4,18,000 லட்சம் கன அடி நீர் பாசனத்திற்காக பயன்படுத்தப்படுகிறது. ஆகையால் மீதமுள்ள நீர்வளத்தைப் பெருக்கி பயனடையும் பாசனப் பகுதியைப் பெருக்க மேலும் 11 பெரிய நீர்த்தேக்க திட்டங்களை ஆய்வு செய்தும், அண்மையில் அவற்றில் சில நிறைவேற்றும் நிலையிலும் பொதுப்பணித்துறை இருக்கிறது என்பது பொது மக்களுக்கு மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

**சிறப்புச் சிறுபாசனத் திட்டம் :-** பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை தவிர, புதிய அணைக் கட்டுகள், மற்றும் புதிய கால்வாய் வெட்டும் வேலை அல்லது புதிய கண்மாய் அமைக்கும் வேலைகள் சிறப்புச் சிறிய பாசனத் திட்டங்கள் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. கடந்த சில வருடங்களில் நெல்லை மாவட்டத்தில் சிறப்புச் சிறிய பாசனத் திட்டங்கள் மூலம் 41 திட்டங்கள் நிறைவேற்றி அவற்றின் மூலம் 75810 ஏக்கர் பாசன வசதி பெற்றுள்ளது. தவிர தற்போது மேலும் 23 திட்டங்கள் 35419 ஏக்கர் பயனடையும் வகையில் வேலை நடந்து வருகின்றன. மேலும் பல திட்டங்களுக்கு அனுமதி கிடைத்திருக்கின்றது. இவற்றின் மூலம் மேலும் நீர்வளம் பயனடையும் விதத்தில்



இம்மாவட்டத்திலும் அமையும். மேலும் பல கண்மாய்கள் செப்பனிடப்பட்டு பதிவு செய்யப் பட்டுள்ள ஆயக்கட்டுகள் கடந்த 5 வருடகால சராசரி பயிரிடப்பட்ட ஆயக்கட்டுகளுக்கும் உள்ள மீதப்பகுதியை பயிரிடத் தக்க வகையில் உபயோகத்திற்கு கொண்டு வரப்படுகின்றன. தற்போது அவ்வாறு 120 கண்மாய்கள் செப்பனிடப்பட்டு வருகின்றன. இவற்றால் பயனடையும் பரப்பு 8020 ஏக்கர். அண்மையில் அரசினரால் அங்கீகரிக்கப் பட்டபடி 100 ஏக்கர் முதல் 200 ஏக்கர் வரை ஆயக் கட்டு கொண்ட கண்மாய்கள் இனி பொதுப்பணித் துறையினரால் பராமரிக்கப்படும். மேலும் பிற 100 ஏக்கருக்கு குறைவான ஆயக்கட்டு கொண்ட குளங்கள் முன் உரிமைப்படி பொதுப்பணித்துறையினால் சீரமைக்கப்பட்டு அந்தந்தஊராட்சிஒன்றியங்களுடன் பராமரிப்புக்காக ஒப்படைக்கப்படும். இவ் வருடம் இதற்காக தமிழ்நாட்டில் மொத்தம் ரூ. 150 லட்சம் செலவிடப்படும். மேலும் பல ஜமீன் குளங்களையும் இவ்வாறு சீர்படுத்த உத்தேசம் உள்ளது. மேலும் ரூபாய் 50 லட்சம் இவ்வருடம் இதற்காக செலவிடப்படும்.

**தூர் வாரலும் புனரமைப்பும்:-** கண்மாய்களில் வண்டல் படிந்து அதனால் கொள்ளளவு பாதிக்கப்பட்டுள்ளது என்பது யாவரும் அறிந்தது ஆகும். ஆகையால் இதற்கு வழி செய்திட கண்மாயின் கொள்ளளவை ஓரளவு உயர்த்தலினாலும் கண்மாயிலுள்ள தூர்மண்ணை ஓரளவு அகற்றி கொள்ளளவை உயர்த்தலினால் மூழ்கடிக்கப்படும் நிலங்களின் பட்டத்தை உயர்த்தினாலும் சமன் செய்யப்படும் திட்டந்தான் கண்மாயின் தூர்வாரலும் புனரமைப்பும் திட்டமாகும். பெரிய கண்மாயில் இது இயந்திரங்களின் துணை கொண்டு செய்யப்படும். சிறிய கண்மாய்களில் இப்பணி மனிதர்களால் செய்யப்படும். இத்தகைய திட்டங்கள் நெல்லை மாவட்டத்திலும் இது வரை 3 பணிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளது. இவற்றால் பயனடையும் பரப்பு 2028 ஏக்கர். இம்மாதிரி திட்டங்களுக்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**குட்டைகள் அமைத்தல் :-** இயற்கை வனத்தைச் சார்ந்த இந்த பணிகள் தவிர பிறபகுதிகளில் பல குட்டைகள் அமைத்து மழைக்காலங்களில் நீரை அதில் தேக்கி அதன் மூலம் அண்மையில் (படுகையில்) உள்ள கிணறுகளில் நீரின் மட்டத்தை உயர்த்தும் நோக்கம் கொண்டு குட்டைகள் அமைக்குந்திட்டம் அமைந்துள்ளது. நெல்லை மாவட்டத்தில் நாங்குநேரி வட்டத்தில் உள்ள ராதாபுரம் பகுதியிலும் திருச்செந்தூர் வட்டத்திலும் முன்னோடியாக இத்திட்டம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. ராதாபுரம் பகுதியில் 11 திட்டங்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டு, 7 குட்டைகள் அமைக்க மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. நாங்குநேரி வட்டத்தில் இரு குட்டைகளும் சங்கரன்கோவில் வட்டத்தில் இரு குட்டைகளும் அமைய ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இவை விரைவில் செயலாற்றப்படும்

**பிற:—** இவை தவிர சில காட்டுப்பகுதியிலுள்ள ஓடைகளில் வீணாகச் செல்லும் நீரை உபயோகப் படுத்துமளவில் திட்டங்கள் ஆய்வு மேற்கொள்ளப்பட விருக்கின்றன. அதற்கான விரிவான முன்னோடி வேலைகள் நடைபெற்று வருகின்றன. மேற்கூறியவை மூலம் தமிழகஅரசு நோக்கப்படி பொதுப் பணித் துறையினர், நீர் வளத்தை முழுமையாக உபயோகிக்க பல நல்ல திட்டங்களை தீட்டியுள்ளனர். இவைகளை நிறைவேற்றி மக்களுக்குமுழுப்பயனும் அடையச்செய்திட நெல்லை மாவட்டத்தை ஒரு முன்னேற்றப் பாதையில் நீர்ப்பாசன வசதிகளின் மேம்பாட்டுடன் இருக்க எல்லா முயற்சிகளுக்கும் பொதுமக்களின் ஒத்துழைப்பும் ஊக்கமும் வேண்டப்படுகிறது.

—:—

# தாம்பிரபரணி பாசனம்

திரு. ஆர். கிருஷ்ணசாமி,
செயற்பொறியாளர், பொ. ப. து.,
தாமிரபரணிக் கோட்டம்.

## 1. தாமிரபரணி ஆறும் அதன் உபநதிகளும்:—

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மிகமுக்கியமான பாசனநதி தாமிரபரணி ஆறு ஆகும். தாமிரபரணி ஆறும் அதன் உபநதிகளும் நீர்ப்பிடிப்பு பரப்பு 1750 சதுரமைல் ஆகும். இவ் ஆறு மேற்கு தொடர்ச்சி மலையிலுள்ள பெரிய பொதிகையில் உற்பத்தியாகி இம்மாவட்டத்தின் குறுக்காக 75 மைல் ஓடி மன்னார்குடி கடலில் கலக்கின்றது. மேற்கு தொடர்சி மலையில் மிகுந்த நீர்ப்பிடிப்பு பரப்பு இருப்பதால், வடகிழக்கு பருவக்காற்று, தென்மேற்கு பருவக்காற்று காலத்தில் முழுப் பலனையும் பெறுகின்றது. இது ஒரு வற்றாத ஆறு ஆகும்.

கரையார், சேர்வலார், பம்பார் முதலிய உபநதிகள் இவ் ஆறுடன் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் சேர்கிறது. சமவெளிப் பகுதியில் முதலில் கலக்கும்உபநதிமணிமுத்தார்ஆகும். மேலக்கடையம் மலைப்பகுதியில் உற்பத்தியாகும் ஜம்பு நதி, இராம நதியும், சிவனசலம் மலைப்பகுதியில் உற்பத்தியாகும் கடனாநதியும் அதன் உபநதிகளும் திருப்புடை மருதூர் கிராமத்தில், தாமிரபரணி ஆற்றுடன் கலக்கின்றது, களக்காடு மலையில் உற்பத்தியாகும் பச்சையார் நாங்குநேரி திருநெல்வேலி வட்டத்திலுள்ள ஆயக்கட்டுகளுக்கு பயன்பட்டு பின்னர் தருவை கிராமத்தினருகில் தாமிரபரணியாற்றுடன் கலக்கும் உபநதியாகும், இதேபோல் குற்றால மலையில் உற்பத்தியாகும் சித்தார் நதி தென்காசி, திருநெல்வேலி வட்ட ஆயக்கட்டுகளுக்கு பயன்பட்டு சீவலப்பேரி கிராமத்தினருகில் கலக்கும் உபநதியாகும். இந்த உபநதிகள் வடகிழக்குப் பருவகாற்று காலத்தில் மிகுதியான தாமிரபரணி ஆற்றில் மிகுந்த வெள்ளத்தை கொண்டு வருகின்றன.

### நீர்த்தேக்கங்கள்:—

தாமிரபரணி ஆற்றின் குறுக்கே, பாபநாசம் மலையில் 5500 மி. க. அடி கொள்ளளவுள்ள ஒரு நீர் தேக்கம், 1942மீ ஆண்டு கட்டப்பட்டுள்ளது. மிக முக்கிய உபநதியான மணிமுத்தாரின் குறுக்கே சிங்கம்பட்டி கிராமத்தில் 5511 மி. க. அடி. கொள்ளளவுள்ள ஒரு நீர்த்தேக்கம் 1957-ம் ஆண்டு கட்டப்பட்டுள்ளது. தாமிரபரணி பாசன நிலங்கள் இவ்விரு நீர்த்தேக்கங்கள் பயன்படுகின்றன. உறுதியான பாசன வசதி பெறுகிறது.

தற்போது உபநதியான கடனா நதியின் குறுக்கே 150 மி. க. அடி. கொள்ளளவுள்ள நீர்த்தேக்கம் இராம நதியின் குறுக்கே, 150 மி. க. அடி. கொள்ளளவுள்ள நீர்தேக்கமும் கட்டப்பட்டுள்ளன.

### அணைக்கட்டுகள்:

ஆங்கிலேயர் ஆதிக்கத்திற்கு முன்னர், ஆட்சி செய்த பழங்கால அரசர்களால் தாம்பிரபரணியின் குறுக்கே ஏழு அணைக்கட்டுகளை கட்டப்பட்டுள்ளன. இவ்வணைக்கட்டுகள் நம் முன்னோர்கள் பொறியியல், வடிவமைப்பில் பெற்றுள்ள தேர்ச்சிக்கு ஓர் எடுத்துகாட்டாகும். தாமிரபரணி ஆற்றின் குறுக்கே, ஸ்ரீவைகுண்டம் ஊரில், ஆங்கிலேயர், ஆட்சிக் காலத்தில் ஒரு அணைக் கட்டப்பட்டது. இதுவே தாமிரபரணி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட கடைசி அணைக்கட்டாகும். அணைக் கட்டுகளும் அதன் மூலம் பாசன வசதி பெறும் பரப்பும்.

| | அணைக்கட்டின் பெயர் | கால்வாயின் பெயர் | நேரடிப் பாசனம் ஏக்கர் | குளப் பாசனம் ஏக்கர் | மொத்தப் பரப்பு ஏக்கர் |
|---|---|---|---|---|---|
| 1 | கோடைமேலழகியன் அணைக்கட்டு | அ. வடக்கு கோடைமேலழகியன் கால்வாய் | 1935 | 325 | 2260 |
| | | ஆ. தெற்கு கோடைமேலழகியன் கால்வாய் | 870 | இல்லை | 870 |
| 2 | நதியுண்ணி அணைக்கட்டு | இ. நதியுண்ணி கால்வாய் | 2460 | ,, | 2460 |
| 3 | கன்னடியன் அணைக்கட்டு | ஈ. கன்னடியன் கால்வாய் | 10334 | 2166 | 12500 |
| 4 | அரியநாயகிபுரம் அணைக்கட்டு | உ. கோடகன் கால்வாய் | 3000 | 3000 | 6000 |
| 5 | பழவூர் அணைக்கட்டு | ஊ. பாளையம் கால்வாய் | 6200 | 3300 | 9500 |
| 6 | சுத்தமல்லி அணைக்கட்டு | எ. திருநெல்வேலி கால்வாய் | 2525 | 3885 | 6410 |
| 7 | மருதூர் அணைக்கட்டு | ஏ. மருதூர் கீழ்க்கால்வாய் | 2970 | 4815 | 7785 |
| | | ஐ. மருதூர் மேலக்கால்வாய் | 4554 | 8208 | 12762 |
| 8 | ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டு | ஒ. வட கால்வாய் | 3289 | 9511 | 12800 |
| | | ஓ. தென் கால்வாய் | 2693 | 10067 | 12760 |
| | | | 40830 | 45277 | 86107 |



தாமிரபரணி பாசனத்தின் பயன் பெறும் ஆயக்கட்டின் மொத்தப் பரப்பில் 50 விழுக்காடு (50%) பரப்பு மருதூர் அணைக்கட்டு, ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டு பகுதியின் கீழுள்ளது (46407 ஏக்கர்).

### பயிரிடும் காலமும் பரப்பும்:

இ. வடகிழக்கு பருவக் காற்று காலத்தில் பயிரிடும் முறையை (அக்டோபர் 15 முதல் மார்ச் மாத முடிவுவரை) பிசானம் என்றும், தென் மேற்கு பருவகாற்று காலத்தில் பயிரிடும் முறையை (ஜூன் 15 முதல் செப்டம்பர் 15 வரை) கார் சாகுபடி எனவும் அழைக்கப்படுகிறது. இம்மாவட்டத்தில் பயிரிடும் முக்கியமான பயிர், நெல் பயிராகும். தாமிரபரணி பாசனப் பரப்பில் 86 விழுக்காடு பரப்பு இருபோக பரப்பாகும் (கார் பிசானம்)

### பழந்தொழி பாசனம்.

தாமிரபரணி ஆற்றின் கடைப்பகுதியிலுள்ள மருதூர் ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டின் கீழுள்ள இருபோக பாசனப் பகுதியில் "பழந்தொழி" சாகுபடி ஏப்ரல், மே மாதங்களில் காலந் தொட்டு நடைபெற்று வருகிறது. கோடை காலத்தில் பெய்யும் மழை நீரைக் கொண்டும், பாபநாசம் மின் நீர்த்தேக்கத்திலிருந்து, மின் உற்பத்திக்கு எடுக்கப்பட்டு, கழிக்கும் தண்ணீரைக் கொண்டும், "பழந்தொழி" சாகுபடி செய்யப்படுகிறது. ஏப்ரல், மே மாதங்களில் தலைப்பகுதியிலுள்ள ஆறு அணைக்கட்டுகளில் கால்வாய்கள், பராமரிப்புக்காக அடைக்கப்பட்டுவிடுவதால், தாமிரபரணி ஆற்றில் இக்காலத்தில் வரும் நீர் மேலப்பகுதிக்கு தேவையில்லாததால் இதை விரையம் செய்யாது, பயன்படுத்த பழந்தொழி சாகுபடி செய்யப்படுகிறது, இம்முறை சாகுபடி, பாபநாசம் மின் நீர்த்தேக்கம் கட்டப்படுவதற்கு முன்பிருந்தே ஸ்ரீவைகுண்டம் கால்வாயின் கீழ் 8000 ஏக்கருக்கு குறைவான இருபோக பாசன நிலங்களில் பயிரிடும் பழக்கத்திலுள்ளது. பாபநாசம் அணைக்கட்டப்பட்ட பின் (1943) ஆற்றில் அதிக அளவு நீர் நிரந்தரமாக வரப்பெற்றதால் பழந்தொழி சாகுபடியின் பரப்பு, நல்ல மழை பெய்யும் வருடத்தில் 27000 ஏக்கராக அதிகரித்தது.

இவ்வாறு பழந்தொழி சாகுபடி செய்யும் பரப்பு நாளுக்குநாள் அதிகரித்ததால் இப்பரப்பின் பகுதிகளை தீர்மானிக்க அரசு ஆணை எண். 2011 பொ. ப. து. நாள் 12—11—69-ல் விதிமுறை வரையறுக்கப்பட்டது. தற்போது பழந்தொழி சாகுபடி பரப்பு பாபநாசம் நீர்த்தேக்க அளவு நீர்த்தேக்க உள்வரும் நீரின் அளவு, குளங்களின் பிசான சாகுபடிக்கு பயன் படுத்தப்பட்டபின் மீதமிருக்கும் நீரின் அளவு, இவைகளை கணக்கில் கொண்டும், அரசு ஆணை எண்ணில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறையின் படியும் பரப்பு தீர்மானிக்கப்படுகிறது. இக்காலத்தில் குறுகிய காலப்பயிரே பயிரிடப்படுகிறது.

### கால்வாய்களின் தற்போதைய நிலை

ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டில் கீழுள்ள இரு கால்வாய்களை தவிர மற்றைய எல்லாகால்வாய்களும் குறிப்பிட்ட வடிவமைப்பு, கொண்டதாக இல்லை. கால்வாய் பாசனமடைகளில் அளவுகள் ஆய்க்கட்டின் தேவைக்கு மேல் நீர் வழங்கக் கூடியவைகளாக இருந்தன. இதனால் ஓரளவு நீர் வீணாயின. எனவே, இக்கால்வாய்களையும், பாசனமடைகளையும் சீரான வடிவமைப்புக்கு கொண்டுவர புர அமைப்புத் திட்டத்தின் கீழ் கால்வாயின் வடிவமைப்பு மடைகளை ஆயக்கட்டுகளின், தேவைக்கேற்றத் தண்ணீர் வழங்க மாற்றியமைத்து கட்டப்பட்டது. இதனால் கால்வாய் செயல்திறன் அதிகரித்துள்ளது. தண்ணீர் வீணாவது பெருமளவு தடுக்கப்பெற்று, நீர் வழங்குதல் சிக்கனமாகவும் முறையாகவும் வழங்க சாத்தியம் ஏற்பட்டுள்ளது.

தற்போது, ஸ்ரீவைகுண்டம் கால்வாய்கள், மருதூர் கால்வாய்கள் தூத்துக்குடி குடிநீர் வழங்கும் திட்டமான நாளொன்றுக்கு 20 மி. க. அடி. திட்டத்தில் கீழ் நீர் கொண்டு செல்ல சிமெண்ட் லைனிங் செய்யப்படுகிறது. இதனால் இக்கால்வாய்களின் நீர் கோண்டு செல்லும் திறனும் அதிகரித்துள்ளதாகும்.

மேலும் தற்போது தாமிரபரணி பாசனத்தின் கீழுள்ள எல்லாக்கால்வாய்களையும் சிமிண்ட் லைனிங் செய்வது பற்றி பரிசீலிக்கப்படுகிறது. இதனால் நீர் வீணாவது தடுக்கப்பட்டு சாகுபடி செய்யும் பரப்பு அதிகரிக்க வாய்ப்புள்ளது.

## 2. சித்தாறு:

சித்தாறு தாமிரபரணியாற்றின் ஒரு துணையாறு ஆகும். இது தென்காசி வட்டத்திலுள்ள குற்றால மலையில் உற்பத்தியாகி தென்காசி வட்டம் திருநெல்வேலி வட்டம் இவற்றின் குறுக்கே 50 மைல் தூரம் ஓடி திருநெல்வேலி வட்டம், சிவலப்பேரி கிராமத்தின் அருகில் மருதூர் அணைக்கட்டிற்கு மேல் தாமிரபரணியாற்றில் கலக்கிறது. இந்நதியின் குறுக்கே 17 அணைக்கட்டுகள் உள்ளன. இவற்றிலிருந்து 18 வாய்க்கால்கள் செல்லுகின்றன. இவற்றின் கீழ் நேரடிப்பாசனம் மூலமும், குளங்கள் மூலமும் 16640·86 ஏக்கர் பரப்பு பாசன வசதி பெறுகிறது.

மேலே சொல்லப்பட்ட 18 வாய்க்கால்களிலும் மானூர், மாராந்தை, பள்ளிக்கோட்டை ஆகிய மூன்று வாய்க்கால்களும் மிகவும் நீளமான வாய்க்கால்கள் ஆகும். இம்மூன்று வாய்க்கால்களும் தென்காசி தாலுகாவில் ஆரம்பித்து திருநெல்வெலி தாலுகாவில் முடிகிறது. ஆராந்தை வாய்க்காலின் நீளம் மைல் 14. 4. 330 பள்ளிக்கோட்டை வாய்க்காலின் நீளம் மைல் 15. 7. 330. மானூர் வாய்க்காலின் நீளம் மைல் 20. 7. 0 ஆகும். மிகவும் நீளமான வாய்க்கால் மானூர் ஆகும். சித்தாறு படுகையிலேயே மிகவும் பெரிய குளம் மானூர் குளமாகும். இதற்கு அடுத்தபடியாக பள்ளமடை, வீராணம், கங்கைகொண்டான் ஆகியவை பெரிய குளங்களாகும். கங்கைகொண்டான் குளம் சித்தாறின் கடைசியும், 17-வது அணைக்கட்டுமான கங்கைகொண்டான் வாய்க்கால் மூலம் பாசனம் பெறுகிறது. எல்லா அணைக்கட்டையும்விட கங்கைகொண்டான் அணைக்கட்டுதான் மிகவும் நீளமானது. இதன் நீளம் 1760 அடியாகும்

சித்தாறில் தென்மேற்கு பருவகாற்று காலத்திலும் வடகிழக்கு பருவகாற்று காலத்திலும் தண்ணீர் வரும்.

சித்தார் நதி தாமிரபரணி நதிப் படுகையைவிட உயர்மட்டப் பரப்பில் (Higher contour) செல்கிறது. சித்தார் நதிப் படுகை தாமிரபரணி போன்ற நீர் வளமும் செழிப்பானதும் அல்ல. இந் நதியில் நீரோட்டம் உறுதியானதல்ல. பெரும் மழைபெய்யும் நல்ல வருடங்களில்தான் இப்பகுதியின் குளங்கள் நிரம்ப வாய்ப்புள்ளது.

சித்தார் நதிப்படுகை உயர்மட்டத்தில் செல்லுவதால் தாமிரபரணி ஆற்றின் வெள்ளக்காலங்களில் வரும் உபரி தண்ணீரை தாமிரபரணி ஆற்றின் முதல் அணைக்கட்டிலி (268. 00) ருந்து கூட வழங்கயியலாது.

சித்தார் பாசனத்தில் உள்ள மானூர் குளம் 9-வது மானூர் அணைக்கட்டின் மூலம் பாசனவசதி பெறுகிறது. மானூர் குளத்தின் நிறை நீர் மட்டம் 344. 00 (கடல் மட்டம்) ஆகும். மானூர் பகுதிக்கு உறுதியான பாசனவசதி பெற தாமிரபரணியாற்று படுகையின் உபரித் தண்ணீரை திருப்பிவிட்டு இப் பகுதிகளுக்கு ஓரளவு உறுதியான பாசன வசதியளிக்க வேண்டுமானல் மலைப்பகுதியிலேயே இருந்து தான் உபரித் தண்ணீரை பிரித்து அனுப்ப இயலும். அவ்வாறு செய்வதால் தான் உயர் மட்டத்திலுள்ள இப்பாசன பகுதிக்கு நீர் வழக்க இயலும்.

தற்போது தாமிரபரணியின் துணையாருன சேர்வலாற்றில் 1255 மி. க. அடி கொள்ளளவுள்ள ஓர் நீர்த்தேக்கம் 720 அடி (கடல் மட்டத்திற்கு மேல்) தமிழ்நாடு மின்சார கழகத்தால் கட்டப்பட்டு வருகிறது. தாமிரபரணி உபரித் தண்ணீரை 400 க. அடி/வினடிக்கு இந்த சேர்வலாறு நீர்த்தேக்கத்திலிருந்து ஒரு குகை மூலம் (7 மைல்)கடனு நீர்த்தேக்கத்திற்கு திருப்பிவிட்டு அதிலிருந்து 430. 00 மட்டத்திலிருந்து ஒரு கால்வாய் 23 மைல் நீளத்திற்கு வெட்டி சித்தார் பாசன பகுதிகளுக்கு 15000ஏக்கர் நீர் வழங்கஇயலும் இத்திட்டம் ஆய்விலுள்ளது. இதனுல் சித்தார் பாசனப் பகுதியிலுள்ள வறண்ட பகுதிகள் செழிப்படைய வாய்ப்புள்ளது.

## 3) பச்சையாறு

பச்சையாறு நதி மேற்கு தொடர்ச்சி மலையில் கிழக்கு சரிவில் களக்காடு கிராமத்திற்கு 7 மைல் மேற்கே உற்பத்தியாகிறது. இதுவும் தாமிரபரணி ஆற்றின் துணை ஆறுகளில் ஒன்ருகும். இவ்வாறு, நாங்குநேரி வட்டம், திருநெல்வேலி வட்டம் வழியாக ஓடி, தாமிரபரணி நதியில் தருவை கிராமத்தினருகில் பாளையங்கால்வாயை கால்வாயிலுள்ள வெளிப்போக்கி (Outlet) மூலம் கடந்து தாமிரபரணி ஆற்றில் கலக்கின்றது.

இந்நதியின் குறுக்கே ஒன்பது அணைக்கட்டுகளும் இரு மண் அணையும் உள்ளன. இவற்றின் மூலம் 7367.06 ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. இதில் 429.94 ஏக்கர் நேரடிப்பாசனம் ஆகும். மீதமுள்ள பாசனப் பகுதிகள் குளப் பாசனம் மூலம் பயனடைகின்றது. இவ்வாற்றின் மூலம் பாசனமடையும் பகுதிகள், அடிக்கடி தண்ணீர் பற்ருக்குறையினுல் தீய்ந்துவிடுகிறது. ஆனுல் இவ்வாற்றில் வடகிழக்கு பருவக்காற்று காலத்தில் பெருவாரியான வெள்ளம் வருகிறது. எனவே இவ்வெள்ளப் பெருக்கை தடுத்து நிரந்தரமான பாசன வசதி கொடுக்க ஒரு நீர்த்தேக்கம் கட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் பரிசீலனையில் கடைசி கட்டத்திலுள்ளது.



Scheme,
plan
project



# மணிமுத்தார் நீர்த்தேக்கம்.

**திரு. ஆர். கிருஷ்ணஸ்வாமி,**
செயற் பொறியாளர், பொ. ப. து.,
தாமிரபரணி கோட்டம்,
பாளையங்கோட்டை.

தாமிரபரணி ஆற்றுடன் சமவெளிப் பகுதியில் கலக்கும் பெரிய துணைஆறு மணிமுத்தாறு ஆகும். இவ்வாறு மேற்கு தொடர்ச்சி மலையின் கீழ்சரிவில் செங்குத்தேரியில் உற்பத்தியாகிறது. சிவன் குலியூர் என்ற கீழ மணிமுத்தார், வரட்டார் ஆகியவைகள் இதன் துணை நதிகளாகும். இந்நதிகள் கடல்மட்டத்திலிருந்து 4000 அடி உயரத்தில் உற்பத்தியாகிறது. மணிமுத்தார் நதி கல்லிடைக் குறிச்சி யருகில் தாம்பிரபரணியாற்றில் 3-வதாக உள்ள கன்னடியன் அணைக்கட்டின் மேற்கே வந்து தாமிரபரணியாற்றுடன் கலக்கின்றது. இவ்வாற்றின் நீர்பிடிப்பு பரப்பு 62-481 ச. மைலாகும்.

இந்நதி, செங்குத்தேரிக்கு மேலே உள்ள அடர்ந்த காடுகளில் உற்பத்தியாகிறது, இந்நதி அடர்ந்த காடுகளிடையேயும் மலைக்குன்றுகளிடையேயும் சுமார் 6 மைல் தூரம் ஓடிவருவதால் இந்நதியுடன் சிறிய நீர்வீழ்ச்சிகளும் ஆங்காங்கே வந்து சேர்கின்றது. இந்நதி வடகிழக்கு பருவக்காற்று காலத்தில் பெருவாரியான வெள்ளத்தையும், தென் மேற்கு பருவகாலத்தில் குறைந்த அளவு வெள்ளத்தையும் கொண்டுவருகிறது.

பாபநாசம் நீர்த்தேக்கம் தாம்பிரபரணியாற்றில் கட்டப்பட்டிருப்பதால் வெள்ளப்பெருக்கு தேக்கி வைக்க முடிகிறது. எனினும் இந்நீர்தேக்கம், நீர் மின்சக்தி எடுக்கும் நோக்கத்திற்காக கட்டப்பட்டதால் பாசனத்திற்கு ஓரளவே பயன்படுகிறது. கார், பிசான சாகுபடி காலத்தில் ஏற்படும் நீர் பற்றுக்குறையை முழுமையாக நீக்க பாபநாசம் நீர்த்தேக்கம் உதவவில்லை. எனவே, வெள்ளக் காலத்தில் வரும் பெருவாரியான நீரை தேக்கி தாம்பிரபரணி பாசனத்திற்கு முறையாக வழங்கவும் மேலும் அம்பாசமுத்திம், திருநெல்வேலி, நான்கு நேரி, ஸ்ரீவைகுண்டம் திருச்செந்தூர் வட்டத்திலுள்ள வானம் பார்த்த குளங்களுக்கும், ஆயக்கட்டுகள் ஒருபோக பயிரிட தேவையான நீர் பற்றுக் குறையால் வறண்ட பகுதியாகயிருந்ததை அதிக உணவு உற்பத்தி பொள்கையின். கீழ் இம்மானுமாரி குளங்களின் தேவையான தண்ணீரை ஓரளவு வழங்கவும் மற்றொரு நீர்த்தேக்கம் கட்டவேண்டிய நிலை ஏற்பட்டது.

எனவே, மணிமுத்தார் நதி தாமிரபரணி ஆற்றுடன் கலக்கும் இடத்திற்கு 3 மைல்களுக்கு மேற்காக கீழ மணிமுத்தார் மேல மணிமுத்தார் ஆறுகள் சேருமிடத்தில் கடல்மட்டம் 240 அடிக்குமேல், 1957ம் வருடம், 5511 மி. க. அடி கொள்ளளவுள்ள நீர்த் தேக்கம் ரூ. 5 கோடி செலவில் மணிமுத்தார் நீர்த் தேக்கம் கட்டப்பட்டது. இந்நீர்த்தேக்கம் கட்டப்பட்டதால் வடகிழக்கு பருவக்காற்று காலத்திலும், தென்மேற்கு பருவக்காற்று காலத்திலும் வரும் வெள்ளம் நீரைத் தேக்கிவைக்க இயலுகிறது இவ்வாறு தேக்கிவைக்கப்பட்ட நீர் தாமிரபரணி ஆற்றின் குறுக்கேயுள்ள ஆறு அணைக்கட்டுகளினல் பயன்பெறும் ஆயக்கட்டுகளுக்கு உறுதியானநீர் வழங்க உதவுகிறது. (1) கன்னடியன் (2) அரியநாயகிபுரம் (3) பழவூர் (4) சுத்தமல்லி (5) மருதூர் (6) ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டுகளாகும்.

மேலும் இந்நீர்த்தேக்கத்தால், அம்பாசமுத்திரம், திருநெல்வேலி, நாங்குநேரி, திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம் வட்டத்திலுள்ள 308 மானுமாரி குளங்களுக்கு 21488 ஏக்கர் பிசானம் பயிரிடுவதற்கு உறுதியான நீர் வழங்க நீர்தேக்கத்தின் வலது கோடியிலிருந்து விநாடிக்கு 445 க.அடி நீர் கொண்டு செல்லும் திறனுள்ள கால்வாய் வெட்டப்பட்டுள்ளது. இதன் நீளம் 28 மைல் 5 பர்லாங் ஆகும். பிரதானக் கால்வாயின் மடை மட்டம் 320′.

மேலும் இந்நீர்த்தேக்கம் கட்டியதால் மணிமுத்தாரில் உள்ள தலையணைக்கட்டு, பெருங்காலும் இந்நீர்த்தேக்க நீர்பரப்பு பகுதியில் மூழ்கியுள்ளதால் பெருங்கால் விளை நிலங்களுக்கு பாசன வசதியளிக்க இந்நீர்த்தேக்கத்தில் ஒரு தலைமதகு (Perungal Head Sluice) 284·50 மட்டத்தில் கட்டப்பட்டுள்ளது. இதிலிருந்து பெருங்கால்வாய் சுமார் 7 மைல் நீளத்திற்கு செல்கிறது. இதனல் இக்கால்வாயின் கீழுள்ள 30 குளங்களும் அதன் 1458.34 ஏக்கர் பாசனப் பரப்பும் பயனடைகிறது.

இந்நீர்த்தேக்கம் கட்டப்படுவதற்கு முன் ஒரு ஓடையின் மூலம் வந்த ஐந்து குளங்கள் பாசன் வசதியடைந்து வந்தன. இந்நீர்த்தேக்க மூழ்கப் பிடிப்பு பரப்புக்குள் இவ்வோடை வரப்பெற்றதால், நீர்த்தேக்க இடது கோடியில் 319,00 மட்டத்தில் இக்குளங்களுக்கு பாசனவசதியளிக்க ஒரு ஓடை மடைக் கட்டப்பட்டுள்ளது.

**நீர்த்தேக்கம்:**

வெள்ளக்காலங்களில் வரும் பெருவாரியான நீரை நீர்த்தேக்கத்திற்கு பழிப்பதற்கு ஏழு வெள்ள வழிந்தோடிகள் 40′ × 15′ உள்ளன. இதன் மூலம் உபரியாக வரும் வெள்ளம் விநாடிக்கு 80,000 க.அடி வீதம் கழிக்க இயலும். இந்நீர்த்தேக்கமும் தலைமைக் கால்வாயும் வருடாவருடம் 3 முதல் 4 லட்சம் மதிப்பில் பராமரிக்கப்பட்டு நல்ல நிலையில் இருக்கிறது.

எனினும், நீர்த்தேக்க கல்கட்டு சுவர்மூலம் ஓரளவு நீர் ஒழுக்கு ஏற்படுகிறது. இந்நீர்ஒழுக்கை தடுப்பதற்கு கல்கட்டு அணையின் முன்புற பகுதியை சிமெண்டு சாந்தால் பூசப்பட்டது. தற்போது ஓரளவு நீர் ஒழுக்கு கட்டுப்பட்டுள்ளது. எனினும் இதனை முழுமையாகத் தடுக்க இரசாயன முறைப் பூச்சு செய்வது பற்றி பரிசீலிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றன.

**மணிமுத்தார் கால்வாய்:**

இந்நீர்த்தேக்கத்தில் வலது கோடியிலிருந்து வெட்டப்பட்டுள்ள உயர்மட்டத் தலைமைக் கால்வாய் மணிமுத்தார் தலைமைக் கால்வாயாகும். இக்கால்வாய்க்கு நீர் வழங்க நீர்த்தேக்கத்தில் 80'க்கு மேல் நீர் மட்டம் இருக்கவேண்டும். இக்கால்வாயின் தலைமதகின் மட்டம் 320.00 (அதாவது ஆற்றுமடையின் மட்டத்தில் (240.00) இருந்து 80 அடி உயரத்திலுள்ளது. இவ்வாறு இருப்பதால்தான், அம்பாசமுத்திரம், திருநெல்வேலி, நாங்குநேரி, ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர் வட்ட பகுதியிலுள்ள 301 மேல்மட்ட மானுமாரி குளங்களுக்கு நீர் வழங்க இயலும்.

**பயிரிடும் காலமும் பரப்பும்:**

மணிமுத்தார் நீர்த்தேக்கம், வடகிழக்கு பருவக் காற்று காலத்தில் அதன் முழுப்பலனையும் அடைவதால் நீர்த்தேக்க மட்டம் இப்பருவகாலத்தில் பொதுவாக 100 முதல் 105′ வரை நீர் இருக்கும் எனவே இக்கால்வாய்க்கு இப்பருவகாலத்தே நீர் வழங்குவதுதான் சாத்தியமாகும். இக்கால்வாயின் கீழுள்ள குளங்களுக்கு பிசானம் பருவத்தே ஒரு பூ பாசனத்திற்கு மட்டும் நீர்வழங்க இயலும்.

**கால்வாயின் தற்போதைய நிலை;**
**செய்யயிருக்கும் சீர்திருத்தங்கள்:-**

இக்கால்வாயின் நீளம் 72 கி.மீ. ஆகும். இதன் பின்னர் இக்கால்வாய் கருமேனியார் ஓடையின் மூலம் செல்லுகிறது. இக்கால்வாய்க்கு தற்போது 5′×6′ அளவுள்ள 3 தலைமதகு மூலம் நீர்வழங்கப்படுகிறது. இக்கால்வாயின் நீர் கொண்டு செல்லும் திறன் விநாடிக்கு 445 க. அடியாகும். இக்கால்வாயின் கீழுள்ள குளங்களுக்கு குறுகிய காலத்திலேயே நீர் வழங்கவேண்டிய நிலையிருப்பதால் கால்வாயின் கடை வரம்பு குளங்களுக்கு தக்க தருணத்தில் நீர் வழங்க சிலவருடங்களில் சாத்தியமில்லாதநிலை ஏற்படுகிறது. எனவே, இக்கால்வாயினை முன் நீர் உயரத்தை கூட்டி (F. S. Depth) தற்போதுள்ள 445 க. அடி விநாடிக்கு செல்வதை, விநாடிக்கு 600 கன அடிவீதம் நீர்கொண்டு செல்லும் திறனை அதிகரிக்க மூன்று நிலைகளில் கால்வாயை சீர்செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இக்கால்வாயின் மொத்த நீளம் 72 கி. மீ. ஆகும். கருமேனியார் பகுதியும் 0 முதல் 29 கி. மீ. வரை முதல் பகுதியாகவும், 29 கி. மீ. முதல் 43 கி. மீ. க்கும் கிளைக் கால்வாய் 11 இரண்டாவது பகுதியாகவும், கருமேனியார் ஓடை சீர் செய்தல் மூன்ருவது பகுதியாகவும் பிரிக்கப்பட்டு மதிப்பீடுகள் முறையே ரூ. 11.23 லட்சம் (2) ரூ. 7.78 லட்சம் (3) ரூ. 29.2 லட்சமாக தயாரிக்கப்பட்டு வெவ்வேறு நிலையில் பரிசீலனையிலுள்ளது. இத்திட்டத்தால் இக்கால்வாயின் குளங்களுக்கு குறுகிய காலத்தில் நீர்வழங்க இயலும். முக்கியமாக இதனல் இக் கால்வாயின் கடைசிப்பகுதி குளங்கள் பெரிதும் பயனடையும்.)

மணிமுத்தார் கால்வாயினுல் பயனடையும் குளங்கள் பொதுவாக ஒரு குளம் நிறைந்தபின் மற்ற கீழ்குளங்களுக்கு சங்கிலித் தொடர்போல் நீர் வழங்கும் நிலையிலுள்ளது. அதனுல் நீர்பற்ருக்குறை காலத்திலும் மேல் குள ஆயக்கட்டுக்கு நீர் தேவையற்ற காலத்திலும், கீழ்குளங்களின் நீர்த்தேவையை பூர்த்திசெய்ய மேல் குளங்களை நிரப்பியபின்னரே வழங்க இயலும். இதனுல் கீழ்க் குளங்களுக்கு நீர் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது. சில காலங்களில் கீழ்க்குளங்களுக்கு நீர்வழங்குதல் சாத்தியமாவதுமில்லை. எனவே இதைத்தவிர்க்க சாத்தியமான சில குளங்களுக்கு தலைமைக் கால்வாயிலிருந்து நேரடிக் கால்-வாய்கள் வெட்டுவதற்கு திட்டங்கள் ஆய்வு செய்து மதிப்பிட தயாரிக்கப்பட்டு பல்வேறு நிலையிலுள்ளன. (அவற்றின் விவரம் பின்னர் வரும் அட்டவணையில் குறிக்கப் பட்டுள்ளது.

இம்மணிமுத்தார் நீர்த்தேக்கம், பாசனவசதிக்கு மட்டுமல்லாது இதை ஒரு சுற்றுலா கேந்திரமாகவும் அமைந்துள்ளது. இவ்வணையில் ஒரு பூங்காவனமும், ஒரு சிறிய மிருககாட்சி சாலையும் அமைக்கப் பட்டுள்ளது. இந்நீர்தேக்கத்தில் உல்லாசப் படகில் செல்லும் வசதிகளும் அருவியும் அதன் முன்பாக நீச்சல் மருவும் இயற்கையாக அமைந்திருப்பதால்



இந்நீர்தேக்கப்பகுதி உல்லாசப் பயணிகளை கவர்ந்திருக்கும் திறன் பெற்றிருக்கிறது.

**நீர்த்தேக்க குறிப்பு :—**

| | | |
|---|---|---|
| உயரம். | — | 123′ |
| உயர்ந்த மட்ட நீர்மட்டம் | — | 368′ |
| ஆற்றுமடை மட்டம் | — | 240.00 4 எண்ணம் 5′×6′ |
| நீர்பிடிப்பு பரப்பு | — | 62.4 சதுர மைல்கள் |
| நீர்மூழ்கடிப்பு பரப்பு | — | 3.63., |
| வெள்ள வழிந்தோடி | — | 7 எண்ணம் 40′×15 |
| வெள்ளம்கழிக்கும் திறன் | — | 80,000 க. அ. விநாடிக்கு |
| வெள்ளம் வழிந்தோடும் நீளம் | — | 334′ |
| கொள்ளளவு | — | 5511 மி. க. அடி. |
| மணிமுத்தார் கால்வாய் மடை | — | 320.00 3 எண்ணம். 3′×6′ |
| பெருங்கால் | — | 284.50 1 எண்ணம். 5′×6′ |
| ஓடைமடை | — | 319.50 1 எண்ணம். 5′×6′. |

# இராதாபுரம் கால்வாய்த் திட்டம்.

**திரு. எல். சிவராமகிருஷ்ணன்,** பி. எஸ். சி., (பொறி)
செயற்பொறியாளர், பொ. ப. து.,
பட்டணங்கால் கோட்டம்.

இராதாபுரம் கால்வாய் திட்டமானது சிற்ருறு பட்டணங்கால் திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டத்தில் இராதாபுரம் கிளை வட்டத்திலுள்ள 17000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களுக்கு நேரடிபாசனம் அளிப்பதற்கு ஏற்பட்டதாகும்.

இராதாபுரம் கால்வாய், நிலப்பாறை கால்வாய் 1/2/250 விருந்து பிரிகிறது.

இக்கால்வாயில் மொத்த நீளம் 18 மைல். இதன் நீர் கடத்தும் திறன் விஞடிக்கு 150 கனஅடி.

இக்கால்வாயின் மூலம் நாங்குநேரி வட்டத்திலுள்ள 17000 ஏக்கரா ஒரு போக சாகுபடி நிலங்கள் நீர் பாய்ச்சப்பட வேண்டும். கால்வாயின் அடிமட்ட அகலம் 11 அடி 6 அங்குலம் அதன் முழு நீர் விடும் ஆழம் 4 அடி.

இக்கால்வாய் மூலம் அடியிற்கண்ட கிராமங் களிலுள்ள் அதனதன் எதிரே குறிப்பிட்டுள்ள நிலங்கள் பயனடையும்.

| வரிசை எண். | வட்டம் | கிராமம் | நிர்ணயிக்கப்பட்ட விளை நிலபரப்பு | விவசாயத்திற்கு கொண்டு வரப்பட்டது |
|---|---|---|---|---|
| 1. | நாங்குநேரி | லெவஞ்சிபுரம் | 2036.74 | 562.64 |
| 2. | ,, | கருங்குளம் | 1737.20 | 746.91 |
| 3. | ,, | பழவூர் | 3555.99 | 1617.87 |
| 4. | ,, | அதங்காகுளம் | 1551.52 | 469.92 |
| 5. | ,, | அழகநேரி | 93.84 | 39.08 |
| 6. | ,, | எருக்கன்துறை | 3573.26 | 1042.02 |
| 7. | ,, | தனகர்குளம் | 1030.10 | 453.83 |
| 8. | ,, | இராதாபுரம் | 137.77 | 76.22 |
| 9. | ,, | பரமேஸ்வரபுரம் | 494.95 | 2 9.67 |
| 10. | ,, | உதயத்தூர் | 2090.66 | 95.31 |
| 11. | ,, | சௌந்தரபாண்டியபுரம் | 241.00 | |
| 12. | ,, | சடயநேரி | 50.82 | 25.94 |
| 13. | ,, | கூடங்குளம் | 937.17 | 395.55 |

(இக்கால்வாயிலிருந்து 43 மைல் 2 பர்லாங் 410 அடி நீள கிளை கால்வாய்களும் 50 மைல் 1 பர்லாங் 290 அடி நீள சிறிய நீர்கால்களும் அமைக்கப்பட்டுள்ளன.)

இக்கால்வாயின் பிரதான கால்வாயில் 31 மடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த நீர்பாசனத்திட்டம் சில ஆண்டுகளுக்கு முன்னர் நிறைவேற்றப் பட்டு 1971-ஆம் வருடம் முதல் பாசனம் அளிக்கப்பட்டு வருகிறது. இதனல் பயன் பெறுமென திட்டமிட்ட நிலங்களின் பரப்பளவு 17330·72 ஏக்கர்.

1971-ஆம் வருடம் தோவாளை கால்வாய் இராதாபுரத்திற்கு வேண்டி 150 கன அடி தண்ணீர் கூடுதலாக எடுத்துச் செல்லக்கூடிய அளவு திறன் இல்லாத காரணத்தால் சிறிதளவு தண்ணீர் விடப் பட்டு 3960 ஏக்கர் நிலங்கள் பயனடைந்துள்ளது.

1972-ஆம் வருடம் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி மற்றும் சிற்ருறு அணைகளில் போதிய அளவு நீர் தேக்கமில்லாத காரணத்தால் தோவாளை கால் வாயை அபிவிருத்தி (Improvements) செய்த பின்னரும் சிறிதளவே தண்ணீர் விடப்பட்டதால் மொத்தம் 6484 ஏக்கர் பரப்பளவு நிலங்கள் பயனடைந்தன.



1973-ஆம் வருடமும் நீர்தேக்க நிலவரம் முன் ஆண்டைவிட கீழ்தரமாகி விட்டதால் 6000 ஏக்கர் பரப்பளவு உள்ள நிலங்களில் பாசனவசதி முதலில் கொடுக்கப்பட்டாலும் படிப்படியாக தண்ணீர் குறைந்துகொண்டே வந்ததால் கிளை வாய்க்கால் களின் கடைவரம்புப் பகுதிகளுக்கு சரிவர தண்ணீர் செல்லாமல் முளையிலேயே பயிர்கள் கருகிய நிலவரம் ஏற்பட்டு முடிவில் 3140 ஏக்கர் நிலங்களி லுள்ள பாசனப் பயிர்களையே காப்பாற்றக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. இதிலும் பெரும்பான்மையான நிலங்கள் மின் நீரேற்றிகள் உள்ள கேணிகளின் கீழ் அமைந்திருந்தமையால் அவற்றின் மூலம் பயிர் காப்பாற்றப் பட்டன.

அணைகளில் நீர் தேக்க நிலவரம் தொடர்ந்து மோசமாகவே இவ்வருடத்தில் பாசனத்திற்கென தண்ணீர் விடப்படவில்லை.

ஆனல், இராதாபுரம் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு இக்கால்வாயில் தண்ணீர் விடப்பட்டதன் பயனக கிணறுகளில் நீர் மட்டம் உயர்ந்துள்ளதால் கால்வாய் மூலம் நேரடிப்பாசனம் முற்றுமாக அடைய முடியா விட்டாலும் கமலை மூலமாகவோ அல்லது மின் நீரேற்றி கருவிகள் மூலமாகவோ தண்ணீர் இறைக்கப்பட்டு பயிர் காப்பாற்றப்படுவதை குறித்து மகிழ்ச்சியடைகின்றனர். ஆனல் கிணறுகள் இல்லாமல் நிலங்களைத் திருத்திய வர்கள் பயிர்கள். பெரும்பான்மையாக தீய்ந்து போய் பெருத்த நஷ்டமடைந்துள்ளனர்.

இதை மனதில் கொண்டு தமிழ்நாடு அரசு தோவாளைக்கால்வாய் உள்வாய்த் திட்டத்தை ஆய்வு செய்ய முயற்சி எடுத்துள்ளது. அத்திட்டமானது கன்னியாகுமரி மாவட்டத்தி லுள்ள மழை அதிகமான மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து சில சிற்றோடைகள் உற்பத்தி யாகி மழைக் காலங்களில் பெரும் வெள்ளப் பெருக்கெடுத்து பழையாறு வழியாக கடலில் சென்று சேருகிறது,

இத்தண்ணீரை தோவாளை கால்வாயினடி யில் அடிச்சுரங்கங்கள் (Under tunnel) அமைத்து வடிவதற்கு வசதி செய்யப்பட்டிருக் கிறது. அந்தத் தண்ணீரை கலுங்குகள் கட்டி தோவாளைக்கால்வாயில் உள்வாய் அமைத்து அதன் வழியாக இராதாபுரம் கால்வாய்க்கு கொண்டு சென்று அதனல் பயனடையும் குளங்களுக்கு மழைக் காலங்களில் அணைகளை திறக்காமலேயே பாசன வசதி செய்வதற்கு அரசு தீர்மானித்து அதற்கான ஆய்வு வேலை கள் சிற்ருறு பட்டணங்கால் செயற்பொறியாள ரின் பார்வையின் கீழ் நடத்தி வருகிறது.

இராதாபுரம் கால்வாயால் பயனடையும் 52 குளங்களுக்கு கிளைக்கால்வாய்களில் தனித் தனியே மதகுகள் அமைத்து பாசன வசதிகள் செய்யப்பட்டிருக்கிறது.

# பொதுப் பணித்துறை.

ஆய்வு வட்டம்,
திருச்சி-18.

திட்ட ஆய்வுக் கோட்டம்,
திருநெல்வேலி-2.

திரு கி. சுந்தரம், பி. இ.,
செயற்பொறியாளர், பொ. ப. து.,

## திருநெல்வேலி மாவட்டத்தின் நீர்வளம்

திருநெல்வேலி மாவட்டம், இயற்கையாகவே, நீர்வளமும், நிலவளமும்கொண்ட ஒரு மாவட்டமாகும். மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகும் சிறிய, பெரிய ஆறுகள். இம் மாவட்ட மெங்கும் பாய்ந்து, மாவட்டத்தை செழிப்படையச் செய்கின்றன. இம் மாவட்டத்தில் உள்ள ஆறுகளில் மிகவும் முக்கியமான ஆறு தாம்பிரபரணி ஆறு ஆ ம். இவ்வாறு ஒரு ஜீவநதியாகும்.

தாம்பிரபரணி ஆற்றுடன், மலைப்பாங்கான பகுதியில், பேயாறு, உள்ளாறு, காரையாறு, சேர்வலாறு, பாம்பாறு ஆகிய காட்டாறுகளும் சமவெளிப் பகுதியில், கடனு நதி சித்தாறு, மணிமுத்தாறு, பச்சையாறு ஆகிய ஆறுகளும் அவற்றின் உபநதிகளும், சேர்ந்து, இவ்வாற்றின் நீர்வளத்தை மேலும் பெருக்குகிறது. வடகிழக்கு, தென்மேற்கு பருவகால மழையினுலும், இவ்வாறு பயனடைவதால், ஆண்டு முழுவதும்; இந்நதியில் தண்ணீர் ஓடிக் கொண்டு இருக்கின்றது.

தாம்பிரபரணியாற்றின் உபநதியான சித்தாறுடன் சேரும் கருப்பா நதியிலும்: கடனு நதியுடன் சேரும் ராமநதியிலும், கடனுநதியிலும், தாம்பிரபரணி யாற்றுடன் சேரும் மணிமுத்தாறிலும், நீர்த்தேக்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இது தவிர, சித்தாரில் சேரும் முண்டாறில் நீர்த்தேக்கம் கட்டுவதற்கான ஆரம்ப வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், மின்சார உற்பத்திக்காக, தாம்பிரபரணியாற்றில் பாபநாசம் நீர்த் தேக்கம் ஏற்கனவே கட்டப்பட்டுள்ளது. மேலும் ஒரு நீர்த் தேக்கம் இவ்வாற்றில் உபநதியான சேர்வலாற்றில், தமிழ்நாடு மின்வாரியத்தால் கட்டப்பட்டு வருகின்றது.

மேலே குறிப்பிட்ட ஆறுகள் தவிர, திருநெல்வேலி மாவட்டத்தில்,வாலமழையாறு, கோட்டமலையாறு, கோம்பையாறு, ராசிங்கியாறு, முந்தல் ஓடை, மலட்டாறு ஓடை, கொடும்டியாறு, தாமரையாறு, நம்பியாறு, அனுமாநதி, ஆகிய நதிகளும் பாய்ந்து மேலும் இம்மாவட்டத்தை வளம்பெறச் செய்கின்றன.

## ஆறுகள், பாசன நிலங்கள் — தண்ணீர் தேவை ஆகியவற்றின் விபரங்கள்.

| எண். (1) | நதியின் பெயர் (2) | நீர்வளம் மி.க. அடி (3) | பயன்பெறும் நிலங்கள் (ஏக்கர்) (4) | தண்ணீர் தேவை மி. க. அடி (5) | மீதம் மி க. அடி (6) | குறிப்பு (7) |
|---|---|---|---|---|---|---|
| 1 | இலுப்பையாறு | 198·03 | 1262·27 | 126·37 | 71·66 | |
| 2 | ராமநதி | 854 66 | 3881·51 | 793·92 | 60·74 | |
| 3 | சம்புநதி | 549 17 | 724·40 | 308·23 | 240 94 | |
| 4 | கடனுநதி | 1706 13 | 7911·23 | 1260·90 | 445·23 | |
| 5 | பச்சையாறு | 3549·56 | 15500·80 | 2114·66 | 1631·49 | |
| 6 | ஐந்தருவியாறு | 369·69 | 724·40 | 129·83 | 253·86 | |
| 7 | ஹரிஹரநதி | 964·54 | 1106·67 | 505·81 | 458·73 | |
| 8 | குண்டாறு | 349·85 | 1143·61 | 221·37 | 128·48 | |
| 9 | மோட்டையாறு | 114 22 | 352·93 | 70 58 | 43·64 | |
| 10 | அழுதகண்ணியாறு | 369 84 | 2050 91 | 366·08 | 3·76 | |
| 11 | ஹனுமாநதி | 1910·45 | 9902·55 | 2008·92 | 152·31 | |
| 12 | கருப்பாநதி | 1278 68 | 9576·19 | 1381·93 | 90 83 | |
| 13 | உப்போடை | 1465·08 | 1082 21 | 1099 41 | 365·67 | |
| 14 | சித்தாறு | 4171·36 | 21315·29 | 4219·30 | 882·93 | |
| 15 | மணிமுத்தாறு | 10643·67 | 19461·21 | 1571·72 | 9071 95 | |
| 16 | தாம்பிரபரணி ஆறு | 40409·0 | 76654·18 | 16246·98 | 24162·02 | |
| 17 | வாலமலையாறு | 276 97 | 2302·35 | 225·76 | 51·21 | |
| 18 | கோட்ட மலையாறு | 216.41 | 2857·47 | 310·90 | 7·73 | |
| 19 | கோம்பையாறு | 249 06 | 1202·60 | 150·26 | 98·80 | |
| 20 | இராசிங்கியாறு | 1409·69 | 9367·73 | 1170·97 | 238 72 | |
| 21 | முந்தல்ஓடை | 84 25 | 861·31 | 107·67 | — | |
| 22 | மலட்டாறு ஓடை | 1090·14 | 805 54 | 680·51 | 409·63 | |
| 23 | கொடுமுடியாறு தாமரையாறு | 458·24 | 398·24 | 512 95 | 2 49 | |
| 24 | அனுமாநதி (நாங்குநேரி) | 460·40 | 2936·33 | 416·96 | 126·62 | |
| 25 | நம்பியாறு | 2177·94 | 9073·72 | 2822 93 | 609·36 | |



*மேலே குறிப்பிட்ட இம்மாவட்டத்திலுள்ள ஆறுகளின் மூலம் மொத்தம் **2,02,456** ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றது.*

மேற்குறிப்பிட்ட ஆறுகளிலுள்ள மிகுதித் தண்ணீரை, நல்ல முறையில் பாசனத்திற்கு பயன்படுத்தவும், பருவமழை காலங்களில் ஆறுகளில் ஓடும் வெள்ளத்தை நீர்த்தேக்கங்களில் தேக்கி, தேவைப்படும் போது நீரை பாசனத்திற்கு பயன் படுத்தவும் நீர்த்தேக்கங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டு, ஆய்வுகள் நடத்தப்பட்டன.

கீழ்க்கண்ட (1) ஹனுமாநதி, (2) அழுதகன்னியாறு (3) உப்போடை (4) முந்தல் ஓடை (5) ஜம்புநதி, (6) வாலமலையாறு (7) கோட்டை மலையாறு (8) ராசிங்கியாறு (9) கோம்பையாறு (10) பச்சையாறு (11) கொடுமுடியாறு ஆகிய ஆறுகளில், நீர்த்தேக்கங்கள் அமைப்பதற்கென மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

மேலும், நாங்குனேரி தாலுகாவில், நம்பியாற்றுப் படுகையிலும், ராதாபுரம் பகுதியில், ராதாபுரம் கால்வாய் பாசனப்பகுதியிலும், சிறு குளப்பாசனத் திட்டங்கள் அமைப்பதற்கான ஆய்வுகள் நடத்தப்பட்டு, மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இது தவிர, மேற்கண்ட ஆறுகளிலுள்ள அணைக்கட்டுகளிலிருந்து, பாசனத்திற்கு தண்ணீர் கொண்டு செல்லும் முக்கியமான கால்வாய்களையும்; தண்ணீர் விரைவதைத் தடுக்க, கால்வாய்களை புனரமைத்தல் அடித்தளமிடல் போன்ற வேலைக்கான மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

மேற்குறிப்பிட்ட திட்டங்களை நிறைவேற்றி, இம் மாவட்டத்திலுள்ள ஆறுகளின் தண்ணீரை நீர்த்தேக்கங்களில் தேக்கி, பாசனத்திற்கு பயன்படுத்தினல், அதிக உற்பத்தியைப் பெருக்கி, மேலும் இம்மாவட்டத்தை வளம் பெறச் செய்ய முடியும் என்பது திண்ணம்.

# பழந்தொழி சாகுபடி.

(Advance kar)

*திரு. ஆர். கிருஷ்ணசாமி*
செயற்பொறியாளர்,
தாமிரபரணிக் கோட்டம்.

இம்மாவட்டத்தில் நெல்பயிர் சாகுபடி செய்யும் காலத்தை "பசலி' வருடம் என அழைக்கப்படுகிறது. இக்காலம் ஜூன் முதல் தேதியிலிருந்து, மே கடைசி வரையான (12) மாதங்களாகும். பசலி வருடத்தை "கார் சாகுபடி காலம்' என்றும் "பிசான சாகுபடி காலம்" என்றும் இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. கார் சாகுபடி இருபூ நிலம் மட்டும், ஜூன் முதல் செப்டம்பர் வரை. பிசானம் (ஒரு பூ நிலம், இரு பூ நிலம்) அக்டோபர் முதல் மார்ச் வரை.

இது தவிர தாமிரபரணி ஆற்றுப் படுகையில், கடைசி அணைக்கட்டான ஸ்ரீவைகுண்டம் அணை கட்டப்பட்ட காலமான 1870 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே, "பழந்தொழி" சாகுபடி என்ற அபூர்வமான முறை வழக்கத்திலிருந்து வருகிறது. இம்முறை சாகுபடி, திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம் வட்டத்தைத் தவிர வேறு எங்கும் இம்மாவட்டத்தில் வழக்கத்திலில்லை.

சாகுபடியாகும் பரப்பு — பயிரிடும் காலம்

இம்முறை சாகுபடி, திருச்செந்தூர், வட்டத்திலுள்ள கடம்பா குளம், ஆத்தூர் குளம் (இருபோக) ஆயக்கட்டிலும், ஸ்ரீவைகுண்டம் வட்டத்திலுள்ள ஆறுமுக மங்கல குளத்தின் (இருபோக) ஆய்க்கட்டிலும் சாகுபடி செய்வது வழக்கத்திலிருந்தது.

இவ்வகை சாகுபடி கோடை காலத்தில் ஏப்ரல் மாதம் முதல் நாளில் தொடங்கி, ஏப்ரல், மே, ஜூன் மாதத்திற்குள், குறுகிய கால விதையைக் கொண்டு சாகுபடி செய்தல் நடைபெற்று வருகிறது.

பொதுவாக தாமிரபரணி ஆற்றுப் படுகையில் வடகிழக்குப் பருவக்காற்று காலத்தில், நல்ல நீர்ப்போக்கு (பிசான பயிரிடும் காலத்தில்) ஆற்றில் உண்டு. ஆனால் தென்மேற்கு பருவக்காலத்தில் அதாவது, வழக்கமான கார் சாகுபடி காலத்தில் நீர் நிலை போதுமானதாக இல்லை. அதிலும் மருதூர் அணைக்கட்டும் அதன் கீழ் பகுதி ஆயக்கட்டுகளும், தாமிரபரணி பாசனத்தின் கடைசி பகுதியிலிருப்பதால் நீர் பற்றுக்குறை, மேல் பகுதி ஆயக்கட்டுகளை விட கூடுதலாகும்.

ஏப்ரல், மே மாதங்களில் மேல் பகுதியிலுள்ள மேல் பகுதி அணைக்கட்டுகளில் கால்வாய்கள் மராமத்துக்காக அடைக்கப்படுகின்றன. எனவே இக்காலங்களில் ஆற்றில்வரும் நீர் வீணாகக் கடலுக்குச் செல்லும். இவ்வாறு வீணாகச்செல்லும் நீரை, ஸ்ரீவைகுண்டம் அணை கட்டப்படுவதற்கு முன்னர் தென்திருப்பேரி கிராமத்தினருகில் ஆற்றின் குறுக்காக மண் அணைகட்டி கோடை காலத்தில் வரும் நீரையும் ஆற்றிலுள்ள ஊற்றுநீரையும் திருப்பிவிட்டு அதை உபயோகித்து, கார் சாகுபடி செய்வதை இருமாதங்களுக்கு முன்னரே. இவ்வாறு வரும் நீரை சாதகமாக பயன்படுத்தி தொடங்குவதை வழக்கத்தில் கொண்டுள்ளனர்,

| | | |
|---|---|---|
| கடம்பாக்குளம் கொள்ளளவு | 338.40 | மி. க. அடி |
| ஆறுமுகமங்கலம் | 120 | ,, |
| ஆத்தூர் | 154.00 | ,, |

இக்குளங்கள் மிகப்பெரிய அளவுள்ள குளங்களாகயிருப்பதால் பிசானம் பயிருக்குப் பின், குளங்களில் மீதமுள்ள தண்ணீரையும் இச்சாகுபடி செய்ய பயன்படுத்துகின்றனர். முறையாகவரும் கார் சாகுபடி காலத்தில் ஏற்படும் நீர் பற்றுக்குறையையும், கருத்தில் கொண்டு, கோடை காலத்தில் வீணாக கடலுக்குச் செல்லும் நீரையும் கோடை மழையினால் வரும் நீரையும், குளத்தில் பிசான சாகுபடிக்குப் பின்னர் மீதமுள்ள நீரையும் பயன்படுத்தி சாகுபடி செய்ய, கார் சாகுபடி பயிரை இரு மாதங்களுக்கு முன்னரே தொடங்குகின்றனர். இம்முறையை "பழந்தொழி சாகுபடி" Advance kar என அழைக்கும் வழக்கம் உள்ளது,



ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டு கட்டியபின்னர், இச்சாகுபடிமுறை, வடகால்வாய்மடை 1 ஒன்றில் கீழுள்ள ஆயக்கட்டுகளுக்கும் விரிவாகியது ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்கு மேலாக இவ் வகையான பயிர் செய்வது வழக்கத்திலிருப்பதால், இப்பகுதி ஆயக்கட்டுதார்கள் இவ் வழக்கத்தை உரிமையாகக் கொண்டுள்ளனர்.

1944-ம் வருடம் பாபநாசம் நீர் மின் தேக்கம் கட்டப்பட்டபின் ஆற்றில்வெள்ளம் ஓரளவு தடுக்கப்பட்டு கோடை காலத்தில் மின் உற்பத்திக்காக எடுக்கப்படும் நீர் உறுதியாக வரப்பெற்றதால், இச்சாகுபடியாகும் பரப்பு முந்திய காலத்தைவிட அதிகரித்துள்ளது. ஸ்ரீவைகுண்டம் மருதூர் அணைக்கட்டு ஆயக்கட்டுகளின் ஒரு பகுதியில் நீண்டகாலமாக நடைபெற்று வரும் இச்சாகுபடியை மதித்து, அரசு இச்சாகுபடியை அதிகாரபூர்வமான சாகுபடியாக அங்கீகாரம் வழங்கியது.

பாபநாசம் நீர்த்தேக்கம் கட்டிய பின் இப் பரப்பு, மின் சக்தி எடுக்க பயன்பட்டு கழிக்கப்படும் நீரின் அளவு, ஆற்றில் வரும் ஊற்று நீரோட்டத்தின் அளவு, பிசான சாகுபடிக்குப் பின்னர், குளங்களில் மிதக்கும் நீரின் அளவு, நீர்த்தேக்கத்தில் ஏப்ரல் மாதம் 1-ம் தேதி உள்ள அளவு, இவற்றைக் கணக்கில்கொண்டு வருடா வருடம் அறிவிக்கப்பட்டது.

நீர்த்தேக்கம் கட்டப்பட்ட பின் ஓரளவு, நிலையான நீரோட்டம் ஆற்றில் வருவதால் கடைசி இரண்டு அணைக்கட்டுகளிலுள்ள பெரும்பாலான இருபூ ஆயக் கட்டுகளை, "பழந்தொழி" சாகுபடி பரப்பின் அறிவிப்பில் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கைகள் பட்டாதார்களிடமிருந்து வரபெற்றதாகத் தெரிகிறது. எனினும், பழந்தொழி சாகுபடி பரப்பில், ஒவ்வொரு வருடமும், ஸ்ரீவைகுண்டம் அணை கட்டப்படுவதற்கு முன்னர், வழகக்மாக சாகுபடியான "ஏ" பிரிவு, நிலங்களான 8124 ஏக்கர் மிக மோசமான வருடங்களைத் தவிர மற்ற வருடங்களில் சேர்க்கப் பட்டுள்ளன. (கடம்பா குளம் 2172 ஆத்தூர் 2222 ஆறுமுக மங்கலம் குளம் 2339 வடகால்வாய் மடை 1691)

ஒவ்வொருவருடமும், தென் கால்வாய், வடகால்வாய், மருதூர் கீழக் கால்வாய், மேலக் கால்வாய் ஆயக்கட்டுதார்கள் தங்களது ஆயக்கட்டினையும், இச்சாகுபடி பரப்பு அறிக்கையில் சேர்த்து அனுமதியளிக்க வேண்டும் என கோரிக்கை கொடுத்ததால் இதை ஒரு நிலைக்குக் கொண்டுவர 1948-கண் காணிப்புப் பொறியாளரால், ஆயக்கட்டுப் பகுதிகளை மூன்று பிரிவுகளாக பிரித்தனர்.

"ஏ" பிரிவு.

| | | |
|---|---|---|
| 1. | ஆத்தூர் குளம் | இப்பகுதி ஆயக்கட்டுகளில் மிகப்பழங்காலத்திலிருந்தே பழந்தொழி சாகுபடி செய்து வருவதால் இதற்கு முதல் நிலை கொடுக்கப்பட வேண்டும். |
| 2. | கடம்பா குளம் | |
| 3. | ஆறுமுகமங்கலம் குளம் | |
| 4. | வடகால்வாய் மடை எண் 1 நேரடிப் பாசனம். | |

"பி" பிரிவு.

| | | |
|---|---|---|
| 1 | மருதூர் கீழக்கால். | நேரடிப் பாசன ஆயக்கட்டு. |
| 2 | மருதூர் கீழக்கால். | குளப்பாசனம் ;, |
| 3 | ஸ்ரீவைகுண்டம் வடகால்வாய். | மடையின். 1—ஆயக்கட்டு தவிர மற்றைய நேரடிப்பாசனப் பரப்பு. ஆறுமுகமங்கலம் தவிர மற்றைய குளப்பாசன ஆயக்கட்டு. |

"சி" பிரிவு.

| | | |
|---|---|---|
| 1 | மருதூர் மேலக்கால். | நேரடிப் பாசன ஆயக்கட்டு. |
| 2 | ,, | குளப்பாசன ஆயக்கட்டு. |
| 3 | ஸ்ரீவைகுண்டம் தென்கால்வாய். | நேரடிப் பாசன ஆயக்கட்டு. |
| 4 | ,, | ஆத்தூர், கடம்பா குளத்தைத் தவிர மற்ற குள ஆயக்கட்டு. |

மருதூர் கிழக்கால்வாயும், வடகால்வாயும் ஆற்றின் வடக்குப்பகுதியிலும், மருதூர் மேலக் கால்வாயும் தென்கால்வாயும் ஆற்றின் தென் பகுதியிலும் உள்ளன. இவ்வாறு அமைந்திருப் பதால் மேலக்கால்வாயின் ஆயக்கட்டுகளின் தேவைபோக கழிக்கப்படும் நீர் தென் கால் வாய் பாசனங்களாகப் பயன்படும். இது போல் கீழக்கால்வாய் ஆயக்கட்டுகளின் தேவைபோக, கழிக்கப்படும் தண்ணீர் வடகால் ஆயக்கட்டு களுக்குப் பயன்படும். எனவே தண்ணீரை சிக்கனமாக விநியோகிக்கும் கருத்தினைக் கொண்டு “பி” பிரிவிலும் “இ” பிரிவிலும் ஆற் றின் ஒரு புறமுள்ள கால்வாய்ப் பகுதிகள் சேர்க்கப் பட்டுள்ளன.

’அட்வான்ஸ் கார்” பாசனம் ”ஏ” பிரிவு ஆயக்கட்டுகளில் எல்லா வருடமும் ”பி” பிரிவு அல்லது “சி’! பிரிவு நிலங்கள் ஒவ்வொரு வருட மும் மாறிமாறி ”ஏ” பிரிவுடன் சேர்க்கப்பட்டு வருகிதது. 1949ம் வருடம் முதல் ”அட்வான்ஸ் கார்” பயிரிட சாகுபடி பரப்பு. மேற்குறிப்பிட்ட பிரிவுப்படியும், முறைப்படியே அனுமதி வழங் கப்பட்டு வந்துள்ளது.

மேற்குறிப்பிட்ட முறைப்படி ”அட்வான்ஸ் கார்” சாகுபடி, பரப்பு குறைந்த அளவு, ”ஏ” பிரிவும் “பி” பிரிவும் சேர்த்து 20,110 ஏக்கரா கும். “ஏ” பிரிவும் ”சி” பிரிவும் சேர்த்தால் 23,660 ஏக்கராகும்.

**1945ம் வருட முதல் பயிரிட்டப் பாசனப் பரப்பு**

| | | |
|---|---|---|
| 1946 — 25000 ஏக்கர் | 1952 — 24755 ஏக்கர் | 1958 — 20237 ஏக்கர் |
| 1947 — 12690 ,, | 1953 — 5966 ,, | 1959 — 7940 ,, |
| 1948 — 13990 ,, | 1954 — 26910 ,, | 1960 — 27,649 ,, |
| 1949 — 28261 ,, | 1955 — 25700 ,, | 1961 — 28,507 ,, |
| 1950 — 17,759 ,, | 1956 — 20237 ,, | 1962 — 27,012 ,, |
| 1951 — 28,500 ,, | 1957 — 3862 ,, | 1963 — 28,507 ,, |

| | |
|---|---|
| 1964 — 27,012 ஏக்கர் | 1970 — 16,749 ஏக்கர் |
| 1965 — 3,862 ,, | 1971 — 3863 ,, |
| 1966 — 36,000 ,, | 1972 — 25,562 ,, |
| 1967 — 8,124 ,, | 1973 — 7,608 ,, |
| 1968 — 10,765 ,, | 1974 — 14,255 ,, |
| 1969 — 15,816 ,, | |

“அட்வான்ஸ் கார்’ சாகுபடிக்கு அனுமதி யளிக்கப்படும் பரப்புக்கள், அத்தனையும் முழுமையாக அறுவடை செய்ய, ஒரு நியாய மான வழிமுறை வகுத்தல் அவசியம் எனக் கருதப்பட்டது. பாபநாசம் நீர்த் தேக்கத்தில் உள்வாய் நீர் வரத்து ஏப்ரல் மாதங்களில் சராசரி விநாடிக்கு 100 க. அடியும் மே மாதங் களில் விநாடிக்கு 300 க. அடியுமாகும். மேலும் ஏப்ரல் மாதத்தில் ஸ்ரீவைகுண்டம் அணைக் கட்டின் நீரில் ஆற்றின் ஊற்று நீரோட்டம் விநாடிக்கு 50 க. அடியாகும். எனவே ஏப்ரல் மாதத்தில் கிடைக்கப்பெறும் நீரின் அளவு விநாடிக்கு 150 கனஅடி ஆகும் ஆனால் மே மாதத்தில் சுமார் 50 கனஅடி விநாடிக்கு நீர், வெப்பத்தாலும், மிக நீண்ட தூரத்தைக் கடந்து வருவதாலும் நீர் இழப்பு ஏற்படுகிறது. இதுபோக மே மாதத்தில் ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டில் கிடைக்கப்பெறும் நீரின் அளவு விநாடிக்கு 250 கன அடி ஆகும். இந்த அளவு நீர் “ஏ” பிரிவு ஆயக்கட்டின் ஒரு பகுதிக்குத் தான் தேவையானதாகும். எனினும் கடம்பா, ஆறுமுகமங்கலம் குளத்தில் பிசானப் பயிருக் குப் பின்னர் மீதமிருக்கும் குளத்து நீரையும் கோடை மழை நீர் (பொய்க்காது கிடைக்கும்) கிடைக்கும் எனவும் கருதினால் “ஏ” பிரிவு நிலங்களின் பரப்பு அத்தனையும் (8124 ஏக்கர்) “பழந்தொழி சாகுபடி” அனுமதிக்கலாம்.

எனினும், இவ்வாறு நீர் நிலையைப் பொருத்து ஒவ்வொரு வருடம் பரப்பை தீர் மானித்தல் சார்பாக ஒரு நியாயமான வழி முறைக்காக மாவட்ட ஆட்சித் தலைவரைச் கொண்டு ஒரு கூட்டம் 19—2—1968 கூட்டப் பட்டது. இதில் சட்டசபை உறுப்பினர்கள்,



மேலவை உறுப்பினர்கள், தாமிரபரணிபாசனத் தின் எல்லாப் பகுதியிலுள்ள விவசாயிகள், பொதுப்பணித்துறை வருவாய்த்துறை அதிகாரி கள் கலந்துகொண்டனர். இக் கூட்டத்தில் மேல் பகுதி ஆயக்கட்டுதார்கள் (அம்பாச முத்திரம், திருநெல்வேலி) ஒரு புறமும் கீழ் பகுதி ஆயக்கட்டுதார்கள் (ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர்) ஒரு புறமாக இருந்து விவாதித் தார்கள். இவர்களுக்குரிய நீர் பற்றிய முரண் பாட்டை நீக்கி “பழந்தொழி சாகுபடி” பரப்பு கீழ்க்கண்டவாறு முடிவெடுக்கப்பட்டது. மேல் பகுதி ஆயக்கட்டுக்களுக்கு கார் பருவகால ஆரம்பத்தில் பாபநாசம் நீர்த்தேக்கத்தில் நிரந் தரமாக 500 மி. க. அடி தண்ணீர் தேக்கி வைக் கப்படும் என்ற உறுதிமொழியுடன் சம்பந்தப் பட்ட அதிகாரிகளே, நீர் நிலையைப் பொறுத்து பழந்தொழி சாகுபடி பரப்பை தீர்மானிக்க லாம் என முடிவெடுத்தார்கள்.

எனவே அரசு ஆணை எண். 2011 பொ. ப. து நா. 12—11—1969 கீழ்க்கண்ட நிபந்தனை கள் பழந்தொழி சாகுபடி பரப்பு, தீர்மானிக்கப் படவேண்டும் என அறிவுறுத்தப்பட்டு நட வடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1. “ஏ” பிரிவு பரப்பான 8124 ஏக்க ருக்கு தேவையான நீர்தான் உள்ளது என்றால், பழந்தொழி சாகுபடி, தெற்கு கால்வாய், வட கால்வாய் பகுதிகளில் சுலபமான முறையில் சிக்கனமாக நீர் வழங்குவதற்கு ஏற்ப, இப்பகுதி கள் பழந்தொழிக்கு அனுமதிக்கலாம்.

2. 10,000 ஏக்கர் பரப்பு வரை நீர் அளிக்க இயலும் என்றால் “ஏ” பிரிவு நிலம், ஆத்தூர் கால்வாய் நேரடிப்பாசன நிலம், தென் கால் வாய் நேரடிப்பாசன நிலம் (கடம்பா பரை) ஸ்ரீவைகுண்டம் வடகால்வாய் நேரடிப் பாசன மடை 2-ல் ஆயக்கட்டுக்கள் வரை பழந்தொழி அனுமதிக்கலாம்.

3. 10,000 ஏக்கருக்கு மேலும் நீர் வழங்க இயலுமானால் செயற்பொறியாளரே, ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டுகளின் கீழுள்ள கால்வாய்களின் பரப்பை, நீர் வீணாக்காமலும், சுலபமாகவும் வழங்கத்தக்க வகையில் தீர் மானிக்கலாம் இதில் (1) (2) அடங்கும்.

4. மிக்க நல்ல மழை பெய்யும் வருடங் களில் 20000 ஏக்கருக்கு மேல் பழந்தொழி அனுமதிக்கலாம் என்ற நிலை ஏற்பட்டால் (1) (2) (3) குறிப்பிட்டுள்ள பரப்பு போக மருதூர் இடது பக்க கால்வாய் வலதுபக்க கால்வாய் பரப்பை ஒரு வருடம் மாற்றி, மாற்றி தீர்மானிக் கலாம் எனினும் பாபநாசம் நீர்த்தேக்கத்தில் 500 மி. க. அடிக்கு குறையாத நீர் ஜூன் 1ந் தேதி இருப்பதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சில வருடங்களில் எதிர்பாராத அளவு உள்வாய் நீர் வரத்து வற்றியும் கோடை மழை யும் பொய்த்து விடுமானால், பொதியும் கதிரு மாக இருக்கும் “அட்வான்ஸ்” கார்ப் பயிரை காப்பாற்ற வேண்டி, அரசு அனுமதியுடன் மணிமுத்தாறிலிருந்தும் நீர் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் வழங்கப்படுகிறது. எனினும் மணிமுத்தாறு நீர்த்தேக்கத்தில் 50’ அடிக்கு குறையாத அளவுக்கு நீர்த்தேக்கத்தில் பெருங் கால் பாசன-தார்களுக்காக நிலையாக அரசு ஆணை எண். 472 பொ. ப. 16—2—1971 ன் படி வைக்கப்பட்டு வருகிறது.

**நோக்கமும் விளைவுகளும் :—**

1. ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்கு மேலாக “பழந்தொழி“ சாகுபடி என்ற அட்வான்ஸ் கார் பயிரிடுதல் வழக்கத்தி லிருந்து வருவதால் இம்முறையை ஆய்க்கட்டு தார்களின் உரிமையாக கொண்டுள்ளனர்.

2. தாம்பிரபரணி பாசனத்தில் வழக்க மான கார் பருவகாலத்தில் பயிர் செய்ய தகுதி யுடைய பதிவு செய்யப்பட்ட இரு பூ நிலங் களின் மொத்தப் பரப்பு 70634 ஏக்கராகும். இப்பரப்பில், 35842 ஏக்கர் பரப்பு, அதாவது 50% சதமானம் மருதூர், ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டினால், பாசனவசதி பெறுகிறது.

கார்பருவகாலத்தில் பொதுவாக நீர் பற்றுக்குறை ஏற்படுகிறது. கார் பருவகாலத் தில் மொத்தப் பரப்பையும் ஒரே காலத்தில் பயிர் செய்ய அனுமதியளித்தால். மொத்தப் பரப்பின் தேவையை பூர்த்திசெய்ய இயலாமல் போகக்கூடும். எனவே இக்கார் காலத்திற்கு, இருமாதங்களுக்கு முன்னர், கோடை காலங் களில் மின் உற்பத்திக்காக பாபநாசம் நீர்த் தேக்கத்திலிருந்து விடப்படும் தண்ணீரையும் ஆற்று ஊற்று நீரையும் கோடை மழையினால்

கிடைக்கப்பெறும் நீரையும் பிசானப் பயிருக்குப் பின் குளங்களில் மீதியிருக்கும் நீரையும், வீணுக்காது, தக்கதருணத்தில் பயன் படுத்தி ஒரு குறிப்பிட்ட பரப்பில் சாகுபடி செய்ய அனுமதியளிப்பதால், கார் பருவகால கடைசியில் ஏற்படும் நீர் பற்றுக்குறை ஓரளவு சமாளிக்க இது உதவும். ஏனெனில், பழந் தொழி சாகுபடி அனுமதியளிக்கப்பட்ட பரப் புக்கு, கார் சாகுபடி, அனுமதிக்கப்படுவதில்லை.

பழந்தொழி சாகுபடியை குறிப்பிட்ட காலத்தில் துவங்கவேண்டும் என்றும், குறுகிய காலவிதையை பயிரிட வேண்டும் எனவும், ஜூன் 15ம் தேதிக்குப் பின்னர் "அட்வான்ஸ் கார்" சாகுபடிக்கு நீர் வழங்கப்படமாட்டாது எனவும் அறிவுறுத்தப்படுகிறது. இவ்வாறு ஆயக்கட்டுதார்கள் அறிவுறுத்தப்பட்ட பின்ன ரும் பெருவாரியாக கடந்த பல வருடங்களில் காலத்தே பயிர்செய்ய துவங்குவதும், குறுகிய கால விதையை பயிர் செய்வதும் வழக்கத்தி லில்லை. நீண்டகாலப்பயிரை பழந்தொழி சாகு படி செய்வதால், அறுவடைகாலம் ஜூன் 15ம் தேதிக்கு மேல் ஆகஸ்ட் 15ம் தேதிவரை நீடிக் கிறது. இதனுல் ஜூன் 15ம் தேதிக்குப் பின் னரும் கதிரும் பொதியுமாக முதிர்ந்த பருவத்தி லிருக்கும், பழந்தொழி பயிரை காப்பாற்றும் நோக்கத்துடன் ஆகஸ்ட் முதல்வாரம் வரை; நீர்வழங்கவேண்டிய நிர்பந்தமான சூழ்நிலை கடந்த பல ஆண்டுகளாக ஏற்படுகிறது. இவ் வாறு வழங்குவதை மேல் பகுதி ஆயக்கட்டு தார்கள் பழந்தொழி சாகுபடியினுல் தங்களது கார் சாகுபடி விவசாயம் பாதிக்கப்படுவதாக ஆட்சேபனை செய்கிறார்கள். மேலும் இதனுல் நீர் வழங்குவதில், பல இடையூறுகளும், தொல்லைகளும் ஏற்படுகின்றன. எனவே, எந்த நோக்கத்திற்கான பழந்தொழி சாகுபடி அனுமதியளிக்கப்படுகிறதோ, அது முழுப் பய னையும், அடைய இயலாமல் போகிறது. இதைத் தவிர்க்க, விவசாயிகள், காலத்தே குறுகிய கால விதையைக் கொண்டு பயிர் செய்ய தொடங்கி ஜூன்–15ம் தேதிக்குள் அறுவடை யை முடித்துக் கொண்டால் பழந்தொழி சாகு படியின் நோக்கம் நிறைவேறும். இதற்கு விவ சாயிகளின் முழு ஒத்துழைப்பு தேவை.



# பகுதி - 2

# பொதுப் பணித்துறை.

## திருநெல்வேலி திட்டங்கள் வட்டத்தில் செயலாக்கப்பட்டுவரும் திட்டங்கள்

திரு. கே. துரைசாமி, பி.ஏ., பி.இ.,

திட்டங்கள் வட்டம்,
திருநெல்வேலி-2.

நெல்லை மாவட்டத்தில் பெரும் பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக, திட்டங்களின் வட்டம் தற்பொழுது செயல்பட்டு வருகிறது. கீழ்க்கண்ட திட்டங்கள் தற்பொழுது எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவைகள் வெவ்வேறு நிலைகளில் கட்டுமானப் பணிகளில் இருக்கின்றன. அவைகளாவன.

1. இராமநதித் திட்டம்
2. கடனுத் திட்டம்
3. கருப்பாநதித் திட்டம்
4. குண்டாறு திட்டம்
5. தூத்துக்குடி அருகாமையிலுள்ள தொழிற் வளர்ச்சிப் பகுதிகளுக்கு தினசரி 20 மில்லியன் காலன் குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் ஸ்ரீவைகுண்டம் மற்றும் மருதூர் கால்வாய்களுக்கு தளம் மற்றும் பக்க வாட்டில் "லைனிங்" வேலை செய்தல்.

மேற்கண்ட திட்டங்களில் இராமநதித் திட்டம் நிறைவேற்றப்பட்டு கடந்த '73 டிசம்பர் முதல் தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டு பாசனத்திற்கு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. உபரிநீர் வழிந்தோடிவாய்க்காலில் மேம்பாடுகள் தற்சமயம் செய்யப்பட்டு வருகின்றன.

மேலும் கடனுத் திட்டமும் நிறைவேற்றப்பட்டு, நீர்த் தேக்கத்தில் கடந்த '73 டிசம்பர் திங்கள் முதல் தண்ணீர் தேக்கி வைக்கப்படுகிறது. உபரிநீர் வழிந்தோடி வாய்க்காலில் வேலைகள் நடைபெற இருக்கின்றன.

கருப்பாநதி நீர்த்தேக்கத் திட்டத்தில் தற்பொழுது முழு அளவில் வேலைகள் நடைபெற்று வருகின்றன. 11 இலட்சம் கன மீட்டர் அளவில் அமைக்கப்படும் மண் அணையில் ஏறத்தாழ 4.50 இலட்ச கன மீட்டர் அளவிற்கு வேலை நடைபெற்றிருக்கிறது. மேலும் 50 சதவிகிதம் வடிகட்டி (Filter) மற்றும் அலைகள் (Revetment) வேலைகள் முடிவடைந்திருக்கின்றன 43000 கன மீட்டர் அளவில் செய்யப்படவேண்டிய கல்கட்டுமானப் பணியில் 10,000 கன மீட்டர் அளவிற்கு வேலைகள் முடிவடைந்திருக்கின்றன. கல்கட்டுமான வழிந்தோடிக்கான வடிவைப்பு வேலைகள் முடிவு செய்யபட்டு மீதமுள்ள வேலைகள் நிறைவேற்றப்பட்ட இருக்கின்றன.

கருப்பாநதி திட்டத்தின் வேலையில் ஒரு பகுதி வரும் 74 அக்டோபர் திங்களில் நிறைவு செய்யப்பட்டு தண்ணீரும் கல்லணை வழிந்தோடியின் தலைமட்டம் வரை தண்ணீர் தேக்கப்படும் கருப்பாநதி திட்டத்தின் அனைத்து வேலைகளும் வருகிற 75 ம் ஆண்டு டிசம்பர் திங்கட்குள் நிறைவேற்றநப்பட்டு தண்ணீரும் முழு நீர்த் தேக்க கொள்ளளவிற்கு 75ம் ஆண்டு அக்டோபர் முதல் தேக்கி வைக்கப்படும்.

குண்டாறுத் திட்ட வேலைகள் இப்போது தான் எடுதுக்கொள்ளப்பட்டு ஆரம்ப வேலைகள் நடைபெற்று வருகின்றன.

மருதூர் மற்றும் ஸ்ரீவைகுண்டம் கால்வாய்களில் லைனிங் வேலைகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. மருதூர் கால்வாயில் "லைனிங்" வேலைகள் முடிவுறும் தறுவாயிலிருக்கின்றன. மேலும் ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டின் வடக்குக் கால்வாயில் கீழ்மட்டத்தில் உள் தளமிடும் வேலை முடிவடைந்துவிட்டது. தெற்கு கால்வாய் உள் தளமிடுவதற்கு அடைக்கப்படாததால் வேலைகள் இவ்வாண்டு ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களிலும் '75 ஏப்ரல் மே மாதங்களிலும் செய்து முடிக்கப்படும். மேலும் செய்யப்பட வேண்டிய வேலைகள் '75ம் ஆண்டு ஜூன் திங்களில் அனைத்து வகையாலும் முடிவுறும்.

வேலைகளைப் பற்றிய விரிவான அடிப்படை விவரங்கள் அதனதன் சம்பந்தப்பட்ட பகுதிகளில் தனியாகத் தரப்பட்டிருக்கின்றன.

| வரிசை எண். | திட்டத்தின் பெயர் | தமிழக அரசால் நிர்வாக அங்கீகாரமளிக்கப் பட்ட தொகை. | தலைமைப்பொறியாளர் (பாசனம்) அவர்களால் தொழில் நுட்ப ஒப்புதலளிக்கப் பட்ட தொகை. | திருத்திய மதிப்பீட்டுத் தொகை. |
|---|---|---|---|---|
| 1 | கடனா நீர்த் தேக்கத் திட்டம் | ரூ. 158 லட்சம். | ரூ. 173 80 லட்சம். | ரூ. 212.00 லட்சம். |
| 2 | இராமநதி நீர்த் தேக்கத் திட்டம் | ரூ. 87 00 லட்சம். | ரூ. 95.70 லட்சம், | ரூ. 180.00 லட்சம். |
| 3 | கருப்பாநதி நீர்த் தேக்கத் திட்டம் | ரூ. 140 லட்சம். | ரூ. 154 00 லட்சம். | ரூ. 239.00 லட்சம். |
| 4 | குண்டாறு நீர்த் தேக்கத் திட்டம் | ரூ. 37 00 லட்சம். | ரூ. 40.70 லட்சம். | ரூ. 60.00 லட்சம். |
| 5 | அ. ஸ்ரீவைகுண்டம், மருதூர் அணைக் கட்டுகளின் கால்வாய்களுக்கு உள் தளமிட்டு தூத்துக்குடி அதன் சுற்றுப்புறங்களில் உள்ள தொழிற் சாலைகளுக்கு தினசரி 20 மில்லியன் காலன் தண்ணீர் வழங்கும் திட்டம். | ரூ. 100 லட்சம். | இன்னும் ஒப்புதல் அளிக்கப்பட வில்லை. | ரூ. 155.65 லட்சம் (மதிப்பீடு தலைமை பொறியாளர்-பாசனம் அவர் களுக்கு சமர்ப் பிக்கப்பட்டுள் ளது. |
| | ஆ. ஆறுமுகமங்கலம் குளத்திற்கு தூர் வாரி மேம்பாடு செய்தல். | ரூ. 12 லட்சம். | ஷை | மதிப்பீடு ரூ. 12.00 லட்சத்திற்கு தயாரிக்கப் பட்டு வருகிறது. |
| | மொத்தம். | ரூ. 534 லட்சம். | | ரூ. 858.65 லட்சம். |

1974 ஜூன் மாதம் முடிய செலவான தொகை. ரூ. 539.22 லட்சம்.

மீதம் செலவு செய்யப்பட வேண்டிய தொகை. ரூ. 319.43 லட்சம்.



திட்டங்கள் வட்டம்,
திருநெல்வேலி.

குண்டார் திட்டக்கோட்டம்,
தென்காசி.

# கடனா நீர்த்தேக்கத் திட்டம்.

**திரு. ஸ்ரீ. வி. கிருஷ்ணமூர்த்தி,** பி. இ.,
செயற்பொறியாளர்,
குண்டார் திட்டக்கோட்டம், தென்காசி.

கடனா நீர்த்தேக்கத் திட்டம் தாமிரபரணியாற்றின் உபநதியான கடனா நதியின் குறுக்கே கட்டப்படும் 352 மி. க. அடி கொள்ளளவைக்கொண்ட ஒரு நீர்த்தேக்கத்தைக் கொண்டதாகும். கடனா நதியின் ஆறு அணைக்கட்டுகளிலுமாக பயனடைந்துள்ள பாசனப் பரப்பின் விவரம் கீழ் வருமாறு:—

| | | திட்ட அறிக்கையின்படி பயனடையும் நீர்ப் பாசனப் பரப்பு. | வருவாய்த்துறை பதிவு குறிப்புகளின்படி தற்போதைய பயனடைந்துள்ள பாசனப் பரப்பு |
|---|---|---|---|
| 1. | ஒரு போகம் | 242.31 ஏக்கர் | 323.25 ஏக்கர் |
| 2. | இரு போகம் | 7112.48 ,, | 7791.02 ,, |
| 3. | தண்ணீர் தீர்வை | — | 521.60 ,, |
| 4. | புதிய நிலங்கள் | 1000.00 ,, | — |

இத்திட்டத்தால் கிடைக்கும் உணவு உற்பத்தி 1509 டன்கள் ஒரு டன் அரிசி விளைச்சலுக்கு திட்ட முதலீடு ரூ. 1021 ஆகிறது.

**கடனா நதியும் அதற்கு உள்ள பாசனங்களும்**

கருணை ஆறு என்று அழைக்கப்படும் இவ்வாறு அம்பாசமுத்திரம் வட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலையிலுள்ள ஆழ்வார்குறிச்சி சிகரத்தில் 5130 அடி உயரத்திலிருந்து உற்பத்தியாகிறது. 5¼ மைல் தூரம் ஓடியதும் இவ்வாற்றுடன் பாம்பாறு வந்து சேருகின்றது. அதன்பின் இலுப்பையாறு, கல்லாறு ஆகிய நதிகள் சிவசைலம் கிராமத்தின் அருகில் இவ்வாற்றுடன் சேருகிறது. இணைந்த ஆறு கடனா நதி என்னும் பெயரில் சுமார் 7 மைல் தூரம் ஓடியதும் இவ்வாற்றுடன் கீழ் ஆம்பூர் அருகில் ராமநதி வந்து சேருகிறது. அதன்பின் இந்நதி தென் கிழக்காக சுமார் 8 மைல் தூரம் ஓடி அம்பை வட்டத்தில் உள்ள திருப்புடை மருதூர் பக்கத்தில் தாமிரபரணியுடன் கலக்கிறது. இந்நதியின் மொத்த நீளம் 22 மைல்.

ஆற்றின் பாய்ச்சல் ஆண்டு முழுவதும் இருந்தாலும் பெரும்பாலும் ஏற்ற தாழ்வுகளையுடையது. மழைகாலங்களில் வெள்ளப் பெருக்குடனும் கோடை காலத்தில் சிறு நீரொழுக்காகவும் பாய்கிறது. ஆற்றின் நீர் வடி பரப்பு, தென்மேற்கு, வடகிழக்கு ஆகிய இருபருவகால மழைகளாலும் பயன் பெறுகிறது. எனவே இவ்வாற்றின் பாசனத்திற்கு உட்பட்ட நிலங்களின் பெரும்பகுதியில் இரு போகங்கள் விளைகின்றன. ஒன்று பிசானம் எனப்படும். நீண்ட காலப்பயிருக்கும் (அக்டோபர் முதல் பிப்ரவரி வரை) மற்றொன்று சோளம் கேழ்வரகு முதலிய புன்செய்களுக்கான குறுங்கால பயிருக்கும் பாசனவசதி கிடைக்கிறது. பாசனம் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஆறு அணைக்கட்டுகள் மூலமாகவும் அணைக்கட்டுகளிலிருந்து செல்லும் கால்வாய்களின் மூலமாகவும் கால்வாய்களின்மூலம் தண்ணீர் பெறும் குளங்களின் மூலமாகவும் நடைபெறுகிறது.

ஆற்றின் குறுக்கே உள்ள அணைகளின் விபரம் பின்வருமாறு.

1 அரசபத்து அணைக்கட்டு
2 ஆழ்வார்குறிச்சி தென்கால் அணைக்கட்டு
3 ஆம்பூர் பெருங்சால் அணைக்கட்டு
4 மஞ்சப்புளி அணைக்கட்டு
5 காக்கநல்லூர் அணைக்கட்டு
6 காங்கேயன் அணைக்கட்டு

மேற்கண்ட அணைக்கட்டுகளிலிருந்து செல்லும் கால்வாய்களின் மூலம் தண்ணீர் பெறும் குளங்கள் 56 ஆகும்.

அணை அமையும் இடம்:

அணை மேற்கு தொடர்ச்சி மலையில் அம்பாசமுத்திரம், பொட்டல்புதூர்-தென்காசி சாலையிலிருந்து உள்ள ஆழ்வார்குறிச்சியிலிருந்து 7 கி. மீ. தொலைவிலிருக்கும் சம்பன் குளத்திலிருந்து 3 கி. மீ. தூரத்தில் உள்ளது. ஆழ்வார்குறிச்சியிலிருந்து அமைக்கப்பட்டிருக்கும் சாலை வழியாக அங்கு செல்லலாம். இவ்வணை மண் அணை இணைந்த அணையாகும்:

செயற்குறிப்பு:- கடனாநதி அணை 5569 அடி நீளம் கொண்டது. இந்த அணையின் உயரம் அடி மட்ட அஸ்திவாரத்திலிருந்து 108 அடி. அணையில் மேல்பாகம் 20 அடி அகலம் கொண்டது இவ்வணையில் ஒரு ஆற்றுமடையும் இரண்டு கால்வாய் மடைகளும் உள்ளது. கண்வாயின் அளவு 5'×6', 3'×3'. உபரித்தண்ணீர் 7 கண்வாய்கள் கொண்ட நீர் வழிந்தோடியின் வழியாக வெளியேற்றுவதற்கு வழிசெய்யப்பட்டுள்ளது. இந்த கண்வாயின் அளவு 25'×10'

## நீர்சார்ந்த குறிப்புகளும் மற்றும் முக்கியமான அமைப்புகளும்.

| | | |
|---|---|---|
| 1 | நீர்வடி பரப்பு | 17.94 ச. மைல் |
| 2. | மொத்த நீர் வரவு | 1173 மி. க. அடி |
| 3. | கூடுதல் வெள்ளத்தின் அளவு | 26800 க அடி/விநாடி |
| 4. | மண் அணையின் நீளம் | 5340 அடி |
| 5. | அடிமட்ட அஸ்திவாரத்திலிருந்து அணையின் உயரம் | 108 அடி |
| 6. | அணையின் மொத்த நீளம் | 5569 அடி |
| 7. | அணையின் கொள்ளளவு | 352 மி க. அடி |
| 8. | நிரப்புகள் | 1 |
| 9. | அணையின் முழு நீர்பிடிப்பு மட்டமும் கூடுதல் நீர் பிடிப்பு மட்டமும் | 435 அடி |
| 10. | அணையின் மேல்பாகத்தின் மட்டம் | 445 அடி |
| 11. | நீர் பிடிப் பரப்பு | 200.6 ஏக்கர் |
| 12. | அணையின் மேல் பாகத்தின் அகலம் | 20 அடி |
| 13. | நீர் வழிந்தோடியின் (7 கண்வாய்) அளவு | 25'×10' |
| 14. | மடையின் அடித்தள மட்டம் | 106.75 மீ |
| 15. | மடையின் கண்வாய் அளவு | 5'×6' |

### பொது

கடனா நீர்த்தேக்கம் அரசு ஆணை எண். 1பொ. ப. து. 1967ல் ரூ. 158 லட்சங்களுக்கு அங்கீகாரம் கிடைக்கப்பெற்று பின்னர் ரூ. 212 லட்சங்களுக்கு திட்டத்தின் மதிப்பீடு திருத்தி அமைக்கப்பட்டது. 1974 மே மாதம் முடிய இத் திட்டத்திற்கு 180.75 லட்சங்கள் செலவாகியுள்ளது. செலவினக்குறிப்பு வருடம் வாரியாககீழே கொடுக்கப்பட்டுள்ளது.

## கடனா நீர்த்தேக்கம்



நீர்வழிந்தோடியின் தோற்றம்



மண்அணையின் தோற்றம்


கடனா நீர்த்தேக்கத் திட்டம்
அளவு: 1 அங்குலம் = 1 மைல்
வ
நீர்த்தேக்கம்
அரசபத்து அணைக்கட்டு
ஆழ்வார்குறிச்சி அணைக்கட்டு
காக்கநல்லூர் அணைக்கட்டு
(பெருங்கால்)
கடனா நதி
ராமநதி
தென்காசிக்கு
கீழ்கடையம்
அம்பாசமுத்திரம்.
திருநெல்வேலிக்கு
77° 20'
77° 25'
77° 30'
8° 50'
8° 45'

| வரிசை எண் | ஆண்டு | | ஆண்டுச் செலவு லட்சத்தில் | மொத்தச் செலவு லட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1. | 1967—68 | | 14.15 | 14.15 |
| 2. | 1968—69 | | 12.99 | 27.14 |
| 3. | 1969—70 | | 36.11 | 63.25 |
| 4. | 1970—71 | | 74.14 | 137 39 |
| 5. | 1971—72 | | 34.32 | 171.71 |
| 6. | 1972—73 | | 7.29 | 179.00 |
| 7. | 1973—74 | | 2.83 | 181.83 |
| 8. | 1974—75 | (மே 74) (—) | 1.08 | |

குறிப்பு :- மேலே குறிக்கப்பட்ட செலவினங்களில் நிறுவன செலவுகள் (Establishment) சேர்க்கப்படவில்லை.

**தற்போதைய அணைவேலைகளின் நிலை:—**

அணையின் பாதாள வேலைகள் எல்லாம் 1973ம் வருடம் ஜூன்மாதத்தில் முடிக்கப்பட்டு விட்டன. தென்கிழக்கு பருவமழை காலத்தில் 1973ம் வருடம் டிசம்பர் மாதத்தில் அணையில் முழுநீர் நிரப்பு மட்டம் வரையில் தண்ணீர் தேக்கப்பட்டது. பாசனத்திற்கு நன்கு பயன் படுத்தப்பட்டது.

சிறு வேலைகளான பாதைகள் அமைத்தல், நீர் வழிந்தோடியின் நீர் வழிந்தோடும் பகுதியை சீரமைத்தல். அணைக்கட்டின் மற்ற பகுதிகளை சீர்செய்தல் போன்ற வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

கடனாநதி பாசனத் திட்டத்தினால் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு முழுப்பயன்பெற வேண்டுமானால், தண்ணீர்விரயமாவதைத் தடுக்க கால்வாய்களை சீர்செய்ய வேண்டும். மேலும் மதகுகள் தலை மதகுகள் போன்றவற்றையும் சீர்செய்ய வேண்டும். கூடுதல் பண ஒதுக்கீடு இருந்தால் இவைகளைச் செய்ய முடியும்.

ஆழ்வார்குறிச்சியிலிருந்து அணைவரையுள்ள 10 கி. மீ. சாலைபாதையும் நன்கு அமைந்த தார் சாலையாகும். இங்கு அணைப் பகுதியை உல்லாசபயணியர் நிலையமாக்க ஏற்ற கட்டிடங்கள் நிறைய உள்ளன.

பயணியர் இலாக்காவினர் பார்வையில் மேலும் தங்குமிடங்களும் பூங்காக்களும் அமைப்பதற்கு ஏற்ப அணைப்பகுதியும் குடியிருப்புப் பகுதியும் அமைந்துள்ளன.

பின்தங்கிய நிலையில் உள்ள அம்பை வட்டத்தின் பெரும் பகுதிகள் இத்திட்டத்தால் பயன் பெறுவதோடு அதிக உணவு உற்பத்தியும் பெறும்.

உல்லாசப்பயணம் வருவோர் திருநெல்வேலி மாவட்டத்தில் பார்க்கவேண்டிய இடங்களில் கடனா நீர்த்தேக்கத்தையும் ஒரு இடமாக குறிப்பிட்டிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

திட்டங்கள் வட்டம்,
திருநெல்வேலி.

குண்டார் திட்டக் கோட்டம்,
தென்காசி.

# இராமநதி நீர்த்தேக்கத் திட்டம்.

திரு. பி. வி. கிருஷ்ணமூர்த்தி, பி. இ.,
செயற்பொறியாளர்,
குண்டார் திட்டக் கோட்டம், தென்காசி.

இராமநதி நீர்த்தேக்கத் திட்டம், தாமிரபரணியாற்றின் கிளை நதிகளில் ஒன்றான கடனா நதியில் விழும் இராமநதியின் குறுக்கே 152 மி. க. அடி கொள்ளளவைக் கொண்ட ஒரு நீர்த் தேக்கத்தைக் கொண்டதாகும். இத்திட்டத்தினால் ராமநதியின் 9 அணைக்கட்டினுமாக பயனடைந்துள்ள பாசனப்பரப்பின் விபரம் கீழ்வருமாறு:—

| | | திட்ட அறிக்கையின் படி பயனடையும் நீர்ப் பாசன பரப்பு | | வருவாய்த்துறை பதிவு குறிப்புகளின் படி தற்போதைய பயனடைந்துள்ள பாசன பரப்பு | |
|---|---|---|---|---|---|
| 1. | ஒரு போகம் | 5. 89 | ஏக்கர் | 119. 40 | ஏக்கர் |
| 2. | இரு போகம் | 4173. 15 | ,, | 4090. 60 | ,, |
| 3. | தண்ணீர் தீர்வை | 245 15 | ,, | 314. 20 | ,, |
| 4. | புதிய நிலங்கள் | 500. 00 | ,, | 519- 00 | ,, |

இத்திட்டத்தால் கிடைக்கும் உணவு உற்பத்தி ஆண்டுக்கு 1750 டன்கள். ஒரு டன் அரிசி விளைச்சலுக்கு திட்ட முதலீடு ரூ. 2486 ஆகிறது.

## இராமநதியும் அதற்குள்ள பாசனங்களும்

இராமநதி அம்பாசமுத்திரம் வட்டத்திலுள்ள மேல கடையம் அருகில் மேற்கு தொடர்ச்சி மலையில் ஏறக்குறைய 5150 அடி உயரத்திலிருந்து உற்பத்தியாகிறது. 4 மைல் தூரம் அடர்ந்த காட்டு பகுதியில் ஓடிய பின் சமவெளியில் வந்து சேருகிறது இந்நதி மலையடிவாரத்தில் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து கடைசியில் ஜம்பு நதியுடன் சேருகிறது. ஜம்பு நதியுடன் சேர்ந்த பின் இந்நதி வீராநதி என்னும் பெயருடன் ஒடி கடனா நதியுடன் சேருகிறது.

ஆற்றின் பாய்ச்சல் ஆண்டு முழுவதும் இருந்தாலும் பெரும் ஏற்ற தாழ்வுகளையுடையது. மழை காலங்களில் வெள்ளப்பெருக்குடனும் கோடைகாலத்தில் சிறு நீரொழுக்காகவும் பாய்கிறது. ஆற்றின் நீர் பிடிப்பு, தென் மேற்கு வட கிழக்கு ஆகிய இருபருவ மழைகளாலும் பயன் பெறுகின்றது. எனவே இவ்வாற்றின் பாசனத்திற்கு உட்பட்ட நிலங்களின் பெரும் பகுதியில் இரு பூக்கள் விளைகின்றன. ஒன்று பிசானம் எனப்படும். நீண்ட காலப் பயிருக்கும் (அக்டோபர் முதல் பிப்ரவரி வரை) சோளம், கேழ்வரகு முதலிய புன்செய்களுக்கான குறுகிய காலப்பயிருக்கும் பாசனம் கிடைக்கிறது. பாசனம், ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணைக்கட்டுகளிலிருந்து செல்லும் வாய்கால்களின் வழியாகவும், அவைகளிலிருந்து தண்ணீர் பெறும் குளங்களின் வழியாகவும் நடைபெறுகிறது. ஆற்றின் குறுக்கேயுள்ள 9 அணைக்கட்டுகளின் விபரம் கீழே வருமாறு.





(அணையின் தோற்றம்)



(மண் அணையின் தோற்றம்)

1. தலை அணைக்கட்டு
2. கள்ளக்கால் அணைக்கட்டு
3. மண் அணை
4. சூச்சி முடையார் அணைக்கட்டு
5. ஒட்டணை
6. சேவல்காரன் அணைக்கட்டு
7. வள்ளியாம்பிள்ளை அணைக்கட்டு
8. ஆட்கொள்ளி அணைக்கட்டு
9. பொட்டல்புதூர் அணைக்கட்டு

அணைக்கட்டுகளிலிருந்து செல்லும் கால்வாய்களின் மூலம் தண்ணீர் பெறும் குளங்கள் 33 ஆகும்.

அணை அமையும் இடம் :

அணை, மேற்குத் தொடர்ச்சி மலையில் அம்பாசமுத்திரம், தென்காசி சாலையிலிருந்து கடையத்திலிருந்து 10 கி. மீ. தொலையில் உள்ளது. கடையத்திலிருந்து அமைக்கப்பட்டிருக்கும் சாலை வழியாக அங்கு செல்லலாம். அணை ஆற்றின் இருபங்கிலுமுள்ள இரண்டு பாறைகளை இணைப்பதாகிய மண் அணையும் கல்லணையும் இணைந்ததாகும்.

செயற் குறிப்பு

ராமநதி அணை மொத்தம் 2750 அடி நீளமுள்ளது. இந்த அணை இடது பக்கத்திலிருந்து 340 அடி கல்லணையாலும், மீதிபாகம் மண் அணையாலும் ஆனது. இந்த அணையின் உயரம் அடிமட்ட அஸ்திவாரத்திலிருந்து 102 அடியாகும். அணையின் மேல்பாகம் 20 அடி அகலம் கொண்டதாகும். மடையின் கண்வாய் அளவு 5'×6' உபரித்தண்ணீர், நீர் வழிந்தோடி வழியாக (இரண்டு கண்வாய்) வெளியேற்றுவதற்கு வழி செய்யப்பட்டுள்ளது. இந்த கண்வாயின் அளவு 30'×15' ஆகும்.

நீர் சார்ந்த குறிப்புகளும், மற்றும் முக்கியமான அமைப்புகளும்.

| | | |
|---|---|---|
| 1. | நீர் வடியும் பரப்பு | 6 40 சதுரமைல் |
| 2. | மொத்த நீர் வரவு | 418 மி. க. அடி/வினடி |
| 3 | கூடுதல் வெள்ளத்தின் அளவு | 10450 க. அடி/வினடி |
| 4. | மண் அணையின் நீளம் | 2410 அடி |
| 5. | அடிமட்ட அஸ்திவாரத்திலிருந்து அணையின் உயரம் | 102 அடி |
| 6 | அணையின் மொத்த நீளம் | 2750 அடி |
| 7. | அணையின் கொள்ளளவு | 152 மி க. அடி |
| 8. | நிரப்புகள் | 1 |
| 9. | அணையின் முழு நீர்பிடிப்பு மட்டமும் கூடுதல் நீர்பிடிப்பு மட்டமும் | 634 00 அடி |
| 10. | அணையின் மேல் பாகத்தின் மட்டம் | 641.00 அடி |
| 11. | நீர்பிடிப்பு பரப்பு | 0.15 ச. மைல் |
| 12. | அணையின் மேல்பாகத்தின் அகலம் | 20 அடி |
| 13. | நீர்வழிந்தோடி (2 கண்வாய்) | 30'×15' |
| 14. | மடையின் அடித்தள மட்டம் | 550 அடி, 585 அடி |
| 15. | மடையின் கண்வாய் அளவு | 5'×6' |

பொது-

ராமநதி திட்டத்திற்கு அரசால் ரூ. 87 லட்சங்களுக்கு அங்ககளும் கிடைக்கப்பெற்று மீண்டும் மதிப்பீட்டுத்தொகை 180 லட்சங்களுக்கு திருத்தி அமைக்கப்பட்டு, அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது. 1974 மே மாதம் முடிய இத்திட்டத்திற்கு ரூ 153.09 லட்சம் செலவாகியுள்ளது. செலவின் குறிப்பு வருடம் வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வரிசை எண் | ஆண்டு | ஆண்டு செலவு ரூ. லட்சத்தில் | மொத்தச் செலவு ரூ. லட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | 1967—68 | 9.31 | 9.31 |
| 2. | 1968—69 | 0·62 | 9.93 |
| 3. | 1969—70 | 27.80 | 37.73 |

| | | | |
|---|---|---|---|
| 4. | 1970—71 | 53.08 | 90 81 |
| 5. | 1971—72 | 31.05 | 121.86 |
| 6. | 1972—73 | 32.59 | 154 45 |
| 7. | 1973—74 | 1.52 | 152 93 |
| 8. | 1974—75 | 0.16 | 153.09 |

**குறிப்பு**- மேலே குறிக்கப்பட்டுள்ள செலவினங்களில் நிறுவனச்செலவுகள் (Establishment) சேர்க்கப்படவில்லை.

தற்போதைய அணை வேலைகளின் நிலை

எல்லா முக்கியமான வேலைகள் முடிக்கப்பட்டு டிசம்பர் 1973-ல் அணையின் முழு நீர் பிடிப்பு மட்டம்வரை தண்ணீர் தேக்கப்பட்டது இந்த தண்ணீர் பாசானத்திற்கு நன்கு பயன் படுத்தப்பட்டது.

சிறு வேலைகளான ரோடு போடுதல், நீர் வழிந்தோடும் பகுதியை சீரமைத்தல், புதிய நிலங்களுக்கு பாசனவசதி கொடுக்க வழிவகை செய்தல், உல்லாசப் பயணிகளை கவரும் வண்ணம், திட்டத் தளத்தை மாற்றுதல் போன்ற வேலைகள் இன்னும் முடிக்கப்பட வேண்டும்.

இவ்வாற்றின் தண்ணீர் பிரித்து வழங்கும் முறை மிகவும் பழமையானது, ஆகவே, ஏற்கனவே உள்ள கல்வெட்டுகள், மதகுகளுக்கு புரணமைப்புகள் தேவைப்படுகின்றன. தண்ணீர், கால்வாய்களில் நீண்டதூரம் ஓடி, குளங்களை நிரப்ப வேண்டியதிருப்பதால், தண்ணீர் நிரம்ப விரைகிறது. எனவே கால்வாய்களுக்கு உள்தளமிடுதல், தற்போதுள்ள அணைக் கட்டுகளை பழுதுபார்த்தல் தலை மதகுகளுக்கு மதகு பலகை அமைத்தல் போன்றவை செய்தால் இத்திட்டத்தின் முழுப்பயனையும் விவசாய பெருங்குடி மக்கள் பெறமுடியும்.

கடையத்திலிருந்து அணைவரையிலுள்ள 10 கி மீ. பாதையும் நன்கு அமைந்த தார்சாலையாகும். அணைப்பகுதியை பயணியர் நிலையமாக்க ஏற்ற கட்டிடங்கள் நிறைய உள்ளன.

உல்லாச பயணியர் இலாகாவினர் பார்வையில், மேலும் தங்கும் இடங்களும் பூங்காக்களும் அமைக்க ஏற்ப அணைப்பகுதி அமைந்துள்ளது.

இனி உல்லாச பயணத்திற்கு வருவோர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பார்க்க வேண்டிய இடங்களில் இராமநதி நீர்த்தேக்கத்தையும் ஒரு இடமாக குறிப்பிட்டிருப்பார்கள். என்பதில் ஐயமில்லை.



திட்டங்கள் வட்டம்,
திருநெல்வேலி.

கருப்பா நதித் திட்டக்கோட்டம்
தென்காசி.

# கருப்பாநதி நீர்த்தேக்கத் திட்டம்

*திரு. இ. என். நாச்சிமுத்து, பி. இ.*
செயற்பொறியாளர், பொ. ப. து.,

கருப்பாநதித் திட்டம் தாம்பரபரணியாற்றின் (பொருணை) கிளையாருகிய சிற்ருற்றில் விழும் கருப்பா நதியின் குறுக்கே கட்டப்படும் 185 மி. க. அடி. கொள்ளளவுடைய ஓர் நீர்த் தேக்கத்தைக்கொண்டது. இத்திட்டம் கருப்பா நதியின் 6 அணைக்கட்டுகளிலுள்ள 796 ஏக்கர் குறுங்கால புன்செய்க்கும் 7867 ஏக்கர் நெடுங் கால நன்செய்க்கும் உறுதிப்படுத்துவதும் 1228 ஏக்கர் குறுங்காலப் பயிரிலும் 1647 ஏக்கர் நெடுங்காலப் பயிரிலும் ஏற்படும் தீய்வை சரிசெய்வதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இப்பயிர்கள் பருவ காலத்தின் இறுதியில் தண்ணீர்ப் பற்ருக்குறையால் தாக்கப்படுகின்றன.

இத்திட்டத்தால் ஏற்படும் உணவுஉற்பத்தி ஆண்டுக்கு 5903 டன்களாகும். ஒரு டன் அரிசி விளைச்சலுக்கு திட்ட முதலீடு ரூ. 2372 ஆகிறது.

**கருப்பா நதியும் அதற்கு உள்ள பாசனங்களும்**

இவ்வாறு மேற்குத் தொடர்ச்சி மலையில் ஏறக்குறைய 5870 அடி உயரத்திலிருந்து தோன்றுகிறது. ஐந்து ஆறு கல் தொலைவு சென்று இது சமவெளிக்கு வந்துசேருகிறது. இங்கே நிலமட்டம் 750 அடியாகும் கருப்பா நதியின் கிளையாகிய வேம்புநதி,மேற்குத்தொடர்ச்சி மலையில் கிழக்கிலுள்ள மலைப்பகுதியிலிருந்து தோன்றி, கருப்பா நதியின் அடுத்த பள்ளத் தாக்கின் வழியாக ஓடி மலையின் அடிவாரத்தில் கருப்பா நதியைச் சேருகிறது. இணைந்த ஆறு கருப்பா நதியென்ற பெயரோடு தெற்குநோக்கி 12 கல் தொலைவு சென்று ஊர்மேலழகியான் அணைக்கட்டின் கீழே தென்காசி வட்டம் சாம்பவர் வடகரையில் அனுமான் நதியுடன் சேருகிறது.

ஆற்றின் பாய்ச்சல் ஆண்டு முழுவதும் இருந்தாலும் பெரும் ஏற்றத் தாழ்வுகளையுடையது. மழைக்காலங்களில் வெள்ளப்பெருக்குடனும் கோடையில் சிறுநீரொழுக்காகக் குறுகியும் பாய்கிறது. ஆற்றின் ஏந்துகை (நீர்ப் பிடிப்பு) தென்மேற்கு வடகிழக்கு ஆகிய இரு பருவமழைகளாலும் பயன்பெறுகிறது. எனவே இவ்வாற்றின் பாசனத்திற்குப்பட்ட ஆயக்கட்டின் பெரும்பகுதியும் இருபூக்கள் விளைகின்றது. ஒன்று பிசானம் எனப்படும் நீண்ட காலப் பயிருக்கும் (அக்டோபர் முதல் பிப்ரவரி) மற்றொன்று சோளம், கேழ்வரகு முதலிய புன்செய்களுக்கான குறுங்காலப் பயிருக்கும் பாசனம் கிடைக்கிறது. பாசனம் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஆறு அணைக்கட்டுகளிலிருந்து புறப்படும் வாய்க்கால்களின் வழியாகவும் அவற்றிலிருந்து தண்ணீர் பெறும் குளங்களின் வழியாகவும் நடைபெறுகிறது.

ஆற்றின் குறுக்கேயுள்ள ஆறு அணைக் கட்டுக்களும் கீழே வருமாறு:—

1. பெருங்கால் அணைக்கட்டு
2. பாப்பான்கால் அணைக்கட்டு
3. சிவலன்கால் அணைக்கட்டு
4. இடைகால் அணைக்கட்டு
5. கிளாங்காடு அணைக்கட்டு
6. ஊர்மேலழகியான் அணைக்கட்டு

அணைக்கட்டுகளிலிருந்து புறப்படும் வாய்க்கால்களின் மொத்த நீளம் ஏறக்குறைய 25 கல் தொலைவு. அவற்றின் வழி தண்ணீர் பெறும் குளங்கள் 75 ஆகும். அவற்றில் 9 பொ. ப. து. கண்காணிப்பிலும் மீந்த 66 உம் ஊராட்சி ஒன்றியக்கண்காணிப்பிலும் உள்ளன.

**அணை அமையும் இடம்:**

அணை மேற்குத் தொடர்ச்சி மலையில் தென்காசி மதுரைச்சாலையிலிருக்கும் சொக்கம் பட்டியிலிருந்து 8 கி. மீ. தொலைவிலுள்ளது.

சொக்கம்பட்டியிலிருந்து அமைக்கப்பட்டிருக்கும் சாலைவழி அங்கு செல்லலாம். அணை ஆற்றின் இருமருங்குமுள்ள இரண்டு பாறைகளை இணைப்பதாகிய மண்ணணையும் கொத்துகை (கல்லணை)யும் இணைந்த அணையாகும்.

செயற்குறிப்பு:

கருப்பாநதி அணை 890 மீட்டர் நீளம் உடையது. இந்த அணை இடது பக்கத்திலிருந்து 40 மீட்டர் கல்லணையாலும் மீதி பாகம் மண்ணணையாலும் ஆனது. இந்த அணையின் உயரம் ஆள்பகுதி அஸ்திவாரத்திலிருந்து 34·44 மீட்டர் (126 அடி) அணையின் மேம் பாகத்தில் 6.1 மீட்டர் வீதியில் இரண்டு மலைகளை இணைக்கும்சாலை போடப்படும். அணையின் இடது பக்கம் ஆற்றுமடை அமைக்கப்படும். மடையின் கண்வாய் அளவு 1·525 × 1.83 மீ. உபரி தண்ணீரை இரண்டு கண்வாய்களால் வெளியே தள்ளுவதற்கான ஏற்பாடு பண்ணப்படும். இந்த கண்வாயின் அளவு 9 14 மீ. × 4·57 மீ.

நீர் சார்ந்த குறிப்புகளும் மற்றும் முக்கியமான அமைப்புகளும்:—

| | | |
|---|---|---|
| 1. | நீர் பிடிப்பு நிலம் | 11.33 சதுர மைல்கள் |
| 2. | மொத்த நீர் வரவு | 312 மில்லியன் கனஅடி |
| 3. | கூடுதல் வெள்ளத்தின் அளவு | 12600 கன அடி / விநாடி |
| 4. | மண் அணையின் நீளம் | 850 மீட்டர்கள் |
| 5. | அடிமட்ட அஸ்திவாரத்திலிருந்து அணையின் உயரம் | 34.44 மீட்டர்கள் |
| 6. | அணையின் மொத்த நீளம் | 890 மீட்டர்கள் |
| 7. | அணையின் கொள்ளளவு | 185 மில்லியன் கனஅடி |
| 8. | நிறப்புதல்கள் | 1 ½ நிறப்புதல்கள் |
| 9. | அணையின் முழு நீர் பிடிப்பு மட்டமும் கூடுதல் நீர் பிடிப்பு மட்டமும் | 253.00 மீட்டர் |
| 10. | அணையின் மேல்பாகத்தின் மட்டம் | 255 44 ,, |
| 11. | நீர் பரப்பு | 0.5 ச. கிலோ மீட்டர் |
| 12. | அணையின் மேற்பாகத்தின் வீதி | 6.1 மீட்டர்கள் |
| 13. | ஸ்பில்வே செக்சன் (2 கண்வாய்கள்) | 9.144 மீ × 4.572 மீ |
| 14 | மடையின் அடிதளத்தின் மட்டம் | 231.00 மீ |
| 15. | மடையின் கண்வாயின் அளவு | 1.525 × 1,83 |

பொது:—

கருப்பாநதித் திட்டம் அரசு ஆணை எண். 75 பொ. ப. து. நாள் 7—1—1971ல் ரூபாய் 140 லட்சம் அங்கீகாரம் கிடைக்கப் பெற்று தலைமைப்பொறியாளரால் (நீர்ப் பாசனம்) 154 லட்சம் ரூபாய்க்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

திருத்திய மதிப்பீட்டில் ரூபாய் 239 லட்சம் ஆகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இத்திருத்தம் முதல் மதிப்பீடு தயார் செய்தபொழுதிருந்த விலைவாசியைவிட பல மடங்கு அதிகமாகிவிட்டதை அடிப்படையாகக் கொண்டது.

திருத்திய மதிப்பீட்டில் அணையின் அருகில் உள்ள பெருங்கால் வாய்காலில் முதல் 3000 மீட்டர் மட்டும் கான்கிரீட் பூச்சு (Concrete Lining) செய்வதற்காக தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மற்ற வாய்கால்கள் புனரமைப்பு வேலைகளுக்கு தொகை ஏதும் ஒதுக்கீடு செய்யமுடியவில்லை.

தற்போதைய அணை வேலைகளின் நிலை:—

கல்லணை கடைகால் தோண்டும் வேலை முடிவடைந்து, சிமிண்டு தளம் போடும் வேலை பெரும்பாலும் முடிவடைந்துள்ளது. கல்லணை கட்டுமான வேலை சுமார் 30% முடிவடைந்து உள்ளது.

II 26

கருப்பா நதி நீர்த்தேக்கத் திட்டம்



(அணை வேலை தொடங்குவதற்கு முன் உள்ள தோற்றம்)



(அணை வேலை தொடங்குவதற்கு முன் உள்ள மற்றொரு தோற்றம்)



கல்லணை - வலது முட்டுச் சுவர் - நீர் வழிந்தோடியின் தோற்றம்



கல்லணை ஆரம்பத்திலிருந்து மண்ணணை முடிவு வரையிலான தோற்றம்.



மண் அணையில் ஆழ்குழி தோண்டு வேலை ஆறு கடந்துசெல்லும் பகுதிதவிர முடிவடைந்து விட்டது. வடிகால் (Spillway) அமைத்தலும் கல்பாவுதலும் (Stone pacsing) ஆற்றுபகுதி (River course) தவிர எல்லாப் பகுதிகளிலும் முடிந்துவிட்டது. அணையின் எல்லா வேலைகளும் 1975-ம் வருடம் ஜுன் மாதம் இறுதியில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாற்றின் தண்ணீர் பகிர்வு (Distribution) வழங்கும் முறை மிகவும் பழமையானது. ஆகவே குறுக்கு கல்கட்டு (Cron masonry) வேலைகள், மதகு வேலைகள் அனைத்திற்கும் புனரமைப்பு தேவைப்படுகிறது, இவ்வாய்கால்களில் தண்ணீர் ஓட்டம் சரியாய் இல்லாமல் இருப்பதால் தண்ணீர் வீணுவதை தடுக்கவும் புனரமைப்பு வேலை தேவைப்படுகிறது கால்வாய்களில் மேம்பாடுவேலைகள் செய்யப்பட்டால் கடைவரம்பு நிலங்கள் வரையிலும் தண்ணீர் விரைவில் சென்று சேருவதற்கு ஏதுவாக இருக்கும் தலை மதகுகள் திருத்தி அமைக்கப்படுவதுடன் வாய்க்கால்களின் பக்கச்சாய்வுகளையும் தற்கால நிர்ணய விதிகளின் படி மாற்றி அமைப்பதுடன் மதகுகளில் தண்ணீர் விநியோகிக்க பூட்டு அமைத்து பேணப்படவும் வேண்டும். மேற்கூறிய மேம்பாடு வேலைகள் செய்து முடிந்தபின் எந்த எந்த கால நிலைகளில் அணைகளிலும், குளங்களிலும் எவ்வளவு எவ்வளவு தண் ணீர் இருக்கவேண்டும். சாதாரணமாக போகும் தண்ணீரைவிட எவ்வளவு கூடுதல் விடவேண்டும் என்ற விவரங்கள் அடங்கிய தண்ணீர் விநியோகிக்கும் ஒழுங்கு முறைகள் பற்றிய அறிக்கை தயாரிக்கப்பட்டு அதன்படி பங்கிடு செய்யும் போதுதான் இத்திட்டத்தின் முழுப்பயனையும் விவசாயப் பெருங்குடி மக்கள் பெறமுடியும்.

கருப்பாநதி அணைப்பகுதி அடர்தியான காடுகளை உடைய மலைப்பகுதிக்கு அருகாமையில் உள்ளது. மிகுந்த விரும்பத்தகுந்த வெட்ப தட்ப நிலையும் கொண்டது. யானை, மிளா, காட்டுப்பன்றி போன்ற விலங்கினங்களையும் நீர்த்தேக்கத்தை அண்டிவரும் பல பறவையினங்களையும் பார்த்து மகிழ விரும்புவோர்க்கு அணைப்பகுதி ஓர் அரிய புகலிடமாகும்.

சொக்கம்பட்டியிலிருந்து அணைவரையுள்ள 8 கி. மீ. பாதையும் நன்கு அமைந்த தார் சாலையாகும், அணைப்பகுதியைப் பின் பயணியர் நிலையமாக்க, ஏற்ற கட்டிடங்கள் (கட்டும் கால அலுவலர் தங்கும் வீடுகள்) நிறைய உள்ளன.

பயனியர் இலாக்காவினர் பார்வையில் மேலும் தங்குமிடங்களும் பூங்காக்களும் அமைக்க ஏற்ப அணைப்பகுதியும், குடியிருப்புப் பகுதியும் அமைந்துள்ளன

உயர் மின் அழுத்தம் (High Tension) திட்டம் வரை கொண்டு சென்றிருப்பதாலும், ஆண்டு முழுவதும், தண்ணீர்கிடைக்கும் வாய்ப்பு இருப்பதாலும் நீரையும் மின் விசையும் கொண்ட தொழில்களைத்துவக்க ஏற்ற நிலையும் உள்ளன.

மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள சங்கரன்கோவில் தாலுகா கடையநல்லூர் போன்ற பகுதிகளுக்கு இத்திட்டம் இப்பொழுது வேலை வாய்ப்பு, அளிப்பதுடன் பிற்காலத்திலும் பலத்தொழில்கள் துவக்கவும் பயணியர் சார்ந்த தொழில் வாய்ப்புகளையும் அளிக்கிறது.

இனி குற்ருலத்திற்கு வருவோர் திருநெல்வேலி மாவட்டத்தில் பார்க்க வேண்டிய இடங்களில் கருப்பாநதி அணையையும் குறிப்பிட்டிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

திட்டங்கள் வட்டம்
திருநெல்வேலி.

மருதூர் கால்வாய்க்கோட்டம்,
பாளையங்கோட்டை.

# மருதூர் கால்வாய் உள்தளமிடும் திட்டம்.

திரு. எஸ். இராமநாதன்,
செயற்பொறியாளர்,
மருதூர் கால்வாய் கோட்டம்,
பாளையங்கோட்டை.

தூத்துக்குடியிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தொழிற்சாலைகள் மிகவேகமாக பெருகி வருகிறது. இவற்றிற்கு தேவையான தண்ணீர் தாமிரபரணி பாசனம் மூலமாக தினசரி 20 மில்லியன் காலன் விநியோகம் செய்ய திட்டம் தயாரிக்கப்பட்டது. தமிழக அரசு ஆணை எண். 2289 நாள் 12—11—1970ல் மேற்படி திட்டத்திற்கு ரூ 470 லட்சத்திற்கு அங்கிகாரமளித்துள்ளது. இத்திட்டத்தில் தாமிரபரணி பாசன முறையின் கீழ் உள்ள மருதூர் அணைக்கட்டு கால்வாய்களும் ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டு கால்வாய்களும் சிமிண்டு கற்கலவையால் உள்தளமிடுவதற்கு ரூ. 100 லட்சத்திற்கு மொத்த ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறியுள்ளபடி தொழிற்சாலைகளுக்கு தினசரி 20 மில்லியன் காலன் (நொடிக்கு 40 கன அடி) தண்ணீர் வினியோகம் செய்வதால் பாசன நிலங்கள் பாதிக்கும். பாசனமுறை பாதிக்காமல் தவிர்க்க ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டின் வடக்கு தெற்கு இரண்டு பிரதான கால்வாய்களும் மருதூர் அணைக்கட்டின் மேலக்கால் கீழக்கால் என்கின்ற இரு கால்வாய்களும் சிமிண்டு கற்கலவையால் உள்தளமிட திட்டமிடப்பட்டது. இதனால் கால்வாய்களின் மன் தரையிலும் பக்கங்களிலுமாக வீணாகும் சுரப்பு நீரும் கசிவு நீரும் கட்டுப்படுத்தி அதனால் மிச்சப்படுத்தும் தண்ணீர் தொழிற்சாலைகளின் உபயோகத்திற்கு எடுத்துக்கொள்ளவும் வகை செய்யப்படுகிறது.

விஞ்ஞானக்கூட ஆராய்ச்சியின் மூலமாக உள்தளமிடாத கால்வாய்களில் ஒரு மில்லியன் சதுர அடி பரப்பில் நொடிக்கு 8 கன அடி தண்ணீரும் உள்தளமிட்டுள்ள கால்வாய்களில் மில்லியன் சதுர அடி பரப்பில் நொடிக்கு 2 கன அடி தண்ணீரும் வீணாகிறது என்று தெரிய வருகிறது. அதனால் ஒவ்வொரு மில்லியன் சதுர அடி பரப்பிலும் உள்தளமிடுவதால் நொடிக்கு 6 கன அடி தண்ணீர் மீதப்படுத்தவும் 6.67 மில்லியன் சதுர அடி பரப்புக்கு உள்தளமிடுவதால் தொழிற்சாலைகளுக்கு தேவை படுகின்ற மேற்சொன்ன நொடிக்கு 40 கன அடி தண்ணீரும் (தினசரி 20 மில்லியன் காலன்) மீதப்படுத்தி தேவையை பூர்த்திசெய்வது சாத்திய மாகும். இதன் அடிப்படையில் ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டின் வடக்கு தெற்கு கால்வாய்களில் முழு நீளத்திற்கும் உள்தளமிட்டு நொடிக்கு 27 கன அடி மீதப்படுத்த வகை செய்யும்படி திட்டமிடப்பட்டது.

மீதமுள்ள நொடிக்கு 13 கன அடி தண்ணீர் கிடைக்க வகைசெய்யும் பொருட்டு மருதூர் அணைக்கட்டின் மேல்கால்வாயின் மொத்த நீளமான 21.4 கிலோ மீட்டரில் 0/0 முதல் 5.547 கி. மீ. நீளத்திற்கும் கீழ்க்கால்வாயின் மொத்த நீளமான 14.4கி. மீட்டரில் 0/0 முதல் 7.15 கி மீ நீளமும் உள்தளமிட திட்டமிடப்பட்டது. இவ் வேலை மருதூர் கால்வாய் கோட்டத்தினரால் செய்யப்பட்டு வருகிறது. வேலை முடியும் தருவாயில் உள்ளது. மருதூர் கால்வாய்கள் உள் தளமிடும் வேலைக்கு சுமார் 44,27 லட்சம் ரூபாய் (மேலக்கால்வாய்க்கு ரூ. 22.5 லட்சமும் கீழக் கால்வாய்க்கு ரூ. 21.55 லட்சமும்) செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இது பற்றிய குறிப்புப் பட்டியல் தனியாக கொடுக்கப்பட்டுள்ளது.

மருதூர் மேலக்கால்வாயிலும் கீழக்கால் வாயிலும் மீதமுள்ள நீளம் முறையே 15.8 கி மீட்டரும் 7.25 கி. மீட்டருமாகும். இந்த மீதமுள்ள கால்வாய் பகுதிகளையும் உள்தளமிடுவதால் கூடுதலாக நொடிக்கு 30 கன அடி



(நொடிக்கு 23 கன அடி மேலக்கால்வாயிலும் நொடிக்கு 7 கன அடி கீழக்கால்வாயிலுமாக) மீதப்படுத்த இயலும். இதற்கு சுமார் ரூ. 85 லட்சம் (ரூ. 63 25 லட்சம் மேலக்கால்வாய்க்கும் ரூ. 21.75 லட்சம் கீழக்கால்வாய்க்கும்) செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

மருதூர் கால்வாய்கள் உள்தளமிடுத் திட்டம் செயலாக்கப்படும்போது அதன் நிர்ணயிக்கப்பட்ட முழு நீரோட்ட கொள்ளளவின்படி நீர் வழிந்தோடுவதற்கு கால்வாய்களின் கீழ்மட்ட அளவையும் கீழ்மட்ட வீதியும் கீழ்மட்ட சரிவும் மாற்றி சீர்படுத்த வேண்டியதாயிற்று. இதற்காக சராசரி 0.5 மீட்டர் முதல் 0.9 மீட்டர் வரை கீழ் மட்டம் தோண்டும் வேலை செய்யப் படவேண்டியதாயிற்று. மேலக்கால், கீழக்கால் கால்வாய்களின் கீழ் மட்ட அளவையும் கீழ்மட்ட வீதியும், கீழ்மட்ட சரிவும் பாளையங்கோட்டை தூத்துக்குடி நெடுஞ்சாலையின் குறுக்குப்பாய்ச்சலுக்குப்பின் உள்தளமிட்ட கால்வாயின் படி சரியாக இல்லாததால் இவ்விடத்திற்குப்பின் கால்வாயின் நிர்ணயிக்கப்பட்ட முழு நீரோட்டக் கொள்ளளவின்படி நீர் வழிந்து செல்லாது. எனவே இந்த இடங்களிலும் உள்தளமிடுதல் அவசியமாகிறது. மேலும் இந்த மீதமுள்ள இடங்களிலும் உள்தளமிடுவதால் மேலும் நொடிக்கு 30 கன அடி தண்ணீர் மீதப்படுத்த முடியும் என்பதால் இத்தண்ணீரைக் கொண்டு இக்கால்வாய்கள் மூலம் பாசனம் பெறும் நிலங்களை நிலைப்படுத்த இயலக்கூடியதாகும்.

மருதூர் அணைக்கட்டின் கால்வாய்களில் ஏற்கனவே உள்தளமிடும் பகுதிபோக மேற்கொண்டு உள்தளமிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள இடங்களின் விவரக்குறிப்பு.

| வரிசை எண். | விரிவுரை | மேலக்கால் | கீழக்கால் |
|---|---|---|---|
| 1. | உள்தளமிடுவதற்கு மீதமுள்ள கால்வாய் பகுதியின் நீளம் | 15.80 கி. மீ. | 7.25 கி. மீ. |
| 2. | உள்தளமிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கால்வாயின் அளவைகள்:- | | |
| | அ) கீழ்மட்ட வீதி | 13.72 மீட்டர் (45 அடி) | 10 67 மீட்டர் (35 அடி) |
| | ஆ) முழு நீரோட்ட ஆழம் | 1.68 மீட்டர் (5'—6") | 1.53 மீட்டர் (5'—0") |
| | இ) நீர் உயர்மட்ட இடவெளி(Free board) | 0 30 மீட்டர் (1 அடி) | 0.30 மீட்டர் (1 அடி) |
| | ஈ) பக்கச் சரிவு | 1 : 1 | 1 : 1 |
| 3. | உள்தளமிட்டால் நனையும் பரப்பளவு | 3.57 மில்லியன் சதுர அடி | 1.08 மில்லியன் சதுர அடி |
| 4. | மில்லியன் சதுர அடிக்கு நொடிக்கு 6 கன அடி என்ற விகிதத்தில் மீதப்படுத்தும் தண்ணீர் | 23 கன அடி / நொடிக்கு | 7 கன அடி நொடிக்கு |
| 5. | உத்தேசமாக உள்தளமிடுவதற்கு எதிர் பார்க்கப்படும் செலவு | ரூ. 63.2 லட்சம் [ஒரு கி. மீ.க்கு ரூ. 4 லட்சம் என்ற விகிதத்தில்) | ரூ 21.75 லட்சம் (ஒரு கி. மீ.க்கு ரூ. 3 லட்சம் என்ற விகிதத்தில்) |

மேற்குறிப்பிட்டுள்ள விவரங்கள்படி மருதூர் அணைக்கட்டின் கால்வாய்களான மேலக்கால், கீழக்கால் ஆகிய இருகால்வாய்களுக்கும் மீதமுள்ள பகுதிகளுக்கு உள்தளமிடுவதற்கு மொத்த ரூபாய் 84.95 லட்சம் அல்லது 85 லட்சம் செலவாகும் என்று கணக்கிடப்படுகிறது.



## மருதூர் அணைக்கட்டின் கால்வாய்கள் உள்தளமிடுவது பற்றிய விவரங்கள்.

| வரிசை எண் | விரிவுரை | மேலக்கால் | கீழக்கால் |
|---|---|---|---|
| 1. | முதல் குளத்தில் சேரும் வரையுள்ள மொத்த நீளம். | 21.4 கி. மீ. | 14.4 கி. மீ. |
| 2. | உள்தளமிடப்படும் நீளம் | 5.6 ,, | 7.15 ,, |
| 3. | கீழ்மட்ட வீதி | | |
| | அ) 2.360 கி. மீ. வரையில் | 21.372 மீட்டர் (70 அடி) | 10.67 மீட்டர் (35 அடி) |
| | ஆ) 2.360 கி. மீட்டரிலிருந்து 5.60 கி மீட்டர் வரையில் | 13.72 மீட்டர் (45 அடி) | |
| 4. | முழு நிரோட்ட ஆழம் | | |
| | அ) 2.360 கி. மீட்டர் வரையில் | 1.98 மீட்டர் (6'—6") | 1.53 மீட்டர் (5.02 அடி) |
| | ஆ) 2.360 கி. மீட்டர் முதல் 5.60 கி. மீட்டர் வரையில் | 1.68 மீட்டர் (5'—6") | |
| 5. | கீழ்மட்டச் சரிவு | | |
| | அ) 0.0 முதல் 2.360 கி. மீ. வரையில் | 1/29000 | அ) 3.2 கி. மீ. வரையில் 1/7040 |
| | ஆ) 2.360 முதல் 5.60 கி. மீ. வரையில் | 1/7040 | ஆ) 3.2 கி. மீ. முதல் 7.65 கி. மீ, வரை 1/6669 |
| 6. | பக்கச்சரிவு | 1:1 | 1:1 |
| 7. | நீர் உயர் மட்ட இடவெளி (Free board) | 0.3 மீ. (1 அடி) | 0.3 மீ. (1 அடி) |
| 8. | முழு நிரோட்ட அளவு | | |
| | அ) தேவைப்படுவது | 721 கன அடி/ நொடிக்கு | 516 கன அடி/ நொடிக்கு |
| | ஆ) நிர்ணயிக்கப்பட்டது | 721 கன அடி/ நொடிக்கு | 520 கன அடி/ நொடிக்கு |
| 9. | நனையும் பரப்பளவு | 1.3 மில்லியன் சதுர அடி | 1 மில்லியன் சதுர அடி |
| 10. | இரு பக்கங்களிலும் கீழ்மட்டத்திலும் (முழு நீரோட்ட ஆழம்+1 அடி) தளமிடுவதற்கான மதப்பீட்டுத் தொகை | ரூ. 22.50 லட்சம் | ரூ. 21.77 லட்சம். |

திட்டங்கள் வட்டம்
திருநெல்வேலி.

ஸ்ரீவைகுண்டம் கோட்டம்.
ஸ்ரீவைகுண்டம்.

# ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டு கால்வாய்கள் உள்தளமிடும் திட்டம்.

திரு. பி டி. ஸ்ரீநிவாசமூர்த்தி, பி. எஸ்ஸி, பி. இ,
செயற்பொறியாளர்.

ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டின் கீழ் உள்ள வடக்கு தெற்கு கால்வாய்களின் முழு நீளத்திற்கும் உள்தளமிட்டு, தூத்துக்குடியிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பெருகி வருகின்ற தொழிற்சாலைகளுக்குத் தேவையான நொடிக்கு 40 கன அடி தண்ணீரில் நொடிக்கு 27 கன அடி தண்ணீரை மிச்சப்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டிருக்கின்றன.

ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டின் வடக்கு கால்வாயின் நீளம் 19 · 255 கி. மீ. தெற்கு கால்வாயின் நீளம் 8 . 660 கி. மீ. இந்த இரண்டு கால்வாய்களையும் உள்தளமிடுவதற்கு ரூ.. 109·68 லட்சம் செலவாகும் என கணக்கிடப்பட்டிருக்கிறது.

இக் கால்வாய்களில் உள்தளமிடும் வேலை ஸ்ரீவைகுண்டம் கோட்டத்தால் செய்யப்பட்டு வருகிறது. வடக்கு கால்வாயில் கீழ் மட்டத்தில் உள்தளமிடும் வேலை முடிவடைந்துள்ளது. தெற்கு கால்வாயில் உள்தளமிடும் வேலை ஆகஸ்டு மாதம் முதல் தேதியில் இருந்து ஆரம்பமாகும்.

ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டு கால்வாய்களை உள்தளமிடுவது பற்றிய விவரங்கள்

| | விரிவுரை | வடக்கு கால்வாய் | தெற்கு கால்வாய் |
|---|---|---|---|
| 1. | கால்வாயின் மொத்த நீளம் (உள்தளமிடுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது) | 19.255 கி. மீ. | 8.660 கி. மீ. |
| 2. | கீழ் மட்ட வீதி | 12.20 மீ. | 15·24 மீ. |
| 3. | முழு நீரோட்ட ஆழம் | 1.905 மீ. | 1.98 மீ. |
| 4. | கீழ் மட்டச் சரிவு | 1/3720 | 1/3520 |
| 5. | பக்கச் சரிவு | 1 : 1 | 1 : 1 |
| 6. | நீர் உயர் மட்ட இடைவெளி (Free board) | 0.3 மீ. | 0 3 மீ. |
| 7. | முழு நீரோட்ட அளவு: | | |
| | அ. தேவைப்படுவது | 1129 கன அடி/ நொடிக்கு. | 1525 கன அடி/ நொடிக்கு. |
| | ஆ. நிர்ணயிக்கப்பட்டது | 1156 கன அடி/ நொடிக்கு. | 1565 கன அடி/ நொடிக்கு. |
| 8. | நனையும் பரப்பளவு | 3,66,500 சதுர மீட்டர். | 1,96,000 சதுர மீட்டர். |
| 9. | இருபக்கங்களிலும் கீழ் மட்டத்திலும் (முழு நீரோட்ட ஆழம் × 1 அடி) தளமிடுவதற்கான மதிப்பீட்டுத் தொகை. | ரூ. 75 . 47 லட்சம். | ரூ. 34 . 21 லட்சம். |

உள்தளமிடும் வேலைகள் அனைத்தும் ஜூன் 1975-க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.



# பகுதி - 3

## திருநெல்வேலி ஆய்வுக் கோட்டத்தினுல் திருநெல்வேலி மாவட்டத்தில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள திட்டங்களின் தற்போதைய நிலவரங்கள்.

திரு. கி. சுந்தரம், பி. இ.
செயற்பொறியாளர், பொ. ப. து
திட்ட ஆய்வுக்கோட்டம்.
திருநெல்வேலி.

### 1. செங்கோட்டை வட்டம் கன்னுபுளியமேடு கிராமத்தில் குண்டாற்றின் குறுக்கே அமைக்கப்படும் குண்டாறு நீர் தேக்கத் திட்டம்

குண்டாறு நீர்த் தேக்கத் திட்டம் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டம் கன்னுபுளியமேடு கிராமத்தில் சிற்றாற்றின் கிளை நதியான குண்டாற்றின் குறுக்கே 25 மில்லியன் கனஅடி கொள்ளளவுடைய நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டமாகும். இத்திட்டம் குண்டாற்றின் இரண்டாவது அணைக்கட்டு முதல் ஏழாவது அணைக்கட்டு வரையிலுள்ள 1022.54 ஏக்கர் குறுங்கால நஞ்சைக்கும் 1119.4‍ ஏக்கர் நெடுங்கால நஞ்சைக்கும் பாசனம் உறுதிப்படுத்துவதும், 1.88 ஏக்கர் குறுங்காலப் பயிரிலும் 2.69 ஏக்கர் நெடுங்காலப் பயிரிலும் ஏற்படும் தீய்வை சரிசெய்வதும் 97.7 ஏக்கர் ஒருபோக நிலங்களை இருபோக நிலமாக்குவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தால் ஏற்படும் உணவு உற்பத்தி ஆண்டுக்கு 1118 டன்களாகும். ஒரு டன் அரிசி விளைச்சலுக்கு திட்ட முதலீடு ரூ. 3312-ஆகிறது. குண்டாறும் அதற்குள்ள பாசனங்களும்:-

மேற்கு மலைத் தொடர்ச்சியில் கிழக்கு சரிவில் குற்றாலம் ஒதுக்கு காட்டின் பக்கத்தில் முண்டன் கோயில்மொட்டை என்ற இடத்திலிருந்து குண்டார் நதி ஆரம்பமாகிறது. இந்நதியில் சில கிளை உபநதிகள் சேர்த்துக்கொண்டு செங்கோட்டை தென்காசி வட்டங்கள் வழியாக 13 கி. மீட்டர் சென்றபின் ஹரிஹர நதியில் சேர்ந்து விடுகிறது. இக்கூட்டுநதி 5.6 கி. மீட்டர் சென்றபின் தாம்பிரபரணிஆற்றின் உபநதியான சிற்றாற்றில் இணைந்து விடுகிறது.

ஆற்றின் பாய்ச்சல் பெரும்பாலும் ஆண்டு முழுவதும் இருந்தாலும் ஏற்றத் தாழ்வுகளுடையது. மழைக்காலங்களில் வெள்ளப் பெருக்குடனும் கோடையில் சிறு நீரொழுக்காக குறுகியும் பாய்கிறது. ஆற்றின் ஏந்துகை (நீர்ப்பிடிப்பு) தென் மேற்கு வடகிழக்கு ஆகிய இரு பருவமழைகளாலும் பயன் பெறுகிறது. எனவே இவ்வாற்றின் பாசனத் திற்குட்பட்ட ஆயக்கட்டின் பெரும்பகுதியும் இரு போகம் விளைகின்றது. ஒன்று பிசானம் எனப்படும் நீண்டகாலப் பயிருக்கும் (அக்டோபர் முதல் பெப்ரவரி) மற்றொன்று கார் எனப்படும் (ஜூலை முதல் செப்டம்பர்)குறுங்கால பயிருக்கும் பாசனம் கிடைக்கிறது. பாசனம் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணைக்கட்டுகளிலிருந்து புறப்படும் வாய்க்கால்கள் வழியாகவும் அவற்றிலிருந்து தண்ணீர்பெறும் குளங்கள் வழியாகவும் நடைபெறுகிறது. ஆற்றின் குறுக்கேயுள்ள ஏழு அணைக்கட்டுகள் கீழே வருமாறு:-

1. மறவன் கால் அணைக்கட்டு
2. சம்போடைக் கால் அணைக்கட்டு
3. பன்னிமுண்டன் அணைக்கட்டு
4. சந்தக்கட்டி அணைக்கட்டு
5. நல்லூர்க்கால் அணைக்கட்டு
6. தென்கால் அணைக்கட்டு
7. பிரானூர் அணைக்கட்டு

அணைக்கட்டிலிருந்து புறப்படும் வாய்க்கால்கள் மூலமாக தண்ணீர் பெறும் குளங்கள் 12 ஆகும். குளங்களின் பெயர்.

1. ராணி பார்வதி குளம்
2. அபிசேகப்பேரி குளம்
3. தஞ்சாவூர் குளம்
4. நீரகுளம்
5. தட்டான்குளம்
6. வல்லமாடகுளம்
7. அனந்தன்குட்டி குளம்
8. பிரதேச கட்டளைத் திருத்துக்குளம்
9. நாவிதன்மேட்டுக் குளம்
10. செங்கோட்டைகுளம்
11. மேலக்குளம்
12. கீழக்குளம்

### நீர்த் தேக்கம் அமையும் இடம்:

நீர்த் தேக்கம் மேற்குத் தொடர்ச்சி மலையில் செங்கோட்டையிலிருந்து 8 கி. மீட்டர் தூரத்திலுள்ள கன்னுபுளியமேடு கிராமத்தினருகாமையில்



அமைந்துள்ளது. செங்கோட்டையிலிருந்து கண்ணுபுளிமேடு சென்று அங்கிருந்து திட்டதளத்திற்கு செல்லலாம். அணை ஆற்றின் குறுக்கே மண்ணணையும் கல்லணையும் இணைந்து அமைவதாகும்.

செயற்குறிப்பு

குண்டார் அணை 351·50 மீட்டர் நீளமுடையது இந்த அணை 263 மீட்டர் மண் அணையும் 88·5 மீட்டர் கல்லணையும் கொண்டது. இந்த அணையின் உயரம் அடிப்பகுதி அஸ்திவாரத்திலிருந்து 14·12 மீட்டர் (46·3 அடி)அணையின் வலது பக்கம் ஆற்று மடை அமைக்கப்படும். மடையின் கண்மாய் அளவு 0·9 மீட்டர் 1·8 மீட்டர் (3' 0" 6' 0") ஆகும். உபரி தண்ணீர் நீர்வழிந்தோடி வழியாக (இரண்டு கண் வாய்) வெளியேற்றப்படுகிறது. இதன் அளவு 7·6 மீட்டர், 4·5 மீட்டர் (25' 0" 15' 0")

**நீர் சார்ந்த குறிப்புகளும் மற்றும் முக்கியமான அமைப்புக்களும்:**

| | | |
|---|---|---|
| 1 | நீர் வடியும் பரப்பு | 3·83 சதுர மைல் |
| 2 | மொத்த நீர் வரவு | 229 8 மில்லியன்கன.அடி |
| 3 | கூடுதல் வெள்ளத்தின் அளவு | 958 கன அடி/வினடி |
| 4 | மண்அணையின்நீளம் | 263 மீட்டர் |
| 5 | அடிமட்ட அஸ்திவாரத்திலிருந்து அணையின் உயரம் | 14·12 மீட்டர் |
| 6 | அணையின் மொத்த நீளம் | 351·50 மீட்டர் |
| 7 | அணையின்கொள்ளளவு | 25 மி.க.அடி |
| 8 | நிரப்புதல்கள் | 2 |
| 9 | அணையின் முழு நீர் பிடிப்பு மட்ட கூடுதல் நீர்ப்பிடிப்பு மட்டமும் | 78 மீட்டர் |
| 10 | அணையில் மேல்பாகத்தின் மட்டம் | 80·5 மீட்டர் |
| 11 | நீர் பிடிப்பு பரப்பு | 43·09 ஏக்கர் |
| 12 | அணையின் மேல் பாகத்தின் அகலம் | 6·1 மீட்டர் |
| 13 | நீர்வழிந்தோடியின் அளவு(2கண்வாய்கள்) | 7·6 மீட்டர் 4.5. மீட்டர் |
| 14 | மடையின் அடித்தள மட்டம் | 66·38 மீட்டர் |
| 15 | மடையின் கண்வாயின் அளவு | 0·9 × 1·8 மீட்ட |

பொது:.

குண்டார் நீர்த் தேக்கத் திட்டம் அரசு ஆணை எண். 88 பொது. ப. துறை நாள்:- 16—1—1974ல் ரூ. 37 லட்சத்திற்கு அங்கீகாரம் கிடைக்கப்பெற்று தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களால் 40.7 லட்சம் ரூபாய்க்கு ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது.

**தற்போதைய வேலையின் நிலை:-**

அணைக்கட்டுவதற்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்றுவருகிறது.

இத்திட்டத்தினுல் செங்கோட்டை வட்டத்தி லுள்ள மிகவும் பின் தங்கிய பகுதிகளான செங்கோட்டை, பிரானுர், வல்லம் முதலிய பகுதி களுக்கு இப்பொழுது வேலை வாய்ப்பு அளிப்பதுடன் நிலையான பாசன வசதியளிக்கவும் உணவு உற்பத்தியை பெருக்கவும் வகை செய்யப்படுகிறது.

இந்நீர்த் தேக்கம் குற்ருலத்திலிருந்து சுமார் 15 கிலோ மீட்டருக்குள் அமைந்துள்ள குற்ருலத் திற்கு வருவோர் திருநெல்வேலி மாவட்டத்தில் பார்க்கவேண்டிய இடங்களில் குண்டாறு நீர்த் தேக்கத்தையும் குறிப்பிட்டிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

**2. திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டம், மெக்கரை கிராமத்திற்கு அருகில் ஹனுமாநதியின் குறுக்கே அமைக்க விருக்கும் அடவிநயினுர்கோவில் நீர்த் தேக்கத் திட்டம்**

இந்நீர்த் தேக்கத் திட்டம், திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டம், மெக்கரை கிராமத்திற்கு அருகில் சிற்ருற்றின் கிளை நதியான ஹனுமாநதியின் குறுக்கே 170 மில்லியன் கன அடி கொள்ளளவையில் அமைக்கும் திட்டமாகும். இத்திட்டம் ஹனுமாநதியின் முதலாவது அணைக் கட்டு முதல் ஒன்பதாவது அணைக்கட்டு வரையிலு முள்ள 5013.06 ஏக்கர் குறுங்கால நஞ்சைக்கும் 6164.70 ஏக்கர் நெடுங்கால நஞ்சைக்கும் பாசனம் உறுதிப்படுத்துவதும் 43 . 2 ஏக்கர் குறுங்கால நஞ்சைப் பயிரிலும் 260.13 ஏக்கர் நெடுங்கால நஞ்சைப் பயிரிலும் ஏற்படும் தீய்வைச் சரிசெய் வதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தால் ஏற்படும் உணவு, உற்பத்தி ஆண்டுக்கு 5721 டன்களாகும். ஒரு டன் அரிசி விளைச்சலுக்கு திட்ட முதலீடு ரூ. 3461/- ஆகிறது.

**ஹனுமாநதியும் அதற்குள்ள பாசனங்களும் :**

ஹனுமாநதி சிற்றாற்றின் பிரதான உபநதி யாகும். மேற்கு மலைத்தொடர்ச்சியில் கிழக்கு சரிவில், கடல் மட்டத்திலிருந்து சுமார் 5150 அடி உயரத்தில் இந்நதி ஆரம்பமாகிறது. சுமார் 7 மைல் தூரம் பயணம் செய்த பின் சாம்பவர் வடகரை அணைக்கட்டுக்கு மேல் கருப்பா நதியில் இணைந்து விடுகிறது.

ஆற்றின் பாய்ச்சல் பெரும்பாலும் ஆண்டு முழுவதும் இருந்தாலும் ஏற்றத்தாழ்வுகளுடையது. மழைக் காலங்களில் வெள்ளப் பெருக்குடனும் கோடையில் சிறு நீரொழுக்காக குறுகியும் பாய் கிறது. ஆற்றின் ஏந்துகை (நீர் பிடிப்பு) தென் மேற்கு வடகிழக்கு ஆகிய இரு பருவ மழைகளாலும் பயன் பெறுகிறது. எனவே இவ்வாற்றின் பாசனத் திற்குட்பட்ட ஆயக்கட்டின் பெரும்பகுதியும் இரு போகம் விளைகின்றது. இதனுல் பிசானம் எனப் படும் நீண்ட காலப்பயிருக்கும் (அக்டோபர் முதல் பிப்ரவரி முடிய) கார் எனப்படும், குறுகிய காலப் பயிருக்கும் (ஜூலை முதல் செப்டம்பர் முடிய) பாசனம் கிடைக்கிறது. பாசனம் ஆற்றின் குறுக்கே கட்டப் பட்டுள்ள அணைக்கட்டுகளிலிருந்து புறப்படும் வாய்க்கால்கள் வழியாகவும் அவற்றிலிருந்து தண்ணீர் பெறும் குளங்கள் வழியாகவும் நடைபெறு கிறது. அவற்றின் குறுக்கேயுள்ள ஒன்பது அணைக் கட்டுகள் கீழேவருமாறு.

1. மேட்டுக்கால் அணைக்கட்டு
2. கரிசல் குளம் அணைக்கட்டு
3. பம்புளி அணைக்கட்டு
4. வல்லகுளம் அணைக்கட்டு
5. இலத்தூர்க்கால் அணைக்கட்டு
6. நயினரகரம் அணைக்கட்டு
7. கீழங்காடு அணைக்கட்டு
8. புங்கன்கால் அணைக்கட்டு
9. கம்பளி அணைக்கட்டு

அணைக்கட்டிலிருந்து புறப்படும் வாய்க்கால்கள் மூலமாக தண்ணீர் பெறும் குளங்கள் 39 ஆகும் அவைகள்

1. மாணிக்கநேரி குளம்
2. செம்பனுபுதுவல் குளம்
3. சம்போடைக்குளம்
4. பஞ்சதாங்கி குளம்
5. நெல்லிவிழா குளம்
6. கால்குளம்
7. செங்குளம்
8. கரிசல் குளம்
9. கடப்பா குளம்
10. துஷ்டராயபேரி குளம்
11. பண்பொழி பெரிய குளம்
12. சீவநல்லூர் புதுக்குளம்
13. மதுநாதபேரி குளம்
14. சந்திர நாடார் திருத்திகுளம்
15. ஆலங்குளம்
16. பழங்கிகுளம்
17. வள்ள குளம்
18. கரிகேசவபேரி குளம்
19. சீவலப்பேரி குளம்
20. உதயன் சேவன் குளம்
21. அய்யன்பிள்ளை குளம்
22. குலசேகரப்பேரி குளம்
23. கொப்பிரான் குளம்
24. இலத்தூர் பெரிய குளம்
25. இலத்தூர் குளம்
26. ஊரணி குளம்
27. செங்குளம்
28. ராஜாவின் குளம்
29. ஊமையன்கால் குளம்
30. கொடமன் குளம்
31. வடக்கு மறிச்சிக்கட்டி குளம்
32. தெற்கு மறிச்சிக்கட்டி குளம்
33. வடக்கு தெற்கு மறிச்சிக்கட்டி குளம்
34. பராக்கிர பாண்டியபேரி குளம்
35. கீழன்காடு பெரிய குளம்
36. புங்கன் குளம்
37. மல்லாபுரம் குளம்
38. நல்ல தண்ணீர் குளம்
39. கம்பிளி குளம்

**நீர்த் தேக்கம் அமையும் இடம்:-**

இந்நீர்த்தேக்கம் மேற்குத் தொடர்ச்சி மலையில் தென்காசி வட்டம் வடகரை கீழ்பிடாகை கிராமத்தி லிருந்து சுமார் 6 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந் துள்ளது. செங்கோட்டையிலிருந்து வடகரை கீழப் பிடாகை சென்று அங்கிருந்து திட்டத் தளத்திற்கு செல்லலாம். அணை ஆற்றின் குறுக்கே மண்ணணை யும் கல்லணையும் இணைந்து அமைவதாகும்.

**செயற் குறிப்பு :-**

அடவிநயினர் கோவில் அணை 1435 மீட்டர் நீளமுடையது. இந்த அணை 1320 மீட்டர் மண் அணையும் 115 மீட்டர் கல்லணையும் கொண்டது. அணையின் அதிகபட்ச உயரம் 21 மீட்டர். அணை யின் இடது பக்கம் பாசனகால் மடையும், நடுவில் ஆற்றுமடையும் அமைக்கப்படும். பாசனமடையின் கண்மாய் அளவு 0.9 மீ × 0.9 மீட்டர் (3′ 0″ × 3′ 0″)



ஆகும். ஆற்று மடையின் கண்மாய் அளவு 1.5 மீட்டர் × 1.8 மீட்டர் (5′ 0″ × 6′ 0″) ஆகும். அணையின் வலது பக்கம் அமைக்கப்பட்டுள்ள நீர்வழிந்தோடி வழியாக உபரிதண்ணீர் (இரண்டு கண்வாய்) வெளியேற்றப்படுகிறது. இதன் அளவு 12.2 மீட்டர் × 4.5 மீட்டர் (40′ 0″ × 15′ 0″)

**நீர்சார்ந்த குறிப்புகளும் மற்ற முக்கியமான அமைப்புகளும் :-**

| | | |
|---|---|---|
| 1 | நீர்வடியும் பரப்பு | 7.35 சதுர மைல் |
| 2 | மொத்த நீர் அளவு | 441 மில்லியன்கனஅடி |
| 3 | கூடுதல் வெள்ளத்தின் அளவு | 14420 கன அடி விநாடிக்கு |
| 4 | மண் அணையின் நீளம் | 1320 மீட்டர் |
| 5 | அணையின் அதிக பட்ச உயரம் | 21 மீட்டர் |
| 6 | அணையின் மொத்த நீளம் | 1435 மீட்டர் |
| 7 | அணையின் கொள்ளளவு | 17 மில்லியன் கனஅடி |
| 8 | நிரப்புதல்கள் | 17 |
| 9 | அணையின் முழு நீர் பிடிப்பு மட்டமும் கூடுதல் நீர்பிடிப்புமட்டமும் | 214 மீட்டர் |
| 10 | அணையின் மேல்பாகத்தின் மட்டம் | 216.50 மீட்டர் |
| 11 | நீர்பிடிப்பு பரப்பு | 138 ஏக்கர் |
| 12 | அணையின்மேல்பாகத்தின் அகலம் | 6.1 மீட்டர் |
| 13 | நீர்வழிந்தோடியின் அளவு(2கண்வாய்கள்) | 12.2 மீட்டர் × 4.5 மீட்டர் |
| 14 | ஆற்று மடையின் அடித்தள மட்டம் | 200.500 மீட்டர் |
| 15 | பாசன மடையின் ,, அடித்தளமட்டம் | 206.50 மீட்டர் |

**திட்டத்தின் தற்போதைய நிலை :-**

இத்திட்டத்தை ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படவிருக்கிறது. இத்திட்டமதிப்பீடு தற்போதைய விலைவீதப்படி மாற்றப்பட்டு அரசுக்கு அனுப்பப்படுகிறது. இத்திட்டம் செயலாக்க அரசின் உத்திரவு விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தினால் செங்கோட்டை வட்டத்திலுள்ள வடகரை கீழ்பிடாகை, நெடுவயல் இலத்தூர், ஆய்க்குடி, பண்பொழி, அச்சன்புதூர், நயினாரகரம் முதலிய பகுதிகளுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதுடன் நிலையான பாசன வசதி யளிக்கவும் உணவு உற்பத்தியை பெருக்கவும் வகை செய்யப்படுகிறது.

**3. நாங்குனேரி வட்டத்தில், திருக்குறங்குடி கிராமத்தின் அருகில் கொடுமுடியாற்றின் குறுக்கே அமைக்கவிருக்கும் கொடுமுடியாறு நீர்த்தேக்கத் திட்டம்.**

கொடுமுடியாறு நீர்த்தேக்கத் திட்டம், நம்பியாற்றின் உபநதியான கொடுமுடியாற்றின் குறுக்கே கட்டப்படும் 67.50 மி. க. அடி கொள்ளளவுடைய ஒரு நீர்த்தேக்கத்தைக் கொண்டது. இத்திட்டம், கொடுமுடியாற்றின் நான்கு அணைக்கட்டுகளிலுள்ள 823.87 ஏக்கர் நிலங்கள் ஒருபோக சாகுபடிக்கும் 4809.86 ஏக்கர் நிலங்கள் இருபோக சாகுபடிக்கும் 559.12 ஏக்கர் நிலங்கள் ஒரு போக இருபோக சாகுபடிகளில் ஏற்படும்தீய்வை சரிசெய்வதற்கும் ஏற்ப வகுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 72.00 இலட்சம் இத்திட்டத்தால் ஏற்படும் உணவு உற்பத்தி ஆண்டிற்கு 3264 டன்கள். ஒருடன் அரிசி விளைச்சலுக்கு திட்ட முதலீடு 2206 ரூபாய்.

**கொடுமுடியாறும் அதற்குள்ள பாசனங்களும்.**

இந்த ஆறு மேற்குத்தொடர்ச்சி மலையில் கடல் மட்டத்திற்கு மேல் சுமார் 3700 அடி உயரத்திலிருந்து உற்பத்தி ஆகிறது. இது முதலில் சுமார் 7 கிலோ மீட்டர் தூரம் வடகிழக்காக ஓடி கோம்பையாறுடன் சேருகிறது. பிறகு இது தாமரையாறு என்ற பெயரில் ஓடுகிறது. இணைந்த ஆறு நம்பியாறுடன் சேருகிறது.

ஆற்றின் பாய்ச்சல் ஆண்டு முழுவதும் இருந்தாலும் பெரும் ஏற்றத்தாழ்வுகளையுடையது. மழை காலங்களில் வெள்ளப்பெருக்குடனும் கோடையில் சிறிய நீரொழுக்காகவும் ஓடுகிறது. ஆற்றின் ஏந்துகை (நீர்ப்பிடிப்பு) தென்மேற்கு, வடகிழக்கு ஆகிய இரு பருவ மழைகளாலும் பயன்பெறுகிறது. எனவே இவ்வாற்றில் பாசனத்திற்குட்பட்ட ஆயக்கட்டின் பெரும் பகுதியும் இருபூக்கள் விளைகின்றது. ஒன்று பிசானம் எனப்படும் நீண்டகாலப் பயிருக்கும் (அக்டோபர் முதல் பெப்ரவரி) மற்றொன்று சோளம், கேழ்வரகு முதலிய புஞ்சைகளுக்காக குறுங்காலப் பயிருக்கும் பாசனம் கிடைக்கிறது. பாசனம் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணைக்கட்டுகளிலிருந்து புறப்படும் வாய்க்கால்கள் வழியாகவும் அவற்றிலிருந்து தண்ணீர் பெறும் குளங்கள் வழியாகவும் நடைபெறுகிறது.

**ஆற்றின் குறுக்கேயுள்ள அணைக்கட்டு மற்றும் கால்வாய்களின் விபரம்:-**

1 படாலயர்கால் (தாமரை அணைக்கட்டு)
2 வள்ளியூரான் கால்.
3 ஆற்றுக்கால்.
4 தளவாய்புரம் அணைக்கட்டு

அணைக்கட்டுகளிலிருந்து புறப்படும் வாய்க்கால்கள் மூலம் தண்ணீர் பெருகும் குளங்களின் எண்ணிக்கை 42 ஆகும்.

**அணை அமையும் இடம்:**

அணை, மேற்குத் தொடர்ச்சி மலையில் நாங்குனேரி வட்டம் திருக்குறுங்குடி கிராமத்தில் அணையாடித் திம்பிரான் கோவில் அருகில் அமைந்துள்ளது. இந்த அணை மண் அணையும் கல் அணையும் சேர்ந்த அணையாகும்.

**செயற்குறிப்பு:**

இவ்வணை 383 மீட்டர் நீளமுள்ளது. இது 126 மீட்டர் நீளம் மண் அணையாலும் மீதி கல் அணையாலும் கட்டவிருக்கிறது. இந்த அணையின் உயரம் அடிப்பகுதி அஸ்திவாரத்திலிருந்து 22·84 மீட்டர். அணையின் மேல் பாகத்தின் அகலம் 6·1 மீட்டர். இந்த அணையில் அமைக்கவிருக்கும் ஆற்று மடையின் அளவு 1·525 × 1·83 மீட்டர். உபரித் தண்ணீர் நீர் வழிந்தோடி (இரண்டு கண்வாய்கள்) மூலம் வெளியேற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**நீர் சார்ந்த குறிப்புகளும் மற்றும் முக்கியமான அமைப்புகளும்:**

| | | |
|---|---|---|
| 1 | நீர்வடி பரப்பு | 9·4 ச.மைல் |
| 2 | மொத்த நீர்வரவு | 376 மி.க. அடி |
| 3 | கூடுதல் வெள்ளத்தின் அளவு | 7793 மி.க.அடி |
| 4 | மண்அணையின் நீளம் | 257 மீட்டர் |
| 5 | அடிமட்ட அஸ்திவாரத்திலிருந்து அணையின் உயரம் | 22·84 மீட்டர் |
| 6 | அணையின் மொத்த நீளம் | 383 மீட்டர் |
| 7 | ஆணையின் கொள்ளளவு | 67.5 மி. க. அடி |
| 8 | நிரப்புதல்கள் | 2 நிரப்புகள் |
| 9 | அணையின் முழு நீர் பிடிப்பு மட்டமும் கூடுதல் நீர் பிடிப்பு மட்டமும் | 154.00 மீட்டர் |
| 10 | அணையின் மேற் பாகத்தில் மட்டம் | 156.5 மீட்டர் |
| 11 | நீர்பிடி பரப்பு | 72.52 ஏக்கர் |
| 12 | அணையின் மேற் பாகத்தின் அகலம் | 6.1 மீட்டர் |
| 13 | நீர் வழிந்தோடி அளவு (இரண்டு கண்வாய்கள்) | 10.68 × 3.05 மீட்டர் |
| 14 | மடையின் அடித்தளத்தின் மட்டம் | 134.00 மீட்டர் |
| 15 | மடையின் கண்வாயின் அளவு | 1.525 × 1.83 மீட்டர் |

**பொது:-**

கொடுமுடியாறு அணைக்கட்டுத் திட்டம் 72.00 இலட்சம் ரூபாய் செலவில் கட்டுவதற்கான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசாங்கத்தில் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

இத்திட்டம் ஐந்தாவது ஐந்தாண்டு திட்டத்தில் நிறைவேற்றுவதற்காகவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினால் கீழ்க்கண்ட 17 கிராமங்களிலுள்ள நிலங்களுக்கு பாசன வசதியளிப்பதுடன் மேற்படி கிராமங்களில் தொழிற்சாலைகள் அமைக்கவும் அதன் மூலம் பலருக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும் பயன்பெறும்.

1. திருக்குறுங்குடி
2. நம்பித்தலைவன் பட்டினம்
3. மயிலாடி
4. வடக்கு வள்ளியூர்
5. தெற்கு வள்ளியூர்
6. ஏர்வாடி
7. தளபதிசமுத்திரம்
8. அச்சம்பத்து
9. இராஜாக்கமங்கலம்
10. கும்பிகுளம்
11. தேரைக்குளம்
12. சமூகரெங்கபுரம்
13. கள்ளிகுளம்
14. அனேக்குளம்
15. ஆழங்கிணறு - திருமால்புரம்
16. சௌந்தரபாண்டிபுரம்
17. பாண்டாரபுரம்



**4. திருநெல்வேலி மாவட்டம் நாங்குனேரி வட்டத்திலுள்ள பச்சையாற்றின் குறுக்கே நீர்த் தேக்கம் அமைத்தல்:**

பச்சையாறு நீர்த் தேக்கத் திட்டம் தாமிரபரணி ஆற்றின் உபநதியான பச்சையாற்றின் குறுக்கே கட்டப்படும் 133 மி. க. அடி கொள்ளளவை உடைய ஒரு நீர்த் தேக்கத்தைக் கொண்டது. இத்திட்டம் பச்சையாற்றின் 12 அணைக்கட்டு களிலுள்ள 12366 ஏக்கர் ஒருபோக இருபோக சாகுபடிக்கும் 646 ஏக்கர் ஒருபோக இருபோக சாகுபடியில் ஏற்படும் தீய்வை சரிசெய்வது, 260 ஏக்கர் புதிய நிலங்களுக்கும் பாசன வசதியளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். இப்பயிறுகள் பருவகாலத்தின் இறுதியில் தண்ணீர் பற்றுக் குறையால் பாதிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 225 இலட்சங்கள். இத்திட்டத்தால் ஏற்படும் உணவு உற்பத்தி ஆண்டிற்கு 7836 டன்களாகும். ஒரு டன் அரிசி விளைச்சலுக்கு திட்ட முதலீடு ரூ. 2871 ஆகிறது.

**பச்சையாறும் அதற்குள்ள பாசனங்களும்:-**

மேற்பகுதிகளில் பாச்சலாறு என அழைக்கப் படும் பச்சையாறு மேற்குத் தொடர்ச்சி மலையில் ஏறக்குறைய 3900 அடி முதல் 4000 அடி வரை உயரத்திலிருந்து உற்பத்தியாகிறது. நாலரை மைல் தூரம் அடர்ந்த காடுகளினூடே ஓடி சமவெளிக்கு வந்துவிடுகிறது. பச்சையாற்றின் உபநதியான கினத்தான் கரையான் ஓடை, அணைக் கிடங்கு ஓடை, மரஞ்சடியாறு, உப்பாறு ஆகிய சிறு நதிகள் இவ்வாறுடன் சேருகின்றன. இணைந்த ஆறு பச்சையாறு என்ற பெயருடன் 22 மைல் சென்று திருநெல்வேலி வட்டம் தருவை பக்கத்தில் தாமிரபரணியுடன் சேருகிறது.

ஆற்றின் பாய்ச்சல் ஆண்டு முழுவதும் இருந் தாலும் ஏற்றத் தாழ்வுகள் உடையது. மழை காலங் களில் வெள்ளப்பெருக்குடனும் கோடை காலங் களில் சிறிய நீர் ஒழுக்காகவும் பாய்கிறது. ஆற்றின் நீர் வடிப்பரப்பு தென்மேற்கு வடகிழக்கு ஆகிய இரு பருவ மழைகளாலும் பயன்படுகிறது. எனவே இவ்வாற்றின் பாசனத்திற்குள்பட்ட நிலங்களின் பெரும் பகுதியில் இருபோகங்கள் விளைகின்றன. ஒன்று பிசானம் எனப்படும் நீண்டகாலப் பயிறுக்கும் மற்றொன்று சோளம், கேழ்வரகு முதலிய குறுங் காலப் பயிறுக்கும் பாசனம் கிடைக்கிறது. பாசனம், ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள 12 அணைக்கட்டு களிலிருந்து புறப்படும் வாய்க்கால்கள் வழியாகவும் அவற்றிலிருந்து குளங்கள் மூலமாகவும் நடைபெறு கிறது. எட்டு முதல் பனிரெண்டு வரையுள்ள அணைகளின் கீழ் உள்ள நிலங்களுக்கு மணிமுத்தாறி லிருந்து பாதித் தண்ணீர் கிடைக்கிறது. ஆற்றின் குறுக்கேயுள்ள 12 அணைக்கட்டுகளும் பின் வருமாறு:-

1. அரசப் பத்து அணைக்கட்டு
2. தலை அணைக்கட்டு
3. ஏட்டுத் துரைசாமி அணைக்கட்டு
4. பழம்பத்து அணைக்கட்டு
5. பத்மனேரி அணைக்கட்டு
6. சம்பன்குளம் அணைக்கட்டு
7. தேவநல்லூர் அணைக்கட்டு
8. கட்டளைக்காடு வெட்டி அணைக்கட்டு
9. சுப்புகுட்டி அணைக்கட்டு
10. பொன்னுக்குடி அணைக்கட்டு
11. திடியூர் மண்அணை
12. தமளைக்குறிச்சி அணைக்கட்டு.

அணைக்கட்டிலிருந்து புறப்படும் கால்வாய்கள் மூலம் தண்ணீர் பெறும் குளங்கள் 178 ஆகும்.

**அணை அமையும் இடம்:**

அணை மேற்குத்தொடர்ச்சி மலையில் பச்சை யாற்றிலுள்ள அரசப்பத்து அணைகட்டிற்கு 0.20 கிலோ மீட்டர் கீழ்பகுதியில் அமைந்துள்ளது. நாங்குனேரி வட்டத்திலுள்ள களக்காட்டிலிருந்து அங்கு செல்லலாம். அணை, ஆற்றின் இருபக்கமும் உள்ள இரண்டு பாறைகளை இணைப்பதாகிய மண் அணையும் கல் அணையும் இணைந்த அணையாகும்.

**செயற் குறிப்பு:**

பச்சையாறு அணை 990.00 மீட்டர் நீளமுடை யது. இந்த அணை 174.4 மீட்டர் நீளம் கல்லணை யாலும் மீதிப்பாகம் மண் அணையாலும் ஆனது. இந்த அணையின் உயரம் அடிப்பகுதி அஸ்திவாரத் திலிருந்து 37.75 மீட்டர். அணையின் மேல்பாகம் 3.65மீட்டர் அகலமுள்ளது. அணையிலுள்ள ஆற்று மடையின் கணவாய் அளவு 1.83 × 1.53 மீட்டர் உபரித் தண்ணீரை நீர் வழிந்தோடி (இரண்டு கண்வாய்) மூலம் வெளியேற்றப்படும். இந்த கண்வாயின் அளவு 12.2 × 3.05 மீட்டர்.

### நீர் சார்ந்த குறிப்புகளும் மற்றும் முக்கியமான அமைப்புக்களும் :

| | | |
|---|---|---|
| 1. | நீர் வடிப்பரப்பு | 6.78 ச. மைல். |
| 2. | மொத்த நீர் வரவு | 1087.00 மி. க. அடி. |
| 3. | கூடுதல் வெள்ளத்தின் அளவு | 11416.00 கன அடி/வினடி |
| 4. | மண் அணையின் நீளம் | 815.6 மீட்டர் |
| 5. | அடிமட்ட அஸ்திவாரத்திலிருந்து அணையின் உயரம் | 37.75 மீட்டர் |
| 6. | அணையின் மொத்த நீளம் | 990.00 மீட்டர் |
| 7. | அணையின் கொள்ளளவு | 133.00 மி. க. அடி |
| 8. | நிரப்புகளின் எண்ணிக்கை | 1.7. |
| 9. | அணையின் முழு நீர்பிடிப்பு மட்டமும் கூடுதல் நீர் பிடிப்பு மட்டமும். | 122.00 மீட்டர்<br>124.77 மீட்டர் |
| 10. | அணையின் மேல்பாகத்தின் மட்டம் | |
| 11. | நீர்ப்பிடிப்பு பரப்பு | 81.50 ஏக்கர் |
| 12. | அணையின் மேற்பாகத்தின் அகலம் | 3.65 மீட்டர் |
| 13. | நீர்வழிந்தோடி (இரண்டு கண்வாய்கள்) | 12.20×3.05 மீட்டர் |
| 14. | மடையின் அடித்தள மட்டம் | 103.50 மீட்டர் |
| 15. | மடையின் கண் வாய் அளவு. | 1.83×1.53 மீட்டர். |

**பொது :**

இத்திட்டத்திற்காக மதிப்பீடு (ரூ. 225 இலட்சம்) தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டம் ஐந்தாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட இருக்கிறது.

மிகவும் பின் தங்கிய நிலையிலுள்ள நாங்குனேரி வட்ட விவசாய நிலங்களுக்கு பாசன வசதியளிப்பதுடன் தொழிற்சாலைகள் முதலியவை நிறுவப்பட்டு பலருக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும் இத்திட்டம் உதவும்

**5. அம்பை வட்டம், கடையம் பெரும்பத்து கிராமத்தில் சம்புநதியின் குறுக்கே அமைக்கவிருக்கும் சம்புநதி நீர்த் தேக்கத்திட்டம்.**

இந்நீர்த் தேக்கத் திட்டம் திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், கடையம் பெரும்பத்து கிராமத்தில் சம்பு நதியின் குறுக்கே 122.1 மில்லியன் கனஅடி கொள்ளளவில் நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டமாகும்.

இத்திட்டத்தினுல் அம்பாசமுத்திரம் வட்டத்திலுள்ள கீழ் கடையம் தெற்கு கடையம், பொட்டல் புதூர் ஆகிய கிராமங்களிலும் தென்காசி வட்டத்திலுள்ள திப்பணம்பட்டி, ஆவுடையநல்லூர் முதலியகிராமங்களிலு மாக சுமார் 1297 ஏக்கர் நிலங்கள், முதல் போகத்திலும், 1671 ஏக்கர் நிலங்கள் இரண்டாம் போகத்திலும், நிலையான பாசன வசதி பெறும். இத்திட்டத்தின் கீழுள்ள அணைக் கட்டுகள் மூலம் பாசன வசதி பெறும் பதிவு செய்யப்பட்ட நிலங்களின் விபரம்.

| | | |
|---|---|---|
| 1 | குத்தாலப்பேரி அணைக்கட்டு | 1110.84 ஏக்கர் |
| 2 | சம்புநதி அணைக் கட்டு | 252.57 ஏக்கர் |
| 3 | அய்யாம் பிள்ளை அணைக் கட்டு | 307.36 ஏக்கர் |

இத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை ரூ. 89.5 லட்சங்களாகும். இத்திட்டத்தினுல் ஆண்டுக்கு 1866 டன்கள் கூடுதலான உணவு உற்பத்தி கிடைக்கும்.



இத்திட்டத்தின் விரிவான மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகையினை தற்போதைய 1974-75 விலை விகிதப்படி மாற்ற வேண்டியுள்ளது.

**6. சங்கரன்கோவில் வட்டம், மேலப்புளியங்குடி கிராமத்தில் வாலமலையாற்றின் குறுக்கே அமைக்கவிருக்கும் வாலமலையாறு நீர்த்தேக்கத் திட்டம்.**

இந்நீர்த்தேக்கத் திட்டம், திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், மேலப்புளியங்குடி கிராமத்தில் வாலமலையாற்றின் குறுக்கே 65 மில்லியன் கனஅடி கொள்ளளவில் நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டமாகும்.

இத்திட்டத்தினால் சங்கரன்கோவில் வட்டத்திலுள்ள மேலப்புளியங்குடி, புளியங்குடி, டி. என். புதுக்குடி, சிந்தாமணி, மடத்துப்பட்டி, மலையாடிக் குறிச்சி ஆகிய கிராமங்களில் சுமார் 2243 ஏக்கர் நிலங்கள் முதல் போகத்திலும் 152 ஏக்கர் நிலங்கள் இரண்டாவது போகத்திலும் நிலையான பாசன வசதி பெறும். இத்திட்டத்தின் கீழ் பாசன வசதி பெறும் கிராமங்களில் உள்ள பதிவு செய்யப்பட்ட நிலங்களின் விவரம் வருமாறு :-

| | | ஏக்கர். |
|---|---|---|
| 1. | மேலப் புளியங்குடி | 73·27 |
| 2. | புளியங்குடி | 518.39 |
| 3. | டி. என். புதுக்குடி | 997.28 |
| 4. | சிந்தாமணி | 140.13 |
| 5. | மடத்துப்பட்டி | 64 22 |
| 6. | மலையாடிக்குறிச்சி | 449.48 |

இத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை ரூ. 5.45 லட்சங்களாகும்.

இத்திட்டத்தினால் ஆண்டுக்கு 1245 டன்கள் கூடுதலான உணவு உற்பத்தி கிடைக்கும்.

இத்திட்டம் செயலாக்க ஒப்புதலளிப்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

**7. தென்காசி வட்டம் ஆயிரப்பேரி கிராமத்தில் அழுத கன்னியாற்றின் குறுக்கே அமைக்கவிருக்கும் அழுத கன்னியாறு நீர்த் தேக்கத் திட்டம்.**

இந்நீர்த் தேக்கத் திட்டம் திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், ஆயிரப்பேரி கிராமத்தில் அழுதகன்னியாற்றின் குறுக்கே 22 மில்லியன் கன அடி கொள்ளளவில் அமைக்கும் திட்டமாகும்.

இத்திட்டத்தினால் தென்காசி வட்டத்திலுள்ள தென்காசி மத்தளம்பாறை, திப்பணம்பட்டி, மறவனேரி, கண்டமங்கலம், மடப்புளி, வேட்டைக்காரன்குளம் முதலிய கிராமங்களில் சுமார் 1019 ஏக்கர் நிலங்கள் முதல் போகத்திலும் 1440 ஏக்கர் நிலங்கள் இரண்டாவது போகத்திலும் நிலையான பாசன வசதி பெறும். இத்திட்டத்தின் கீழ் உள்ள அணைக்கட்டுகள் மூலம் பாசன வசதி பெறும் பதிவு செய்யப்பட்ட நிலங்களின் விபரம்.

| | | ஏக்கர். |
|---|---|---|
| 1 | தலை அணைக்கட்டு | 320.41 |
| 2 | செங்குளம் அணைக்கட்டு | 904.45 |
| 3 | மத்தளம்பாறை அணைக்கட்டு | 119.87 |
| 4 | மறவனேரி அணைக்கட்டு | 199.26 |
| 5 | கண்டமங்கலம் அணைக்கட்டு | 249 58 |
| 6 | மடம்புளி அணைக்கட்டு | 68.04 |
| 7 | கடபோகதி அணைக்கட்டு | 123.32 |
| 8 | வேட்டைக்காரன் அணைக்கட்டு | 65.98 |

இத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை ரூ. 170 லட்சங்களாகும்.

இத்திட்டத்தினால் ஆண்டுக்கு 1229 டன்கள் கூடுதலான உணவு உற்பத்தி கிடைக்கும்.

அழுத கன்னியாற்றில் உள்ள பழைய குற்றால அருவி பயணிகளின் வாசஸ்தலமாகவும் அமைந்திருப்பதால் இத்திட்டம் பயணிகள் போக்குவரத்தை கவரவும் அதிகரிக்கவும் செய்யும் என்பதை திண்ணமாக கூறலாம்.

இத்திட்டத்தின் விரிவான மதிப்பீடு அரசுக்கு விரைவில் அனுப்பப்படும் நிலையில் உள்ளது.

**8. சங்கரன்கோவில் வட்டம், சிவகிரி கிராமத்தினருகே பழையார் வாழமலையாற்றின் குறுக்கே அமைக்கவிருக்கும் பழையார் வாழமலையார் நீர்த்தேக்கத்திட்டம்.**

இந்நீர்த் தேக்கத்திட்டம். திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் வட்டம் சிவகிரி கிராமத்திலிருந்து 4 மைல்தூரத்தில் பழையாறு-வாழமலையாற்றின் குறுக்கே 245 மில்லியன் கன அடி கொள்ளளவில் அமைக்கும் திட்டமாகும்.

இத்திட்டத்தினுல் சங்கரன்கோவில் வட்டத்திலுள்ள ராயகிரி, சிவகிரி, தென்மலை, திருமலாபுரம், நாராபுரம், கோட்டையூர், சிந்தாமணிபேரி, கூடலூர், ராமநாதபுரம். பனையூர், கரிவலம்வந்த நல்லூர் முதலிய கிராமங்களில் சுமார் 11,600 ஏக்கர் நிலங்கள் நிலையான பாசன வசதி பெறும்.

இத்திட்டத்தின் கீழ் பாசன வசதிபெறும் கிராமங்களில் உள்ள பதிவு செய்யப்பட்ட நிலங்களின் விபரம்

| இராசிங்கபேரி குளக்கோர்வை | | ஏக்கர் |
|---|---|---|
| 1 | இராயகிரி (குளத்துப்பாசனம்) | 3394.05 |
| | (கால் பாசனம்) | 227 64 |
| 2 | சிவகிரி | 1660.29 |
| 3 | தென்மலை | 1711.43 |
| **குலசேகரப்பேரி குளக் கோர்வை:** | | |
| 4 | திருமலாபுரம் | 924.74 |
| 5 | நாருபுரம் | 133.52 |
| 6 | கோட்டையூர் | 73.36 |
| 7 | சிந்தாமணிப்பேரி | 49.94 |
| 8 | கூடலூர் | 717.58 |
| 9 | இராமநாதபுரம் | 209.56 |
| 10 | பனையூர் | 1390.35 |
| 11 | கரிவலம்வந்தநல்லூர் | 297.84 |

இத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை ரூ205 லட்சங்களாகும்.

இத்திட்டத்தினுல் ஆண்டுக்கு 6763 டன்கள் கூடுதலான உணவு உற்பத்தி கிடைக்கும்.

இத்திட்டத்தின் விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்படும், நிலையில் உள்ளது இத்திட்டத்தின் மதிப்பீட்டு தொகையினை தற்போதைய 1974-75 விலை விகிதப்படி மாற்ற வேண்டியுள்ளது,

**9. தென்காசி வட்டம் கம்பனேரி புதுக்குடி கிராமத்தின் அருகே வரட்டாற்றின் குறுக்கே அமைக்கவிருக்கும் வரட்டாறு நீர்த்தேக்கத் திட்டம்.**

இந்நீர்த் தேக்கத்திட்டம் திருநெல்வேலி மாவட்டம் தென்காசி வட்டம் கம்பனேரி புதுக்குடி கிராமத்தின் அருகே வரட்டாற்றின் குறுக்கே 39 மில்லியன் கன அடி கொள்ளளவில் அமைக்கும் திட்டமாகும்.

இத்திட்டத்தினுல், செங்கோட்டை, தென்காசி வட்டங்களிலுள்ள அச்சம்புதூர், காசிதர்மம் கம்பனேரி புதுக்குடி கிராமங்களிலுள்ள சுமார் 388 ஏக்கர் நிலங்கள் இருபோகங்களிலும் நிலையான பாசன வசதிபெறும். இத்திட்டத்தின் கீழ் உள்ள குளங்கள் மூலம் பாசன வசதிபெறும் பதிவு செய்யப்பட்ட நிலங்களின் விவரம்.

| | | | |
|---|---|---|---|
| 1 | இராஜகோபாலபேரி குளம் | 138·64 | ஏக்கர் |
| 2 | அதிவீரராமபேரி குளம் | 139·43 | ,, |

இத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை ரூ. 59 லட்சங்களாகும்.

இத்திட்டத்தினுல் ஆண்டுக்கு 515 டன்கள் கூடுதலான உணவு உற்பத்தி கிடைக்கும்.

இத்திட்டத்தின் விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகையினை தற்போதைய 1974-75 விலை விகிதப்படி மாற்றவேண்டியுள்ளது.

**10. சங்கரன்கோவில் வட்டம் சிவகிரி கிராமத்தினருகே கோம்பையாற்றின் குறுக்கே அமைக்கவிருக்கும் கோம்பையார் நீர்த்தேக்கத் திட்டம்**

இந்நீர்த் தேக்கத் திட்டம் திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், சிவகிரி கிராமத்திலிருந்து 5 மைல் தூரத்தில் கோம்பையாற்றின் குறுக்கே 50 மில்லியன் கன அடி கொள்ளளவில் அமைக்கும் திட்டமாகும்.

இத்திட்டத்தினுல் சங்கரன்கோவில் வட்டத்திலுள்ள சிவகிரி, விஸ்வநாதபேரி, மேலூர் துரைசாமிபுரம் ஆகிய கிராமங்களில் சுமார் 1892 ஏக்கர்



நிலங்கள் நிலையான பாசன வசதியளிக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் பாசன வசதிபெறும் கிராமங்களில் உள்ள பதிவு செய்யப்பட்ட நிலங்களின் விபரம்.

| | | | |
|---|---|---|---|
| 1 | சிவகிரி | 403·12 | ஏக்கர் |
| 2 | விஸ்வநாதபேரி | 183·76 | ,, |
| 3 | மேலூர் துரைசாமிபுரம் | 615·38 | ,, |

இத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை ரூ. 94 லட்சங்களாகும். இத்திட்டத்தினுல் ஆண்டுக்கு 1166 டன்கள் கூடுதலான உணவு உற்பத்தி கிடைக்கும்.

இத்திட்டத்திற்கான முன்நிலை மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகையினை தற்போதைய 1974...75 விலை விகிதப்படி மாற்ற வேண்டியுள்ளது.

11. சங்கரன்கோவில் வட்டம் புளியங்குடி கிராமத்தினருகே கோட்டமலையாற்றின் குறுக்கே அமைக்கவிருக்கும் கோட்டமலையாறு நீர்த் தேக்கத்திட்டம்.

இந்நீர்த் தேக்கத்திட்டம் திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் வட்டம், புளியங்குடி கிராமத்திலிருந்து 6 மைல் தூரத்தில் கோட்டமலையாற்றின் குறுக்கே 30 மில்லியன் கனஅடி கொள்ளளவில் அமைக்கும் திட்டமாகும்.

இத்திட்டத்தினுல் சங்கரன்கோவில் வட்டத்திலுள்ள சிந்தாமணி, மேல புளியன்குடி, சுப்பிரமணியபுரம், தாருகாபுரம் முதலிய கிராமங்களில் சுமார் 1352 ஏக்கர் நிலங்கள் முதல் போகத்திலும் 632 ஏக்கர் நிலங்கள் இரண்டாம் போகத்திலும் நிலையான பாசன வசதி பெறும். இத்திட்டத்தின் கீழ் பாசன வசதிபெறும் கிராமங்களில் உள்ள பதிவு செய்யப்பட்ட நிலங்களின் விவரம்.

| | | ஏக்கர் |
|---|---|---|
| 1. | சிந்தாமணி | 630.55 |
| 2. | மேலபுளியங்குடி | 0.35 |
| 3. | சுப்பிரமணியபுரம் | 390.·2 |
| 4. | தாருகாபுரம். | 1380.15 |

இத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை ரூ, 34 லட்சங்களாகும்.

இத்திட்டத்தினுல் ஆண்டுக்கு 1060 டன்கள் கூடுதலான உணவு உற்பத்திகிடைக்கும். இத்திட்டத்திற்கான முதல்படி மதிப்பீடு தலைமைப் பொறியாளர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, விரிவான ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

**12. திருநெல்வேலி மாவட்டம், சேர்வலாற்றின் தண்ணீரை மேல்மட்டம் கால்வாய் மூலமாக கடனுநீர்த் தேக்கத்திற்கு திருப்பிவிட்டு கடனுநீர்த் தேக்கத்திலிருந்து இடதுபுற உயர்மட்ட சமநிலைக் கால்வாய் மூலமாக மானூர்குளம் வரை வடியச்செய்யும் திட்டம்.**

திருநெல்வேலி மாவட்டத்தில் தாம்பிரபரணி யாற்றின் உபநதியான சேர்வலாறு நீரை மேல் மட்டத்தில் திருப்பிவிட்டு சுரங்க கால்வாய் மூலமாக மேல்மட்டநீரை கீழ் மட்டத்திற்கு கொண்டுவந்து கருணையாற்றில் திருப்பிவிட்டு அதன்வழியாக கடனுநதிக்கும், கடனு நீர்த்தேக்கத்திற்கும் வடியச் செய்தல். கடனு நீர்த்தேக்கத்திலிருந்து இடது புறம் வழியாக ஒரு உயர்மட்ட சமநிலைக் கால்வாய் மூலமாக சமமட்டம் 400 அடியிலிருந்து 350 அடிக்கு 28 மைல் நீளமுள்ள கால்வாய் மூலம் திருப்பிவிடப்பட்ட தண்ணீர் மானூர் குளத்தில் வந்து சேருதல்.

இத்திட்டத்தினுல் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள 15000 ஏக்கர் வறட்சி நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கும். மேலும் அம்பாசமுத்திரம் தாலுகாவில் ஆலங்குளம் பகுதியைச் சேர்ந்த 33 மானுமாரி நீர்த்தேக்க குளங்களும் பயனடையும்.

இத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை ரூ 680 லட்சங்களாகும்.

இத்திட்டத்தினுல் ஆண்டுக்கு 8000 டன்கள் கூடுதல் உணவு உற்பத்தி கிடைக்கும். இத்திட்டத்தின் முன் நிலை மதிப்பீடும் வரைபடங்களும் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

**13. அம்பை வட்டம், கடனு நீர்த் தேக்கத்திலிருந்து வலபக்க உயர்மட்ட காலவாய் வெட்டி 10 மானுமாரி குளங்களுக்கு பாசன வசதியளிக்கும் திட்டம்.**

இத்திட்டம் திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பை வட்டத்திலுள்ள கடனு நீர்த் தேக்கத்திலிருந்து வலது புறத்தில் ஒரு உயர்மட்ட கால்வாய் வெட்டி அம்பை வட்டத்திலுள்ள 10 மானுமாரி குளங்களுக்கு பாசன வசதியளிக்கும் திட்டமாகும்.

இத்திட்டத்தினுல் அம்பை வட்டத்திலுள்ள விக்கிரமசிங்கபுரம். மன்னர்கோவில், கீழ் ஆம்பூர், மேல் ஆம்பூர் ஆகிய கிராமங்களில்

சுமார் 544 ஏக்கர் நிலங்கள் முதல் போகத்திலும் 253 ஏக்கர் நிலங்கள் இரண்டாம் போகத்திலும் நிலையான பாசன வசதி பெறும் கிராமங்களில் உள்ள பதிவு செய்யப்பட்ட நிலங்களின் விபரம்.

| | | ஏக்கர் |
|---|---|---|
| 1. | விக்கிரமசிங்கபுரம் | 103.64 |
| 2. | மன்னார்கோவில் | 189.13 |
| 3. | கீழ் ஆம்பூர் | 21.41 |
| 4. | மேல் ஆம்பூர் | 30.01 |

இத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை ரூ. 16.7 லட்சங்களாகும்.

இத்திட்டத்தினால் ஆண்டுக்கு 460 டன்கள் கூடுதலான உணவு உற்பத்தி கிடைக்கும்.

இத்திட்டத்தில் முதற்படி மதிப்பீடு தயாரிக்கப் பட்டுள்ளது.

**14. திருச்செந்தூர் வட்டம் திருப்பணிப் புத்தன் தருவை கிராமத்தின் புத்தன் தருவை ஓடையின் குறுக்கே ஒரு புதிய குளம் அமைத்து அதிலிருந்து ஒரு வடிகால் மூலமாக கருமேனியாற்றுடன் இணைக்கும் புத்தன் தருவை வடிகால் திட்டம் (மூன்றும் நிலை)**

இத்திட்டம் திருநெல்வேலி மாவட்டம் திருச்செந்தூர் வட்டம் திருப்பணிப் புத்தன் தருவை கிராமத்தில் அமைவதாகும்.

இத்திட்டம் அரசூர் கிராமத்தினருகே தற்போதுள்ள புத்தன் தருவை ஓடையின் குறுக்கே ஒரு புதிய குளம் அமைத்து அதிலிருந்து ஒரு வடிகால் மூலமாக கருமேனியாற்றுடன் இணைப்பதாகும்.

இத்திட்டம் புத்தன் தருவை, அருகூர், குமட்டிக்கோட்டை ஆகிய கிராமங்களில் சுமார் 1009 ஏக்கர் நிலங்கள் வெள்ள நிவாரணமளிக்கவும், திசையன்விளை கிராமத்தினருகே 110 ஏக்கர் நிலங்கள் பாசன வசதியளிக்கவும் வகை செய்கிறது.

இத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை ரூ. 53 லட்சங்களாகும்.

இத்திட்டத்திற்கு ஆண்டுக்கு 573 டன்கள் கூடுதலான உணவு உற்பத்தி கிடைக்கும்.

இத்திட்டத்தின் விரிவான ஆய்வு வேலைகள் நடைபெற்று வருகிறது.

**15. கோவில்பட்டி வட்டம் சீவலப்பேரி கிராமத்தினருகில் உப்போடையின் குறுக்கே அமைக்கவிருக்கும் உப்போடை நீர்த்தேக்கத் திட்டம்.**

இந்நீர்த் தேக்கத்திட்டம் திருநெல்வேலி மாவட்டம் கோவில்பட்டி வட்டம் சீவலப்பேரி கிராமத்தினருகில் உப்போடையின் குறுக்கே 107 மில்லியன் கனஅடி கொள்ளளவில் அமைக்கும் திட்டமாகும். இத்திட்டத்தினால் கோவில்பட்டி வட்டத்திலுள்ள வடக்கு இடையான் குளம், தெற்கு இடையான் குளம், கயத்தாறு, கங்கை கொண்டான் சித்தார் சத்திரம், பிரான்சேரி, ராஜா புதுக்குடி, சன்னத்து புதுக்குடி முதலிய கிராமங்களில் சுமார் 2744 ஏக்கர் நிலங்கள் நிலையான பாசன வசதி பெறும். இத்திட்டத்தின் கீழ் பாசன வசதி பெறும் கிராமங்களில் உள்ள பதிவு செய்யப்பட்ட நிலங்களின் விவரம்.

| | | ஏக்கர் |
|---|---|---|
| 1 | வடக்கு இலந்தைக்குளம் | 116 02 |
| 2 | தெற்கு இலந்தைக்குளம் | 123.25 |
| 3 | கயத்தாறு | 216.48 |
| 4 | கங்கைகொண்டான் | 1007.63 |
| 5 | சித்தார் சத்திரம் | 214.38 |
| 6 | பிரான்சேரி | 250.25 |
| 7 | ராஜா புதுக்குடி | 183 69 |
| 8 | சன்னத்துப் புதுக்குடி | 38.29 |

இத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை ரூ 49 லட்சங்களாகும். இத்திட்டத்தினால் ஆண்டுக்கு 1403 டன்கள் கூடுதலான உணவு உற்பத்தி கிடைக்கும். இத்திட்டத்திற்கான விரிவான ஆய்வு வேலைகள் நடைபெற்று வருகிறது.

**16 நம்பியாறு படுகையில் நீர்த்தேக்கத் திட்டம்**

மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்களின் அறிவுரையின்படியும்; திசையன்விளை, மற்றும் அதைச் சுற்றிலுமுள்ள கிராமங்களில் வாழும் விவசாயபெருங்குடி மக்களின் வேண்டுகோளின்படியும், நம்பியாறு படுகையில் கோட்டைக் கருங்குளத்திலிருந்து நம்பியாறு கடலில் கலக்கும் இடத்திலுள்ளபகுதியில் நீர்த்



தேக்கங்களும் மற்றும் சிறுகுளங்களும் அமைப்பதற்கான முன்நிலை ஆய்வுகள் நடத்தப்பட்டன. ஆய்வுகளின் கீழ்குறிப்பிட்டுள்ள நான்கு இடங்கள் நீர்த் தேக்கங்கள் அமைப்பதற்கே தற்காலிகமாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன. நம்பியாறு படுகையில் நீர்த் தேக்கங்களும், குளங்களும் அமைப்பதால், மேற்குறிப்பிட்ட இடங்களிலுள்ள பாசன நிலங்கள் பயன்பெறுவதுடன் பக்கத்திலுள்ள நிலங்களின் நீர்மட்டம் உயர்வதற்கும் வழிவகை செய்யும்.

**இடம் 1:-** கோட்டைக் கருங்குளம் அருகில் கொல்லன்கால் ஓடை நம்பியாற்றுடன் கலக்கும் இடத்தில், ஏற்கனவே ஒரு அணைக்கட்டு கட்டுவதற்கு ஆய்வுகள் நடத்தப்பட்டு ரூ. 10 லட்சங்களுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப் பட்டுள்ளது. தற்போது இந்த அணைக்கட்டுத் திட்டத்தை மாற்றி நீர்த் தேக்கத் திட்டமாக மாற்றுவதற்கு ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. இந்த தேக்கத்தின் மூலம் திசையன்விளை பகுதியிலுள்ள மானூமாரி குளங்கள் தண்ணீர்பெறும் அத்துடன் நில நீர் மட்டமும் உயரும்.

**இடம் 2:-** நம்பியாறு, வள்ளியூர்–திருச்செந்தூர் ரோட்டை கடக்கும் இடத்திற்கு 2 பர்லாங்கு தூரத்தில் சானூர்குடி அருகில் ஒரு நீர்த் தேக்கம் அமைத்தல்.

**இடம் 3:-** நம்பியாற்றிலுள்ள சிதைந்து போன தூரத்தில் குளம் அணைக்கட்டுக்கு அருகில் ஒரு தேக்கம் அமைத்தல்.

**இடம் 4 –** நம்பியாற்றிலுள்ள புளிமான்குளம் அணைக்கட்டுக்குப் பக்கத்தில் ஒரு தேக்கம் அமைத்தல்.

நான்கு இடங்களில் நீர்த் தேக்கங்கள் அமைப்பதற்கான ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

திருநெல்வேலி மாவட்டத்தில், நான்குனேரி வட்டத்தில் நம்பியாறு படுகையில் ஆய்வு செய்யப்பட்டுவரும் புதிய சிறு குளப்பாசனத் திட்டங்கள்.

ஏழு ஓடையில் சிறுகுளப் பாசனத் திட்டங்கள் அமைத்தல்.

நம்பியாறு, கடலில் கலக்கும் இடத்திலிருந்து 1½ மைலுக்கு முன்னதாக, ஆத்தங்கரை பள்ளிவாசல் என்னும் கிராமத்தின் அருகில் ஏழுஓடை நம்பியாற்றுடன் சேர்கிறது. இவ்வோடையில், நம்பியாற்றுப் படுகையின் அடித்தள நீர்மட்டம் உயரும் வண்ணம், சிறு குளப் பாசனத் திட்டங்கள் அமைப்பதற்கான மூன்று இடங்கள் தற்காலிகமாக தேர்ந்தெடுக்கப்பட்டு, முன்னிலை ஆய்வுகள் செய்யப்பட்டு வருகின்றன. இச்சிறு குளப்பாசனத் திட்டங்கள் மூலம், ஆற்றுப்படுகையின் அடித்தளம் நீர்மட்டம் உயர்வதோடு, மட்டுமல்லாமல், இவ்வோடையைச் சுற்றிலுமுள்ள தரிசு, நிலங்கள், பாசன நிலங்களாக மாற்றவும் முடியும்.

மேலும், ஏழு ஓடை, நம்பியாற்றுடன் சேரும் இடத்திற்கு முன்னதாக, இடதுபுறத்தில் ஒரு ஓடை நம்பியாற்றுடன் சேர்கிறது. இவ்வோடையிலும் ஒரு புதிய குளம் அமைக்க இடம் திட்டமிடப்பட்டு, முன்னிலை ஆய்வுகள் செய்யப்பட்டு வருகின்றன

**ராதாபுரம் கால்வாயின் பாசனப்பகுதியில் புதிய குட்டைகள் அமைத்தல்.**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் உப வட்டத்தில் ராதாபுரம் கால்வாய் 17000 ஏக்கர் புஞ்சை நிலங்களுக்கு பாசன வசதியளிப்பதற்கு சித்தாறு--பட்டணங்கால் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டது. மேலும், இப்பகுதியிலுள்ள 1072 ஏக்கர் நஞ்செய் பயிர்களுக்கு பாசனம் அளிக்க தற்போது உத்தேசிக்கப்பட்டது.

ராதாபுரம் கால்வாயின் கன்னியாக்குமரி மாவட்டத்திலுள்ள நீர்த்தேக்கங்களில் போதுமான தண்ணீர் பெருக்காத காரணத்தால் குறுகிய காலத்திற்குத்தான் பாசனத்திற்கு தண்ணீர் கிடைக்கிறது. அதனால் அறுவடை வரையில் விவசாயிகள் கிணற்று நீரைத்தான் பயன்படுத்தி வருகின்றனா. பழவூர் பகுதியில் ஏராளமாகவும், மற்ற பகுதிகளில் குறைவாகவும் கிணறுகள் உள்ளன. எனவே இந்தப் பகுதிகளில் மேலும் கிணறுகள் வெட்டுதல் மூலமாகவும், கிணறுகளின் நீர்மட்டத்தை உயர்த்து

வதன் மூலமாகவும் நிரந்தரமான பாசன வசதி கிடைக்கும். இதனுல் இராதாபுரம் கால்வாயின் பாசனத்திற்கு உட்பட்ட நிலங்களின் சிறு குளப்பாசனத்திட்டங்கள் அமைப்பதற்கு திட்ட மிடப்பட்டு ஆய்வுகள் நடத்தப்பட்டு கீழ்க் கண்ட இடங்கள் குட்டைகள் அமைக்க தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளன.

1. ராதாபுரம் கால்வாயில் கி. மீ. 0/995ல், ஓடை கால்வாயை கடக்கும் இடத்தில் கீழ் வளைகாலுக்கு கீழே 200 மீட்டர் தூரத்தில் அதே ஓடையில்.

2. ராதாபுரம் கால்வாயில் கி. மீ. 1/445ல் ஓடை கால்வாயை கடக்கும் இடத்தில் கீழ் வளைகாலுக்கு மேல் 200 முதல் 300 மீ. தூரத்தில் அதே ஓடையில்.

3 ராதாபுரம் கால்வாயில் கி மீ. 3/276ல் ஓடை கால்வாயை கடக்கும் இடத்தில், கீழ் வளைகாலுக்கு கீழே 200 மீ. தூரத்தில் அதே ஓடையில்

4. ராதாபுரம் கால்வாயில் 5/315ல், ஓடை கால்வாயை கடக்கும் இடத்தில், மேல்மட்ட கால்வாயிலிருந்து மேலே 300 மீ. தூரத்தில் அதே ஓடையில்

5. ராதாபுரம் கால்வாயில் 6/590ல் ஓடை கால்வாயை கடக்கும் இடத்தில் மேல் மட்ட கால்வாய்க்கு மேலே 400 மீ. தூரத்தில் அதே ஓடையில்.

6. ராதாபுரம் கால்வாயில் 9/338ல் ஓடை கால்வாயை கடக்கும் இடத்தில் கன்னியா குமரி-திருநெல்வேலி சாலையிலிருந்து 240 கி. மீ க்கு மேல் மேற்படி ஓடையில்.

7, ராதாபுரம் கால்வாயில் 10/997ல் ஓடை கால்வாயை கடக்கும் இடத்தில், மேல் மட்டக் கால்வாய்க்கு 10 கி மீ. கீழே அதே ஓடையில்.

8. உப்பாறு ஓடையில் கருங்குளம், பழவூர், இருக்கண்துறை கிராமங்கள் சந்திக்கும் இடத்திலிருந்து 600 மீ. தூரத்தில்

9. ராதாபுரம் கால்வாயில் 16/993ல் ஓடை கால்வாயை கடக்கும் இடத்தில் கீழ் வளைகாலுக்கு கீழே 200 முதல் 300 மீ. தூரத் தில் அதே ஓடையில்

10. நெடுங்குளத்தில் வந்து சேரும் ஓடையில் ஆரல்வாய்மொழி, நாங்குனேரி சாலையை கடக்கும் இடத்திலிருந்து மேலே 100 மீ. தூரத்தில்

மேற்குறிப்பிட்ட 10 இடங்களில் குட்டைகள் அமைப்பதற்கான ஆய்வுகள் நடத்தப் பட்டு, நான்கு இடங்களில் திட்டத்திற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டன. மற்ற இடங் களின் ஆய்வு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இது தவிர (1) நாங்குனேரி வட்டத்தில் பழவூர் கிராமத்தில், கன்னிமார் ஓடையில் குளம் அமைக்க ஆய்வுகள் நடத்தப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. (2)பழவூர் கிராமத்தில் கன்னிமார் ஓடையில் ராதாபுரம் கால்வாயின் மேல் பாகத்தில் ஒரு இடத்தில் குளம் அமைக்க ஆய்வுகள் நடத்தப்பட்டு, மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

## திருநெல்வேலி மாவட்டத்தின் பாசன கால்வாய்கள் புனரமைப்பதும் உள்தள(லைனிங்) மிடுவதும்.

திருநெல்வேலி மாவட்டத்தின் பாசன நிலங்களின் பெரும் பகுதியும் தாமிரபரணி நீர்ப் பாசன முறையின் கீழ் உள்ளது. பாசன கால்வாய்களின் கீழ் மட்டம் சீராக இல்லாத இடங்களில் தண்ணீர் தேங்கியும் சில இடங்களிலுள்ள மண்ணின் தன்மை நீரை வெகுவாக உறிஞ்சி விடுவதாலும் விவசாயத்திற்கு பயன்பட வேண்டிய நீர் வீணுகப் போய் விடுகிறது. இப்படி தண்ணீர் வீணுகாமல் தடுப்பதற்கு திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நீர்ப்பாசன கால்வாய்களை புனரமைக்கவும் உள்தளமிடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும் நீர்ப்பாசன கால்வாய்களின் விபரம் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது.



85256

| கால்வாய்களின் பெயர். | நீளம் கி மீ. | தோராய மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| **தாமிரபரணி நீர்ப்பாசன முறை :** | | |
| 1. கோடை மேலழகியன் அணைக்கட்டிலிருந்து செல்லும் வடக்கு கோடை மேலழகியன் கால்வாய். | 19.2 | 57,40,800 |
| 2. கோடை மேலழகியன் அணைக்கட்டிலிருந்து செல்லும் தெற்கு மேலழகியன் கால்வாய் | 8.5 | 25,41,500 |
| 3. நதியுண்ணி அணைக்கட்டிலிருந்து செல்லும் நதியுண்ணி கால்வாய் | 11.7 | 34,98,300 |
| 4. கன்னடியன் அணைக்கட்டிலிருந்து செல்லும் கன்னடியன் கால்வாய். | 36.8 | 110,03,200 |
| 5. அரியநாயகிபுரம் அணைக்கட்டிலிருந்து செல்லும் கொடகன் கால்வாய் | 24.8 | 74,15,200 |
| 6. பழவூர் அணைக்கட்டிலிருந்து செல்லும் பாளையம் கால்வாய் | 41.7 | 124,68,300 |
| 7. சுத்தமல்லி அணைக்கட்டிலிருந்து செல்லும் திருநெல்வேலி கால்வாய் | 29.4 | 87,90,600 |
| 8. கானம் குளத்திலிருந்து செல்லும் கானம் கால்வாய் | 8 6 | 25,71,400 |
| **சித்தாறு நீர்ப்பாசன முறை :** | | |
| 9. புளியூர் அணைக்கட்டிலிருந்து செல்லும் புளியூர் கால்வாய் | 2.2 | 6,57,800 |
| 10. உக்கிரன்கோட்டை அணைக்கட்டிலிருந்து செல்லும் உக்கிரன்கோட்டை கால்வாய். | 4.4 | 13,15,600 |
| 11 அரசபதிய அணைக்கட்டிலிருந்து செல்லும் அரசுபதி கால்வாய் | 11.6 | 34,68,400 |
| 12 ஆழ்வார்குறிச்சி அணைக்கட்டிலிருந்து செல்லும் தென்கால் | 8.4 | 25,11,600 |
| 13 ஆம்பூர் பெருங்கால் அணைக்கட்டிலிருந்து செல்லும் மஞ்சம்புளி கால்வாய் | 5.2 | 15,54,800 |
| 14 மஞ்சம்புளி அணைக்கட்டிலிருந்து செல்லும் மஞ்சப்புளி கால்வாய் | 5.00 | 14,95,000 |
| 15 காக்காநல்லூர் அணைக்கட்டிலிருந்து செல்லும் காக்காநல்லூர் கால்வாய் | 9.00 | 26,91,000 |

| | | | |
|---|---|---|---|
| 16 | காங்கயம் அணைக்கட்டிலிருந்து செல்லும் காங்கயம் கால்வாய் | 19.20 | 57,40,800 |
| | **ராமநதி நீர்ப்பாசன முறை.** | | |
| 17 | சூசிமடையார் அணைக்கட்டிலிருந்து செல்லும் வடபத்து கால்வாய் | 6.00 | 17,94,000 |
| 18 | மௌனணையிலிருந்து செல்லும் கள்ளக்கால் கால்வாய் | 0.4 | 1,19,600 |
| 19 | ஒட்டணையிலிருந்து செல்லும் மார்த்தாண்டபேரி கால்வாய் | 2.3 | 6,87,700 |
| | **கிரநதி நீர்ப்பாசன முறை.** | | |
| 20 | பொட்டல்புதூர் அணைகட்டிலிருந்து செல்லும் பாப்பான்கால் கால்வாய் | 14.0 | 41,86,000 |
| 21 | அடைச்சாணி அணைக்கட்டிலிருந்து செல்லும் அடைச்சாணி கால்வாய் | 6.0 | 17,94,000 |
| | **ஜம்புநதி நீர்ப்பாசன முறை.** | | |
| 22 | வடபத்து அணைக்கட்டிலிருந்து செல்லும் வடபத்துகால்வாய் | | — |
| 23 | அய்யம்பிள்ளை அணைக்கட்டிலிருந்து செல்லும் அய்யம் பிள்ளை கால்வாய் | 0.08 | 23,920 |
| | **நம்பியாறு நீர்ப்பாசன முறை.** | | |
| 24 | தளவாய்புரம் அணைக்கட்டிலிருந்து செல்லும் வடமலையான் கால்வாய் | 23.0 | 68,77,000 |
| | **கருப்பாநதி நீர்ப்பாசன முறை.** | | |
| 25 | பாப்பான்கால் அணைக்கட்டிலிருந்துசெல்லும்பாப்பான்கால் கால்வாய் | 15.20 | 45,44,300 |
| 26 | பெருங்கால் அணைக்கட்டிலிருந்து செல்லும் பெருங்கால் கால்வாய் | 8 0 | 23,92,000 |
| 27 | சிவலங்கால் அணைக்கட்டிலிருந்து செல்லும் சிவலங்கால் கால்வாய் | 4.2 | 12,55,800 |

தாமிரபரணி நீர்ப்பாசன கால்வாய்களில் முதலில் குறிப்பிட்டுள்ள 2 முதல் 7 வரையுள்ள கால்வாய்கள் ஏற்கனவே புனரமைப்பு வேலைகள் செய்து முடிக்கப்பட்டவையாகும். அவற்றிற்கும் உள்தளம் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஆய்வு வேலைகள் துவக்கப்பட்டு மட்ட அளவுகள் எடுக்கப்பட்டுள்ளது. மதிப்பீடு தயாரிக்கப்படவேண்டியுள்ளது.

வரிசை எண். 24ல் குறிப்பிட்டுள்ள வடமலையான் கால்வாய் சீரமைக்கும் மதிப்பீடு பொதுப்பணித்துறை திருநெல்வேலி-கன்னியாகுமரி வட்ட அலுவலகத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது.

கருப்பாநதி நீரப்பாசன முறையின் கீழ் உள்ள வரிசை எண். 25ல் குறிப்பிட்டிருக்கும்



பாப்பான்காலுக்கு புனரமைப்பு செய்வதற்கான விரிவான ஆய்வு வேலைகள் முடிவுற்று மதிப்பீடும் தயார் செய்து முடியும் நிலையில் உள்ளது. இதுபற்றிய சுருக்க விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

பாப்பான்கால் கால்வாய் தென்காசி வட்டத்தில் கருப்பாநதியின் இரண்டாவது அணைக்கட்டான பாப்பான்கால் அணைக்கட்டின் இடதுபுறமிருந்து செல்கிறது. 15.4 கி. மீ நீளமுள்ள இக்கால்வாய் சங்கரன் கோவில் வட்டத்திலுள்ள வீரசிகாமணி பெரிய குளத்தில் சென்று முடிகிறது இதன் மூலமாக 12 கிராமங்களில் சுமார் 5369 ஏக்கர் நிலங்கள் பாசனமடைகின்றன. இக்கால்வாய் பல வருடங்களாகவே ஜமீன் மேற்பார்வையில் இருந்ததால் சரிவர பராமரிக்கப்படாமல் பல இடங்களில் தூர் படிந்தும், அரித்தல் ஏற்பட்டும் பழுதடைந்தும் மோசமான நிலையில் உள்ளது. இதனால் இக்கால்வாயின் மூன்றும் மதகுக்கு கீழ் உள்ள பாசன நிலங்களுக்கு சரிவர தண்ணீர் கிடைப்பதில்லை. இக்கால்வாயின் கீழ் உள்ள 16 மதகுகளுக்கும் சரியான கொள்ளளவிற்கு தகுந்தபடி நீர்ப்பாசனம் ஒழுங்குற செய்வதற்காக புனரமைப்பு மற்றும் உள்தளமிடுவதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்படுகின்றன.

பாப்பான்கால் பிரதான கால்வாய் மற்றும் எல்லா கிளை கால்வாய்களையும் புனரமைக்க இம்மதிப்பீடு வகை செய்கிறது. இதன் மதிப்பீடு ரூ. 35,09,000/- என்று கணக்கிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள இதர கால்வாய்களின் ஆய்வு வேலைகள் செய்யப்படவேண்டியுள்ளன.

# பகுதி - 4



## நெல்லை மாவட்டத்தில்
# சிறப்பு சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் பற்றிய அறிக்கை.

**திரு. டி. ஏ. கிருஷ்ணமூர்த்தி,** பி. இ.,
செயற்பொறியாளர், பொ. ப. து.,
தூத்துக்குடி கோட்டம்.

பல பெரிய திட்டங்களான நீர்த்தேக்கம் அமைத்து புதிய கால்வாய் வெட்டி பாசனப் பரப்பு அதிகரிக்கும் பணியைத் தவிர்த்து, பொதுப் பணித்துறையின் மூலம் பல நூற்றுக் கணக்கான சிறப்பு சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2. பல காட்டாறுகளிலும், ஓடைகளிலும் மழைநீர் வீணுவதை புதிய அணைக்கட்டுகள் மற்றும் புதிய கால்வாய்கள் மூலம் புதிய பகுதி களுக்கு நீர்ப்பாசன வசதி விஸ்தரிக்கப்படும் திட்டங்கள் இத்தலைப்பில் இடம் பெறுகின்றன. இதைத்தவிர அணைக்கட்டுகள் கட்டி அதன் மூலம் ஏற்கனவே இருக்கும் கண்மாய்களுக்கும் தண்ணீரை திருப்பிவிடும் திட்டங்களும் உள்ளன, புதிய கண்மாய் அமைக்கும் திட்டங் களும் இத்தலைப்பில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2. 1. இதைத்தவிர பொதுப்பணியைச் சார்ந்த குளங்களிலும், மற்ற ஊராட்சி ஒன்றி யங்களைச் சார்ந்த குளங்களிலும், அவைகளில் கொள்ளளவை உயர்த்தி பதிவு செய்யப்பட்ட ஆயக்கட்டுக்கும். சராசரியாக பயிர் விளைவிக் கப்படும் ஆயக்கட்டுக்கும் இடையே உள்ள பகுதிகளுக்கு நீர்ப்பாசன வசதி அளிக்கும் திட்டங்களும் சிறப்பு சிறு நீர்ப்பாசனத்திட்டங் களின் மூலம் நிறைவேற்றப்படுகின்றன.

3. மேற்படி வேலைகளினல் எவ்வளவு உணவு உற்பத்தி அதிகரிக்கும் என கணக் கிடப்பட்டு அப்படி அதிகரிக்கும் உணவு உற்பத்தியை டன் ஒன்றுக்கு ரூபாய் 3000-க்கு குறைவாக உள்ள எல்லாத் திட்டங்களும் சிக்கன பாசனத் திட்டம் எனக்கருதப்படு கிறது. சிக்கனமல்லாத பாசன் சில திட்டங் களும், அத்தியாவசியமான நேரத்தில் தகுந்த காரணங்கள் இருப்பின் அரசின் அங்கீகாரம் பெற்று செயலாற்றப்படுகின்றன.

4. நெல்லை மாவட்டத்தில் கடந்த ஆண்டுகளில் இத்திட்டங்களின் கீழ் செல விடப்பட்ட தொகை வருவாறு :-

| ஆண்டு | செலவிடப்பட்ட தொகை (லட்சக் கணக்கில்) |
|---|---|
| 1969—,70 | 18.24 |
| 1970—,71 | 18.26 |
| 1971—,72 | 16.49 |
| 1972—'73 | 14 92 |
| 1973—'74 | 19.47 |
| 1974—'75 | 37.42 ஒதுக்கீடு. |

5. தற்போது 23 பெரிய திட்டங்கள் (ஒரு லட்சத்திற்கு மேலே) முன்னேற்றத்தில் உள்ளன. இவைகளைப் பற்றிய சுருக்க விவரம் பின்வருமாறு.

### 1. திருவைகுண்டம் வட்டம்.

**1. மருதூர் மேலக்கால்வாயை திருத்தி அமைத்தல்.**

மருதூர் மேலக்கால்வாய் திருவைகுண்டம் வட்டத்திலுள்ள மருதூர் அணைக்கட்டின் மேற் பகுதியிலிருந்து செல்கிறது. இக்கால்வாயின் நீளம் 13 மைல் 1 பர்லாங்கு ஆகும். இதன் மூலம் 15 குளங்களில் ஆயக்கட்டு உட்பட 12762 ஏக்கர் பாசன வசதி பெறுகிறது.

இக்கால்வாயின் வடிவமைப்பு திட்டமிடப் பட்ட ஒன்றல்ல. இக்கால்வாயிலுள்ள மடை களும், ஆயக்கட்டுகளின் தேவைக்கு அதிக மாகவே நீர்வழங்கும் அளவுடையது. எனவே, புனரமைப்புத் திட்டத்தின் கீழ் இக்கால்வாயி லுள்ள 25 மடைகளை திருத்தியமைத்து கட்ட லும், மடைகளின் நீர் ஏற்றத்திற்கு வடிவமைப் புச் சுவர் கட்டலும் செய்யப்படவேண்டும்.

மடைகளைத் திருத்தியமைத்துக் கட்டலும், வடிவமைப்புச் சுவர் கட்டுதலும் முடிவடைந்துள்ளன. கால்வாயின் நீர்மட்டத்தை சரிசெய்தலும், கால்வாயை வடிவமைப்புக் கொண்டு வருதலும் செய்யப்படவேண்டும். ஆனால் நாளொன்றுக்கு 20 மி. க. அடி திட்டத்தின் கீழ் இக்கால்வாய், தளங்களும், பக்கங்களும் சிமெண்ட் காங்கிரீட் லைனிங் செய்யப்பட்டு வருவதால், மீதமுள்ள வேலைகள் தேவையா என்பதை இவ்வேலை முடிவுற்றதும் ஆய்ந்து செய்யப்படவேண்டும்.

**2. மருதூர் கீழக்கால்வாயை திருத்தியமைத்தல்.**

மருதூர் கீழ்க்கால்வாய், திருவைகுண்டம் வட்டத்திலுள்ள மருதூர் அணைக்கட்டின் கீழ்ப் பகுதியிலிருந்து செல்கிறது இக்கால்வாயின் நீளம் 10 மைல் 284 அடியாகும் இதன் கீழுள்ள குளங்களின் ஆயக்கட்டை சேர்த்து 7785 ஏக்கர் இக்கால்வாய் மூலம் பாசன வசதி பெறுகிறது.

இக்கால்வாயின் வடிவமைப்பு, மடைகளின் அளவு இவைகள் திட்டமிடப்பட்டு கட்டப்பட்ட ஒன்றல்ல. எனவே நீர் வீணாவதைத் தடுக்க, இக்கால்வாயின் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் 28 மடைகளை திருத்தியமைத்து கட்டுதலும், மடைகளின் நீர் ஏற்றத் திறனை கூட்ட, வடிவமைப்புச் சுவர்கட்டுதலும் கால்வாயின் வடிவமைப்புச் சீர் செய்தலுமாகும்.

இக்கால்வாய் 25 மடைகளை திருத்தி அமைக்கப்பட்டு கட்டப்பட்டன 18 வடிவமைப்புச் சுவர்கள் கட்டப்பட்டன. நீர் வாட்டத்தை சரி செய்தலும் கால்வாயை வடிவமைப்புக்கு கொண்டு வருதலும் செய்யப்படவேண்டும். ஆனால் நாளொன்றுக்கு 20 மி. க. அடி திட்டத்தின் கீழ் இக்கால்வாயின் தளமும், பக்கங்களும், சிமெண்ட் காங்கிரீட் லைனிங் செய்யப்பட்டு வருவதால் மீதமுள்ள வேலைகள் தேவையா என்பதை இவ்வேலை முடிந்ததும் ஆய்ந்து செய்யப்படவேண்டும்.

**3. கால்வாய் கண்மாயிலிருந்து சடையநேரி கண்மாய்க்கு கூசல்வாய் வெட்டுதல்:-**

தாமிரபரணி ஆற்றின் கடைசி அணையான திருவைகுண்டம் அணைக்கட்டின் கீழே வெள்ளக் காலங்களில் உபரியாகத் தண்ணீர் அணை தெத்தி வீணாகச் சென்று கடலில் கலக்கின்றது. அதை மருதூர் மேலக் கால்வாயின் பாசனக் குளமான கால்வாய் குளத்திலிருந்து புதிதாக ஒரு தலைமதகு அமைத்து அங்கிருந்து 21 கி. மீ. தூரத்திற்கு ஒரு புதிய வாய்க்கால் அமைத்து சாத்தான்குளம் பகுதியிலுள்ள சடையநேரி குளத்திற்கு திருவைகுண்டம் அணைக்கட்டில் நீர்த் தெத்தி செல்லும் தருணத்தில் இந்த உபரித் தண்ணீரை திருப்பி கொண்டு செல்வதாகும். இத்திட்டத்தின் கீழ் 13 மானாவாரி குளங்களின் (1) அதகா குளம் (2) செங்குளம் (3) மருதன் குளம் (4) அய்யனூர் குளம் (5) ஏழுவரைமுக்கி பெட்டைகுளம் (6) குருந்தன்குளம் (7) சம்பாடிகுளம் (7) நகரி குளம் (9) செம்மரிகுளம் (10) நொச்சிகுளம் (11) சடையநேரிகுளம் கீழுள்ள 632 ஏக்கர் பரப்பும், கால்வரத்து குளங்களின் (1) தென்கரை (2) நொச்சிகுளம் (3) கீழப்புதுக் குளம் (4) முதலைமொழி குளம் (5) வெள்ளரிக் காலூரணி (6) தேமான் குளம் ஆகியவற்றின் கீழுள்ள 3724 ஏக்கர் பரப்பும் பயனடையும்.

கால்வரத்துக் குளங்களுக்கு கார் பயிரிடும் காலததில் தென்கரையின் கீழுள்ள குளங்களுக்கு தண்ணீர் வழங்க வெள்ளரிகுளம், தென்கரை குளம் ஆகியவற்றை நிரப்பிய பின்னரே, கீழ்க் குளங்களுக்கு நீர் வழங்க இயலும். இதனால் இக் கீழ் குளங்களில் கார் பயிரிடுதல் காலதாமதப்படுகிறது. இத்திட்டத்தில் வெட்டப்படும் புதிய கால்வாயிலிருந்து இக்குளங்களுக்கு தனி ஊடுக் கால்வாய் அமைக்க இருப்பதால், தக்க தருணத்தில் இக் குளங்களில் பயிரிட காலத்தே தேவையான குறைந்த அளவு நீர் வழங்க இயலும். மேலும் இத்திட்டத்தால் பயனடையும் 13 மானாவாரி குளங்களில் சாந்தான்குளம் வறண்ட பகுதி செழிப்படையும், கால்வெட்டும் வேலையும் குறுக்கீடு கட்டுமான வேலைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

## 2. திருச்செந்தூர் வட்டம்:

**4 பள்ளிபத்து கிராமத்தில் பெட்டைகுளத்தை புனரமைத்தல் :-**

திருச்செந்தூர் வட்டத்திலிருக்கும் பெட்டைக்குளம் மோசமான நிலையில் உள்ளது. எனவே அதை நல்ல நிலைமைக்கு கொண்டுவர மதிப்பீடு தயாரிக்கப் பட்டுள்ளது. அரசு ஆணை எண். 769 பொ. ப. து.

நாள்:- 13—6—1974ல் ரூபாய் 2.11 லட்சத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது இந்த திட்டம் நடைபெறுவதினால் 88 ஏக்கர் நிலப்பரப்பு பயனடையும் அதனால் 70 டன் கூடுதல் உணவு உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது வேலை ஆரம்பிக்கும் நிலையில் உள்ளது.



**5 புத்தன்தருவை வடிநீர் திட்டம் நிலை 1:-**

திருச்செந்தூர் வட்டத்தில் புத்தன் தருவை வடிகால்திட்டத்தின் முதல்கட்டமாக இடையன்குடி கிராமத்தின் அருகே ஒரு புதிய கண்மாய் அமைக்க ரூ. 7.898 லட்சத்திற்கு மதிப்பீடு பிரதமப் பொறியாளர் (பாசன) அவர்களால் அங்கீகரிக்கப்பட்டது.

இத்திட்டத்தின்படி சுமார் 2900 மீட்டர் நீளமுள்ள மண்கரை அமைக்கப்படும். இக் கண்மாயின் கொள்ளளவு 48 மீ. கன அடியாகும். இத்திட்டத்தால் 110 ஏக்கர் நிலம் பாசன வசதிபெறுவதுடன் சுமார் 988 ஏக்கர் நிலம் தண்ணீர் தேக்கத்திலிருந்து விடுபடும். இக்கண்மாய் அமைக்க 224 ஏக்கர் பட்டா நிலமும் 15 ஏக்கர் புறம்போக்கு நிலமும் ஆர்ஜிதம் செய்யப்படும். இத்திட்டத்தால் 311 டன் கூடுதல் உணவு உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது.

**6 கடம்பாகுளத்தின் புறையூர் தலைமதகில் கூடுதலாக மடைஅமைத்தல் :-**

கடம்பாகுளமும்; அதன்கீழுள்ள 12 குளமும், திருவைகுண்டம், தென்கால்வாய் மூலம் பாசன வசதிபெறுகிறது. கடம்பா குளத்தின் கொள்ளளவு 338 40 மி. க. அடியாகும். இதன் கீழ் பயனடையும் ஆயக்கட்டு 2285 ஏக்கர். புறையூர் கால்வாய் இக்குளத்தின் கீழ்ப்பகுதியிலிருந்து ஆரம்பிக்கின்றது. இதன் மூலம் 12 குளங்கள் பாசன வசதிபெறுகிறது இதன் பரப்பு 6161 ஏக்கர் ஆகும் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் காலங்களில் கீழ் குளங்களுக்கு நீர் வழங்க இப்பெரிய குளத்தை நிரப்ப வேண்டியுள்ளது. இதனால் கீழ் குளங்களுக்கு தேவையான நீரை உரிய காலத்தில் வழங்க இயலவில்லை. எனவே புறையூர் தலைமதகில் தற்போதுள்ள 4 மடைவாய்களைப்போல் கூடுதலாக அமைப்பதால், தண்ணீர் தட்டுப்பாடான நேரங்களில் ஓரளவு கூடுதலாக நீர் வழங்க இயலும். மேலும் புறையூர் கால்வாயை அகலப்படுத்துவதில் குறுகிய காலத்தில் கீழ் குளங்களுக்கு நீர் கொண்டுசெல்ல இயலும். இவ்வேலை தற்போது துவங்கப்பட்டுள்ளது.

## 3. நாங்குநேரி வட்டம்

**7 படலையார்குளம் மற்றும் வரத்துக் கால்வாயை முன்னேற்றப் பணி செய்தல்**

இத்திட்டத்தின் மூலம் படலையார் குளம், கேசவனேரி குளம் ஆகியவைகளின் முழு நீர் மட்டங்களை உயர்த்தி அதன்மூலம் குளங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள 709·75+268·37 ஏக்கர் நிலங்களை பயனடைய செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். திட்டமதிப்பீடு தொகை ரூபாய் 1·04 லட்சம். இத்திட்டத்தின் மூலம் கிடைக்கப்பெறும் அதிக உணவு உற்பத்தி 488 டன்களாகும். தேவையான வேலைகள் எல்லாம் முடிவடைந்துவிட்டன. அடைப்புப் பலகைகள் பொருத்தப்படவேண்டும்.

**8 சுவிசேசபுரம் அருகே புதிய கண்மாய் அமைத்தல்**

விஜயநாராயணம் குளத்தின் ஆயக்கட்டு வழியாக வரும் வடிநீர்காலையும் மற்றும் அதன் கீழ் உள்ள குளங்களின் மறுகாலின் குறுக்கே கண்மாய் ஒன்று அமைத்து 114 ஏக்கர் ஆயக்கட்டு நிலத்தை பயனடையச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும் திட்டமிட்டுள்ள குளத்தின் கொள்ளளவு 10 மி.க. அடி. இத்திட்டத்தின் மூலம் கிடைக்கப்பெறும் அதிக உணவு உற்பத்தி 72 டன்களாகும். மதிப்பீடு தொகை ரூ. 2·08 லட்சம்.

**9 ஆலத்துறையார் தண்ணீரை அனுமாநதிக்கு திருப்பி விடுதல். மதிப்பீட்டுத் தொகை ரூ 19 85 லட்சம்.**

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டத்திலுள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகும் ஆலத்துறையாற்றின் கூடுதலான வெள்ளப் பெருக்கை, நாங்குனேரி வட்டம் பணகுடி பகுதிக்கு திருப்பி அனுமாநதியின் கீழ் உள்ள அணைக்கட்டுகள் மூலம்,

இராதாபுரம் துணைத் தாலுகாவில் 48 குளங்களும், காவல்கிணறு பகுதிகளில் 6 குளங்களும் சேர்த்து 2650 ஏக்கர் ஆயக்கட்டு நிலங்களின் பாசனம் உறுதி படுத்தவும், 365 ஏக்கர் பாசன நிலங்களின் விளைச்சலின் இடைவெளியை நிரப்பவும் இத் திட்டம் வகை செய்கிறது இத் திட்டத்தின் மூலம் கிடைக்கப் பெறும் கூடுதல் உணவு உற்பத்தி 1616 டன்கள்.

மேற்படி திட்ட வேலைகளை மேற்கொள்வதற்கான ஒப்பந்தக்காரர்கள் நியமிக்கப்படும் தருவாயில் உள்ளது. ஒப்பந்தக் காரர்கள் நியமிக்கப்பட்டவுடன் திட்ட வேலைகள் தொடங்கப்படும்.

4. விளாத்திகுளம்:—

10. எல். வெங்கடேசபுரம் அருகே புதிய கண்மாய் அமைத்தல்:—

விளாத்திகுளம் வட்டம் எல். வெங்கடேஸ்வர புரம் கிராமத்தின் அருகே ஒரு புதிய கண்மாய் அமைப்பதற்கு ரூ. 3,18,000/க்கு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டது. இத்திட்டப்படி சுமார் 1900 மீ. நீளமுள்ள மண்கரை அமைக்கபடும். இக் கண்மாயின் கொள்ளளவு 15.2 மி க. அடியாகும். இக் கண்மாய் அமைக்க சுமார் 78.75 எக்கர் பட்டா நிலம் ஆர்ஜிதம் செய்யப்படும் இத்திட்டத்தால் 173 ஏக்கர் நிலம் பாசன வசதியடைகிறது 138 டன் கூடுதல் உணவு உற்பத்தி பெருகும்.

11. வைப்பாற்றின் குறுக்கே ஆத்தங்கரை அருகில் அணைக்கட்டு கட்டுதல்:—

ரூபாய் 24 லட்சம் செலவில் ஆத்தங்கரை கிராமத்தில் வைப்பாற்றின் குறுக்கே ஒரு அணைக்கட்டுவதற்கு மதிப்பீடு அங்கீகரிக்கப் பட்டுள்ளது. இத் திட்டம் இரண்டு கட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

முதல் கட்டம்:—

1. 1100 அடி நீளம் ஒரு அணை கட்டுதல்.
2. விளாத்திகுளம் வரத்துக் கால் சீரமைத்தல்.
3. விளாத்திகுளம் கண்மாயிலிருந்து தத்தநேரி குளத்திற்கு வாய்க்கால் வெட்டுதல்.
4. தத்தநேரியிலிருந்து மேல் மாந்தைக்கு கால்வாய் வெட்டுதல்.
5. வெள்ளத் தடுப்பு கரை அமைத்தல்.

இரண்டாவது கட்டம்:

1 இத்திட்டத்தினுல் பயனடையும் ஒன்பது குளங்களுக்கு கால்வெட்டுதல்.

2 இத்திட்டத்தினுல் பயனடையும் பத்து குளங்களை சீரமைப்பு செய்தல்.

இத்திட்டத்தால் சுமார் 1946ஏக்கர் பழைய ஆயக்கட்டு நிலங்களும், 303·41 ஏக்கர் புது நிலங்களும் பாசன வசதி பெறும். இதனுல் 1380 டன் கூடுதல் உணவு உற்பத்தி கிடைக்கும்.

## 5. கோவில்பட்டி வட்டம்

12 சிந்தலக்கரை கிராமத்தின் அருகே புதிய கண்மாய் அமைத்தல்

கோவில்பட்டி வட்டம் சிந்தலக்கரை கிராமத்தின் அருகே ஒரு புதிய கண்மாய் அமைக்கும் திட்டத்திற்கு ரூபாய் 3,55 300/-க்கு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி 1800 மீ. நீளமுள்ள மண்கரை அமைக்கப்படும். கண்மாயின் கொள்ளளவு 25·3 மி. க. அடியாகும். இக்கண்மாய் அமைக்க 157 ஏக்கர் பட்டாநிலமும் 38 42 ஏக்கர் புறம்போக்கு நிலமும் ஆர்ஜிதம் செய்யப்படும். இக்கண்மாயில் 253 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுவதுடன் 126·5 டன் கூடுதல் உணவு உற்பத்திபெருகும்.

13 இராமச்சந்திரபுரம் கிராமத்தின் அருகே புதிய கண்மாய் அமைத்தல்.

விளாத்திகுளம் வட்டம் இராமச்சந்திரபுரம் கிராமம் அருகே ஒரு புதிய கண்மாய் அமைப்பதற்கு ரூ. 8.80 லட்சத்திற்கு ஒரு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டப்படி சுமார் 3600 மீட்டர் நீளமுள்ள ஒரு மண்கரை அமைக்கப்படும். இக்கண்மாயின் கொள்ளளவு 38·71 மி. க. அடியாகும். இக்கண்மாய் அமைக்க 313·45 ஏக்கர் பட்டாநிலமும் 33·88 ஏக்கர் புறம்போக்கு நிலமும் ஆர்ஜிதம் செய்யப்படும். இத்திட்டத்தால் 437 ஏக்கர் பாசனம் பெறுவதுடன் 299 டன் கூடுதல் உணவு உற்பத்தியும் கிடைக்கும்.



14 அழகப்பபுரம் கிராமத்தின் அருகே ஒரு புதிய கண்மாய் அமைத்தல்.

கோவில்பட்டி வட்டம், அழகப்பபுரம் கிராமத்தின் அருகே ஒரு புதிய கண்மாய் அமைக்கும் வேலைக்கு ரூ. 2 45 லட்சத்திற்கு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டது.

இத்திட்டத்தின்படி சுமார் 1950 மீட்டர் நீளத்தில் ஒரு மண்கரை அமைக்கப்படும். இக்கண்மாயின் கொள்ளளவு 24·36 மில்லியன் கன அடி. இக்கண்மாய் அமைக்க 95·40 ஏக்கர் பட்டாநிலமும் 23 ஏக்கர் புறம்போக்கு நிலமும் ஆர்ஜிதம் செய்யப்படும். இத்திட்டத்தின் கீழ் 138 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுவதுடன் 107 டன் கூடுதல் உணவு உற்பத்தி பெருகும்.

15 புதுச்சின்னையாபுரம் அருகே ஒரு புதிய கண்மாய் அமைத்தல்

புதுச்சின்னையாபுரம் கிராமத்தின் அருகே ஒரு புதிய கண்மாய் ஆமைக்க ரூ, 5.80 லட்சத்திற்கு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி சுமார் 2650 மீ. நீளமுள்ள ஒரு மண்கரை அமைக்கப்படும். இக்குளத்தின் கொள்ளளவு 32.5 மி. க. அடியாகும் இக்குளம் அமைக்க 211 ஏக்கர் பட்டா நிலமும் 47 ஏக்கர் புறம்போக்கு நிலமும் ஆர்ஜிதம் செய்யப்படும். இத்திட்டத்தால் 372 ஏக்கர் நிலமும் பாசன வசதி பெறும், மேலும் 213 டன் கூடுதல் உணவு உற்பத்தி பெருகும்,

16 ஆதனூர் கிராமத்தில் பஞ்சந்தாங்கி குளத்தை திருத்தி அமைத்தல்

கோவில்பட்டி வட்டம் ஆதனூர் கிராமத்திலுள்ள பஞ்சந்தாங்கி கண்மாய் புனரமைப்பு செய்ய ரூ. 2.05 லட்சம் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

இத்திட்டத்தால் 141.36 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். அதனுல் 113 டன் கூடுதல் உணவு உற்பத்தி பெருகும்.

17 எப்போதும்வென்றான் கிராமத்தில் மலட்டாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்தல்

மலட்டார் ஓடையின் குறுக்கே எப்போதும் வென்றான் கிராமத்தின் அருகே 128 மி. க. அடி கொள்ளளவு உள்ள நீர்த்தேக்கம் கட்டுவதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசு ஆணை 793 பொ. ப. து. நாள் 15—6—1974இல் ரூ. 18.33 லட்சத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் செயல்முறையில் வந்தால் 1099 ஏக்கர் நிலப்பரப்பு பயனடையும். அதனுல் 772 டன் கூடுதல் உணவு உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வேலை ஆரம்பிக்கும் நிலையில் உள்ளது.

18 துறையூர் கிராமத்தில் மலட்டார் ஓடையின் குறுக்கேயுள்ள அணைக்கட்டை மேம்பாட்டு செய்தல்

மலட்டார் ஓடையில் துறையூர் கிராமத்தின் அருகே ஏற்கனவே கட்டப்பட்டுள்ள அணைக்கட்டு மோசமான நிலையில் இருப்பதால் அதை மேம்பாடு செய்ய மதிப்பீடு தயாரிக்கப் பட்டு அரசு ஆணை 770 பொ. ப. து. 13–6–74ல் ரூ. 1.89 இலட்சத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தினுல் சம்மாபுதூர் குளமும் அதன் கால்வாயும் மேம்பாடு செய்யப்படும். இத்திட்டம் செயல்முறையில் வந்தால் 311 ஏக்கர் நிலப்பரப்பு பயனடையும். அதனுல் 211 டன் கூடுதல் உணவு உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வேலை ஆரம்பிக்கப்படும் நிலையில்உள்ளன.

## 6 அம்பாசமுத்திரம் வட்டம்.

19 கன்னடியன் கால்வாயை திருத்தி அமைத்தல். மதிப்பீடு ரூ. 5.5 லட்சம்.

கன்னடியன் கால்வாய், அம்பாசமுத்திரம் வட்டம், கல்லிடைக்குறிச்சி ஊர் அருகில் இருக்கும் கன்னடியன் அணைக்கட்டிலிருந்து செல்கிறது. இக்கால்வாயின் நீளம் 21 மைல் 1 பர்லாங்கு ஆகும். இதன் மூலம் 16 குளங்களின் ஆயக்கட்டு உட்பட 11779 ஏக்கர் பாசன வசதி பெறுகிறது.

இக்கால்வாயின் வடிவமைப்பு திட்டமிடப் பட்டு கட்டப்பெற்றதல்ல. மடைகளின் அளவும் ஆயக்கட்டின் தேவைக்கதிகமாக நீர் வழங்கக் கூடியதாக உள்ளன. இதனுல் நீர் விரையமாகிறது. எனவே புனரமைப்புத்திட்டத்தின் கீழ் இக்கால்வாயிலுள்ள 203 மடைகளை குறைத்து 176 மடைகளாக கட்டுதலும், 54

வடிவமைப்புச் சுவர்கள் கட்டுதலும், கால்வாய் நீர் வாட்டத்தையும், வடிவமைப்பைச் சீர் செய்தலும் ஆகும்.

இத்திட்டத்தின் கீழ் மடைகளை திருத்திக் கட்டப்பட்டன. வடிவமைப்புச் சுவர்களும், கால்வாயை சீர் செய்தலும் முடிக்கப் பெற்றுள்ளன.

## 7 சங்கரன்கோவில் வட்டம்.

**20 ஊத்தன்குளம் கிராமத்தின் அருகில் புதிய கண்மாய் அமைத்தல்.**

ஈச்சந்தா பெரிய குளத்திற்கு வரும் வரத்துக்காலில் (காட்டோடை) மழை காலங்களில் எஞ்சிவரும் அதிக நீரை தேக்கிவைத்து புதிய கண்மாய் அமைத்து 48 ஏக்கர் ஆயக்கட்டு நிலத்தை பயனடைய செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இக்கண்மாயின் கொள்ளளவு 4.79. மி. க. அடி. இதனால் கிடைக்கப் பெறும் அதிக உணவு உற்பத்தி 29.4 டன்களாகும். மதிப்பீடு தொகை ரூ. 1.10 லட்சம். 99% வேலைகள் முடிவடைந்துவிட்டன மீதமுள்ள வேலையையும் மற்றும் தேவையான சிறிய வேலைகளையும் செய்வதற்கு வேண்டிய நடிவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**21 மைப்பாறை கிராமத்தின் அருகில் புதிய கண்மாய் அமைத்தல் :-**

சங்கரன்கோவில் தாலுகாவை சார்ந்த மைப்பாறைகிராமத்தின் அருகே, உப்போடையின் குறுக்கே கண்மாய் ஒன்று அமைத்து, 127 ஏக்கர் ஆயக்கட்டு நிலத்தை பயனடையச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதனால் கிடைக்கப்பெறும் அதிக உணவு உற்பத்தி 55 டன்களாகும். மதிப்பீடு தொகை ரூ. 1.16 லட்சம். 96% வேலைகள் முடிவடைந்துவிட்டது. மீதமுள்ள வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருகின்றன.

## 8. தூத்துக்குடி வட்டம்

**22 கோரம்பள்ளம் உபரிதண்ணீர் வாய்க்காலில் இரு மருங்கிலும் வெள்ளத் தடுப்பு அணை அமைத்தலும், பலப்படுத்தலும், நி. வே. 0.12000.**

தூத்துக்குடி அருகாமையில்உள்ள கோரம்பள்ளம் குளத்திலிருந்து உபரி நீர் செல்லும் வடிகாலில் வெள்ளம் வரும்போது இரு கரைகளையும் மீறி வெள்ளம் பாய்கிறது. பக்கத்தில் உள்ள நிலங்களை முறியடிக்கிறது. ஆகையால் வடிகாலின் இருகரைகளையும் உயர்த்தி வெள்ளம் இருமருங்கிலும் நெருங்காதபடி தடுக்கும் நோக்கத்துடன் இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் தற்போது பகுதிவேலை நடந்துள்ளது. மீதிவேலைகள் நடந்து வருகின்றன இந்த வேலையின் திருத்திய மதிப்பீடு ரூ. 12.20 லட்சம். அரசு அனுமதி அளித்துள்ளது.

**23 சாஸ்தாவிநல்லூர் தருவையை நீர்மூழ்கும் பகுதியிலிருந்து தடுத்தல்.**

சாஸ்தாவிநல்லூர் தருவையில் சுமார் 480 ஏக்கர் பயிர் நிலப்பரப்பில் தேங்கியுள்ள தண்ணீரை சாஸ்தாவிநல்லூர் தருவையிலிருந்து கந்தன்கோட்டை தருவைக்கு ஒரு வடிகால் வெட்டி கருமேனிஆற்றில் விடுவதுதான் இத்திட்டமாகும். இதற்காக ரூ. 1.25 லட்சத்திற்கு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டது.

இந்த வாய்க்காலின் அகலம் 1'50 ஆழம் 4' 6. இந்த வாய்க்காலின் மூலம் தருவையில் தேங்கும் தண்ணீரை சுமார் ஏழு நாட்களில் வடிக்க முடியும். இத்திட்டத்தால் சுமார் 480 ஏக்கர் நிலங்கள் பயன் அடைவதுடன் 44.25 டன் கூடுதல் உணவு உற்பத்தியும் பெருகும்.

6. மேலே குறிப்பிட்ட திட்டங்களைத் தவிர 120 சிறிய வேலைகள் தற்போது நடைபெற்று வருகிறது. இவைகளின் மொத்த மதிப்பீடுத் தொகை ரூ. 21.19 லட்சம்.

| | |
|---|---|
| பயனடையும் பரப்பு | 8020 ஏக்கர் |
| உணவு உற்பத்தி | 3656 டன் ஆகும். |



# ஆத்தங்கரை அணைக்கட்டுத் திட்டம்.

மீ. வெங்கடசுப்பிரமணியன்,
உதவிப் பொறியாளர்.

**தோற்றம் :-**

தமிழகத்திலுள்ள பெரிய ஆறுகளில் வைப்பாறும் ஒன்று எனக் கூறலாம். இதன் வடிகால் பரப்பு சுமார் 1900 சதுர மைல் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. எனினும் இந்நதி சரியான முறையில் பயன்படுத்தப்பட முடியவில்லை. இதற்கான காரணம் இந்நதியின் அதிகமான வடிகால் பரப்பு சமவெளியில் அமைந்துள்ளதே. ஆனாலும் மழைக் காலத்தில் இந்நதியில் அதிகமான அளவில் வெள்ளம் செல்லும். வைப்பாறின் குறுக்கேயுள்ள விளாத்திக்குளம் தாம்போதியில் 1964-65-ம் வருடத்தில் கணக்கெடுத்ததில் வருடத்திற்கு 34760 லட்சம் கனஅடி தண்ணீர் கடலில் வீணாய்போய் சேருகிறது எனத் தெரிய வந்தது. மேற்படி வீணாகும் நீர்வளத்தை பயன்படுத்தும் முறையில் விளாத்திக்குளம் வட்டத்தைச் சேர்ந்த மக்கள் ஆத்தங்கரை கிராமம் அருகே வைப்பாற்றின் குறுக்கே ஓர் அணை கட்டவேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தனர். திட்டத்தின் சாத்தியக் கூறுபாடு ஆய்வு செய்யப்பட்டு தகுந்த பயனுள்ள திட்டம் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. பசுமைப் புரட்சிமூலம் நாட்டில் உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என அக்கரையுள்ள தமிழக அரசு இந்த சிறிய நீர்ப்பாசனத் திட்டத்திற்கு தன்னுடைய ஆணை எண். 1851 பொ. ப. து. நாள் 14—9—70-ல் ரூ. 22.56 லட்சத்திற்கு ஒப்புதல் வழங்கியது.

**முதல் கட்டம் :-**

1. வைப்பாற்றின் குறுக்கே ஆத்தங்கரை கிராமத்தின் அருகே ஒரு காங்ரீட் அணைக்கட்டு 1100 அடி நீளத்திற்கு எழுப்பப்பட்டு அதன் மூலம் 5400 லட்சம் கனஅடி நீரை திருப்பி ஏற்கனவே இருக்கும் விளாத்திக்குளம் வரத்துக் கால்வாய் மூலம் விளாத்திக்குளம் கண்மாய்க்கு கொண்டு சென்று பின் அங்கிருந்து மேலும் 12 கண்மாய்களுக்கு நீர் வினியோகிக்கப்படும். அணைக்கட்டு இடத்தில் வெள்ளப்பெருக்கு விநாடிக்கு 91066 கனஅடி எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

2. தலைமதகு தவிர புதிதாக வடிகால் மதகுகள் கட்டப்படும்

3. வெள்ளத் தடுப்பு கரை அணைக்குமேல் 1400 மீட்டர் நீளத்துக்கு இரு கரையிலும் அணைக்கு கீழே 400 மீ. நீளமும் அமைக்கப்படுகிறது.

4. ஏற்கனவே உள்ள விளாத்திகுளம் வரத்துக் கால்வாய் (7400 மீ.) அகலப்படுத்தப்பட்டு சீரமைப்பு வேலைகள் செய்யப்படும்.

5. விளாத்திகுளம் கண்மாயிலிருந்து தத்தநேரி கண்மாய்க்கு 8700 மீ. நீளம் உள்ள புதிய கண்மாய் அமைக்கப்படும்.

6. தத்தநேரியிலிருந்து மேல்மாந்தை கண்மாய்க்கு 5700 மீ. நீளமுள்ள ஓர் புதிய இணைப்புக் கால்வாய் வெட்டப்படும்.

இவ்வேலைகளின் மதிப்பு ரூ. 17.80 லட்சம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

**இரண்டாம் கட்டம்:**

இத்திட்டத்தினால் பயன் பெறும் அடியிற் கண்ட 13 குளங்களில் 10 கண்மாய்களை செப்பனிட்டு, அவைகளுக்கு தனித்தனியாக புதிய இணைப்புக் கால்வாய்கள் அமைத்து வைப்பாற்றின் உபரி தண்ணீரைத் திருப்ப வேலைகள் மேற்கொள்ளப்படும்.

1. விளாத்திகுளம் கண்மாய்
2. தத்தனேரி குளம்
3. மேல்மாந்தைக் குளம்
4. மொட்டையனந்தல் குளம்
5. வேப்பன் குளம்
6. சம்பாகுளம்
7. எம். செங்குளம்
8. இனாம் நொச்சிகுளம்
9. பொய்யான்குளம்
10. வி. செங்குளம்
11. கலைக்குட்டம் குளம்
12. பல்லா குளம் மேற்கு குளம்
13. பல்லாகுளம் கிழக்கு குளம்.

இவ்வேலைகளுக்கு 6.20 லட்சம் ரூபாய் செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**முன்னேற்றம்:-**

அணைக்கட்டு வேலைகள் 7/72ல் ஆரம்பிக்கப் பட்டு அனேகமாக முடியும் தருவாயில் உள்ளது. இடதுகரை இணைப்பு வேலைகள், வடிகால் மதகு வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. வெள்ளத் தடுப்பு வேலைகள் 75 சதவிகிதம் முடிந்துள்ளன. விளாத்திகுளம் வரத்துக் கால்வாய் சீர்படுத்தப் பட்டுள்ளது. தத்தனேரி மேல்மாந்தை கால்வாய் வேலைகள் மும்முரமாக நடந்து 80 சதவிகிதம் முடிந்துள்ளன.

முதல் கட்டத்தில் 75 சதவிகிதம் வேலைகள் முடிவடைந்துள்ளன. வரும் வடகிழக்கு பருவத்தில் நீர் கண்மாய்களுக்கு திருப்பிவிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டாவது கட்ட வேலைகள் துவக்கப்பட்டு நடந்துவருகின்றன.

**பயன்கள்:-**

இத்திட்டத்தினல் மொத்தம் 2249 ஏக்கர் நிலப் பரப்பு பயனடையும். உறுதிப்படுத்தப்பட்ட ஆயக் கட்டு 11929 ஏக்கர் புதிதாக பாசனத்துக்கு கொண்டு வரப்படும். விஸ்தீரணம் 303 ஏக்கர். நிறைவு படுத்தப்பட்ட பகுதி 754 ஏக்கர். இந்நிலங்கள் வறண்ட பகுதியான விளாத்திகுளம் வட்டத்தில் உள்ளன. எதிர்பார்க்கப்படும் அதிக அளவு உணவு உற்பத்தி திறன் 1380 டன் ஆகும். செலவு டன் ஒன்றுக்கு 1815/- ரூபாய் எனக் கணக்கிடப் பட்டுள்ளது.

**செலவினங்கள்:-**

இத்திட்டத்திற்கு செலவிடப்பட்டுள்ள தொகை விவரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1971—72ல் | — | ரூ. 1,36,300 |
| 1972—73ல் | — | ரூ. 3,70,683 |
| 1973—74ல் | — | ரூ. 8,98,819 |
| 1974—75ல் 6/74 வரை | — | ரூ. 89,236 |
| | | ரூ. 14,95,038 |

**பொருள்:-** இத்திட்டத்தை விளக்கும் வரை படம் ஒன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.



# பொதுப்பணித்துறை.

திருநெல்வேலிக் கோட்டம். திருநெல்வேலி—கன்னியாகுமரி வட்டம்.

## ஆலத்துறையாறு திட்டம்.

**திரு. எம். எஸ். செல்லமுத்து,**
செயற்பொறியாளர், பொ. ப. து.,
திருநெல்வேலி கோட்டம்.

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டத்திலுள்ள, மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகும் ஆலத்துறையாற்றின் கூடுதலான வெள்ளப் பெருக்கை, நாங்குனேரி வட்டம் பணகுடிப்பகுதிக்கு திருப்பப்பட்டு அனுமாநதியின் கீழ் உள்ள ஆறு அணைக்கட்டுகளின் மூலம் பாசனத்திற்குப் பயன்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். ஆலத்துறையாற்றின் தண்ணீர் பங்கீடு குறித்து 1912-ம் வருடத்தில் திருவிதாங்கூர் மாநிலத்திற்கும், சென்னை மாநிலத்திற்கும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதற்கான அறிகுறிகள் தற்போது காணப்படும் கலிசாம்பான் அணைக்கட்டாகும். ஆலத்துறையாற்றின் தண்ணீர் 50 சதவீதம் மேற்குத் தொடர்ச்சி மலையின் கீழ் பகுதிக்கு அனுமா நதியின் தற்போதைய ஆயக்கட்டுகளுக்குப் பயன்படுத்துவதற்காக இச்சமர் அணையின் வகைசெய்யப்பட்டுள்ளது. 112 மில்லியன் கனஅடி தண்ணீர் ஆலத்துறையாற்றிலிருந்து திருப்புவதற்காக திட்டமிடப்பட்டுள்ளது.

ஆலத்துறையாற்றின் தண்ணீரைப் பங்கீடு செய்வது குறித்து கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரும், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரும், இருவருமாக பொதுப்பணித் துறையினரால் ரூ. 19·85 லட்சத்திற்குத் தயாரிக்கப்பட்ட திட்டத்திற்கு ஒப்புதலளித்து அரசினரால் அரசு ஆணை எண். 526, பொ. ப. து. நாள்: 24—4—1974ல் ரூ. 19·85 லட்சத்திற்கு மேற்படி திட்டத்தை நிறைவேற்றுவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**இத்திட்டத்தின் பல்வேறுபட்ட உட்பிரிவுகள் கீழ்க்கண்டவாறு நிறைவேற்றப்பட இருக்கின்றன.**

1 கலிசாம்பனூரின் குறுக்கே அணைக்கட்டு கட்டுதல்.

2 கலிசாம்பனூரின் அணைக்கட்டிலிருந்து பணகுடி மலைப்பகுதியிலுள்ள சூருவளி ஓடை வரை புதிய கால்வாய் வெட்டுதல்.

3 சூருவளி ஓடையின் குறுக்கே, சிவன் பிள்ளை அணைக்கட்டின் மேல் பகுதியில் அணைக்கட்டு கட்டுதல்.

4 சூருவளி ஓடை அணைக்கட்டிலிருந்து அனுமா நதிக்கு (சிவன்பிள்ளை அணைக்கட்டிற்கு மேல் பகுதி) புதிய வாய்க்கால் வெட்டதல்.

**5. அனுமாநதியின் மேல் பகுதியிலுள்ள தற்போதைய அணைக்கட்டுகளுக்கும், கால்வாய்களுக்கும் அபிவிருத்தி மேற்கொள்ளல்.**

இத்திட்டத்தினால் ராதாபுரம் பகுதியிலுள்ள கீழ்க்கண்ட குளங்களின் ஆயக்கட்டுகள் பயன்பெறும்.

1. பரிவிரியசூரன் குளம்.
2. நாகரைக் குளம்.
3. சன்னரநேரிக் குளம்.
4. மாணுமாரியன் குளம்.
5. வீரபாண்டிய குளம்.
6. பெட்டை குளம்.
7. கைக்குளம்.
8. மேலக்கடம்பன் குளம்.
9. கீழக்கடம்பன குளம்.
10. படலையார் குளம்.
11. சிறுநம்பி குளம்.
12. சாத்தான் குளம்.
13. மியாபுதுக் குளம்.
14. செஞ்சுட்டி குளம்.
15. தண்டையார் குளம்.
16. தளவாய் குளம்.
17. வீப்பிலான் குளம்.
18. புல்லாலெங்குறிச்சி குளம்.
19. புல்லிசேரி குளம்.
20. ஏழ்காரைக் குளம்.
21. பாப்பாங் குளம்.
22. பரிவிரி தொட்டாங் குளம்.
23. மறவன் பாட்டுக் குளம்.
24. பண்ணையார் குளம்.
25. நடுவள்ளிக் குளம்.

26. பட்டர் குளம்.
27. பண்டார பெருங்குளம்.
28. வல்லத்தூர் வாழ்வைத்தான் குளம்.
29. கரிஞ்சி குளம்.
30. விங்கன் குளம்.
31. மன்னுர் குளம்.
32. கும்பி குளம்.
33. குறவன் குளம்.
34. சீலதி புதுக்குளம்.
35. வடசேரிக் குளம்.
36. அரியன்குடி குளம்.
37. பாம்பன் குளம்.
38. வீரன் குளம்.
39. செட்டி புதுக்குளம்.
40. வல்லார் குளம்.
41. சிவகாமிபுரம் குளம்.
42. புதுக்குளம்.
43. கீரநேரிக் குளம்.
44. கருப்பிலாங் குளம்.
45. வீசாடிக் குளம்.
46. வடபத்துக் குளம்.
47. மிதியான் குளம்.
48. தும்பைக் குளம்.

மேற்கொண்டும் இத்திட்டத்தில் காவல்கிணறு பகுதியிலுள்ள கீழ்க்கண்ட ஆறு குளங்களும் அரசு உத்திரவு எண். பொ. ப. து., ந. க. எண். 90820/பி1 72-3 நாள்:- 14—8—1973-ன் படி பயன் பெற இருக்கின்றன.

1. புஞ்சைக் காட்டுக் குளம்.
2. பெரியபுதுக் குளம்.
3. விநாயகர் புதுக்குளம்.
4. மணிமாலைப் புதுக்குளம்.
5. பெருமாள் புதுக்குளம்.
6. காளி புதுக்குளம்.

மேற்படி திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் 2769 ஏக்கர் ஆயக்கட்டு நிலங்களின் பாசனம் உறுதிப்படுத்தப் படும். 365 ஏக்கர் பாசன நிலங்களின் விளைச்சலின் இடைவெளியும் நிரப்பப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் கிடைக்கப் பெறும் கூடுதல் உணவு உற்பத்தி 1714 டன்கள்.

மேற்படி திட்ட வேலைகளை மேற்கொள்வதற்கான ஒப்பந்தக் காரர்கள் நியமிக்கப்படும் தருவாயில் உள்ளது. ஒப்பந்தக் காரர்கள் நியமிக்கப் பட்டவுடன் திட்ட வேலைகள் துவங்கப் பெறும்.



# நெல்லை மாவட்டத்தில் குளங்களில் தூர்வாரும் புனரமைப்பு பணிகள்.

மீ. வெங்கடசுப்பிரமணியன்,
உதவிப் பொறியாளர்.

தமிழ் நாட்டிலுள்ள ஏறக்குறைய எல்லாக் குளங்களும் வண்டல் படிந்து அதனுல் கொள்ளளவு பாதிக்கப்பட்டுள்ளது என்பது யாவரும் அறிந்ததே.

2. குளங்களில் தூர் (வண்டல்)வாரும் பிரச்னை பொறியாளர்களின் கவனத்தில் நீண்ட நாட்களாகவே உள்ளது. ஆனுல் தூர் மண்ணை நீண்ட தூரங்களுக்கு எடுத்துச்சென்று போடுவது என்பது மிகவும் செலவு பிடிக்கக்கூடிய தொன்ருகும். அதற்கு பதிலாக குளத்தின் முழு அளவு மட்டத்தை உயர்த்தி கொள்ளளவை ஈடு செய்தல் என்ருல் மட்டத்தை உயர்த்தலால் எதிர்வாயில் முறியடிக்கப்படும் நிலங்கள் புதிய பிரச்னையாக உருவெடுக்கும். எனவே இவ்வாறு பிரச்னைகளை தீர்க்கும் முகமாக இந்த தூர் வாருதலும், புனரமைத்தலும் திட்டம் உருவாகியுள்ளது.

3. இத்திட்டத்தில் குறைந்த கொள்ளளவானது குளத்தில் முழு கொள்ளளவு மட்டத்தை ஓரளவு உயர்த்தலினுலும் குளத்தில் உள்ள தூர் மண்ணை அகற்றி, கொள்ளளவை உயர்த்தலினுல் முறியடிக்கப்படும் நிலங்களில் மட்டத்தை உயர்த்தலினுலும் சமன் செய்யப்படுகின்றது. இதனுல் முறியடிக்கப்படும் நிலங்களில் மட்டம் உயர்த்தப்படுவதோடன்றி அகற்றப்படும் மண்ணினுல் குளத்தின் கொள்ளளவும் திரும்பப் பெறப்படுகின்றது.

4. பெரிய குளங்களில் இப்பணியானது இயந்திரங்களின் துணை கொண்டு செய்யப்படுகின்றது. சிறிய குளங்களில் இப்பணி மனிதசக்தி மூலம் செய்யப்படுகின்றது.

5. நெல்லை மாவட்டத்தில் சமீபத்தில் தென்காசி வட்டம் சுரண்டை பெரிய குளத்தில் இப்பணி 0.77 லட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு நடைபெறுகின்றது. திருச்செந்தூர் வட்டத்தில் உடன்குடி குளம் இவ்வாறு ரூபாய் 35,000 செலவில் தூர் வாரப்பட்டு புனரமைக்கப்பட்டு வேலைமுடியும் நிலையில் உள்ளது. இந்தப்பணி சமீபத்தில் வள்ளியூர் பெரிய குளத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. செலவு ரூபாய் 1.69 லட்சம் ஆகும் என கணக்கிடப்பட்டுள்ளது. மேற்கண்ட 3 வேலைகளை செய்து முடிப்பதனுல் 2028 ஏக்கர் பயன்பெறும். அதிக உணவு உற்பத்தித்திறன் 783 டன் அதிகரிக்கப்படும். இவைகளைத் தவிர மேலும் 13 குளங்களில் இப்பணி மேற்கொள்ளப் படுவதற்கான ஆய்வும், மதிப்பீடு தயாரித்தலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவை விவரம் பின் வருமாறு.

| என். | வட்டம் | | குளம் | மதிப்பீட்டின் தொகை (ரூ) | |
|---|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி | 1 | செழியநல்லூர் குளம் | 4.20 | லட்சம் |
| 2 | திருவைகுண்டம் | 2 | உடையார் குளம் | 0.18 | „ |
| 3 | திருச்செந்தூர் | 3 | சேதுக்கு வாய்த்தான் குளம் | 2.65 | „ |
| 4 | நான்குனேரி | 4 | செக்கலாக்குரிச்சி | 1.60 | „ |
| 5 | கோவில்பட்டி | 5 | திருக்குறுங்குடி | 21.00 | „ |
| 6 | தென்காசி | 6 | ராஜா புதுக்குடி | 3.92 | „ |
| | | 7 | பீதாபுரம் | 2.55 | „ |
| | | 8 | காங்கன் குளம் | 1.14 | „ |
| | | 9 | அட்டை குளம் | 2.58 | „ |
| | | 10 | சுந்தரபாண்டியபுரம் | 4.50 | „ |
| | | 11 | வீராணம் | 3.96 | „ |
| 7 | சங்கரன்கோவில் | 12 | சின்னுவடைப்பேரி குளம் | 0.96 | „ |
| 8 | தூத்துக்குடி | 13 | கோரம்பள்ளம் | 19.80 | „ |
| | | | மொத்த மதிப்பீட்டுத் தொகை. | ரூ. 69.04 | லட்சம் |



# குட்டையமைத்தல் (POND SCHEMES)

**திரு எம். எஸ். செல்லமுத்து,**
செயற்பொறியாளர் பொ. ப. து.,
திருநெல்வேலி கோட்டம்.

இத்திட்டம் வளமான ஆறுகளோ, நீரோடைகளோ இல்லாத மானுமாரி நிலங்களில் கிணற்றுப் பாசனத்தை உறுதிபடுத்தும் நோக்கத்துடன் துவங்கப்பெற இருக்கின்றது. குட்டை என்பது மழை நீரைப் போதிய அளவு தேக்கி வைத்து அருகிலுள்ள கிணறுகளில் நீர் மட்டத்தை உயர்த்தி அதன் ஆய்க்கட்டு நிலங்களைப் பயன்பெறச் செய்யும் சிறு நீர்த்தேக்கம். காட்டோடைகளில் ஒரு குறிப்பிட்ட காலங்களில். மட்டும் தண்ணீர் செல்வதால் உடனடி உபயோகத்திற்கு அதைப் பயன்படுத்த இயலாமலிருக்கிறது. எனவே அவ்வாறு செல்லும் வெள்ளப் பெருக்கை குட்டை அமைத்து அதில் தேக்கி வைப்பதன் மூலம் அருகாமையிலுள்ள கிணறுகளின் மண்ணடி நீர் மட்டம் உயருவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

புதிய குட்டை அமைப்பதற்கு தண்ணீர் கசிவு ஏற்படும் அமைப்புள்ள நிலப்பரப்பாக அமைய வேண்டும். புதிய குட்டை அமைப்பதற்கான நீர்ப் பிடிப்பரப்பிலிருந்து கிடைக்கும் தண்ணீரின் அளவை கணக்கிடுவதற்கு அப்பகுதியின் வருடாந்திர மழையின் அளவைஎடுத்துக்கொள்ளவேண்டும். கோடைக்கால மழை அளவையும் எடுத்துக்கொள்வதால்; குட்டையில் வருடாந்திர நீர்த்தேக்கத்தை கணக்கிட 3 நிரப்புகள் எடுத்துக் கொள்ளலாம்.

குட்டையின் கீழ் பாசனம் பெறக்கூடிய நிலபரப்பு ஒரு மில்லியன் கன அடிக்கு 25 ஏக்கர் என கணக்கிடுகிரேும். அதில் ஏற்கனவே இருக்கும் சராசரி விளைச்சலுக்கு தேவையான தண்ணீர் அதாவது 100 ஏக்கருக்கு ஒரு மில்லியன் கனஅடி தேவை வீதம் அளவை கழிக்கப்பட்டு கணக்கிடப்படுகிறது.

புதிய குட்டை அமைப்பதால் அதன் கீழ் பயன் பெறும் கிணறுகளையும் நிலங்களையும் கீழ்க் கண்டவாறு கணக்கிடலாம்.

குட்டையின் கரையில் மத்தியிலிருந்து வரையப்படும் 3000 அடி ஆழமுள்ள அரை வட்டத்தின் உள் அமையப்பெறும் நிலங்கள் அனைத்தும்குட்டையின் மூலம் பயன்பெறும். இவ்வரைவட்டத்தின் உள் அமைந்திருக்கும் கிணறுகளின் நீர் மட்டம் அதிகரித்து பாசனத்திற்கு பயன்படுகிறது.

ஏற்கனவே பயிராகிக் கொண்டிருக்கும் சராசரி விளை நிலங்களில் 0.25 டன் அதிக உணவு உற்பத்தி ஏற்படும். புதியதாக விளைச்சல் ஏற்படும் நிலங்களில் ஏக்கருக்கு ஆண்டுக்கு ஒரு டன் உணவு உற்பத்தி ஏற்படும்.

இத்திட்டம் மிகவும் பின்தங்கிய நாங்குநேரி, ராதாபுரம் மற்றும் சங்கரன்கோவில் பகுதியில் முக்கியமாக ஆய்வு செய்யப்படுகிறது. சங்கரன்கோவில் வட்டத்தில் மேலநீலிதநல்லூர் கிராமத்தில் சர்வே எண். 676/3 ல் ஒரு புதிய குட்டை அமைப்பதற்காக ரூ. 8000/-க்கு ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி வட்டத்தில் கரிசல்குளம் கிராமத்தில் சர்வே எண். 34ல் ஒரு புதியகுட்டை அமைப்பதற்காக ரூ. 60000/-க்கு ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

சங்கரன்கோவில் வட்டத்தில் மேற்கொண்டும் இரண்டு குட்டைகள் அமைப்பது சம்பந்தமாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நாங்குநேரி வட்டத்தில் ராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த அப்புவிளை ஓடையின் குறுக்கே அப்புவிளை கிராமத்தில் புதிய இரண்டு குட்டைகள் அமைப்பதற்காக ரூ. 74.000/-க்கும் ரூ. 73,000/-க்கும் இரண்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. நாங்குனேரி வட்டத்தில் மேற்கொண்டும் இரண்டு புதிய குட்டைகள் அமைப்பது சம்பந்தமாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த கருத்தை நோக்கமாகக் கொண்டு பட்டணங்கால் கோட்ட அலுவலகத்தாரால் ராதாபுரம் கால்வாய் பகுதியில் பல குட்டை திட்டம் ஆய்வு வேலைகள் நடைபெற்று வருவதுடன் கீழகண்ட குட்டை திட்டத்திற்கான ஆய்வு வேலைநடத்தப்பட்டு மதிப்பீடு தயார் செய்து ஆட்சித் தலைவரின் அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளன. இந்த குட்டை திட்டம் ஆய்வு செய்யப்படும்பொழுது ஏற்கனவே ஓடைகளில் குளங்கள் மூலம் பாசன வசதி பெறும் நிலப்பரப்பு எந்த விதத்திலும் பாதிக்கப்படாமல் மிக கவனமாக ஆய்வு செய்யப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்படுகிறது. ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்ட குட்டை பின்வருமாறு:—

1. கருங்குளம் கிராமம் தெற்குமலை சமீபம் மணலோடையில் குறுக்கே ஒரு குட்டை திட்டம்.

மதிப்பீடு ரூ. 34,600/-

2. பழவூர் கிராமத்தில் வடக்குமலேஸ்ராஸ்தாங் கேரியின் சமீபம் சர்வே நம்பர் 754, 756ல் ஒரு குட்டை திட்டம்.

மதிப்பீடு ரூ. 93,000/-

3. பழவூர் கிராமத்தில் சர்வே நம்பர் 1458ல் உப்பார் ஓடையில் தெற்கு கிளையில் ஒரு குட்டை திட்டம்.

மதிப்பீடு ரூ. 66,000/-

4. இலவஞ்சிபுரம் கிராமத்தில் தட்சிணும்பொத்தை சமீபம் ஒரு குட்டை திட்டம்.

மதிப்பீடு ரூ. 85,400/-

5. பழவூர் கிராமத்தில் சர்வே நம்பர் 1002, 1004ல் ஒரு குட்டை திட்டம்.

மதிப்பீடு ரூ. 70,000/-

6. பரமேஸ்வரபுரம் கிராமத்தில் சர்வே நம்பர் 108ல் ஒரு குட்டை திட்டம்.

மதிப்பீடு ரூ. 4,200/

7. தனக்கர்குளம் கிராமத்தில் ஒரு குட்டை திட்டம்.

மதிப்பீடு ரூ. 45,500/-



# திருநெல்வேலி மாவட்டம்.

## நிறைவேற்றப்பட்டுள்ள சிறப்பு சிறு பாசனத் திட்டங்களின் தொகுப்பு.

| வரிசை எண். | வட்டத்தின் பெயர் | மொத்த பணிகள் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | பயன் தரும் நிலப்பரப்பு | கூடுதல் உணவு உற்பத்தி |
|---|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி | 8 | 27,82,500 | 23,743 | 530 |
| 2 | ஸ்ரீவைகுண்டம் | 5 | 16,12,500 | 25,238 | 863 |
| 3 | விளாத்திகுளம் | 4 | 13,96,700 | 2,005 | 958 |
| 4 | கோவில்பட்டி | 10 | 23,96,100 | 3,685 | 1,395 |
| 5 | அம்பாசமுத்திரம் | 4 | 4,09,000 | 8,235 | 1,059 |
| 6 | தென்காசி | 6 | 7,22,500 | 6,926 | 1,189 |
| 7 | செங்கோட்டை | 2 | 9,35,000 | 871 | 225 |
| 8 | சங்கரன்கோவில் | 1 | 1,71,000 | 1,907 | 238 |
| 9 | தூத்துக்குடி | 1 | 5,17,000 | 3,200 | 300 |
| | | 41 | 109,42,300 | 75,810 | 6,757 |

# நிறைவேற்றப்பட்டுள்ள சிறப்பு சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள்.

| வரிசை எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரு) | பயன் பெறும் நிலப்பரப்பு (ஏக்கர்) | கூடுதல் உணவு உற்பத்தி |
|---|---|---|---|---|
| | **திருநெல்வேலி வட்டம்:-** | | | |
| 1. | சிவலப்பேரி குளத்தை புனரமைத்தல் | 4,81,000 | 550 | 83 |
| 2. | பராக்கிரம பாண்டியன் குளத்தை புனரமைத்தல் | 11,33,000 | 730 | 365 |
| 3. | உக்கிரன்கோட்டை வரத்துக் கால்வாயை திருத்தியமைத்தல் | 45,000 | 468 | 20 |
| 4. | கோடகன் கால்வாயை திருத்தியமைத்தல் | 3,30,000 | 5,635 | — |
| 5. | பிள்ளையார்குளம் கால்வாயை ,, | 19,000 | 495 | 62 |
| 6. | திருநெல்வேலி கால்வாயை ,, | 3,14,000 | 6,824 | — |
| 7. | பாளையங்கால்வாயை ,, | 4,25,000 | 8,922 | — |
| 8. | பரப்பிக்குளத்துக்கு பாளையங்கால்வாயில் ஊட்டு கால்வாய் வெட்டுதல் | 35,500 | 110 | — |
| | | 27,82,500 | 23,743 | 530 |
| | **திருவைகுண்டம் வட்டம்:-** | | | |
| 1. | கோரம்பள்ளம் பொட்டைக் குளங்களை மேம்பாடு செய்தல் | 5,17,500 | 3,200 | 450 |
| 2. | நெட்டூர் காடுவெட்டி கால்வாயை புதுப்பித்தல் | 83,000 | 1,113 | 279 |
| 3. | ஆலந்தா கிராமத்தின் அருகே காட்டோடையின் குறுக்கே அணைக்கட்டுதலும், உலக்குடி குளம் மற்றும் சம்பன் குளங்களுக்கு வரும் கால்வாய் வெட்டுதலும் | 5,22,000 | 378 | 134 |
| 4. | மருதூர் மேலக் கால்வாய் திருத்தி அமைத்தல் | 2.60000 | 12,762 | — |
| 5. | மருதூர் கீழ்க் கால்வாய் திருத்தி அமைத்தல் | 2,30,000 | 7,785 | — |
| | | 16,12,500 | 25,238 | 863 |



| வரிசை எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரு) | பயன் பெறும் நிலப்பரப்பு (ஏக்கர்) | கூடுதல் உணவு உற்பத்தி |
|---|---|---|---|---|
| | **விளாத்திகுளம் வட்டம்** | | | |
| 1. | மேலமாந்தை குளத்தை புனரமைத்தல் | 2,48,000 | 480 | 240 |
| 2. | படந்தபுளி கிராமத்தில் புதிய கண்மாய் அமைத்தல் | 1,48,500 | 135 | 66 |
| 3. | கொல்லம் பறம்பு | 3,83,000 | 390 | 152 |
| 4. | தத்தனேரி குளத்தை புனரமைத்தல் | 6,17,200 | 1,000 | 500 |
| | | 13,96,700 | 2,005 | 958 |
| | **கோவில்பட்டி வட்டம்:** | | | |
| 1. | மேலகரந்தை கிராமத்தின் அருகே புதிய கண்மாய் அமைத்தல் | 10,02,800 | 920 | 460 |
| 2. | அருணாச்சலபுரம் கிராமத்தின் ,, | 2,50,000 | 175 | 80 |
| 3. | இனாம் மணியாச்சி குளத்தை புனரமைத்தல் | 62,300 | 86 | 43 |
| 4. | ஆத்திகிணர் குளத்தை ,, | 1,10,000 | 47 | 24 |
| 5. | மாவிலோடை கண்மாயை மேம்பாடு செய்தல் | 85,000 | 415 | 193 |
| 6. | வரட்டாற்றின் குறுக்கே அணை கட்டுதலும் மாவிலோடை குளத்திற்கான வரத்துகாலை மராமத்து செய்தலும் | 1,43,000 | 467 | 234 |
| 7. | அத்தி கிணறுக்கு தண்ணீர் வர ஓர் அணை கட்டுதல் | 2,21,000 | 318 | 159 |
| 8. | குளத்தூர் கிராமத்திலுள்ள தெற்கு குளத்தை மராமத்து செய்தல் | 99,000 | 152 | 61 |
| 9. | உப்போடைக்குளம் மராமத்து செய்தல் | 1,73,000 | 153 | 63 |
| 10. | நம்பிபுரம் பெரியகுளத்தை தூர்வாரி புனர்அமைத்தல் | 2,50,000 | 952 | 78 |
| | | 23,96,100 | 3,685 | 1,395 |
| | **அம்பாசமுத்திரம்:** | | | |
| 1. | நதியுண்ணி கால்வாயை புனரமைப்பு செய்தல் | 1,50,000 | 2,330 | 326 |
| 2. | வடக்கு கோடமேல் அழகியன் கால்வாய் புனரமைப்பு செய்தல் | 1,49,000 | 2,260 | 2[illegible]2 |
| 3. | தெற்கு கோடமேல் ,, ,, | 48,000 | 870 | 111 |
| 4. | சிங்கம்பட்டி பெருங்காலை திருத்தியமைத்தல் | 62,000 | 2,725 | 340 |
| | | 4,09,000 | 8,235 | 1,059 |

| 1. | 2. | 3. | 4. | 5. |
|---|---|---|---|---|
| **தென்காசி வட்டம்:** | | | | |
| 1. | உக்கிரன்கோட்டை கால்வாயை திருத்தி அமைத்தல் | 45,000 | 899 | — |
| 2. | நெட்டூர் காடுவெட்டி கால்வாயை திருத்தி அமைத்தல் | 83,000 | 1,070 | 279 |
| 3. | பிள்ளையார்குளம் கால்வாய் திருத்தி அமைத்தல் | 19,500 | 492 | 62 |
| 4. | கன்னியாம்தரு வாய்க்காலை மேம்பாடு செய்தல் | 3,24.000 | 630 | 315 |
| 5. | பாவூர்வரத்துக் கால்வாயை திருத்தி அமைத்தல் | 78,000 | 3,751 | 469 |
| 6. | குலையனேரி பட்டி வரத்து காலையும் மற்றும் குளத்தையும் மராமத்துசெய்தல் | 1,73,000 | 84 | 64 |
| | | 7,22,500 | 6,926 | 1,189 |
| **செங்கோட்டை வட்டம்** | | | | |
| 1. | மொட்டை நீர்த்தேக்கம் திட்டம் | 3,60,000 | 366 | 136 |
| 2. | சிரிமுலபேரி நீர்த்தேக்கம் திட்டம் | 5,75,000 | 505 | 89 |
| | | 9,35,000 | 871 | 225 |
| **சங்கரன்கோவில் வட்டம்.** | | | | |
| 1. | நரசிங்கபேரி குளத்திற்கு சிறப்பு மராமத்து செய்தல் | 1,71,000 | 1,907 | 238 |
| **தூத்துக்குடி வட்டம்.** | | | | |
| 1. | பெட்டைக்குளம் கோரம்பள்ளம் நிறை நீர்மட்டம் உயர்த்துதல். | 5,17,000 | 3200 | 300 |



## திருநெல்வேலி மாவட்டம்.

### செலவுத்திட்டம் நீர்பாசனத் திட்டங்களின் கணக்குத் தலைப்பு.

| வ. எண். | கோட்டக் கணக்குத் தலைப்பு. | நீர்பாசனம் செலவு கணக்கு தொகுப்பு. | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 1969-70 ரூ. | 1970-71 ரூ. | 1971-72 ரூ. | 1972-73 ரூ. | 1973-74 (துணைக்கணக்கு நீங்கலாக) ரூ. |
| 1 | சிறப்பு சிறிய நீர்ப்பாசனத் திட்டம் (100 மூலதனம்) | | | | | |
| | திருநெல்வேலி கோட்டம் | 6,09,679 | 5,03,614 | 2,67,991 | 3,87,148 | 4,48,755 |
| | தாமிரபரணிக் கோட்டம் | 4,45,380 | 2,15,929 | 3,08,559 | 2,07,324 | 2,50,735 |
| | தூத்துக்குடிக் கோட்டம். | 7,69,087 | 11,06,140 | 10,72,550 | 8,97,882 | 12,47,610 |
| | | 18,24,146 | 18,25,683 | 16,49,100 | 14,92,354 | 19,47,100 |
| 2 | நீர்பாசன பணிகள் (4.3 நீர்பாசனம்) | | | | | |
| | தாமிரபரணிக் கோட்டம் | 4,30,154 | 5,94,036 | 6,95,481 | 5,57,247 | 7,20,919 |
| 3 | நீர்பாசன பணிகள் (44 நீர்பாசனம்) | | | | | |
| | திருநெல்வேலி கோட்டம் | 6,04,073 | 4,79,149 | 6,70,026 | 8,99,172 | 12,05,922 |
| | தாமிரபரணிக் கோட்டம் | 6,22,755 | 6,32,284 | 7,33,650 | 9,57,958 | 9,92,791 |
| | தூத்துக்குடி கோட்டம் | 1,55,663 | 87,962 | 90,636 | 1,57,123 | 2,55,492 |
| | | 13,82,491 | 11,99,395 | 14,94,312 | 20,14,253 | 24,54,205 |

## திருநெல்வேலி மாவட்டம் தூர்வாரி நில மீட்பு திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்டு ஆய்வில் உள்ள

# மதிப்பீடுகளின் பல்வேறு நிலைகள்.

## தூர்வாரி நில மீட்பு பணித்திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்டு பல்வேறு நிலைகளில் உள்ள

# மதிப்பீடுகளின் எண்ணிக்கை.

| வரிசை எண் | வட்டத்தின் பெயர் | அரசிடம் நிலுவையில் உள்ளவை | | வருவாய்த் துறை வாரியத் திடம் நிலுவையில் உள்ளவை | | தலைமைப் பொறியாளர் பாசனத்திடம் நிலுவையில் உள்ளவை | | மேற்பார்வை பொறியாளரிடம் நிலுவையிலுள்ளவை | | நிர்வாகப் பொறியாளரிடம் நிலுவையிலுள்ளவை | | மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நிலுவையிலுள்ளவை | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீட்டு எண் | தொகை (லட்சம்) | மதிப்பீடு எண் | தொகை (லட்சம்) | மதிப்பீடு எண் | தொகை (லட்சம்) | மதிப்பீடு எண் | தொகை (லட்சம்) | மதிப்பீடு எண் | தொகை (லட்சம்) | மதிப்பீடு எண் | தொகை (லட்சம்) | மதிப்பீடு எண் | தொகை (லட்சம்) |
| 1 | திருநெல்வேலி | — | — | — | — | — | — | — | — | 1 | 4.20 | — | — | 1 | 4.20 |
| 2 | ஸ்ரீவைகுண்டம் | — | — | — | — | — | — | — | — | 1 | 0.18 | — | — | 1 | 0.18 |
| 3 | திருச்செந்தூர் | — | — | — | — | — | — | — | — | 1 | 2.65 | — | — | 1 | 2.65 |
| 4 | நான்குநேரி | — | — | — | — | — | — | — | — | 2 | 22.60 | — | — | 2 | 22.60 |
| 5 | விளாத்திக்குளம் | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 6 | கோவில்பட்டி | — | — | — | — | 1 | 3.92 | — | — | 1 | 2.55 | — | — | 2 | 6.47 |
| 7 | அம்பாசமுத்திரம் | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 8 | தென்காசி | — | — | — | — | — | — | — | — | 4 | 12.18 | 1 | 4.50 | 4 | 12.18 |
| 9 | செங்கோட்டை | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 10 | சங்கரன்கோவில் | — | — | — | — | — | — | — | — | 1 | 0.96 | — | — | 1 | 0.96 |
| 11 | தூத்துக்குடி | — | — | — | — | — | — | — | — | 1 | 19. 0 | 1 | 19.80 | 1 | 19. 0 |
| | மொத்தம் | — | — | — | — | 1 | 3.92 | — | — | 12 | 65.12 | 2 | 24.30 | 13 | 69.04 |



## தலைமைப் பொறியாளர் (பாசனம்), மேற்பார்வைப் பொறியாளர், நிர்வாகப் பொறியாளரிடம் ஆய்வில் உள்ள தூர்வாரி நிலமீட்டுத் திட்டங்களுக்கான மதிப்பீடுகளின் விபரம்.

| வட்டத்தின் பெயர் மற்றும் திட்டத்தின் பெயர். 1 | மதிப்பீட்டுத் தொகை ரூபாய் (லட்சத்தில்) 2 | குறிப்புரைகள். 3 |
|---|---|---|
| **திருநெல்வேலி** | | |
| 1. செழியநல்லூர் குளத்தை தூர்வாரி நில மீட்பு செய்தல் | 4 . 20 | தாமிரபரணி கோட்ட நிர்வாக பொறியாளரிடம் பரிசீலனையில் உள்ளது. |
| **திருவைகுண்டம்** | | |
| 1. உடையார்குளத்தை தூர்வாரி நில மீட்பு செய்தல். | 2 . 65 | தூத்துக்குடி கோட்ட நிர்வாகப் பொறியாளரிடம் பரிசீலனையில் உள்ளது. |
| **திருச்செந்தூர்** | | |
| 1. சேதுக்குவாய்த்தான் குளத்தை தூர்வாரி நில மீட்பு செய்தல் | 2 . 65 | தாமிரபரணி கோட்ட நிர்வாகப் பொறியாளரிடம் பரிசீலனையில் உள்ளது. |
| **நாங்குனேரி:** | | |
| 1. செங்கலாகுறிச்சி குளத்தை தூர் வாரி நில மீட்பு செய்தல். | 1 . 60 | திருநெல்வேலி கோட்ட நிர்வாகப் பொறியாளரிடம் பரிசீலனையில் உள்ளது. |
| 2. திருக்குரங்குடி குளத்தை தூர்வாரி நில மீட்பு செய்தல் | 21 . 00 | ஷை |
| **கோவில்பட்டி.** | | |
| 1. ராஜாபுதுக்குடி குளத்தை தூர்வாரி நில மீட்பு செய்தல் | 3 . 92 | தலைமைப் பொறியாளருக்கு மேற்பார்வைப் பொறியாளர் என். மு. மு. ஜேயி. 4784/74 தேதி 1—4—74ல் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| 2. பிதாபுரம் குளத்தை தூர்வாரி நில மீட்பு செய்தல். | 2 . 55 | தூத்துக்குடி கோட்டத்தில் ஆய்வில் உள்ளது. |
| **தென்காசி** | | |
| 1. காங்கன்குளத்தை தூர்வாரி நில மீட்பு செய்தல் | 1 . 14 | முதன்மை அறிக்கை தலைமைப் பொறியாளரால் அனுமதிக்கப்பட்டு விரிவான மதிப்பீடு திருநெல்வேலி கோட்டத்தில் தயாரிக்கப்பட்டு வருகிறது. |
| 2. அட்டைக் குளத்தை தூர்வாரி நில மீட்பு செய்தல். | 2 . 58 | ,, ,, |
| 3. சுந்தரபாண்டியபுரம் குளத்தை தூர்வாரி நில மீட்பு செய்தல். | 4 . 50 | தாமிரபரணி கோட்டயத்தின் ஆய்வில் உள்ளது. |
| 4. வீராணம்குளத்தை தூர்வாரி நில மீட்பு செய்தல். | 3 . 96 | ,, ,, |
| **சங்கரன்கோவில்** | | |
| 1. சின்னவடைபேரி குளத்தை தூர்வாரி நில மீட்பு செய்தல். | 0 . 96 | திருநெல்வேலி கோட்டத்தில் ஆய்வில் உள்ளது. |
| **தூத்துக்குடி.** | | |
| 2. கோரம்பள்ளம் குளத்தை தூர்வாரி நில மீட்பு செய்தல். | 19 . 80 | தூத்துக்குடி கோட்டத்தில் ஆய்வில் உள்ளது. |

## மாவட்ட ஆட்சி தலைவரிடம் ஒப்புதலுக்காக உள்ள தூர் வாரி நில மீட்புத் திட்டங்களுக்கான மதிப்பீடுகளின் விபரங்கள்.

| வட்டத்தின் பெயர் மற்றும் திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் லட்சத்தில்) | குறிப்புரை |
|---|---|---|
| தென்காசி | | |
| சுந்தர பாண்டி புரம் குளத்தை தூர் வாரி புனரமைத்தல். | 4.50 | மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பப் பட்டுள்ளது. |
| தூத்துக்குடி | | |
| கோரம்பள்ளம் குளத்தை தூர் வாரி புனரமைத்தல். | 19.80 | ,, ,, |

## திருநெல்வேலி மாவட்டம்

### சிறு பாசனத்திட்டங்கள் சிறுபாசன திட்டவேலைகள் மற்றும் தூர்வாரி நில மீட்பு திட்டங்கள் முன்னேற்றத்தில் இருப்பவைகளின் தொகுப்பு

| வரிசை எண். | வட்டத்தின் பெயர் | மொத்த பணிகள் | மொத்த மதிப்பீட்டுத் தொகை | பயன்தரும் நிலப்பரப்பு | கூடுதல் உணவு உற்பத்தி |
|---|---|---|---|---|---|
| 1. | திருநெல்வேலி | 6 | 1,18,700 | 376 | 238 |
| 2. | ஸ்ரீவைகுண்டம் | 19 | 25,82,750 | 13,140 | 5,931 |
| 3. | திருச்செந்தூர் | 20 | 16,02,100 | 988 | 594 |
| 4. | நாங்குனேரி | 12 | 27,81,350 | 4,679 | 3,053 |
| 5. | விளாத்திகுளம் | 10 | 28,62,580 | 5,037 | 1,835 |
| 6. | கோவில்பட்டி | 37 | 50,02,200 | 4,418 | 2,691 |
| 7. | அம்பாசமுத்திரம் | 9 | 6,68,550 | 12,208 | 219 |
| 8. | தென்காசி | 10 | 2,58,650 | 3,702 | 403 |
| 9. | செங்கோட்டை | 4 | 54,600 | 107 | 58 |
| 10. | சங்கரன்கோவில் | 12 | 4,65,600 | 727 | 377 |
| 11. | தூத்துக்குடி | 7 | 4,06,600 | 2,076 | 892 |
| | மொத்தம் | 146 | 1,68,03,680 | 45,467 | 16,293 |



## திருநெல்வேலி மாவட்டம் சிறுபாசனத் திட்டம்

### சிறுபாசனத் திட்டங்கள் முன்னேற்றத்தில் இருப்பவைகளின் தொகுப்பு:-

| நிசை எண். | வட்டத்தின் பெயர் | மொத்தப் பணிகள் | மொத்த மதிப் பீட்டுத் தொகை | பயன்தரும் நிலப்பரப்பு | கூடுதல் உணவு உற்பத்தி |
|---|---|---|---|---|---|
| 1 | ஸ்ரீவைகுண்டம் | 3 | 23,15,000 | 12,077 | 5,387 |
| 2 | திருச்செந்தூர் | 3 | 13,68,800 | 198 | 70 |
| 3 | நாங்குநேரி | 3 | 25,07,500 | 4,107 | 2,176 |
| 4 | விளாத்திகுளம் | 2 | 27,18,000 | 2,422 | 1,518 |
| 5 | கோவில்பட்டி | 7 | 42,70,500 | 2,751 | 1,841 |
| 6 | அம்பாசமுத்திரம் | 1 | 5,50,000 | 11,779 | ... |
| 7 | சங்கரன்கோவில் | 2 | 2,85,000 | 175 | 84 |
| 8 | தூத்துக்குடி | 2 | 3,45,000 | 1,910 | 777 |
| | மொத்தம் | 23 | 1,45,59,800 | 35.419 | 11,853 |



# திருநெல்வேலி மாவட்டம் சிறு பாசன திட்டம்.

## சிறுபாசனத் திட்டங்கள் முன்னேற்றத்தில் இருப்பவை.

| வரிசை எண். 1 | வேலையின் பெயர் 2 | மதிப்பீட்டுத் தொகை 3 | பயன்பெறும் நிலப்பரப்பு (ஏக்கர்) 4 | கூடுதல் உணவு உற்பத்தி (டன்னில்) 5 | வேலையின் நிலைமை 6 |
|---|---|---|---|---|---|
| **திருவைகுண்டம்** | | | | | |
| 1. | மருதூர் மேலக்கால்வாயை திருத்தி அமைத்தல் | 2,60,000 | ... | 125 | பணி முடியும் தருவாயில் உள்ளது. |
| 2. | மருதூர் கீழக்கால்வாயை திருத்தி அமைத்தல். | 2,30,000 | 7,721 | 965 | " " |
| 3. | கால்வாய் கண்மாயில் இருந்து சடயநேரி கண்மாய்க்கு கால்வாய் வெட்டுதல் | 18,25,000 | 4,9356 | 4207 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| | | 23,15,000 | 12,077 | 5387 | |
| **திருச்செந்தூர்** | | | | | |
| 1. | பள்ளிப்பத்து கிராமத்தில் பெட்டைக் குளத்தை புனரமைத்தல் | 2,11,000 | 88 | 70 | அரசின் ஒப்புதல் அரசு ஆணை எண். 769 பொ. ப. து. 13—6—74ல் வரப்பெற்றுள்ளது. |
| 2. | புத்தன் தருவை வடிநீர் திட்டம் நிலை 1. | 7,89,800 | 110 | — | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 3. | கடம்பா குளத்தின் பொறையூர் தலைமதகின் கூடுதலாக மடை அமைத்தல் | 3,68,000 | — | — | " " |
| | | 13,68,800 | 198 | 70 | |
| **நாங்குநேரி** | | | | | |
| 1. | படலையார்குளம் மற்றும் வரத்துக் கால்வாயை முன்னேற்றப் பணி செய்தல் | 1,04,000 | 978 | 488 | " " |
| 2. | சுவிசேஷபுரம் அருகே புதிய கண்மாய் அமைத்தல் | 2,20,000 | 114 | 72 | " " |
| 3. | ஆலத்துறையார் தண்ணியை அனுமாநதிக்கு திருப்பி விடுதல் | 21,83,500 | 3015 | 1616 | அரசின் ஒப்புதல் அரசு ஆணை 526 பொ. ப. து., 24—4—74-ல் வரப்பெற்றுள்ளது. |
| | | 25,07,500 | 4107 | 2176 | |



| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| **விளாத்திகுளம்.** | | | | | |
| 1. | எல். வெங்கடேசபுரம் அருகே புதிய கண்மாய் அமைத்தல் | 3,18,000 | 173 | 138 | பணிமுடியும் தருவாயில் உள்ளது |
| 2. | வைப்பாற்றின் குறுக்கே ஆத்தங் கரை அருகில் அணைக்கட்டு கட்டுதல் | 24,00,000 | 2,249 | 1.380 | பணி முன்னேற்றத்திலுள்ளது |
| | | 27,18,000 | 2,422 | 1,518 | |
| **கோவில்பட்டி.** | | | | | |
| 1. | சிந்தாலக்கரை கிராமத்தின் அருகே புதிய கண்மாய் அமைத்தல் | 3,38,500 | 253 | 126 | பணிமுடியும் தருவாயில் உள்ளது. |
| 2. | ராமச்சந்திரபுரம் கிராமத்தின் அருகே புதிய கண்மாய் அமைத்தல் | 8,80,000 | 437 | 299 | பணி முன்னேற்றத்திலுள்ளது |
| 3, | அழகப்பபுரம் கிராமத்தின் அருகே புதிய கண்மாய் அமைத்தல் | 2,45,000 | 138 | 107 | " " |
| 4. | புது சின்னையாபுரம் கிராமத்தின் அருகே புதிய கண்மாய் அமைத்தல் | 5,80,000 | 372 | 213 | " " |
| 5. | ஆதனூர் கிராமத்தில் பஞ்சந்தாங்கி குளத்தை திருத்தி அமைத்தல் | 2,05,000 | 141 | 113 | " " |
| 6, | எப்பொதும் வென்ருன் கிராமத்தில் மலட்டாற்றின்குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்தல் | 18,33,000 | 1,099 | 772 | அரசின் ஒப்புதல் ஆணை எண். 793 பொ. ப. து., 15-6—74.ல் வரப்பெற்றுள்ளது |
| 7. | துறையூர் கிராமத்தில் மலட்டார் ஓடையின் குறுக்கேயுள்ள அணைக் கட்டை மேம்பாடு செய்தல் | 1,89,000 | 311 | 211 | அரசின் ஆணை 770 பொ. ப. து. 13—6—74-ல் வரப்பெற்றுள்ளது |
| | | 42,70,500 | 2,751 | 1,841 | |
| **அம்பாசமுத்திரம்.** | | | | | |
| 1. | கன்னடியன் கால்வாயை திருத்தியமைத்தல் | 5,50,000 | 11,779 | 972 | பணி முடியும் தருவாயில் உள்ளது. |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| சங்கரன்கோவில் | | | | | |
| 1. | ஊத்தன்குளம் கிராமத்தின் அருகே புதிய காண்மாய் அமைத்தல் | 1,10,000 | 48 | 20 | பணி முடியும் தருவாயில் உள்ளது. |
| 2. | மைப்பாரை கிராமத்தின் அருகே புதிய காண்மாய் அமைத்தல் | 1,75,000 | 127 | 55 | ,, ,, |
| | | 2,85,000 | 175 | 84 | |
| தூத்துக்குடி | | | | | |
| 1. | கோரம்பள்ளம் உபரி தண்ணீர் வாய்க்காலில் இரு மறுங்கிலும் வெள்ளத்தடுப்பு அணை அமைத்தலும், பலப்படுத்துதலும் நீ. வே. 12,000 | 2,20,000 | 1430 | 733 | ,, ,, |
| 2. | சாஸ்தாவிநல்லூர் தருவையை நீர்மூழ்கும் பகுதியிலிருந்து தடுத்தல் | 1,25,000 | 480 | 44 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| | | 3,45,000 | 1910 | 777 | |



# திருநெல்வேலி மாவட்டம் சிறு பாசனத்திட்டம்.

## சிறுபாசன வேலைகள் முன்னேற்றத்தில் இருப்பவைகளின் தொகுப்பு.

| வரிசை எண் | வட்டத்தின் பெயர் | மொத்த பணிகள் | மொத்த மதிப்பீட்டுத்தொகை | பயன்பெறும் நிலப்பரப்பு | கூடுதல் உணவு உற்பத்தி |
|---|---|---|---|---|---|
| 1. | திருநெல்வேலி | 6 | 1,18,700 | 376,46 | 238.07 |
| 2, | ஸ்ரீவைகுண்டம் | 15 | 2,32,750 | 951.69 | 423.27 |
| 3 | திருச்செந்தூர் | 17 | 2,33,300 | 789.75 | 523.68 |
| 4. | நாங்குநேரி | 8 | 1,18,850 | 471.76 | 328.18 |
| 5. | விளாத்திகுளம் | 8 | 1,44,580 | 615.45 | 314.88 |
| 6 | கோவில்பட்டி | 30 | 7,31,700 | 1667.71 | 849.56 |
| 7. | அம்பாசமுத்திரம் | 8 | 1,18,550 | 428,72 | 219.28 |
| 8. | தென்காசி வட்டம் | 9 | 1,81,650 | 1894.45 | 293.77 |
| 9. | செங்கோட்டை | 4 | 54,600 | 106.58 | 57.52 |
| 10. | சங்கரன்கோவில் | 10 | 1,80,600 | 551.94 | 292.74 |
| 11. | தூத்துக்குடி வட்டம் | 5 | 61,600 | 165.80 | 114.75 |
| | மொத்தம் | 120 | 21,76,880 | 8020.31 | 3658.70 |

# திருநெல்வேலி மாவட்டம் சிறுபாசனத் திட்டம்

## சிறுபாசன வேலைகள் முன்னேற்றத்தில் இருப்பவைகள்.

| வரிசை எண் | வட்டம் மற்றும் வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை | பயன்பெறும் நிலப் பரப்பு | கூடுதல் உணவு உற்பத்தி | வேலையின் நிலைமை |
|---|---|---|---|---|---|
| I | **திருநெல்வேலி வட்டம்** | | | | |
| 1 | சோலைசேரிகுளத்தை மராமத்து செய்தல் | 70,600 | 59 89 | 30.64 | பணிமுடியும் தருவாயில் உள்ளது |
| 2 | வாகைக்குளம் கிராமத்திலுள்ள சிம்பாடு குளத்தை மராமத்து செய்தல் | 10,800 | 48 57 | 16.39 | ,, |
| 3 | பாம்பன்குளத்தை மராமத்து செய்தல் | 6.500 | 41.46 | 45.87 | பணிமுன்னேற்றத்திலுள்ளது |
| 4 | புதுக்குளத்தை மராமத்து செய்தல் | 10,700 | 37 73 | 20.06 | ,, |
| 5 | சொரிநாத்தையன் குளத்தை மராமத்து செய்தல் | 4,100 | 129.91 | 90.79 | பணி முடிவுற்றது |
| 6 | சேதுராயன் புதூர் குளத்தை மராமத்து செய்தல் | 16,000 | 58.90 | 36 32 | பணி முடிவுற்றது |
| | | 1,18.700 | 376.46 | 238 07 | |
| II | **ஸ்ரீவைகுண்டம் வட்டம்** | | | | |
| 1 | கீழப் புதுக்குளத்தை மராமத்து செய்தல் | 13,800 | 39.96 | 22 53 | பணி முடிவுற்றது |
| 2 | திம்மராஜாபுரத்திலுள்ள குளத்தை மாரமத்து செய்தல் | 4,400 | 4 00 | 0.31 | பணிமுன்னேற்றத்திலுள்ளது |
| 3 | தண்டைக்காரன் குளத்தை மராமத்து செய்தல். | 2,970 | 3 65 | 0.34 | ,, |
| 4 | வேப்பங்குளத்தை மராமத்து செய்தல். | 5 300 | 8 31 | 3 17 | ,, |
| 5 | அட்டைக்குளத்தை மராமத்து செய்தல் | 5,600 | 11.70 | 9.36 | பணிமுடிவுற்றது |
| 6 | நல்லத் தாமரைக் குளத்தை மராமத்து செய்தல் | 7,500 | 9 97 | 12,02 | பணிமுன்னேற்றத்திலுள்ளது |
| 7 | ஐயம்பிள்ளை குளத்தை மராமத்து செய்தல் | 12,700 | 27.68 | 16.72 | ,, |
| 8 | பிருதை குளத்தை மராமத்து செய்தல் | 10,000 | 8.37 | 10 47 | ,, |
| 9 | அரியநாயக்கன்பட்டி குளத்தை மராமத்து செய்தல் | 24,300 | 204.75 | 90.79 | பணிமுடியும் தருவாயில்உள்ளது |
| 10 | இடையாமுத்தன் புளியங்குளத்தை மராமத்து செய்தல். | 11,000 | 44 01 | 21 16 | பணி முன்னேற்றத்திலுள்ளது. |
| 11 | மயிலங்குளத்தை மராமத்து செய்தல். | 7,000 | 5 88 | 9 34 | ,, ,, |
| 12 | கடம்பாவன் பேரிகுளத்தை மராமத்து செய்தல். | 23,000 | 87.50 | 49.80 | ,, ,, |
| 13 | பெரிய குளத்தை மராமத்து செய்தல். | 23,500 | 218.14 | 66 77 | ,, ,, |
| 14 | கொல்லங்குறிச்சி குளத்தை மராமத்து செய்தல். | 23,500 | 44.60 | 23 99 | ,, ,, |
| 15 | மருதூர் மேலக்கால்வாயின் கீழுள்ள குட்டைக்கால் குளத்திற்கு நீர்வடிக்க ஒரு ரெகுலேட்டர் கட்டுதல். | 58,000 | 245.17 | 187.00 | ,, ,, |
| | | 2,32,750 | 951 69 | 423·27 | |



| வரிசை எண் | வட்டம் மற்றும் வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை | பயன்பெறும் நிலப் பரப்பு | கூடுதல் உணவு உற்பத்தி | வேலையின் நிலைமை |
|---|---|---|---|---|---|
| III | **திருச்செந்தூர் வட்டம்.** | | | | |
| 1 | உடையார் குளத்தை மராமத்து செய்தல். | 13,300 | 140.06 | 51.20 | பணி முடிவுற்றது. |
| 2 | பொட்டை குளத்தை மராமத்து செய்தல். | 13,800 | 74 81 | 51.20 | பணி முடிவுற்றது. |
| 3 | நெடுங்குளத்தை மராமத்து செய்தல். | 13,900 | 77.28 | 45.50 | ,, |
| 4 | காலம்புதுக்குளத்தை மராமத்து செய்தல். | 13,500 | 26 68 | 14.77 | ,, |
| 5 | பண்டைக்குளத்தை மராமத்து செய்தல். | 8,000 | 54.90 | 8 73 | ,, |
| 6 | புதுக்குளத்தை மராமத்து செய்தல். | 11,800 | 26.90 | 17.86 | பணி முடியும் தருவாயிலுள்ளது. |
| 7 | உடையார்குளத்தை மராமத்து செய்தல். | 3,000 | 17.10 | 45.20 | பணி முடிவுற்றது. |
| 8 | கருவளம்பாடு குளத்தை மராமத்து செய்தல். | 11,000 | 48.00 | 30.80 | பணி முடியும் தருவாயிலுள்ளது. |
| 9 | சீருடையார் குளத்தை மராமத்து செய்தல். | 2,000 | 13.68 | 6.75 | பணி முடிவுற்றது. |
| 10 | வேலன்புதுக்குளத்தை மராமத்து செய்தல். | 17,200 | 28 12 | 51.67 | பணி முன்னேற்றத்திலுள்ளது. |
| 11 | பிராண்டையாகுளத்தை மராமத்து செய்தல். | 32,000 | 25.00 | 16 91 | ,, |
| 12 | செங்குளத்தை மராமத்து செய்தல். | 16,600 | 80 . 12 | 5 · 3 | பணிமுன்னேற்றத்திலுள்ளது. |
| 13 | இல்லாமல் குளத்தை மராமத்து செய்தல். | 19.800 | 62·92 | 91·55 | ,, |
| 14 | குருப்பன் குளத்தை மராமத்து செய்தல். | 17,600 | 30·51 | 33·88 | ,, |
| 15 | அய்யனுர் குளத்தை மராமத்து செய்தல். | 12,000 | 39·50 | 15.90 | ,, |
| 16 | பன்னைப் புதுக்குளத்தை மராமத்து செய்தல். | 12,800 | ... | ... | ,, |
| 17 | அச்சன் குளத்தை மராமத்து செய்தல். | 15,000 | 44·17 | 37·13 | ,, |
| | | 2,33,300 | 789 75 | 523·68 | |
| | **நான்குநேரி வட்டம்.** | | | | |
| 1 | அரியநாயகிபேரி குளத்தை மராமத்து செய்தல். | 3,600 | 8·75 | 4·63 | பணி முடிவுற்றது. |
| 2 | மயிலபுதூர் குளத்தை மராமத்து செய்தல். | 26,300 | 17 58 | 44·89 | ,, |
| 3 | தேவநல்லூர் குளத்தை மராமத்து செய்தல். | 18,400 | 79 58 | 35 66 | பணிமுன்னேற்றத்திலுள்ளது. |
| 4 | சீலத்தி குளத்தை மராமத்து செய்தல். | 7,800 | 37·83 | 17 25 | ,, |
| 5 | கோவநேரி குளத்தை மராமத்து செய்தல். | 11,600 | 62·69 | 30·30 | ,, |
| 6 | குருவன் குளத்தை மராமத்து செய்தல். | 20,300 | 54·80 | 34·04 | ,, |
| | பின்சேந்திர வள்ளிக் குளத்தை மராமத்து செய்தல். | 16,350 | 178·08 | 115 54 | ,, |
| 8 | உருமன் குளத்தை மராமத்து செய்தல். | 14,500 | 32 45 | 45 87 | ,, |
| | | 1,18,850 | 471.76 | 328·18 | |

விளாத்திகுளம் வட்டம்:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | வேடப்பட்டி குளத்தை மராமத்து செய்தல் | 27,500 | 50 00 | 29 · 00 | பணி முன்னேற்றத்தில் உள்ளது |
| 2 | பொம்மையாபுரம் குளத்தை மராமத்து செய்தல். | 7,000 | 9 · 56 | 5 · 30 | ,, |
| 3 | புளியங்குளத்தை மராமத்து செய்தல். | 17,000 | 33 · 17 | 22 · 82 | ,, |
| 4 | புதுக்குளத்தை மராமத்து செய்தல். | 7,200 | 51 . 68 | 37 . 41 | ,, |
| 5 | வேந்தன் குளத்துக்கு வரும் வாய்க்காலை மேம்பாடு செய்தல். | 7,000 | 44 . 70 | — | ,, |
| 6 | மேலமாந்தைக்குளத்தை புனரமைத்தல் | 34,800 | 400 . 00 | 200 . 00 | பணி முடிவு பெற்றது |
மேற்குறிப்பிட்ட நிலங்களுக்கு தண்ணீர் வழங்கிய பின், சுமார் 128.48 மி. க. அடி தண்ணீர் மீதம் உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. எனவே இந்த ஆற்றின் குறுக்கே மேலும் ஒரு நதி நீர்த்தேக்கம் அமைப்பதற்கான திட்டம் வகுத்து அதற்கான மதிப்பீடு ரூ. 37 லட்சத்திற்கு அங்கீகாரம் அரசால் அளிக்கப்பட்டுள்ளது. இதனால் மொத்தம் 2146 ஏக்கர் நிலங்கள் மேலும் பாசன வசதி பெறும்.

**3 (ஈ) மோட்டையாறு சிறு படுகை:-**

குண்டாற்றின் ஒரு உப நதியாக இந்நதி, மேற்குத் தொடர்ச்சி மலையில் கடல் மட்டத்திற்கு மேல் சுமார் 2790 அடி உயரத்திலிருந்து உற்பத்தியாகிறது. இது செங்கோட்டை வட்டத்தில் குண்டாற்றில் கட்டப்படுகின்ற தென்கால் அணைக்கட்டிற்கு மேல் புறத்தில் குண்டாறுடன் கலக்கிறது.

இச்சிறு ஆற்றில் கட்டப்பட்டுள்ள இரண்டு அணைகளின் மூலம் மொத்தம் 352·93 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. மேற்கண்ட நிலங்களுக்கு பாசன வசதி அளித்தப் பின் இந்த ஆற்றில் 114.22 மி. க. அடி தண்ணீர் மீதமுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. மீதமுள்ள தண்ணீர் குண்டாறுடன் சேருகிறது.

**3 (உ) அழுதகன்னியாறு சிறு படுகை:—**

அழுத கன்னியாறு தென்காசி வட்டத்தில், மேற்கு தொடர்ச்சி மலையிலுள்ள பொதிகை மலையில் கடல் மட்டத்திற்கு மேல் சுமார் 4500 அடி உயரத்திலிருந்து உற்பத்தியாகிறது. இவ்வாறு சித்தாற்றின் உபநதியாகும். இது வேட்டைக்காரன்புதூருக்கு பக்கத்தில் சித்தாற்றில் கலக்கிறது.

இவ்வாற்றில் 8 அணைகள் உள்ளன. இவ்வணைகள் மூலம் மொத்தம் 2050·91 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

நிலங்களுக்கு, பாசனத்திற்கு தண்ணீர் கொடுத்தது போக 3·76 மி. க. அடி தண்ணீர் மீதம் உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. மீதமுள்ள தண்ணீரை தேக்கும் பொருட்டு, இவ்வாற்றில் உள்ள பழைய குற்றால அருவியின் அருகில் ஒரு நீர்த்தேக்கம் அமைக்க திட்டமிடப்பட்டு விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகின்றன.

**3 (ஊ) அனுமா நதி சிறு படுகை:—**

இந்நதி சித்தாற்றில் ஒரு உபநதியாகும். இது மேற்குத்தொடர்ச்சி மலையில்,செங்கோட்டை வட்டத்தில் கடையநல்லூர் ஒதுக்குக் காடுப் பகுதியில் கடல் மட்டத்திற்குமேல் சுமார் 5150 அடி உயரத்தில் உற்பத்தியாகிறது.

இந்நதியின் குறுக்கே, 15 அணைகள் உள்ளன. இந்த அணைகள் மூலம் செங்கோட்டை, தென்காசி வட்டத்திலுள்ள மொத்தம் 9902·55 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுகின்றன. கடைசியில் இந்நதி, தென்காசி வட்டத்திலுள்ள வீரகேரளம்புதூர் பக்கத்தில் சித்தாற்றில் கலக்கிறது.

பாசனத்திற்கு தண்ணீர் போக, மொத்தம் 152·31 மி. க. அடி தண்ணீர் மீதமுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. மீதமுள்ள தண்ணீரை தேக்கிவைக்கும்பொருட்டு இந்நதியில் ஒரு நீர்த் தேக்கம் அமைக்க திட்டமிடப்பட்டு, மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது.

**3 (எ) கருப்பா நதி சிறு படுகை:—**

அனுமா நதியின் உபநதியான கருப்பா நதி, தென்காசி வட்டத்தில், மேற்குத்தொடர்ச்சி மலையில் கடையநல்லூர் ஒதுக்குக் காட்டுப் பகுதியில், கடல் மட்டத்திற்குமேல் சுமார் 5810 அடி உயரத்திலிருந்து உற்பத்தியாகிறது. இறுதியாக இந்நதி அனுமா நதியுடன் அனுமா நதியில் உள்ள சாம்பவர் வடக்கரை அணைக்கட்டிற்கு மேல் சேருகிறது.

இந் நதியின் குறுக்கே ஆறு அணைகள் உள்ளன. இந்நதியின் மூலம் மொத்தம் 9576.19 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

பாசனத்திற்கு தண்ணீர் கொடுத்தது போக 90.83 மி. க. அடி தண்ணீர் மீதம் உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. மீதமுள்ள தண்ணீர் தற்போது, இந்நதியில் கட்டப்பட்டு வரும், கருப்பா நதி நீர்த்

தேக்கத்தில் தேக்கப்படுகிறது. மேலும் இந்நதியிலிருந்து பாசனத்திற்கு பிரிந்து செல்லும் கால்களை சீரமைப்புச் செய்வதற்கு தேவையான ஆய்வுகள் நடத்தப்பட்டு, மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டு வருகிறது.

3. (ஏ) உப்போடை சிறு படுகை:—

இது சித்தாற்றின் ஒரு உப நதியாகும். உப்போடை கோவில்பட்டி தாலுகாவிலுள்ள கழுகு மலையில் கடல் மட்டத்திலிருந்து சுமார் 400 அடி உயரத்திலிருந்துஉற்பத்தியாகிறது. இந்த ஓடைக்கு குறுக்கே கட்டப்பட்டுள்ள இரண்டு அணைக்கட்டுகளின் மூலமாகவும், அதன் பின் இந்த ஓடை முழுவதுமாக பராக்கிரமபாண்டியன் என்ற குளத்தில் விழுந்து மேற்படி குளத்தின் மூலமாகவும் மொத்தம் 1082·21 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகிறது.

மேற்கண்டநிலங்களுக்கு பாசானவசதிஅளித்த பின் 365·27 அடி தண்ணீர் மீதமுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. தற்சமயம் இந்த தண்ணீர் சித்தாறுடன் சேருகிறது. மீதமுள்ள தண்ணீரை பயன் படுத்தும் வகையில் கோவில்பட்டி தாலுகா சிவலப்பேரி கிராமம் அருகாமையில் ஒரு நீர்த்தேக்கம் அமைக்கத் திட்டமிடப்பட்டு அதற்கான மதிப்பீடு தயாரித்து வருகிறது.

4. தாம்பிரபரணி பெரும் படுகை:

தாமிரபரணி ஆறு, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள முக்கியமான ஜீவநதியாகும். இந்நதி, மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள, பெரியபொதிகை மலையில் கடல் மட்டத்திற்கு மேல் சுமார் 6000 அடி உயரத்திலிருந்து உற்பத்தியாகிறது. இரண்டு பருவ காலங்களிலும் நன்கு மழை பெய்து இந் நதியில் நீர் வற்ருமல் எப்போதும் தண்ணீர் ஓடிக் கொண்டே இருக்கும். முதலில், இந்நதி பேயாறு, உள்ளாறு, கிரையாறு, சேர்வலாறு, பாம்பாறு ஆகிய சிறு ஆறுகள் ஒன்று சேர்ந்து தாமிரபரணி என்னும் பெயருடன் திருநெல்வேலி மாவட்டத்தில் பாய்ந்து, கடைசியில் திருச்செந்தூர் வட்டத்திலுள்ள கீழ் திருச்செந்தூருக்குப் பக்கத்தில் வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

தாமிரபரணியாற்றுடன் இதன் முக்கிய உப நதிகளில் ஒன்ருன மணிமுத்தாறு வந்துசேருகிறது. ஏற்கனவே மணிமுத்தாற்றில் நீர்த்தேக்கம் கட்டப் பட்டுள்ளது. இதன் மூலம் மொத்தம் 19785·24 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுகின்றது. மீதமுள்ள 9344·70 மி. க. அடி தண்ணீர் தாமிரபரணியுடன் வந்து சேருகிறது.

அடுத்து கடனு நதியும், அதன் உப நதிகளான இலுப்பையாறு, ராமநதி, சம்புநதி ஆகிய நதிகள் கலந்து பின் தாமிரபரணியுடன் வந்து சேருகின்றது மேற்கண்ட நதிகளின் பாசன நிலங்களுக்கு தேவையான தண்ணீர் போக மீதமுள்ள தண்ணீரை ஏற்கனவே கடனுநதி, ராமநதிகளில் கட்டப்பட்டுள்ள நீர்த்தேக்கங்களில் தேக்கி வைக்கப்படுகிறது. இதுபோக மீதமுள்ள 447·85 மி. க. அடி தண்ணீர் கடனு நதியின் வழியாக தாமிரபரணியுடன் சேருகிறது. சம்பு நதியில் ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

மற்ருெரு முக்கிய உபநதிகளில் ஒன்ருன பச்சையாறு, தருவை பக்கத்தில் இந்நதியுடன் வந்து சேருகின்றது. இந்நதியின் பாசன நிலங்களுக்கு தண்ணீர் பாய்ந்தது போக 1631·49. மி. க. அடி தண்ணீர் மீதமுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. இந்நதியின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

தாமிரபரணியில் மிக முக்கிய உபநதிகளில் ஒன்று சித்தாறு. சித்தாறும் அதன் உபநதிகளான ஐந்தருவியாறு, அழுத கன்னியாறு, குண்டாறு மோட்டையாறு, அரிகர நதி, அனுமா நதி, காருப்பா நதி, உப்போடை ஆகிய நதிகள் சித்தாறுடன் சேர்ந்து கடைசியில் தாமிரபரணியுடன் வந்து சேருகின்றது. இந்நதிகளின் பாசன நிலங்களுக்கு பாசன வசதி அளித்த பின் 930·87 மி. க. அடி தண்ணீர் மீதம் உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. இந்த தண்ணீரும் தாமிரபரணியில் வந்து சேருகிறது. சித்தாற்றின் உபநதியான கருப்பா நதியில் ஒரு நீர்த்தேக்கம் கட்டப்பட்டு வருகின்றது. இதுபோக அழுத கன்னியாறு, அனுமா நதி, உப்போடை ஆகிய நதிகளில் நீர்த்தேக்கங்கள் அமைப்பதற்கான திட்டங்கள் ஆய்விலுள்ளது.

தாமிரபரணியில் உப நதிகளில் ஒன்ருன சேர்வலாற்றில் தமிழ்நாடு மின் வாரியத்தால் ஒரு நீர்த் தேக்கம் அமைத்து அதன் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டு, நீர்த்தேக்கம் கட்டுவதற்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்று வருகின்றன. அதையொட்டி சேர்வலாற்றிலிருந்து சுரங்கப்பாதை வழியாக தண்ணீரை கடனு நதி மூலம் கடனு நீர்த்தேக்கத்தில் தேக்கி, கடனு தேக்கத்திலிருந்து இடது புறத்தில் ஒரு உயர் மட்டக்கால்வாய் வெட்டி மானூர் குளம் வரையுள்ள குளங்களுக்கு நீர்ப்பாசன வசதி அளிப்பதற்கான திட்டம் ஒன்றும் ஆய்வில் உள்ளது. இதுபோக, மேற்படி தேக்கத்திலிருந்து, வலது புறத்தில் ஒரு கால்வாய் வெட்டி அம்பை வட்டத்திலுள்ள 10 மானு



மாரிக் குளங்களுக்கு பாசன வசதி அளிக்கும் திட்டம் ஒன்றும் ஆய்வில் வருகின்றது.

இவ்வாற்றில், பாபநாசத்தில் இரண்டு நீர்த் தேக்கங்கள் அமைத்து மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இது போக இந்நதியின் குறுக்கே 8 அணைகள் கட்டப்பட்டுள்ளன. இந்த அணைக்கட்டுகள் மூலமாக மொத்தம் 76654·18 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுகின்றன. பாசன நிலங்களுக்கு தண்ணீர் கொடுத்தது போக மீதம் 24,162·02 மி. க. அடி தண்ணீர் வங்காள விரிக்குடா கடலில் போய் கலக்கிறது.

5. வாலமலையாறு சிறு படுகை:-

இந்த ஆறு மேற்குத் தொடர்ச்சி மலையின் விரிசிடை இடையாறு, கடையமடையாறு ஆகிய உப நதிகள் ஒன்ருக சேர்ந்து, வாலமலையாறு என்று அழைக்கப்படுகின்றது. சங்கரன்கோவில் வட்டத்தில் ஓடி மலையாடிக்குறிச்சி பெரிய குளத்தில் போய் சேருகிறது.

இந்த ஆற்றின் குறுக்கே நிரந்தரமான அணைகள் ஒன்றும் கிடையாது. இருப்பினும், ஆறு திறந்த மடைகள் மூலம் மொத்தம் 2302.35 ஏக்கருக்கு பாசன வசதி கிடைக்கிறது.

மேற்படி நிலங்களுக்கு பாசனத்திற்கு தண்ணீர் போக, 51.21 மி. க. அடி தண்ணீர் மீதமுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. எனவே இவ்வாற்றில் ஒரு நீர்த் தேக்கம் அமைப்பதற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அரசின் அனுமதிக்காக் அனுப்பப் பட்டுள்ளது.

6. கோட்டமலையாறு சிறு படுகை:-

இவ்வாறு மேற்குத் தொடர்ச்சி மலையில், கடல் மட்டத்திற்கு மேல் சுமார் 5048 அடி உயரத்தில் உற்பத்தியாகிறது. இந்நதி சங்கரன்கோவில் வட்டத்தில் ஓடி, கடைசியில் துர்க்காபுரம் சிறு குளத்தில் போய் சேர்ந்துவிடுகிறது.

இவ்வாற்றில், நிரந்தரமான அணைகள் ஒன்றும் கிடையாது. இருந்தாலும் ஐந்து திறந்த மடைகள் மூலம் மொத்தம் 2857.47 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கின்றது.

மேற்படி நிலங்களுக்கு பாசனத்திற்கு தண்ணீர் கொடுத்தது போக, மீதம் இருக்கும் தண்ணீரை தேக்கி வைப்பதற்காக நீர்த் தேக்கம் அமைப்பதற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறன்றது.

7. கோம்பையாறு சிறு படுகை:-

கோம்பையாறு மேற்குத் தொடர்ச்சி மலையில், சங்கரன்கோவில் வட்டத்தில் கடல் மட்டத்திற்கு மேல் சுமார் 5000 அடியில் உற்பத்தியாகிறது. இவ்வாறு தேவியாற்றின் ஒரு உபநதியாகும். கடைசியில் இந்நதி வடுகப்பட்டி கிராமத்தின் அருகில் தேவியாறுடன் கலக்கிறது.

இந்நதியில் நிரந்தரமான அணைகள் ஒன்றும் கிடையாது. இருப்பினும் திறந்த மடை மூலம் சில குளங்கள் வழியாக மொத்தம் 1202.6 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கிறது.

நிலங்களுக்கு பாசன வசதி அளித்தது போக மொத்தம் 98.80 மி. க. அடி தண்ணீர் மீதம் உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வாற்றின் குறுக்கே தற்போது ஒரு நீர்த் தேக்கம் அமைப்பதற்கானமதிப்பீடுகள்தயாரிக்கப்பட்டு வருகின்றன

8 இராசிங்கியாறு சிறு படுகை :—

இந்த ஆறு, சங்கரன்கோவில் வட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையில் 4997 அடி உயரத்தில் உற்பத்தியாகிறது. முதலில் கள்ளி மலையாறு, பழையாறு, தட்டப்பாறையாறு ஆகிய சிறு நதிகள் ஒன்ருக சேர்ந்து பழையாறு என்னும் பெயரில் சிறிது தூரம் ஓடி, பிறகு இராசிங்கியாறு என்ற பெயரிலும் அதில் ஒரு பகுதி உள்ளாறு என்ற பெயரிலும் பிரிந்து மீண்டும் இரண்டும் இணைந்து தேவியாறுடன் சேருகிறது. இதில் முதல் அணையான தலையணையிலிருந்து ஒரு பிரிவு பழையாறு என்ற பெயரில் ஓடி நிச்சம்பா நதியுடன் போய் சேருகிறது.

இந்நதியில் நான்கு அணைகள் உள்ளன. இந்த நான்கு அணைகள் மூலமாகவும் மற்றும் குளங்களின் மூலமாகவும் மொத்தம் 9367·73 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றது.

பாசன நிலங்களுக்கு தண்ணீர் கொடுத்தது போக மொத்தம் 247·64 மி. க. அடி தண்ணீர் மீதம் உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வாற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதற்கான திட்டம் வகுக்கப்பட்டு, மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

9. முந்தல் ஓடை சிறு படுகை:-

முந்தல் ஓடை தென்காசி வட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையில் சொக்கம்பட்டி ஒதுக்கு வனப் பகுதியில், சுமார் 1750 அடி உயரத்தில் உற்பத்தியாகிறது. இவ் ஓடை சிறிது தூரம் சமவெளியில்

ஓடி, வடக்கு பிரிவு, தெற்கு பிரிவு என இரு பிரிவுகளாகப் பிரிகிறது.

தெற்குப் பிரிவின் மூலம் 7 குளங்களுக்கும், வடக்கு பிரிவின் மூலம் 4 குளங்களுக்கும் தண்ணீர் கிடைக்கிறது. அதனால் சுமார் 861.31 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றது.

இவ் ஓடை இரு பிரிவுகளாக பிரிவதற்கு முன்னால் ஒரு சிறு தேக்கம் அமைத்து மேலும், சில நிலங்களுக்கு பாசன வசதியளிக்க திட்டமதிப்பீடு தயாரிக்கப்பட்டு அனுமதிக்காக அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**10.** மலட்டாறு ஓடை சிறு படுகை: –

மலட்டாறு ஓடை, கோவில்பட்டி வட்டத்தில், கடல் மட்டத்திற்கு மேல் சுமார் 500 அடி உயரத்தில் உற்பத்தியாகிறது. இந்த ஓடையில் சோழபுரம் அருகிலும், கீழ ஏரல் அருகிலும் சிறு ஓடைகள் இத்துடன் சேர்ந்து மலட்டாறு என்னும் பெயருடன் ஓடி கடைசில், கல்லாறு என்ற பெயரில் மன்னார் வளைகுடாவில் கலக்கிறது. இவ் ஓடையில் குறுக்கே கட்டபொம்மன் என்ற ஒரு அணை கட்டப்பட்டுள்ளது. இதனால் ৳05·54 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன,

மேற்படி நிலங்களுக்கு பாசன வசதி அளித்த பின் 409·69 மி. க. அடி தண்ணீர் மீதம் உள்ளது. மீதி தண்ணீரை நல்ல முறையில் பயன் படுத்த, ஓட்டப்பிடாரம், சிறு வட்டத்தில் எப்போதும் வென்ருன் பக்கத்தில் ஒரு நீர்த்தேக்கம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**11.** கொடுமுடியாறு — தாமரையாறு சிறு படுகை:—

இச்சிறு படுகை நாங்குநேரி தாலுகாவில் கடல் மட்டத்திற்கு மேல் சுமார் 3700 அடி உயரத்திலுள்ள மேற்குத் தொடர்சி மலையில் உற்பத்தியாகிறது, கொடுமுடியாறு, கோம்பையாறு ஆகிய இரண்டு சிறு நதிகள் ஒன்ருக இணைந்து, பிறகு தாமரையாறு என அறியப்படுகிறது. இந்த ஆற்றில் ஒரு அணைக்கட்டு மட்டும் கட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் மொத்தம் 393·24 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. மேற்கண்ட நிலங்களுக்கு பாசன வசதியளித்த பின் 2·49 மி. க. அடி தண்ணீர் மீதமுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது, மீதமுள்ள தண்ணீர் நம்பியாறுடன் கலக்கிறது.

கொடுமுடியாறு - கோம்பையாறு, இரண்டும் சேருமிடத்திற்கு சிறிது தூரம் கீழ் தாமரையணைக் கட்டிற்கு மேல் ஒரு நீர்த் தேக்கம் அமைப்பதற்காக திட்டம்வகுக்கப்பட்டு அதற்கான மதிப்பீடுதயாரித்து அரசின் அங்கீகாரம் பெற அனுப்பப்பட்டுள்ளது.

**12.** அனுமாநதி படுகை (நாங்குனேரி)

இது நாங்குனேரி தாலுகாவில் மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள மகேந்திரகிரி மலையில் கடல் மட்டத்திற்குமேல் சுமார் 4250 அடி உயரத்திலிருந்து உற்பத்தியாகிறது. இந்த ஆற்றில் கட்டப்பட்டுள்ள 9 அணைகள் மூலம் வீரபாண்டியன் கால் மூலமாகவும் 2936·33 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கப்படுகிறது. மேற்கண்ட நிலங்களுக்கு பாசனவசதி யளித்தபின் 126·62 மி.க.அடி தண்ணீர் மீதமுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. மீதமுள்ள தண்ணீர் மன்னார் வளைகுடாவில் கலக்கிறது. இந்த ஆற்றின் முடிவில் தண்ணீர் மிகுதியாக காணப்படுகிறது. இருப்பினும் முதலில் சில அணைக்கட்டுகளில் தண்ணீர் பற்ருக்குறை இருந்து வருகிறது. எனவே அந்த குறையை நிவர்த்தி செய்ய ஆலத்துறையாற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

**13** நம்பியாறு படுகை

நம்பியாறு நாங்குனேரி வட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து கடல் மட்டத்திற்கு மேல் சுமார் 3480 அடி உயரத்தில் உற்பத்தியாகிறது. இந்த ஆற்றில் 9 அணைகள் கட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் மொத்தம் 9073·72 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றது, முதலில் சில அணைக் கட்டுகளில் தண்ணீர் பற்ருக் குறை இருந்தபோதிலும் முடிவில் 609·36 மி. க. அடி தண்ணீர் மீதமுள்ளதாக கணக்கிடப் பட்டுள்ளது. மீத முள்ள தண்ணீர் வங்காள விரிகுடாவில் கலக்கிறது,




## திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மழை நீர் அளவு நிலையங்களின் விவரங்கள்.

| எண். | மழை நீர் அளவு நிலையத்தின் பெயர். | வட்டத்தின் பெயர் | நீர்பிடிப்புத் திறன் மி. க. அடி / மைல் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1. | சங்கரன்கோவில் | சங்கரன்கோவில் | 4·836 |
| 2. | சிவகிரி | ,, | 7.961 |
| 3. | கோவில்பட்டி | கோவில்பட்டி | 4.750 |
| 4. | கயத்தார் | ,, | 6.100 |
| 5. | ஓட்டப்பிடாரம் | ,, | 3.350 |
| 6. | விளாத்திகுளம் | ,, | 4.500 |
| 7. | தென்காசி | தென்காசி | 8.230 |
| 8. | கடையநல்லூர் | ,, | 8.240 |
| 9. | ஆய்க்குடி | செங்கோட்டை | 5.520 |
| 10. | செங்கோட்டை | ,, | 11.030 |
| 11. | அம்பாசமுத்திரம் | அம்பாசமுத்திரம் | 10.300 |
| 12. | கடையம் | ,, | 8.770 |
| 13. | நாங்குனேரி | நாங்குனேரி | 6.455 |
| 14. | இராதாபுரம் | ,, | 5.190 |
| 15. | திருநெல்வேலி | திருநெல்வேலி | 6.100 |
| 16. | பாளையங்கோட்டை | ,, | 6.100 |
| 17. | ஸ்ரீவைகுண்டம் | ஸ்ரீவைகுண்டம் | 3.896 |
| 18. | தூத்துக்குடி | ,, | 3.949 |
| 19. | திருச்செந்தூர் | திருச்செந்தூர் | 6 662 |
| 20. | காயல்பட்டிணம் | ,, | 4.930 |
| 21. | குலசேகரப்பட்டிணம் | ,, | 7.615 |
| 22. | சாத்தான்குளம் | ,, | 4.610 |

# பகுதி - 6



# "நெல்லையின் நீர்வளம்"

செ. நெ. மு. முகம்மது உசேன்,
உதவியாளர், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம்,
திருநெல்வேலி.

"தென்பாண்டிச் சீமையாய் திக்கெல்லாம் புகழேற்று
நன்னயமாய்ச் செந்தமிழை நாவினிக்கப் பேசுகின்ற
பொன்னாடு பொதிகைமலை வளங்கொழிக்கும் தென்னாடு
ஒன்பதுடன் இருவட்டம் ஒருங்கிணைந்த மாவட்டம்
நெல்விளையும் கழனிகளால் நீண்டபெரும் வேலியிட்டு
பல்வளமும் தன்னகத்தே பாங்குடனே கொண்டபூமி
திருநெல்லை மாவட்டச் சீர்த்தியினைச் செப்புதற்குப்
பெருகிவரும் நீர்வளத்தின் பெருமையே சான்றாகும்!
**பொருநையுடன்** **காரையாறு** பொங்கிவரும் **சேர்வையாறு**
அருவிவளச் **சிற்றாறு** அழகுமணி **முத்தாறு**
**வைப்பாறு** **பச்சையாறு** வழிந்துவரும் **நம்பியாறு**
ஒப்பில்லா **மலட்டாறு** உலவிவரும் **கருணையாறு!**
இத்தகைய ஆறுகளில் இடையிடையே அணைகளிட்டு
தத்திவரும் நீர்வளத்தை சார்ந்தகால் வாய்ப்படுத்தி
கடலன்ன ஏரிகுளக் கண்மாய்கள் நிறைவாக்கி
இடமெல்லாம் பயிர்விளைக்கும் எழிலான நெல்லையே!
கார்வளமும் மலைவளமும் கழனியெங்கும் நீர்வளமும்
சீர்வளமும் கலைவளமும் சீர்மையாய் விளங்குமெங்கள்
நெல்லைக்கு ஒப்பாக இல்லையொரு பூமியென
எல்லையிலாப் பெருமையிலே இசைபாடி மகிழ்வோமே!

# அணைகள் நிறைந்த நெல்லை!

மு. அசனலி, பி. ஏ.
உதவியாளர், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்,
திருநெல்வேலி.

1. தேரோடும் வீதிமிகும்
திரு நெல்லைச் சீமையிலே,
நீரோடும் பொருணை நதி
நெற்கொளிக்கும் கருணை நதி!

2. மணிமுத்து ஆற்று அணை
மாவட்டம் வரட்சியின்றி
அணி செய்து வளங்கொளிக்கும்
அழகுமிகு நீர்த் தேக்கம்!

3. பயிர் விளைந்து பசி போக்கி
பன்னூறு ஆருகி
உயிர் காக்கும் பாவநாசம்
உயர்ந்த தொரு நீர்த்தேக்கம்!

4. கடனுகவும் இராமநதி
கால்வாய்கள் வழிச் செல்லும்
இடமெல்லாம் நெல் நாற்று
இளந்தென்றல் உடனுடும்!

5. ஆரோடி வளங்கொளிக்கும்
அழகுமிகும் அணைகளெல்லாம்
ஏரோடிப் பயிர் விளைக்கும்
எங்கள் நெல்லைச் சீமையிலே!



# திருநெல்வேலி மாவட்டத்தில் 1967க்குப் பின்

## நீர்ப்பாசனத்துக்கு பயன்படுத்தப்படுகிற, அரசால் முடிக்கப்பட்ட, நடைபெறும் மற்றும் நிறைவேற்றப்பட இருக்கும் பல பெரிய சிறிய திட்டங்கள் பற்றிய சிறு அறிக்கை:-

திரு. டி. எச். எல். நரசிம்மையா, பி. எஸ்சி. பி. இ.
மேற்பார்வை பொறியாளர், பொ. ப. துறை.

1. இயற்கை வளம் யாவையும் மக்களுக்கு பயன்படுத்தும் பொருட்டு, தொழில்நுட்ப ஆய்வுகள் பல மேற்கோண்டு தமிழக அரசால் உணவு உற்பத்திக்காக பல நல்ல திட்டங்களை மேற்கொண்டு வருவது யாவரும் அறிந்ததே. பல நீர்த் தேக்கங்கள், சில பெரிய மற்றும் நடுத்தர அணைக்கட்டுத் திட்டங்கள், மற்றும் சிறப்புச் சிறு பாசனத் திட்டங்கள் தமிழக அரசு பொதுப்பணித்துறையினரால் கடந்த ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டுள்ளன. பல வேலைகள் நடந்துவருகின்றன. மேலும் பல திட்டங்களை அரசு மேற்கொள்ளவிருக்கிறது.

2. இவ்வாறு அரசினுல் மேற்கொள்ளப்படும் திட்டங்களை இரு பகுதிகளாக பிரிக்கலாம்.

1. பெரிய நீர்த்தேக்கத்திட்டங்கள் (Projects)
2. சிறப்பு சிறிய பாசனத்திட்டங்கள் (S. M. I. P.)

மேற்கண்ட இரு பிரிவுகளின் கீழ் திருநெல்வேலி மாவட்டத்தில் அவ்வேலைகளின் தற்போதைய நிலையைக் காட்டும் வகையில் கீழ்க்கண்ட விவரங்கள் தரப்படுகின்றன.

### 1. பெரிய நீர்த்தேக்கத் திட்டங்கள்:-

### (அ) நிறைவேற்றப்பட்டவை:-

**1. கடனு நீர்த்தேக்கத் திட்டம்:-**

இது 1973ம் வருடம் ஜூன் திங்களில் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. செலவிடப்பட்ட தொகை ரூ. 181 லட்சம். பயனடையும் பரப்பு 8636 ஏக்கர்.

**2. ராமநதி நீர்த்தேக்கத் திட்டம்:-**

இது 1973ம் வருடம் டிஸம்பர் திங்களின் அனேகமாக முடிக்கப்பட்டது. செலவிடப்பட்ட தொகை ரூ. 153 லட்சம். பயனடையும் பரப்பு 5043 ஏக்கர்.

### ஆ) செயலாக்கப்பட்டுவரும் திட்டங்கள்

**1. கருப்பாநதி நீர்த்தேக்கத்திட்டம்:-**

இது 1973ம் வருடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 1975ல் வேலைகள் முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. மதிப்பீட்டின் தொகை ரூ. 154 லட்சம் பயனடையும் பரப்பு 8663 ஏக்கர்.

**2. ஸ்ரீவைகுண்டம், மருதூர் அணைக்கட்டுகளின் கால்வாய்களுக்கு உள்தளமிடும் திட்டம்**

தூத்துக்குடி மற்றும் அதன் சுற்றுப்புறத்திலுள்ள தொழிற்சாலைகளுக்கு தேவையான தண்ணீரை தாம்பிரபரணியின் மூலமாகக் கொடுக்க மருதூர் அணைக்கட்டு கால்வாய்களும் மற்றும் ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டு கால்வாய்களும் சிமிண்ட், கற் கலவையினுல் உள்தளமிடும் வேலை 1970ல் மேற்கொள்ளப்பட்டு நடந்து வருகின்றன. மதிப்பீடு தொகை ரூ. 155 லட்சம் ஆகும்.

**3. குண்டாறு நீர்த் தேக்கத்திட்டம்:–**

இந்நீர்த்தேக்கத் திட்ட வேலைகள் 1974ல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மதிப்பீடு ரூ 40.7 லட்சம். பலனடையும் பரப்பு 2141 ஏக்கர் ஆகும்.

**இ) அரசின் பரிசீலனையில் உள்ள திட்டங்கள்.**

இதைத்தவிர கீழ்க்கண்ட திட்டங்கள் விரைவில் அரசினரால் அனுமதிக்கப்பட இருக்கின்றன.

| | | |
|---|---|---|
| 1 | அடவிநயினார்கோவில் நீர்த்தேக்கத் திட்டம் | மதிப்பீடு:– தயாரிப்பில் உள்ளது<br>பயனடையும் பகுதி 1178 ஏக்கர் |
| 2 | கொடுமுடியாறு நீர்த்தேக்கத் திட்டம் | மதிப்பீடு:- ரூ. 72 லட்சம்<br>பயனடையும் பகுதி 6200 ஏக்கர் |
| 3 | பச்சையாறு நீர்த்தேக்கத் திட்டம் | மதிப்பீடு:– ரூ. 225 லட்சம்<br>பயனடையும் பகுதி 12000 ஏக்கர் |
| 4 | ஜம்புநதி நீர்த்தேக்கத் திட்டம் | மதிப்பீடு:– ரூ. 89.5 லட்சம்<br>பயனடையும் பகுதி 4500 ஏக்கர் |
| | வாலமலையாறு நீர்த்தேக்கத் திட்டம் | மதிப்பீடு:- ரூ. 54.5 லட்சம்<br>பயனடையும் பகுதி 2000 ஏக்கர் |

இதைத் தவிர கீழ்க்கண்ட திட்டங்கள் ஆய்வில் உள்ளன.

| | | |
|---|---|---|
| 1 | அழுத கண்ணியாறு நீர்த் தேக்கத் திட்டம் | ரூ. 170 லட்சம் |
| 2 | பழையாறு - வாலமலையாறு நீர்த்தேக்கத் திட்டம் | ரூ. 205 லட்சம் |
| 3 | வரட்டாறு | ரூ. 59 லட்சம் |
| 4 | கோம்பையாறு | ரூ. 94 லட்சம் |
| 5 | சீவலப்பேரியின் அருகே உப்போடை நீர்த்தேக்கத் திட்டம் | ரூ. 49 லட்சம் |

2. தமிழ்நாடு அரசு நீர்ப்பாசன பணிக்காக, கோடிக்கணக்கான ரூபாய்களை ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கீடு செய்து அதன் மூலம் சிறப்புச் சிறிய பாசனத்திட்டத்தின் கீழ் புதிய அணைக் கட்டுகளும், ஏரிகுளம் அமைக்கப்பட்டு வருகின்றன. நெல்லை மாவட்டத்தில் இது போன்ற பணிகளின் விவரம் வருமாறு.

**(அ) நிறைவேற்றப்பட்டுள்ள சிறப்புச் சிறுபாசனத்திட்டங்கள்.**

| வரிசை எண். 1. | வேலையின் பெயர். 2. | மதிப்பீட்டுத்தொகை (ரூ) 3. |
|---|---|---|
| | **திருநெல்வேலி வட்டம்.** | |
| 1 | சிவலப்பேரி குளத்தை புனரமைத்தல் | 481,000/– |
| 2 | பராக்கிரமபாண்டியன் குளத்தை புனரமைத்தல் | 11,33,000/– |
| 3 | உக்கிரன்கோட்டை வரத்துக் கால்வாயை திருத்தி அமைத்தல் | 45,000/– |
| 4 | கோட்கன் கால்வாயை திருத்தியமைத்தல் | 3,30,000/– |
| 5 | பிள்ளையார்குளம் கால்வாயை திருத்தியமைத்தல் | 19,000/– |
| 6 | திருநெல்வேலி கால்வாயை திருத்தியமைத்தல் | 3,14,000/– |
| 7 | பாளையங்கால்வாயை திருத்தியமைத்தல் | 4,25,000/– |
| 8 | பரப்பிக்குளத்துக்கு பாளையங்கால்வாயின் ஊட்டுகால்வாய் வெட்டுதல். | 35,500/– |
| | | 27,82,500/– |



| 1 | 2 | 3 |
|---|---|---|
| | **திருவைகுண்டம் வட்டம்.** | |
| 1 | கோரம்பள்ளம் பொட்டைக்குளங்களை மேம்பாடு செய்தல் | 5,17,500/- |
| 2 | நெட்டூர் காடுவெட்டி கால்வாயை புதுப்பித்தல் | 83,000/- |
| 3 | ஆலந்தா கிராமத்தின் அருகே காட்டோடையின் குறுக்கே அணைக்கட்டுதலும், உலக்குடிகுளம் மற்றும்சம்பன் குளங்களுக்கு வரும் கால்வாய் வெட்டுதலும் | 5,22,000/- |
| 4 | மருதூர் மேலக்கால்வாய் திருத்தி அமைத்தல் | 2,60,000/- |
| 5 | மருதூர் கீழக்கால்வாயை திருத்தி அமைத்தல். | 2,30,000/- |
| | | 16,12,500/- |
| | **விளாத்திகுளம் வட்டம்:** | |
| 1. | மேலமாந்தை குளத்தை புனரமைத்தல் | 2,48,000/- |
| 2. | படந்தபுளி கிராமத்தில் புதிய கண்மாய் அமைத்தல் | 1,48,500/- |
| 3. | கொல்லம் பரம்பு | 3,83,000/- |
| 4. | தத்துனேரிகுளத்தை புனரமைத்தல் | 6,17,200/- |
| | | 13,96,700/- |
| | **கோவில்பட்டி வட்டம்:** | |
| 1. | மேலகரந்தை கிராமத்தின் அருகே புதிய கண்மாய் அமைத்தல் | 10,02,800/- |
| 2. | அருணச்சலபுரம் கிராமத்தின் ,, ,, | 2,50,000/- |
| 3. | இனும் மணியாச்சி குளத்தை புனரமைத்தல் | 62,300/- |
| 4. | ஆத்திகினர்குளத்தை ,, | 1,10,000/- |
| 5. | மாவிலோடை கண்மாயை மேம்பாடு செய்தல் | 85,000/- |
| 6. | வரட்டாற்றின் குறுக்கே அணைக்கட்டுதலும் மாவிலோடை குளத்திற்கான வரத்துக்கால் மராமத்து செய்தலும் | 1,43,000/- |
| 7. | அத்தி கிணறுக்கு தண்ணீர் வர ஓர் அணை கட்டுதல் | 2,21,000/- |
| 8. | குளத்தூர் கிராமத்திலுள்ள தெற்கு குளத்தை மராமத்து செய்தல் | 99,000/- |
| 9. | உப்போடைக் குளம் மராமத்து செய்தல் | 1,73,000/- |
| 10. | நம்பிபுரம் பெரியகுளத்தை தூர்வாரி புனர் அமைத்தல் | 2,50,000/- |
| | | 23,96,100/- |
| | **அம்பாசமுத்திரம்:** | |
| 1. | நதியுண்ணி கால்வாயை புனரமைப்பு செய்தல் | 1,50,000/- |
| 2. | வடக்கு கோடமேல் அழகியன் கால்வாய் | 1,49,000/- |
| 3. | தெற்கு கோடமேல் அழகியன் ,, | 48,000/- |
| 4. | சிங்கம்பட்டி பெருங்கால் திருத்தியமைத்தல் | 62,000/- |
| | | 4,09,000/- |

| 1 | 2 | 3 |
| --- | --- | --- |
| | **தென்காசி வட்டம்:** | |
| 1. | உக்கிரன்கோட்டை கால்வாயை திருத்தியமைத்தல் | 45,000/- |
| 2. | நெட்டூர் காடுவெட்டி கால்வாயை ,, | 83,000/- |
| 3. | பிள்ளையார்குளம் கால்வாய் ,, | 19,500/- |
| 4. | கன்னியாம்தரு வாய்க்காலை மேம்பாடு செய்தல் | 3,24,000/- |
| 5. | பாலூர்வரத்துக் கால்வாயை திருத்தியமைத்தல் | 78,000/- |
| 6 | குலையனேரிபட்டி வரத்துக் காலையும் மற்றும் குளத்தையும் மராமத்து செய்தல் | 1,73,000/- |
| | | 7,22,500/- |
| | **செங்கோட்டை வட்டம்:** | |
| 1 | மொட்டை நீர்த்தேக்கம் திட்டம் | 3,60,000/- |
| 2 | சிறிமூலபேரி ,, | 5,75,000/- |
| | | 9,35,000/- |
| | **சங்கரன்கோவில் வட்டம்:** | |
| 1 | நரசிங்கபேரி குளத்திற்கு சிறப்பு மராமத்து செய்தல் | 1,71,000/- |
| | **தூத்துக்குடி வட்டம்:** | |
| 1 | பெட்டைக்குளம் கோரம்பள்ளம் நிறை நீர்மட்டம் உயர்த்துதல் | 5,17,000/- |

## (ஆ) தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் சிறப்பு சிறு பாசன திட்டங்கள்.

| வரிசை எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய்) |
| --- | --- | --- |
| 1 | 2 | 3 |
| | **திருவைகுண்டம்:** | |
| 1 | மருதூர் மேலக்கால்வாயை திருத்தியமைத்தல் | 2,60,000/- |
| 2 | மருதூர் கீழ்க்கால்வாயை திருத்தியமைத்தல் | 2,30,000/- |
| 3 | கால்வாய் கண்மாயில் இருந்து சடையநேரி கண்மாய்க்கு கால்வாய் வெட்டுதல் | 18,25,000/- |
| | | 23,15,000/- |



| 1 | 2 | 3 |
| --- | --- | --- |
| | **திருச்செந்தூர்:** | |
| 1 | பள்ளிப்பத்து கிராமத்தில் பெட்டைக்குளத்தை புனரமைத்தல் | 2,11,000/- |
| 2 | புத்தன்தருவை வடிநீர் திட்டம் நிலை 1. | 7,89,800/- |
| 3 | கடம்பாகுளத்தில் பொறையூர் தலைமதகில் கூடுதலாக மடை அமைத்தல் | 3,68,000/- |
| | | 13,68,800/- |
| | **நாங்குநேரி.** | |
| 1. | படலையார் குளம் மற்றும் வரத்துக் கால்வாயைமுன்னேற்றப் பணி செய்தல். | 1,04,000/- |
| 2. | சுவிசேஷபுரம் அருகே புதிய கண்மாய் அமைத்தல். | 2,20,000/- |
| 3. | ஆலத்துறையார் தண்ணீரை அனுமாநதிக்கு திருப்பிவிடுதல். | 21,83,500/- |
| | | 25,07,500/- |
| | **விளாத்திகுளம்.** | |
| 1. | என். வெங்கடேசபுரம் அருகே புதிய கண்மாய் அமைத்தல். | 3,18,000/- |
| 2. | வைப்பாற்றின் குறுக்கே ஆத்தங்கரை அருகில் அணைக்கட்டு கட்டுதல் | 24,00,000/- |
| | | 27,18,000/- |
| | **கோவில்பட்டி:** | |
| 1. | சிந்தாலக்கரை கிராமத்தின் அருகே புதிய கண்மாய் அமைத்தல் | 3,38,500/- |
| 2. | ராமச்சந்திரபுரம் கிராமத்தின் அருகே புதிய கண்மாய் அமைத்தல். | 8,80,000/- |
| 3. | அழகப்பபுரம் கிராமத்தின் அருகே புதிய கண்மாய் அமைத்தல். | 2,45,000/- |
| 4. | புதுசின்னையாபுரம் கிராமத்தின் ,, ,, ,, அமைத்தல் | 5,80,000/- |
| 5. | ஆதனூர் கிராமத்தில் பஞ்சந்தாங்கி குளத்தை திருத்தியமைத்தல் | 2,05,000/- |
| 6. | எப்போதும்வென்ருன் கிராமத்தில் மலட்டாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்தல். | 18,33,000/- |
| 7. | துறையூர் கிராமத்தில் மலட்டார் ஓடையின் குறுக்கேயுள்ள அணைக்கட்டை மேம்பாடு செய்தல். | 1,89,000/- |
| | | 42,70,500/- |
| | **அம்பாசமுத்திரம்:** | |
| 1. | கன்னடியன் கால்வாயை திருத்தியமைத்தல் | 5,50,000/- |

| 1 | 2 | 3 |
|---|---|---|
| | **சங்கரன்கோவில்:** | |
| 1. | ஊத்தன்குளம் கிராமத்தின் அருகே புதிய கண்மாய் அமைத்தல் | 1,10,000/- |
| 2. | மைப்பாரை கிராமத்தின் அருகில் புதிய கண்மாய் அமைத்தல் | 1,75,000/- |
| | | 2,85,000/- |
| | **தூத்துக்குடி** | |
| 1. | கோரம்பள்ளம் உபரித் தண்ணீர், வாய்க்காலில் இரு மருங்கிலும் வெள்ளத் தடுப்பு அணை அமைத்தலும் பலப்படுத்துதலும் நீ. வே. 12,000/- | 2,20,000/- |
| 2. | சாஸ்தாவிநல்லூர் தருவையை நீர்மூழ்கும் பகுதியிலிருந்து தடுத்தல். | 1,25,000/- |
| | | 3,45,000/- |

இ) இதைத் தவிர மேலும் இத்தகைய சிறப்பு சிறு பாசனத் திட்டங்கள் 84க்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மதிப்பீடுதயாராகிவிட்டது அரசு அனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 84 திட்டங்களின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 371.53 லட்சம் அரசு அனுமதி கிடைத்தவுடன் வேலைகள் மேற்கொள்ளப்படும்.

3. மேற்கண்ட விவரங்களிலிருந்து தமிழகஅரசு நிறைவேற்றியுள்ள நல்ல திட்டங்களின் மூலமாக நெல்லைமாவட்டத்தில் நீர்வளம் பெருகியுள்ளது என்பது கண்கூடு. நீர்வளம் பெருக நீர்ப்பாசனப் பரப்பு அதிகம் ஆகி அதிக உணவு உற்பத்தி ஏற்பட்டு பசுமைப் புரட்சி கண்டு தமிழ்நாட்டில் வளம் மேலோங்கும் என்பது உறுதியாகியுள்ளது.



# பாசன நீர் பராமரிப்பு

( Water Management )

**பி. சந்திரசேகரன்,** பி. எஸ்ஸி. (விவசாயம்)
மாவட்ட வேளாண்மை அலுவலர், திருநெல்வேலி.

## முன்னுரை

பயிர் உற்பத்தியின் எல்லாத் தேவைகளிலும் பாசன நீர் மிக மிக முக்கிய பங்கு வகிக்கிறது. ஒரு விவசாயிடம் நல்ல செழிப்பான நிலம், அமோக விளைச்சல் தரக்கூடிய பயிர், போதுமான அளவு உரம், நல்ல சாகுபடி முறைகள், கவன மிக்க மேற்பார்வை முதலியன இருந்தாலும், பாசன நீர் இல்லையானால் அவரால் அதிக விளைச்சலை அடையவே முடியாது. நாம் என்ன முயன்றாலும், மானாவாரி நிலத்தில் போதுமான அளவு உற்பத்தியைப் பெருக்க முடியாது. ஆதலால் பாசன நீர், பண்ணை—பராமரிப்பில் மிக மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

## சரித்திரம்

நாகரீகத்தைப்போல் பாசனமுறைக்கும் பழமையானதொன்றாகும். பலவிதமான பண்டைய நாகரீகம் ஆற்றங்கரையிலே, தண்ணீர் வசதிமிக்க இடங்களில் தோன்றியதாகும். உதாரணமாக எகிப்து நாகரீகம் நைல்நதிக் கரையிலும், இந்து நாகரீகம் இந்துநதி பள்ளத்தாக்கிலும், பாபிலோனியன் நாகரீகம் யூபிரட்டீஸ் பள்ளத்தாக்கிலும் தோன்றியதாகும். பாசனம் எப்பொழுது தடைப்பட்டதோ அப்பொழுதே மேற்கூறிய நாகரீகமும் வளர்ச்சி குன்றிப்போனது,

## நீர்த் தேக்கங்கள்:

இந்தியாவின் சராசரி வருட மழை 45 அங்குலமாகும். இந்த அடிப்படையில் இந்தியாவில் 3000 மில்லியன் ஏக்கர் அடி நீர் மழையிலிருந்து நமக்கு கிடைக்கிறது. இதில் 1/3 பங்கு அதாவது 1000 மில்லியன் ஏக்கர் அடிநீர் ஆவியாகி நஷ்டமடைகிறது. 650 மில்லியன் ஏக்கர் அடி மண்ணில் உறிஞ்சப்படுகிறது. மீதி 1350 மில்லியன் ஏக்கர் அடி நீர்தான் பாசன கால்வாய்கள் வழியாக பாய்ச்சப்படுகிறது. இதிலும் மூன்றில் ஒரு பங்கு அதாவது 450 மில்லியன் ஏக்கர் அடி பாசன நீராக பயன்படுவதாக கணக்கிடப்பட்டிருக்கிறது.

## புள்ளி விபரம், குறியீடும், சாதனையும்

1800-ம் ஆண்டில் இந்தியாவில் பாசன நிலப்பரப்பு 2 மில்லியன் ஏக்கராகும். இதை 1900-ம் ஆண்டில் 30 மில்லியன் ஏக்கராகவும், 1950-ல் 51 . 5 மில்லியன் ஏக்கராகவும், பெருக்கப்பட்டிருக்கிறது. ஆறாவது ஐந்தாண்டு திட்ட இறுதியில் பாசன பரப்பு 175 மில்லியன் ஏக்கராவாக்க திட்டக் குழுவால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

## பாசனப் பண்ணைக்கு மண்ணின் பொருத்தம்:

மண்ணின் தன்மையை அதிலிருந்து கிடைக்கும் பயிர் உற்பத்தியைக் கொண்டே பொதுவாகக் கணக்கிடுகிறோம். பாசனப் பண்ணையின் பாசனத்திற்கு ஏற்ற மண்தானா என்பதை மண்ணின் குணத்தைக்கொண்டே கணக்கிடுகிறோம். அவைகளாவன.

1. மண், ஈரத் தன்மையை ஏற்கும் திறனுடையதாக இருக்கவேண்டும்
2. மண்ணின் சரிவு சமமாக பாசன நீர்பாய பொருத்தமுடையதாக இருக்கவேண்டும்.

3. மண்ணின் ஆழம், மண்ணை சமப்படுத்தினுல் அடிமண் வெளிவரா வண்ணம் இருக்க வேண்டும்.

4. மண்ணின் நீர் உறிஞ்சும் தன்மை நன்ருக இருந்தால் வடிகால் நன்ருக இருக்கும்.

5. அனுமதிக்கத்தக்க அளவு உப்புச்சத்துக்களை கொண்டதாக மண் அமைந்திருந்தால் சீர்திருத்தம் செய்வதற்கு ஏற்றதாக அமையும்.

கிடைக்கும் நீரைக்கொண்டு மிகசிக்கனமாகவும், அதிக லாபகரமாகவும் எவ்விதம் பாசன பராமரிப்பு செய்யலாம் என்பதைப் பார்ப்போம்.

## அ. மாஞவாரி விவசாயம்:

1. மழையினுல் கிடைக்கும் தண்ணீரைப் பயிர் உற்பத்திக்காக பயன்படுத்த வேண்டும்.

2. அமோக விளைச்சல் தரும் குறைந்த வயதுடைய மாஞவாரி ரகப் பயிர்களை பயிரிட்டு பயனடைய வேண்டும்.

## ஆ. சிறு பாசன விவசாயம்:

1. ஒன்று அல்லது இரு கிணறுகளைக் கொண்டு குறைந்த நீரைப்பாய்ச்சி சிறிதளவு கூடுதல் ஏக்கரில் பயிர் செய்யலாம்.

2. குளத்துப் பாசனத்துடன் வருடத்தில் ஒரு குறிப்பிட்ட மாதத்தில் கிணற்று நீரை உபயோகித்து இன்னும் சிறிதளவு நிலத்தைப் பயன்படுத்தலாம்.

3. ஆயக்கட்டின் பாசனம் ஒன்றுவிட்டு ஒரு வருடம் அல்லது குறிப்பிட்ட மாதத்தில் கிடைக்கும் நீரை உபயோகித்து பயன்படுத்தலாம். (உதாரணம் மணிமுத்தாறு பாசனம்)

## இ. முழுபாசனமுடைய ஆயக்கட்டு

வருட முழுவதும் கிடைக்கக்கூடிய பாசன நீரைக்கொண்டு இரண்டு அல்லது மூன்று பயிர்கள் எடுத்து பயனடைய வேண்டும்.

## பாசன நீரின் உபயோகத்தை அதிகப்படுத்துவது எவ்விதம்

1 வயலிலும், வாய்க்காலிலும் உள்ள வேண்டாத களைகளை அகற்றவேண்டும்.

2 வாய்க்காலிலும், கால்வாயிலும், வயல் பள்ளங்களில் நீர் வடித்து வீணுவதைத் தடுக்க உட்புறம் பூச்சு பூசி வாய்க்கால்களை பராமரித்து வரவேண்டும்.

3 நிலத்தை சமப்படுத்தி பாதுகாக்க வேண்டும்.

4 நிலம் அதிக அளவு நீர் உறிஞ்சுவதைத் தடுக்க வேண்டும்

5 மண்ணின் தன்மைக்கேற்ப சரியான பயிர் சாகுபடி முறைகளையும் அமோக விளைச்சல் ரகங்களையும் பயன் படுத்த வேண்டும்.

6. உன்னதமான விஞ்ஞான விவசாய சாகுபடி முறைகளையும், உரமிடும் முறை, பயிர் பாதுகாப்பு முறைகளையும் கையாளவேண்டும்.

7. குறைந்த அளவு பாசன நீரை உபயோகித்து நல்ல முறையில் நீர்ப்பாய்ச்சினுல் தண்ணீர் மிச்சப்படும். அவையாவன.



1) பழங்களுக்கும், காய்கறி வகைகளுக்கும் தேவையானபோது பாசனம்.
2) தெளிப்புமுறை பாசனம்,
3) சால் பாசனம் (வரிசை நடவுக்கு)
4) சம உயர வரப்புகள் அமைந்த பாசனம்,
5) சுற்றுப் பாசனம் (தீவனப் பயிருக்கு)
6) சிறுகுழிகள் மூலம் சமநிலத்துப் பாசனம்.

## *பல விதமான பயிருக்குத் தேவையான பாசன நீரைப்பற்றிப் பார்ப்போம்.*

### பருத்தி:

நிலத்தின் ஈர்ப்புத் தன்மை 20% மாக இருந்தால் பருத்திக்கு 6 முதல் 9 தடவை நீர்ப் பாய்ச்ச வேண்டும். மழையின் அளவைப் பொறுத்து 30 முதல் 40 நாளைக் கொருமுறை நீர்ப் பாய்ச்சினுல் போதும். இலேசான மண்ணில் 600 மி மீ. முதல் 875 மி. மீ. வரை பாசன நீர் தேவைப்படும்.

### மக்காச்சோளம்

நிலத்தின் ஈர்ப்புத்தன்மை 70 முதல் 80%மா யிருந்தால் 5 முதல் 8 நாட்களுக்கொருமுறை நீர்ப்பாய்ச்ச வேண்டும். பயிர் முழு வளர்ச்சி அடைய மொத்தம் 675 முதல் 895 மி. மீ. தண்ணீர் தேவைப்படும்.

### நிலக்கடலை

நிலத்தின் ஈர்ப்புத்தன்மை 60% மா இருந்தால் மொத்தம் 9 முதல் 13 தடவை டி. எம் வி. நிலக்கடலைக்கு நீர்ப்பாய்ச்ச வேண்டும். மழையின் அளவைப் பொறுத்து 8 முதல் 15 நாள்வரை இடைவெளி விட்டு நீர்ப்பாய்ச்சலாம். மொத்தம் 511 மி. மீ. முதல் 636 மி.6மீ. நீர் தேவைப்படும்·

### சோளம், கம்பு, பயிர்

நிலத்தின் ஈர்ப்புத்தன்மை 20% மா இருந்தால், முக்கியமாக சிம்பு அடிக்கக்கூடிய நேரத்திலும் பூக்கும் நேரத்திலும் கட்டாயம் நீர்ப்பாய்ச்சப்பட வேண்டும்.

### ஒரு யூனிட் பாசன நீரில் பயிர்களின் உற்பத்தித் திறன்

| பயிர் (புது ரகம்) | நீர்த்தேவை மி. மீ. | விளைச்சல் கி/ஹெக். | உற்பத்தி திறன் 1 மி. மீ. கி. கிராம் |
|---|---|---|---|
| கோதுமை | 400 | 5000 | 12 . 5 |
| சோளம் | 500 | 4500 | 9 . 0 |
| மக்காச்சோளம் | 625 | 5000 | 8 . 0 |
| கம்பு | 500 | 4000 | 8 . 0 |
| ராகி (கேப்பை) | 580 | 3600 | 9 . 2 |
| நிலக்கடலை | 540 | 3000 | 5 . 5 |
| நெல் | 1800 | 5000 | 2 . 8 |

மேலே குறிப்பிட்ட அட்டவணையிலிருந்து நெற்பயிருக்கு அதிக அளவில் பாசன நீர் தேவைப்படுகிறது என்பது புலனாகும். ஆனால் ஒரு யூனிட் நீரினால் உற்பத்தி திறனும் மிகமிக குறைவுதான். நெற்பயிருக்கு 1 யூனிட் பாசன நீரினால் உற்பத்தி திறன் 2 . 8 கி, கிராம் ஆனால் கோதுமையின் திறன் 12 . 5 கி. கிராமாகும்.

பல ஆராய்ச்சியிலிருந்து நெற்பயிருக்கு 5 செ. செ. மீ. உயர நீர்தான் பாய்ச்ச வேண்டும். என்று தெரியவருகிறது. அதிலும் குறிப்பாக மூடு கட்டும் நேரத்திலும், கருப்பிடிக்கும் நேரத்திலும், காய்பிடிக்கும் நேரத்திலும், கட்டாயம் நீர் பாய்ச்சுவது மிகமிக அவசியமாகும்.

# Cropping Pattern (பயிரிடும் முறை)

## II. *நெல்லை மாவட்டத்தில் கையாளப்படும் பயிர் முறை.*

| | முதந் போகம் | இரண்டாம் போகம் | மூன்றும்போகம் |
|---|---|---|---|
| 1 | நெல் | நெல் | பயறு வகைகள் |
| 2 | மிளகாய் | நெல் | |
| 3 | பருத்தி | நெல் | |
| 4 | நிலக்கடலை | நெல் | பயறு வகைகள் |
| 5 | வாழை | மறுகாம்பு வாழை | |
| 6 | சிறுதானியம் | மிளகாய் | சிறுதானியப் பயிர் |
| 7 | சிறுதானியம் | நிலக்கடலை | சிறுதானியம் |
| 8 | சிறுதானியம் | பருத்தி | சிறுதானியம் |

மானாவாரி நிலம்

ஒரு போக பயிர்

| பயிரின் பெயர்: | பயிரிடப்படும் மாதம் | | | |
|---|---|---|---|---|
| கம்பு | அக்டோபர் | — | நவம்பர் | (ஐப்பசி) |
| சாமை | செப்டம்பர் | — | அக்டோபர் | (புரட்டாசி) |
| வரகு | ,, | | ,, | ,, |
| கொள்ளு (காணம்) | ,, | | ,, | ,, |
| துவரை | மே | — | ஜுன் | (வைகாசி) |
| ராகி | ஜுலை | — | ஆகஸ்டு | (ஆடி) |
| நிலக்கடலை | ஜுலை | — | ஆகஸ்டு | (ஆடி) |
| பருத்தி | செப்டம்பர் | — | நவம்பர் | (ஐப்பசி) |
| சென்னு (நிலவாகை) | ஏப்ரல் | — | மே | (சித்திரை) |

இருபோக பயிர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | சோளம் | ஏப்ரல் | — | மே | (சித்திரை) |
| | பயறு வகைகள் | செப்டம்பர் | — | அக்டோபர் | (புரட்டாசி) |
| 2 | நிலக்கடலை | ஜனவரி | — | பெப்ருவரி | (மாசி) |
| | சோளம் | செப்டம்பர்— | — | அக்டோபர் | (புரட்டாசி) |

கலப்புப்பயிர்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | பருத்தி | + உழுந்து | செப்டம்பர் | — | அக்டோபர் | (புரட்டாசி) |
| 2 | நிலக்கடலை | + துவரை | ஜுலை | — | ஆகஸ்ட் | (ஆடி) |
| 3 | பருத்தி | + கொத்தமல்லி | செப்டம்பர் | — | அக்டோபர் | (புரட்டாசி) |
| 4 | நிலக்கடலை | + உளுந்து (பயறு) | ஜனவரி | — | பெப்ருவரி | (மாசி) |
| 5 | பருத்தி | + சூரியகாந்தி | மார்ச் | — | ஏப்ரல் | (பங்குனி) |



நீர்ப்பாசன ஒரு போகப் பயிர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நெல் | — | செப்டம்பர் | — | அக்டோபர் | (புரட்டாசி) |
| வாழை | — | ஜனவரி | — | பிப்ரவரி | (தை) |
| கரும்பு | — | ஏப்ரல் | — | மே | (சித்திரை) |

இருபோகப் பயிர்கள்

| | (முதந் போகம்) | | (இரண்டாம் போகம்) | |
|---|---|---|---|---|
| 1 | (1) நெல் | ஜுன் — ஜுலை (ஆனி) | (2) நெல் | அக்டோபர் — நவம்பர் (ஐப்பசி) |
| 2 | (1) நெல் | செப்டம்பர் — அக்டோபர் (புரட்டாசி) | (2) பருத்தி | பெப்ரவரி — மார்ச் (மாசி) |
| 3 | (1) நெல் | செப்டம்பர் — அக்டோபர் (புரட்டாசி) | (2) நிலக்கடலை | ஜனவரி — பெப்ரவரி (தை) |
| 4 | (1) நெல் | செப்டம்பர் — அக்டோபர் (புரட்டாசி) | (2) மிளகாய் | ஏப்ரல் — மே (சித்திரை) |
| 5 | (1) நெல் | செப்டம்பர் — அக்டோபர் (புரட்டாசி) | (2) எள் | ஜனவரி — பெப்ரவரி (தை) |
| 6 | (1) பயறு அல்லது நிலவாகை | மார்ச் — ஏப்ரல் (பங்குனி) | (2) நெல் | செப்டம்பர் — அக்டோபர் (புரட்டாசி) |
| 7 | (1) காய்கறி | ஏப்ரல் — மே (சித்திரை) | (2) பருத்தி | செப்டம்பர் — அக்டோபர் (புரட்டாசி) |
| 8 | (1) காய்கறி | ஏப்ரல் — மே (சித்திரை) | (2) மிளகாய் | செப்டம்பர் — அக்டோபர் (புரட்டாசி) |
| 9 | (1) நெல் | செப்டம்பர் — அக்டோபர் (புரட்டாசி) | (2) சோளம் அல்லது கம்பு | ஏப்ரல் — மே (சித்திரை) |

முடிவுரை :

எனவே, மேற்கூறிய வழிமுறைகளை கையாண்டு, குறைந்த அளவு நீரைக்கொண்டு அதிக பரப்பளவில், குறைந்த வயதுடைய உயர் விளைச்சல் ரகங்களை பயிரிட்டு, ஒரு ஆண்டிற்கு ஒரு ஏக்கர் நிலத்தின் நிகர லாபத்தை பன்மடங்காக்கி பயனடைய விவசாயப் பெருமக்களை விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.



# இறைவை நீர்பாசனத் திட்டம்.

கெ. ஆர். சம்பந்தம், பி. ஏ.
இணைப்பதிவாளர், கூட்டுறவுத்துறை.
திருநெல்வேலி.

**முன்னுரை,**

புதிய கிணறுகள் தோண்டுதல், நீரேற்று இயந்திரங்கள் பொருத்துதல் மற்றும் இதர பாசன வசதிகளை அமைத்தல் போன்ற காரியங்களுக்காக கூட்டுறவு நிலவளவங்கிகள் மூலமாக வழங்கப்படும் நீண்டகாலக்கடன்களை பெரும்பாலும் அதிகமான விளை நிலங்களுடையோர்களும் வசதி படைத்தோர் மட்டுமே பெற்று பயனடைந்து வந்தனர். இவ்வித ஆக்கப் பணிகளில் முதலீடு அதிகம் தேவைப்பட்டதாலும், சிறு விவசாயிகளால் இதற்கான பணவசதியைப் பெறவோ அல்லது பெற்ற கடனைத் திரும்பசெலுத்தவோ முடியாமல் இருந்த காரணத்தாலும் பருவமழைபொய்க்கும் காலங்களில் பூமிக்கடியிலுள்ள நீரைப்பயன் படுத்தி பயிர்களைக்காத்து விளைவிக்க பெரிய விவசாயிகளால் மட்டுமே முடிந்தது இதனுல் சிறிய அளவில் விளைநிலங்களுடைய சிறு விவசாயிகள் கூட்டுறவு நிலவள வங்கிகள் மூலமாக வழங்கப்படும் நீண்டகால கடன்களைப் பெற்று அவர்களுடைய நிலங்களுக்கு தேவையான நீர்ப்பாசன வசதிகளை அமைத்துக் கொள்ளும் வாய்ப்பினை நல்கும் நோக்கத்தை கருத்திற்கொண்டு நமது அரசு சிறு விவசாயிகளுக்கென்று இறைவை நீர்ப்பாசான கூட்டுறவுச் சங்கங்களை ஆங்காங்கு அமைத்து அவர்களின் நிலங்களை ஒருங்கிணைத்து அந்நிலங்களுக்கு தேவையான நீர்ப்பாசன வசதிகளை பெறசிறிய நீர்ப்பாசன திட்டங்களைத் தீட்டி அத்திட்டங்களை செயல்படுத்துவதற்குத் தேவையான கடன்களை நிலவள வங்கிகள் இறைவை நீர்ப்பாசன சங்கங்களுக்கு வழங்கவகை செய்துள்ளது. இறைவை நீர்ப்பாசன சங்கங்களுக்கு வழங்கியுள்ள கடன்தொகைகளைக் கொண்டு நீர்ப்பாசன வசதிகளை அமைத்து சிறு விவசாயிகள் அவரவர்கள் நிலங்களில் விவசாயத்தை தாமேஅபிவிருத்தி செய்ய வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சிறுவிவசாயிகளும் குறைந்த அளவு நிலமுடையோரும் நாட்டின் பசுமைப் புரட்சியில் பங்கு ஏற்கும் வகையில் அரசு மேற்கொண்டுள்ள ஆக்கப்பணிகளில் இதுவும் ஒன்ருகும்

**திட்டத்தை செயல்படுத்துவதிலுள்ள முன்னேற்றம்,**

திருநெல்வேலி மாவட்டத்தில் சிறுவிவசாயிகளை உறுப்பினர்களாகக் கொண்டு 193 இறைவை நீர்ப்பாசன கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் 87 இறைவை நீர்ப்பாசன கூட்டுறவுச் சங்கங்களில் சிறிய நீர்ப்பாசன திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. இத்திட்டங்களின் மதிப்பீடு ரு 204.74 லட்சம் ஆகும். இத்திட்டங்களினுல் சுமார் 3110 ஏக்கர் தரிசு நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதிகள் கிடைக்கவிருக்கிறது. இத்திட்டங்களை செயல்படுத்துவதற்கு தேவையான கடன் மனுக்கள் ரூ. 82.78 லட்சம் அளவிற்கு தயாரிக்கப்பட்டு பிரதம நிலவள வங்கிகளுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. இத்தொகையில் இதுகாறும் ரூ. 14.70 லட்சம் கடனுக 21 இறைவை நீர்ப்பாசன சங்கங்களுக்கு அனுமதிக்கப்பட்டு ஆங்காங்கு இறைவை நீர்ப்பாசன திட்டங்கள் திறம்படசெயல்படுத்தப்படும் வகையில் வேலைகள் துவங்கப்பட்டுள்ளன.

2 இறைவை நீர்ப்பாசன திட்டங்களை செயல்படுத்துவதற்காக ஆங்காங்கு வட்டார அளவில் விவசாய பொறியில் மற்றும் சேவை நிலையங்கள் அமைத்து அவைகளிடம் இப்பணிகள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. இது போன்றுள்ள விவசாய பொறியியல் மற்றும் சேவை நிலையங்களில் இம்மாவட்டத்திலுள்ள மானுர், இராதாபுரம், வள்ளியூர், உடன்குடி மற்றும் வாசுதேவநல்லூர் விவசாயப்பொறியியல் மற்றும் சேவை நிலையங்கள் ஆங்காங்கு இறைவை நீர்பாசன திட்டவேலைகளை செயல்



படுத்துவதில் தீவிரமாக ஈடுபட்டு கணிசமான அளவு முன்னேற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இறைவைப்பாசன கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கும் மற்றும் இதர விவசாயிகளுக்கும் விவசாயத்தொழிலுக்கு தேவையான உபகரணங்களையும் உழவு, இயந்திரங்களையும் குறைந்த வாடகையில் அளித்து உதவி செய்ய ஆங்காங்கு வட்டார அளவிலுள்ள விவசாய பொறியியல் நிலையங்களுக்கு இந்தியஅரசு வங்கியிலிருந்து கணிசமான அளவில் நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இக்கடன் உதவிகளை மானுர், இராதாபுரம், வள்ளியூர், மற்றும் விவசாய பொறியியல் நிலையங்கள் பெற்று விவசாய உபகரணங்கள்மற்றும் டிராக்டர்களை தருவித்து அப்பகுதியிலுள்ள விவசாய பெருமக்களுக்கு குறைந்த வாடகையில் அளித்து விவசாய அபிவிருத்தியை அதிகரிக்க பெரிதும் உதவி புரிந்து வருகின்றது.

**முடிவுரை.**

இது போன்று இம்மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள இதர வட்டார விவசாயபொறியியல் மற்றும் சேவை நிலையங்களும் ஆங்காங்கே உள்ள இறைவை நீர்ப்பாசன சங்கங்களின் திட்டவேலைகளை செய்யவும் இந்தியஅரசு வங்கியிலிருந்து கடனுதவி பெற்று விவசாய உபகரணங்களை தருவித்து விவசாயிகளுக்கு குறைந்த கட்டணத்தில் வாடகைக்கு அளித்து சிறுவிவசாயிகளுக்கு பெரிதும் உதவநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# நெல்லை மாவட்டத்தின் நில நீர்வளம்

*தி. இராசகோபாலன்*, எம். எஸ்ஸி.,
உதவி புவியியல் வல்லுநர்,
தொழில் நுட்பப் பிரிவு,
விவசாய மறுநிதி கழகத் திட்டங்கள்,
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்,
திருநெல்வேலி.

ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு இன்றியமையாதனவையாக அங்குள்ள விவசாயம் மற்றும் தொழில் துறையில் முன்னேற்றம், மக்களின் வாழ்க்கை வசதியில் போதிய அபிவிருத்தி ஆகியவைகள் கருதப்படுகின்றன, இம் மூன்றிற்கும் நீரின் தேவை இன்றியமையாதனவாய் அமைந்துள்ளது. மக்களின் வாழ்க்கை வசதிகள் பெருகுவதாலும் தொழில் விவசாயம் ஆகியவை வெகுவாக முன்னேறுவதாலும் நீரின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. தமிழகத்தை பொருத்த மட்டில் காவிரியையும் குறிப்பாக நெல்லை மாவட்டத்தில் தாம்பிரவருணியையும் தவிர வேறு குறிப்பிடத்தக்க ஜீவநதிகளோ, பெரிய நீர்நிலைகளோ இல்லை. இருக்கின்ற ஓரிரண்டு நீர் வசதிகளையும் அநேகமாக நாம் முழுமையாகப் பயன்படுத்திவிட்டோம். நம் வருங்கால தேவைகளை பூர்த்திசெய்ய நில நீர் ஒன்றையே நாடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அந்த நில நீரை எவ்வாறு முழுமையாக பயன் படுத்துவது என்று அறிய நம் மாநிலத்தின் நில நீர் செழுமையையும் அதன் அமைப்புகளையும் பற்றிய முழுமையான அறிவு நமக்குத் தேவைப்படுகின்றது. அதன் மூலமே "பசுமைப் புரட்சி" போன்ற நிலநீரை அடிப்படையாகக் கொண்ட பல சீரிய திட்டங்கள் வெற்றிபெறவும் நாம் எதிர்பார்த்த பலனை அடையும் வகை செய்ய இயலும்.

ஓரிடத்தின் நிலநீர் செழுமையை தீர்மானிப்பவைகளில் கீழ்க்கண்டவைகள் முக்கிய அங்கம் வகிக்கின்றன.

1. மழையின் அளவும், தட்ப வெட்ப நிலை (climate)
2. பூகற்ப அமைப்பு (topography)
3 பாறைகளின் தன்மை, அவைகளின் அமைப்பு (porosity, permeability and other structural deformation)
4. மண்ணின் தன்மை (Soil Texture)

புவியியல் ரீதியாக நம் மாவட்டம் சற்று சாதகமற்ற சூழ்நிலையில் அமைந்துள்ளது. பருவக் காற்றுனது மலைகளால் தடுக்கப் படுவதால் வருட சராசரி மழையின் அளவு இம்மாவட்டத்தில் மிகவும் குறைவாகவே உள்ளது. அத்தகைய ஓர் "மழை மறைவுப் பிரதேசத்தில்" (Rain shadow region) நம் நெல்லை மாவட்டம் அமைந்துள்ளது என கூறினும் அது மிகையாகாது. ஏனெனில் வருடத்திற்கு சராசரி 25—30" மழை மட்டுமே நாம் பெறுகின்றோம். இந்த மழை நீரிலும் எல்லாப் பகுதியும் பூமிக்கடியில் சென்று விடுவதில்லை. 5% மட்டுமே நிலநீராகிறது ஏனையவை தரைமட்ட அளவிலேயே நீரோட்டமாக ஓடி விணாகி விடுகிறது. இந்த 5% நீரிலும் கணிசமான பகுதி பாறைகளில் இரசாயன மாற்றம் மூலமும் ஆவியாதல் மூலமும் வீணாகி விடுகிறது நமது தேவைகளை ஈடுகட்ட மிகுந்த குறைந்த அளவு நிலநீரே மிகுந்துள்ளது.

2 இம்மாவட்டத்தின் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகள் charnockite' granite போன்ற கடினமான பாறைகளால் ஆன உயர்ந்த மலைத்தொடர்களாகும். இவற்றின் கிழக்குப்பகுதி அதிக சரிவாக இருப்பதால் அங்கு பெய்யும் பெருவாரியான மழைநீர் மிக வேகமாக ஓடிவிடுகிறது. வெகு சொற்ப அளவு நீரே பூமியினுள் செல்லவாய்ப்பிருக்கின்றது. வாசுதேவநல்லூர், செங்கோட்டை, தென்காசி, மணிமுத்தாறு, களக்காடு போன்ற பள்ளத்



தாக்கு பிரதேசங்களில் மண்வெளிகளின் தின்மை (thickness) அதிகமாக இருப்பதால் இவற்றினுள்ளே அதிக நீர் தேங்கி நிற்க வாய்ப்புள்ளது. ஆகவே நம் மாவட்டத்தின் மேற்குப் பகுதிகளில் இப்பள்ளத்தாக்குப் பிரதேசங்களே சற்று செழுமை மிக்கப் பகுதிகளாக விளங்குகின்றது.

நம் மாவட்டத்தில் நடுப்பகுதியில் தாம்பிரவருணி ஆற்றுப்படுகை (basin) சற்று பக்குவம் அடைந்த நிலையில் உள்ளது. இதன் கரைகளில் உள்ள அம்பாசமுத்திரம், சேரன் மகாதேவி, திருநெல்வேலி, ஸ்ரீவைகுண்டம், ஆத்தூர் போன்ற இடங்களில் உள்ள "ஆற்றுச் சேர்க்கை" (Alluvial deposits) மணல் வெளிகள் நிலநீர் அபிவிருத்திக்கு அனுகூலமான இடங்களாக கருதப்படுகின்றது. இவை தவிர மணிமுத்தாறு, வைப்பாறு, சிற்றுறு போன்ற ஏனைய சிறிய நதிகளின் படுகைகளும் ஓரளவிற்கு அனுகூலமான இடங்களாகும்.

3. நெல்லை மாவட்டத்தை பொருத்தவரை கடற்கரை ஓரமாக உள்ள சில பகுதிகளைத் தவிர ஏனைய பகுதிகள் யாவற்றிலும் கடின பாறைகளே மிகுந்துள்ளது. இக்கடும்பாறை அமைப்புகள் தொன்றுதொட்டே இருக்கும். "உருக்குப்பாறை" (igneous) வகைகளாகும். இந்திய தீபகற்பத்தை கேடயம்போல மூடியிருக்கும் கடின உருமாற்றுப் பாறை (Metamerphic) இனத்தை இவை சேர்ந்தவையாகும். இப்பாறை இனங்கள் அதிக மடிப்புகளும் (folded) சரிவுகளும் (foliation dips) கொண்டவை. பொதுவாக இவை தன்னுள்ளே வெகு சொற்ப அளவு நீரைத்தான் அடக்கிக் கொள்ளமுடியும். ஏனெனில் இவைகள் அதிகமாக இறுக்கப்பட்டவை (compacted). நீரை அதிகமாகத் தேக்கிக் கொள்ளக் கூடிய அளவிற்கு இளக்கமில்லாதவை (non-porous) இருப்பினும் இதிலுள்ள வெடிப்புகள் (fractures பிளவுகள் (faults) இணைப்புகள் (joints) இவைகளினுள்ளேதான் நிலநீர் தேங்க வாய்ப்புள்ளது.

கடலோரப் பகுதியிலுள்ள பாறைகள் படிவுப்பாறை (sedimentary) இனத்தைச் சேர்ந்தவையாகும். சமீப காலங்களில் கடலாலும் ஆறுகளாலும் உண்டாக்கப்பட்ட மணற்பாங்கான பாறைகளால் ஆக்கப்பட்டவை. கடினப் பாறைகளைவிட அதிக அளவு நீரைத் தேக்கி வைக்கக் (acquifer) கூடிய அளவு இளக்கமுள்ளவை.

ஏற்கனவே கூறியபடி நம் மாவட்டத்தில் 70% கடின பாறைகளால் ஆனவைகளாதலால் பாறைப்பகுதி நிலநீர் அமைப்புகளைப்பற்றி நன்கு அறிந்தால்தான் நிலநீர் அபிவிருத்திக்கான ஆக்க வேலையில் ஈடுபடமுடியும்.

நிலநீரானது நம்மில் அநேகர் நினைப்பது போல் பூமிக்கடியில் ஓடும் பாதாள காவிரியோ அன்றி கங்கையோ அல்ல. மழைநீரின் ஒரு பகுதி பூமியினுள் சென்று பாறைகளிலுள்ள இளக்கமான பகுதிகளையும், பிளவுகளையும், வெடிப்புகளையும் நிரப்புகின்றது இவ்வாறு நிலநீரால் பூரணமாக நிரப்பப்பட்ட பகுதியே "பூரித நிலநீர் மண்டலம்" (Zone of saturation) என்று அழைக்கப்படுகின்றது. இந்த நீர் மண்டலத்தின் உயரிய மேல் பகுதியைத்தான் "நிலநீர் மட்டம்" (water table) என்று கூறுகின்றோம். இந்நீர் மட்டம் பொதுவாக ஈரப் பசையுள்ள இடங்களில் (humid regions) தறைமட்டத்திற்கு அருகிலும் சற்று வரட்சியான இடங்களில் அதிக ஆழத்திலும் இருக்கின்றது.

பொதுவாக நம் மாவட்டத்தில் கடும்பாறைகள் நிலநீரை தன்னுள் அடக்கும் (Water-bearing) சக்தியற்றவை. இத்தகைய படிகப் பாறையின் நீரை தன்னுள் அடக்கும் சக்தி அப்பாறைகளிலுள்ள இணைப்புகள், பிளவுகள் பாறை உருமாற்றத்தின் (weathering) அளவு, ஆழம் இவைகளைப் பொறுத்திருக்கின்றது, பூமியினுள் அதிக ஆழம் செல்ல செல்ல பாறைப் பிளவுகள், இணைப்புகள், வெடிப்புகள் ஆகியவை குறைந்து விடுகின்றன. நம் மாவட்டத்தில் உருமாறிய (weathered) பாறைகள் 5-10 மீட்டர்கள் ஆழம் வரை உள்ளதாகக் கணக்கிட்டுள்ளனர். இப் பாறைகளின் அடிப் பாகமே நிலநீரால் நிறைந்துள்ளது. இந்த நிலநீரின் மேல் மட்டம் கோடையில் தாழ்ந்தும் மழைக்காலங்களில் உயர்ந்தும் காணப்படுகின்றது. (Seasonal fluctuation.) கோடை நிலநீர் மட்டத்திற்கு கீழேயுள்ள நீர்மண்டலமே "நிலையான பூரித நிலநீர் மண்டலம்" எனப் படுகிறது. இம்மண்டலம் படிவுப்பாறை பகுதியில் சுமார் 150-200 மீ. வரையிலும்

கடினப்பாறை பகுதியில் 15-20 மீ. வரையிலும் காணப்படுகின்றது. இந்த நிலநீர் பாறைகளுக் கிடையேயுள்ள பிளவுகள், இணைப்புகள் இவற்றினூடே தேங்கி நிற்கின்றது. தரை மட்டத்திற்கு அருகில் உள்ள நீரை எடுக்க சாதாரணக் கிணறுகள் (dug wells) போதுமானவை. ஆனால் நிலையான நீர் மண்டலத்தின் நீரை எடுக்க நாம் ஆழமான துளைகளை (deep bores) பயன்படுத்துதல் வேண்டும். குழாய் கிணறுகளில் பாறையிலுள்ளே அமைந்துள்ள நீர் நிறைந்த இணைப்புகளோ, பிளவுகளோ குறுக்கிடா விட்டால் அவற்றுல் பயனில்லை. ஆகவே கடினப் பாறை பகுதியில் எப்பொழுதும் ஆழமான துளைகளை உள்ள சாதாரண கிணறே மிகவும் பொருத்தமானது (dug cum bore well) இந்த கடினமான பாறைப் பகுதிகளில் வெறும் குழாய் கிணறுகள் (tube-wells) நிலையான பலனைத் தரா.

## கிணற்றுக்கு இடம் தேர்ந்தெடுத்தல்.

நாம் கிணறு தோண்டுவதற்கு இடம் தேர்ந்தெடுக்கும் போது கீழ்க்கண்டவைகளை மனதில் கொள்ளல் வேண்டும்.

1 நாம் தோண்டும் கிணற்றின் வெற்றியை தீர்மானிப்பதில் அந்த இடத்தின் பூகற்ப அமைப்பு முக்கிய பங்கு வகிக்கிறது பள்ளத்தாக்குப் பகுதியில் உள்ள கிணறுகள் மேட்டுப் பகுதியில் உள்ள கிணற்றை விட அதிக நீருள்ளதாக அமையும்.

2 அடுத்தபடியாக புவியியல் அமைப்பைப் பார்க்க வேண்டும் நாம் முன்கூறியபடி பாறைகளிலே உள்ள இணைப்புகள், பிளவுகள் இவற்றிலேயே அதிக நீர் உள்ளது. ஆகவே நாம் தோண்டும் கிணறு இப்படிப்பட்ட இணைப்புகளும். பிளவுகள் அதிகமுள்ள இடமாக அமைதல் வேண்டும்.

3 பாறையின் உருமாறிய பகுதியின் (Weathered zone) அடியிலேதான் 'நிலையான நிலநீர் மண்டலம்' உள்ளது என்று பார்த்தோம். ஆகவே கிணறு அந்த உருமாறிய மண்டலம் முழுமையையும் பயன் படுத்தக்கூடிய அளவு ஆழமாக இருத்தல் வேண்டும்.

4 இரு கிணறுகளுக்கிடையே போதிய இடைவெளி இருத்தல் வேண்டும். இவற்றையெல்லாம் பார்க்கும்போது நமது மாவட்டத்தைப் பொறுத்தவரை ஆழமான குழாய் பொருந்திய சாதாரண கிணறே (open dug-cum-bore well) அதிக பயனுள்ளதாகக் கருதப் படுகின்றது.

## நீரின் தன்மை

பூமியின் மேல்மட்டத்திலுள்ள பாறைகள் அதன் உருமாற்றத்தின்போது வெடிப்புக்களாலும், இரசாயன மாற்றத்தினாலும் பலவிதமான உப்புக்களை பிரித்தெடுக்கின்றது. இதுவே நிலநீரின் உப்புத் தன்மைக்கு அடிப்படை காரணமாகும். பொதுவாக ஓடும் நீரைவிட நிலைநீர் அநேக இடங்களில் உப்புத் தன்மை அதிகம் வாய்ந்ததாய் இருக்கிறது. இவற்றிற்கு அநேக காரணங்கள் உண்டு.

1 ஓடும் நீரிலுள்ள உப்பானது நிலத்தின் மீது படிந்து, காய்ந்து விடுகிறது. இந்த உப்பு மழை நீரால் சிறிது சிறிதாக கரைந்து பூமியின் உள்ளே உறிஞ்சப்பட்டு நில நீரோடு கலந்து விடுகின்றது.

2 நிலநீர் பூமிக்கடியிலுள்ள பாறைகளில் இரசாயன சேர்க்கை மூலம் அதிலுள்ள உப்புக்களை எடுத்து உப்புத்தன்மை அடைகிறது.

3 கடற்கரைப் பிரதேசங்களில் அளவுக்கதிகமான நீரை நாம் கிணறுகள் மூலமாக எடுத்து விடுவதால் கடல் நீரானது நிலங்களுக்குள் ஊடுருவி, கலந்து இங்குள்ள நீரையும் உப்பாக்கி விடுகிறது. ஆகையால் நம் மாவட்டத்தில் சில இடங்களில் கிணற்று நீர் உப்பாக இருப்பது ஓர் சாதாரண விஷயம்.

நம் மாவட்டத்திலுள்ள மண் வகையினை பொதுவாக நிலநீர் சம்பந்தப்பட்ட வரையில் நான்கு மாறுபட்ட வகையாகப் பிரிக்கலாம்.

1. கரிசல் மண். 2. செம்மண்.
3. மண்கலந்த கரிசல் 4. தேரி மண்.

